# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - செப்டம்பர் 2023


**www.tnpscthervupettagam.com**












SHANKAR IAS ACADEMY™
SINCE 2004
Best Academy for Civil Services Exam Coaching

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்


TNPSC துளிகள் ........ 10

தமிழ்நாடு செய்திகள் ........ 15

சுயமரியாதை திருமணச் சட்டம் மீதான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ........ 15

அரவிந்த் சுப்ரமணியன் குழு ........ 16

நெல் கொள்முதல் இலக்கு ........ 16

அரிசி கொள்முதல் ........ 16

கூடுதல் கனிம வருவாய் ........ 17

கடற்பாசிப் பூங்கா ........ 17

கலைஞர் செம்மொழி விருது ........ 17

இலாகா இல்லாத அமைச்சர் ........ 18

சேலம் ஜவ்வரிசிக்குப் புவிசார் குறியீடு ........ 18

நாடோடிப் பழங்குடியினர் பற்றிய ஆய்வு ........ 19

மறுமுறை பயன்படுத்தக் கூடிய தண்ணீர் குடுவைகளுக்கு ISI தரக் குறியீடு ........ 19

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தமிழக மின் தேவை ........ 20

பாறைக்குளம் கோவில் ........ 21

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல வாரியம் ........ 21

பெண்களுக்கான அடிப்படை வருமானத் திட்டம் ........ 21

வயது வந்தோருக்கான தடுப்பு மருந்து வழங்கீட்டு எண்ணிக்கை குறைவு ........ 22

கோவில்களில் மகளிர் உதவி அர்ச்சகர்கள் ........ 22

வெம்பக்கோட்டையில் அரிதான கடுமட்பாண்டம் கண்டெடுப்பு ........ 23

ஸ்வஸ்த் AI ........ 23

ஸ்டார்ட்அப் தமிழா’ பொழுதுப்போக்குக் காட்சி ........ 23

விஸ்வகர்மா திட்டம் தொடர்பான குழு ........ 24

கலைஞர் மகளிர் உரிமை திட்டம் ........ 24

IIT-M பசுமை ஹைட்ரஜன் முன்னெடுப்பு ........ 25

தமிழகத்தில் 36 யானை வழித்தடங்கள் ........ 25

குறத்தியறை குடைவரைக் கோவில் ........ 26

பஞ்சாயத்துச் செயலாளர்களுக்கான ஆட்சேர்ப்பு முறை ........ 27

அறிஞர் தமிழ் ஒளி ........ 27

இணை உருவாக்க நிதி ........ 27

தமிழகத்தின் உச்சகட்ட மின் தேவை ........ 28

கீழடியில் சிவப்பு நிற சூதுபவள மணிகள் ........ 28

தமிழகத்தின் மின்சார வாகன உற்பத்தி ........ 29

தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை 2023 ........ 29

நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கை ........ 30

விஸ்வகமல் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் INC ........ 31

தேசியச் செய்திகள் ........ 32
மனித ஆரோக்கியத்தின் மீது மண்ணில் உள்ள நுண்ணுட்டச் சத்துகளின் தாக்கம் ........ 32
வாக்காளர் எண்ணிக்கை அதிகரிப்பிற்கான விழிப்புணர்வு மாற்றத் திட்டம் ........ 33
காற்று மாசுபாடு மற்றும் ஆயுட் காலம் ........ 33
நாடாளுமன்றத்தின் "சிறப்புக் கூட்டத்தொடர்" ........ 34
ஒரே நாடு, ஒரே தேர்தல்’ குறித்த குழு ........ 35
உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் மிகப்பெரிய அணுமின் நிலையம் ........ 36
பாரம்பரியத் தளங்களை ஏற்றுக் கொள்தல் 2.0 திட்டம் ........ 36
செல்லுபடியாகாத மற்றும் செல்லத்தகாத திருமணங்களுக்கான மரபுரிமை ........ 37
NCERT அமைப்பின் அந்தஸ்து உயர்வு ........ 38
தொலைபேசி வாயிலான சட்டச் சேவைத் திட்டம் 2.0 ........ 38
கடல்சார் உள்கட்டமைப்பு முன்னோக்குத் திட்டம் ........ 39
குருத்தணு சிகிச்சை ........ 39
ஆரோக்யா மைத்ரி பெட்டகங்கள் ........ 40
கல்வி முதல் தொழில்முனைவு வரை - முன்னெடுப்பு ........ 41
மாளவியா திட்டம் ........ 41
இந்திய விமானப் படைப் பயிற்சி - திரிசூல் ........ 42
நீதிபதி அமித்தவா ராய் குழு அறிக்கை ........ 42
G20 சுற்றுலா மற்றும் நிலையான மேம்பாட்டு இலக்கின் முகப்பு விவரப்பக்கம் ........ 43
பாரத் ட்ரோன் சக்தி 2023 ........ 44
உலகின் மிக உயரமான நடராஜர் சிலை ........ 44
G20 மாநாட்டில் கோனார்க் சக்கரம் ........ 44
G20 இந்தியா கைபேசி செயலி ........ 45
சந்தேஸ் செயலி ........ 46
உயர் அதிகாரம் பெற்ற குழு ........ 46
BESS அமைப்புகளுக்கான VGF திட்டம் ........ 47
ஸ்வச் வாயு சர்வேக்சன் 2023 ........ 47
அரிய நோய்ப் பாதிப்பு உள்ள நபர்கள் ........ 48
இந்தியாவின் எண்ணிமப் பொது உள்கட்டமைப்பு ........ 49
G20 நாடுகளுக்கான செயற்கைக்கோள் திட்டம் ........ 49
G20 நாடுகளின் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட பரிசுகள் ........ 50
பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றிய அறிக்கை ........ 50
ஆஸ்வாசநிதி திட்டம் ........ 51
மிக உயரமான இடத்தில் அமைந்த உலகின் முதல் போர் விமான தளம் ........ 51
20வது ஆசியான் இந்தியா உச்சி மாநாடு ........ 52
சமுத்திரயான் திட்டம் ........ 53
மூட்பித்ரியில் தனித்துவமான சுடுமண் சிலைகள் ........ 54
போலோ நடவடிக்கை - 75வது ஆண்டு நிறைவு விழா ........ 54
ஆயுஷ்மான் பாவ் பிரச்சாரம் ........ 55

அமலாக்கத் துறையின் புதிய இயக்குநர் ...... 56
பிறப்பு மற்றும் இறப்பு பதிவு (திருத்தம்) சட்டம், 2023 ...... 56
OIML சான்றிதழ் வழங்கும் ஆணையம் ...... 57
தேசிய நீதித்துறை தரவு கட்டமைப்பு தளம் ...... 57
தேசிய அத்தியாவசிய மருத்துவ உதவி சாதனங்களின் பட்டியல் ...... 58
2014 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊழல் வழக்குகளில் காப்பு ...... 58
பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா திட்டத்தின் விரிவாக்கம் ...... 59
விஸ்வகர்மா திட்டம் ...... 60
பழைய பாராளுமன்றக் கட்டிடம் ...... 61
சஜாக் நடவடிக்கை ...... 62
UPAg இணைய தளம் ...... 62
இந்திய நாடாளுமன்ற மாளிகை ...... 62
நூற்றி இருபத்தி எட்டாவது திருத்த மசோதா 2023 ...... 63
வேளாண் கடன் மற்றும் பயிர்க் காப்பீட்டு முன்னெடுப்புகள் ...... 64
வாகனங்களில் திறன் பயிற்சி முன்னெடுப்பு ...... 64
மக்களுக்கான G20 இணையப் புத்தகம் ...... 64
P.V. நரசிம்மராவ் வழக்கு – 1998 ...... 65
மகளிர் இட ஒதுக்கீடு மசோதா ...... 65
தீவிரப்படுத்தப்பட்ட இந்திரதனுஷ் 5.0 திட்டம் ...... 66
ஸ்வச்சதா பக்வாடா – 2023 ...... 66
பன்னாட்டுக் கட்டமைப்பு இணை தொடரமைப்புகள் ...... 67
திறன் இந்தியா டிஜிட்டல் செயலி ...... 67
இணைய வழி நீதிமன்றங்கள் மூன்றாம் கட்டம் ...... 68
இந்தியாவின் வேலைவாய்ப்பு நிலை 2023 ...... 68
தேசிய மருத்துவ ஆணையம் - உலகளாவிய அங்கீகாரம் ...... 69
அனைத்து மகளிர் துணைத் தலைவர்கள் குழு ...... 70
14வது உலக திறன் உச்சிமாநாடு ...... 70
முத்தரப்பு கடல்சார் பயிற்சி ...... 70
SIMBEX 2023 ...... 71
புதிய வந்தே பாரத் இரயில்கள் ...... 72
ஆரோக்கிய மாந்தன் 2023 ...... 72
இராஷ்ட்ரிய 'விக்யான் புரஸ்கார்' ...... 72
வரைவு காப்புரிமைகள் (திருத்தம்), விதிகள், 2023 ...... 73
ODF பிளஸ் கிராமங்கள் ...... 74
சர்வதேசச் செய்திகள் ...... 75
B20 உச்சி மாநாடு இந்தியா 2023 ...... 75
அபாயா உடைக்குத் தடை ...... 75
2050 ஆம் ஆண்டில் மூட்டழற்சி பாதிப்பு ...... 76
விண்வெளியில் உள்ள பொருட்களுக்குப் பெயரிடல் ...... 76

அதிகாரப் பூர்வ வழிகாட்டுதல்கள். 26 ..... 77
புலம்பெயர்வு மீதான கம்பாலா அமைச்சர்கள் பிரகடனம் ..... 77
HIV பாதிப்பிற்கான உலகளாவிய நிதியம் ..... 78
காபோன் இராணுவ ஆட்சி ..... 78
கக்போட் தீநிரல் இயங்குதளம் ..... 79
9 கோடு எல்லை ..... 80
10-அம்ச சமாதான சூத்திரம் ..... 80
உலக சுகாதார அமைப்பின் குஜராத் பிரகடனம் ..... 81
ஆசியான் அமைப்பின் 43வது மாநாடு ..... 82
உலகின் தெற்கு நாடுகளின் கடன் பிரச்சனை ..... 82
SCO அமைப்பின் சட்ட மற்றும் நீதி அமைச்சர்களின் 10வது சந்திப்பு ..... 83
ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78வது அமர்வு ..... 83
இந்தியா மற்றும் அமெரிக்கா பேச்சுவார்த்தை 2023 ..... 83
ஆப்பிரிக்க ஒன்றியம் - G20 அமைப்பின் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து ..... 84
ஐரோப்பிய ஒன்றியத்தின் ஹொரைசன் அறிவியல் ஆராய்ச்சி திட்டம் ..... 85
மொராக்கோவில் நிலநடுக்கம் ..... 86
பெண்கள் அதிகாரமளித்தல் தொடர்பான G20 அமைப்பின் பணிக்குழு ..... 86
இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார வழித்தடம் ..... 87
18வது EAS உச்சி மாநாடு ..... 88
டேனியல் புயல் ..... 88
லிப்டாக்கோ - கௌர்மா சாசனம் ..... 89
G77+சீனா உச்சி மாநாடு ..... 90
இடிந்து விழுந்த டெர்னா அணை ..... 91
பிடன் பதவி நீக்க விசாரணை ..... 91
பருவநிலை உயர்லட்சிய உச்சி மாநாடு (CAS) 2023 ..... 91
இந்தியாவிற்கும் கனடா இடையிலான இருதரப்பு உறவுகள் ..... 92
ருவாண்டா - பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ..... 93
I2U2 குழுவின் கூட்டு விண்வெளி முன்னெடுப்பு ..... 94
யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியப் பட்டியல் – ஜாகோரோச்சோரியா, கிரீஸ் ..... 94
பொருளாதார உற்பத்தியின் பங்கில் உலக நாடுகளின் கடன் ..... 94
ஜப்பான் நாட்டில் மக்கள் தொகை நெருக்கடி ..... 95
ஐங்கண் கூட்டணி ..... 96
அடுத்தப் பெருந்தொற்று: நோய் X ..... 97
பொருளாதாரச் செய்திகள் ..... 97
10 பில்லியன் UPI பரிவர்த்தனைகள் ..... 97
ராஷ்ட்ரிய வேதிப் பொருட்கள் மற்றும் உரங்கள் ..... 98
NPS மற்றும் APY திட்ட நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்து ..... 98
இந்தியாவின் முதல் UPI தானியங்குப் பண வழங்கீட்டு இயந்திரம் ..... 99
உலக நிதிசார் தொழில்நுட்ப திருவிழா 2023 ..... 100

கூடுதல் பண இருப்பு விகிதம் ..... 101
உள்வரவு மற்றும் வெளிப்போக்கு அந்நிய நேரடி முதலீட்டுப் போக்குகள் 2023 ..... 101
OTG மோதிர வடிவ சாதனம் ..... 102
GSTN வலையமைப்பில் புவியிடக் குறியிடல் அறிமுகம் ..... 102
பேசல் - III மூலதனக் கட்டமைப்பு ..... 103
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 104
சிறிய வாயுக் கீற்றுகள் ..... 104
LIBS நுட்பம் ..... 104
நப்மித்ரா சாதனம் ..... 105
ஆதித்யா L1 ஆய்வுத் திட்டம் ..... 105
மகேந்திரகிரி - இந்தியாவின் புதிய போர்க் கப்பல் ..... 106
RAMBHA-LP ..... 106
மூளை-கணினி இடைமுகம் ..... 107
Y குரோமோசோம் பற்றிய புரிதல் ..... 108
ஜெய்ஸ் - மொழி மாதிரி முறை ..... 109
7 நிமிடப் புற்றுநோய் சிகிச்சை எதிர்ப்பு மருந்து ..... 109
பைரோலா மாற்றுருக்கள் ..... 110
செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் ஆளில்லா விமான எதிர்ப்பு அமைப்பு ..... 110
உறக்க நிலைக்குச் சென்ற பிரக்யான் விண்கலம் ..... 111
போரிஃபெரிஸ்பேரா ஹீடெர்ட்டோபிசிஸ் ..... 112
குவாண்டம் சமவாய்ப்பு எண் உருவாக்க அமைப்பு ..... 112
புதிய சுற்றுப்பாதையில் நுழைந்த ஆதித்யா - L1 ..... 113
மூன் ஸ்னைப்பர் – ஜப்பான் ..... 113
குருத்தணுக்களைப் பயன்படுத்தி உருவக்கப்பட்ட மனித உட்கரு மாதிரி ..... 114
சூரியனின் புலப்படும் பகுதியின் வெப்ப உமிழ்வு கரொனா அடுக்கு ஆய்வுக் கருவி (VELC) ..... 115
XRISM ஆய்வுக்கலம் ..... 115
குமிழ் வடிவ விண்வெளிக் கட்டமைப்பு ..... 115
செவ்வாய்க் கிரகத்தில் ஆக்ஸிஜன் ..... 116
பன்றியின் கருக்களுக்குள் மனித சிறுநீரகங்கள் ..... 117
முதலாவது உத்திசார் அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல் ..... 117
புற்றுநோய் செல்களைக் கண்டறிந்து அழிக்கும் புதிய அணுகுமுறை ..... 118
முதலாவது லக்ராஞ்சியன் மாறுநிலை புள்ளி உள்நுழைவு (TL1I) முயற்சி ..... 119
‘விபவ்’ பீரங்கி எதிர்ப்பு கண்ணி வெடிகள் ..... 119
நிலவின் நீர் உருவாக்கம் ..... 120
சுற்றுச்சூழல் செய்திகள் ..... 121
திட்ட வரைவு அறிக்கைக்கான அறிவிப்பு ..... 121
முழுவதுமாக எத்தனால் எரிபொருளில் இயங்கும் உலகின் முதல் டொயோட்டா இன்னோவா கார் ..... 121
மிகப்பெரிய காட்டுத் தீ ..... 122
பூஞ்சை வகை உள்ளீட்டிற்கான பிரச்சாரம் ..... 122

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மழைப்பொழிவு ........ 123
துருவ கரடிகள் மீது பருவநிலை மாற்றத்தின் தாக்கம் ........ 124
நிலத்தடி நீர் மட்டம் குறைதல் ........ 124
LED விளக்குகள் மற்றும் ஒளி மாசுபாடு ........ 125
ஊடுருவும் அயல் உயிரினங்கள் மற்றும் அவற்றின் கட்டுப்பாடு பற்றிய மதிப்பீட்டு அறிக்கை ........ 125
மூங்கிலில் இருந்து தயாரிக்கப்பட்ட மறுபயன்பாட்டு உறிஞ்சுக் குழாய் ........ 126
அபிஸ் மெல்லிஃபெரா ........ 127
மின்மினிப் பூச்சி இனங்களின் மாபெரும் அணித்திரள் ........ 128
குறைந்து வரும் கழுதைகளின் எண்ணிக்கை ........ 128
ஐக்கியப் பேரரசு – ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை நிதியம் ........ 129
காவேரி வனவிலங்குச் சரணாலயத்தில் வெள்ளை சம்பார் மான் ........ 129
WMO அமைப்பின் காற்றுத் தரம் மற்றும் பருவநிலை அறிக்கை ........ 130
சீகூர் யானை வழித்தடம் ........ 131
இந்தியாவின் யானை வழித்தடங்கள் பற்றிய அறிக்கை ........ 132
ஆர்க்டிக்கிலிருந்து வருகை தரும் கடற்கரைப் பறவை ........ 132
இதுவரை பதிவானதில் அதிக வெப்பமான கோடைக்காலம் – 2023 ........ 133
இந்தியா முழுவதும் உள்ள யானை வழித்தடங்கள் ........ 134
கடல்வாழ் டார்டிகிரேட் ........ 134
அழிவின் விளிம்பில் உள்ள உலகின் மிகப்பெரிய மலர் வகை ........ 135
ஆறாவது வெகுஜன அழிவின் அச்சுறுத்தல் ........ 136
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ........ 137
வருடாந்திரக் காற்று தர வாழ்நாள் இழப்புக் குறியீடு ........ 137
G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகளின் நிலக்கரி சார் மின் உற்பத்தி உமிழ்வின் தலா விகித மாற்றங்கள் ........ 137
பாலினச் சமத்துவத் தகவல் விளக்கப் படம் 2023 அறிக்கை ........ 138
உலக உணவு விலைக் குறியீடு ........ 140
உலகளாவிய காலமுறை மறுமதிப்பீட்டு அறிக்கை ........ 140
உலக இணைய சங்கேதப் பண ஏற்புக் குறியீடு 2023 ........ 141
HungerMap LIVE : உலகளாவியத் தகவல்கள் மற்றும் முக்கியப் போக்குகள் ........ 142
உலகின் சிறந்த நாடுகள் அறிக்கை 2023 ........ 143
டிஜிட்டல் தரக் குறியீடு 2023 ........ 143
உலகின் சுதந்திரமான பொருளாதாரம் ........ 144
உயர் இரத்த அழுத்தம் பற்றிய உலகளாவிய அறிக்கை ........ 145
TIME இதழின் உலகின் சிறந்த நிறுவனங்கள் 2023 ........ 146
குழந்தைகளின் பண வறுமையின் உலகளாவியப் போக்குகள் ........ 146
சர்வதேசச் சுற்றுலா சிறப்பம்சங்கள் – 2023 ........ 147
மாநிலச் செய்திகள் ........ 148
சூரியசக்தியில் இயங்கும் மேற்கூரைகளுடன் கூடிய மிதிவண்டி ஓட்டுதல் வழித் தடம் ........ 148
ஷினோன் மீராஸ் ........ 149
சோக்குவா அரிசிக்குப் புவிசார் குறியீடு ........ 149

அந்நிய நேரடி முதலீட்டினை ஈர்ப்பதில் முன்னணி மாநிலம் ... 150
ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட பிறப்பு பதிவு ... 150
கோக்போரோக் மொழி ... 150
க்ருஹ லக்ஷ்மி திட்டம் – கர்நாடகா ... 151
அதிக சுயாட்சியைக் கோரும் மணிப்பூர் ... 151
ராயகடா சால்வைகள் மற்றும் கோராபுட் காலா ஜீரா அரிசி ... 152
விஜயவாடா 'பசுமை இரயில் நிலையம்' ... 153
இந்தியாவின் முதல் சூரியசக்தி நகரம் ... 153
பொய்லா பைசாக் ... 153
500 KVA நிலத்தடி மின்பரிமாற்ற நிலையம் ... 154
உமிழ்வு வர்த்தகத் திட்டம் ... 154
கேரளாவில் நிபா வைரஸ் பாதிப்பு ... 155
கும்பல் கொலைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கும் திட்டம் 2023 ... 156
ஆத்ரேயபுரம் பூதரெகுலுக்கு புவிசார் குறியீடு ... 157
நியுக்மதுங் பால் பண்ணை ... 157
மிதுன் - உணவு விலங்கு ... 158
இணைய தளம் மூலம் திரட்டப்படும் தொழிலாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம் ... 159
நுவாகாய் ஜுஹார் - ஒடிசா ... 160
ஆக்ரா : பன்முகப்படுத்தப்பட்ட குப்பை செயல்முறையாக்க அமைப்பு ... 160
அகும்பே மழைக்காடுகள் வளாகம் ... 161
இந்தியாவின் சிறந்த சுற்றுலா கிராமம் - பிஸ்வநாத் காட் ... 161
வெனடியம் கண்டுபிடிப்பு ... 162
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ... 163
புவி அழகி - இந்தியா போட்டி 2023 ... 163
இரயில்வே வாரியத்திற்குத் தலைமையேற்கும் முதல் பெண்மணி ... 163
சிங்கப்பூர் நாட்டின் புதிய அதிபர் ... 164
ரமோன் மக்சேசே விருது ... 164
உலகப் புத்தாக்க விருது ... 164
உலக நிதிசார் மத்திய வங்கியாளர் அறிக்கை 2023 ... 165
இஸ்ரோ அறிவியலாளர் வளர்மதி ... 165
ஸ்வச்சதா பக்வாடா விருது ... 166
G20 தொழில்நுட்பப் போட்டி 2023 வெற்றியாளர்கள் ... 166
அறிவியலாளர் மயில்சாமி அண்ணாதுரை ... 167
சாந்தி ஸ்வரூப் பட்நாகர் பரிசு ... 167
சாந்தி ஸ்வரூப் பட்நாகர் பரிசு (SSB) 2022 ... 168
Ig நோபல் பரிசு 2023 ... 168
பிரிண்ட் ஆசியா விருதுகள் ... 169
சங்கீத நாடக அகாடமி அம்ரித் விருதுகள் ... 169
14வது உலக நறுமணப் பொருட்கள் மாநாடு ... 169

Moving Memory செயலி ........ 170
நார்மன் போர்லாக் ஃபீல்டு விருது 2023 ........ 170
திருப்புமுனை பரிசு 2024 ........ 170
விளையாட்டுச் செய்திகள் ........ 172
அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி 2023 ........ 172
இந்தியாவின் தலைசிறந்த சதுரங்க வீரர் ........ 172
தூரந்த் கோப்பை போட்டி 2023 ........ 173
அமெரிக்க ஓபன் கிராண்ட்ஸ்லாம் போட்டி ........ 173
ஆசிய கோப்பைப் போட்டி 2023 ........ 173
தரவரிசையில் முன்னணியில் உள்ள கிரிக்கெட் அணி ........ 173
பெர்லின் மாரத்தான் உலக சாதனை ........ 174
முக்கிய தினங்கள் ........ 175
தேசிய ஊட்டச்சத்து வாரம் - செப்டம்பர் 01 முதல் 07 ஆம் தேதி வரை ........ 175
உலக தேங்காய் தினம் - செப்டம்பர் 02 ........ 175
திபெத்திய ஜனநாயக தினம் - செப்டம்பர் 02 ........ 176
எழுத்தறிவு வாரம் - செப்டம்பர் 01 முதல் 08 வரை ........ 176
சர்வதேச தொண்டு தினம் - செப்டம்பர் 05 ........ 176
தேசிய ஆசிரியர் தினம் - செப்டம்பர் 05 ........ 177
சர்வதேச நீல வானுக்கான தூய காற்று தினம் - செப்டம்பர் 07 ........ 178
சர்வதேசக் காவல்துறை ஒத்துழைப்பு தினம் - செப்டம்பர் 07 ........ 178
சர்வதேச எழுத்தறிவு தினம் - செப்டம்பர் 08 ........ 178
உலக உடலியக்க சிகிச்சை தினம் - செப்டம்பர் 08 ........ 179
உலக முதலுதவி தினம் – செப்டம்பர் 09 ........ 179
தாக்குதல்களிலிருந்து கல்வி சார் கட்டமைப்புகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் – செப்டம்பர் 09 ........ 179
உலக தற்கொலை தடுப்பு தினம் (WSPD) – செப்டம்பர் 10 ........ 179
தேசிய வனத் தியாகிகள் தினம் – செப்டம்பர் 11 ........ 180
உலக மின்சார வாகன தினம் - செப்டம்பர் 09 ........ 180
இமயமலை திவாஸ் - செப்டம்பர் 09 ........ 181
தெற்கு-தெற்கு நாடுகளின் ஒத்துழைப்பிற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 12 ........ 181
உலக துச்சேன் தசைச்சிதைவு நோய் தினம் - செப்டம்பர் 07 ........ 181
இந்தி திவாஸ் - செப்டம்பர் 14 ........ 182
தேசியப் பொறியாளர் தினம் - செப்டம்பர் 15 ........ 183
உலக நிண நீர்த் திசுப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம் - செப்டம்பர் 15 ........ 184
சர்வதேச ஜனநாயக தினம் - செப்டம்பர் 15 ........ 184
உலக ஓசோன் தினம் - செப்டம்பர் 16 ........ 185
சர்வதேச சிவப்பு பாண்டா தினம் - செப்டம்பர் 16 ........ 185
உலக நோயாளிகள் பாதுகாப்பு தினம் – செப்டம்பர் 17 ........ 186
உலக மூங்கில் தினம் – செப்டம்பர் 18 ........ 187
சர்வதேச காது கேளாதோர் வாரம் - செப்டம்பர் 24/30 ........ 187

சர்வதேச அமைதி தினம் (UN) - செப்டம்பர் 21 .......... 188
உலக அல்சைமர் நோய் தினம் - செப்டம்பர் 21 .......... 188
புற்று நோயாளிகளின் நலன்புரி தினம் - செப்டம்பர் 22 .......... 188
உலக காண்டாமிருக தினம் - செப்டம்பர் 22 .......... 189
சர்வதேச சைகை மொழிகள் தினம் - செப்டம்பர் 23 .......... 189
உலக காது கேளாதோர் தினம் - செப்டம்பர் 24 .......... 190
உலக மருந்தாளுநர் தினம் - செப்டம்பர் 25 .......... 190
உலக கருத்தடை தினம் - செப்டம்பர் 26 .......... 191
உலக சுற்றுச்சூழல் வள தினம் - செப்டம்பர் 26 .......... 191
அணு ஆயுதங்களை முற்றிலும் ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 26 .......... 192
உலக நுரையீரல் தினம் - செப்டம்பர் 25 .......... 192
உலக சுற்றுலா தினம் - செப்டம்பர் 27 .......... 192
உலக வெறிநாய்க்கடி நோய் தினம் - செப்டம்பர் 28 .......... 193
உலக கடல்சார் தினம் - செப்டம்பர் 28 .......... 193
சர்வதேசப் பொது தகவல் அணுகல் தினம் - செப்டம்பர் 28 .......... 193
உணவு இழப்பு மற்றும் வீணாதல் பற்றிய சர்வதேச விழிப்புணர்வு தினம் - செப்டம்பர் 29 .......... 194
உலக இருதய தினம் - செப்டம்பர் 29 .......... 195
சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் - செப்டம்பர் 30 .......... 195
சர்வதேச சமய நிந்தனை உரிமைகள் தினம் - செப்டம்பர் 30 .......... 196
இதரச் செய்திகள் .......... 196
பகோபம்பா பாதிரியாரின் கல்லறை .......... 196
ஓபிடாஸ்காரிஸ் ராபர்ட்ஸி .......... 197
ஃப்புஜிவெனெட்டர் .......... 198
புதிய யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளம் .......... 198
புவிக் கிரக எல்லைகள் .......... 199
லண்டனின் இந்திய சங்கம் .......... 200
P-7 கனரகப் பொருட்களின் தரையிறக்க வான்குடை மிதவை அமைப்பு .......... 201
அபிநந்தன் திட்டம் .......... 201
ஸ்க்ரப் டைபஸ் தொற்று .......... 201
முதல் ஏர்பஸ் C295 விமானம் .......... 202
முழுவதும் மின்சாரத்தில் இயங்கும் மகிழுந்து தயாரிப்பு நிறுவனம் .......... 203
உலகின் பழமையான மர கட்டமைப்பு .......... 203
டச்சுக்காரர்களுக்கு எதிரான கொலச்சல் போர் .......... 204

# TNPSC துளிகள்

- பிரம்மா குமாரிகள் இயக்கத்தின் முன்னாள் தலைவரான தாதி பிரகாஷ்மணிக்குக் கௌரவமளிக்கும் வகையில் அவரது உருவம் பொறித்த அஞ்சல் தலையை இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் வெளியிட்டார்.
- கீதிகா ஸ்ரீவஸ்தவா பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய அரசின் உயர் ஆணையத்திற்கான புதியப் பொறுப்பாளராகப் பதவியேற்க உள்ளார்.
  - இந்தப் பதவியில் நியமிக்கப்படும் முதல் பெண்மணி இவரே ஆவார்.
- இந்திய அணியானது, ஓமனில் நடந்த மகளிர் ஆசிய ஹாக்கி 5s உலகக் கோப்பை போட்டியின் முதலாவது தகுதிச் சுற்றிற்கான இறுதிப் போட்டியில் தாய்லாந்து நாட்டு அணியினை வீழ்த்தியது.
- முன்னாள் இந்தியத் தலைமை நீதிபதி (CJI) N.V. ரமணா சிங்கப்பூர் சர்வதேச நடுவண் மையத்தின் (SIMC) சர்வதேச நடுவண் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- நிதி ஆயோக் அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு - இந்தியா ஆகியவை SDG இலக்குகளின் மீதான உள்ளூர்மயமாக்கல், தரவு சார்ந்த ஒரு கண்காணிப்பு, உயர் இலட்சியமிக்க மாவட்டங்கள் மற்றும் தொகுதிகள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஒத்துழைப்புக் கட்டமைப்பினை முறைப்படுத்துவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- ACME குழுமம் ஆனது, ஒடிசாவில் உள்ள கோபால்பூர் தொழில்துறை பூங்காவில் பசுமை ஹைட்ரஜன் மற்றும் பசுமை அம்மோனியா ஆலைகளை நிறுவுவதற்காக டாடா எஃகு சிறப்புப் பொருளாதார மண்டல லிமிடெட் நிறுவனத்துடன் கை கோர்த்துள்ளது.
- நடிகர் R. மாதவன் புனேவில் உள்ள இந்தியத் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தின் (FTII) புதிய தலைவராகவும், அதன் ஆளுகை குழுவின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஜம்மு மற்றும் காஷ்மீரைச் சேர்ந்த பதேர்வா ராஜ்மா என்ற பருப்பு வகை மற்றும் ரம்பன் சுலாய் தேன் ஆகியவற்றிற்கு மதிப்புமிக்கப் புவிசார் குறியீடு வழங்கப் பட்டு உள்ளது.
- அமெரிக்காவில் உள்ள ஜார்ஜியா மாகாண அரசானது, அக்டோபர் மாதத்தினை, "இந்து பாரம்பரிய மாதமாக" முறையாக நியமித்துள்ளது.
  - அந்த மாகாணத்தில் வசிக்கும் துடிப்பு மிக்க இந்து-அமெரிக்கச் சமூகத்தின் மதிப்பு மிக்கப் பங்களிப்புகளை அங்கீகரித்துப் பாராட்டுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) ஆனது இயற்கையான, மக்கக்கூடிய, சுற்றுச்சூழலுக்கு உகந்தப் பொருட்களான பாரம்பரிய தூய்மையான களிமண் மற்றும் சேறு ஆகியவற்றால் செய்யப்பட்ட விநாயகர் சிலைகளை மட்டுமே நீர்நிலைகளில் கரைக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.
- சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பின் (ISA) 5வது பிராந்தியக் கூட்டமானது ருவாண்டாவின் கிகாலி நகரில் நடைபெற்றது.
- முன்னணி திறன்பேசிகளின் ஒளித்திரைக் கண்ணாடி தயாரிப்பாளர்களான கார்னிங் இன்க் நிறுவனமானது, தெலுங்கானாவில் தங்களின் முதல் கொர்லியா (எளிதில் உடையாத) ரக ஒளித்திரைக் கண்ணாடி உற்பத்தித் தொழிற்சாலையை அமைக்க முடிவு செய்துள்ளது.

- காலனித்துவ ஆட்சிக் காலத்தில் 1926 முதல் 1930 ஆம் ஆண்டு வரையில் அப்போதைய மதராஸ் மாகாணத்தின் முதல்வராக இருந்த P. சுப்பராயன் அவர்களின் சிலையை தமிழக முதல்வர் அவர்கள் சென்னையில் திறந்து வைத்தார்.
- கோஹரென்ட் கார்ப் எனப்படும் அமெரிக்க ஒளியிழைப் பொருட்கள் மற்றும் குறைக் கடத்திகள் உற்பத்தி நிறுவனமானது, வழிகாட்டுதல் - தமிழ்நாடு மற்றும் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சிப் பூங்கா ஆகியவற்றுடன் ஒரு முத்தரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- டாடா எஃகு நிறுவனத்தினால் கொல்கத்தாவில் நடத்தப்படும் சதுரங்கம் - இந்தியா போட்டியின் அதிவிரைவுப் போட்டியின் மகளிர் பிரிவில் திவ்யா தேஷ்முக் வெற்றி பெற்றுள்ளார்.
- காக்னிசன்ட் இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ராஜேஷ் நம்பியாரைத் தனது புதிய தலைவராக நியமிப்பதாக நாஸ்காம் அமைப்பு அறிவித்து உள்ளது.
- டானியல் மெக்ககே, ICC மகளிர் T20 உலகக் கோப்பை 2024 அமெரிக்காஸ் போட்டியின் தகுதிச் சுற்றில் பங்கேற்க உள்ளதையடுத்து கனடா நாட்டின் சார்பாக இந்த சர்வதேசப் போட்டியில் பங்கேற்கும் முதல் திருநர் கிரிக்கெட் வீரர் என்ற பெருமையினைப் பெற உள்ளார்.
- "இந்தியாவில் பசுமை ஹைட்ரஜன் சோதனை முறை திட்டங்கள்" என்ற தலைப்பிலான மாநாடானது புது டெல்லியில் நடைபெற்றது.
- விசாகப்பட்டினம் துறைமுகத்தில் உள்ள சர்வதேசக் கப்பல் போக்குவரத்து முனையம் ஆனது சமீபத்தில் திறக்கப்பட்டது.
  - இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் உள்நாட்டு மற்றும் சர்வதேசக் கப்பல் பயணப் போக்குவரத்து சுற்றுலாவிற்கான ஒரு முக்கிய நுழைவாயிலாக இது இருக்கும்.
- தொழில்நுட்ப மேம்பாட்டு வாரியம் (TDB) ஆனது, “சுற்றுச்சூழலுக்கு உகந்த 1.5V AA அளவு கற்றாழையினைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட மின் கலன்களின் வணிக மயமாக்கல் திட்டத்தினை ஆதரிக்கச் செய்யும் விதமாக லக்னோவில் அமைந்துள்ள ஒரு புத்தொழில் நிறுவனமான ஆலோ எசெல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் கை கோர்த்துள்ளது.
- இந்தோனேசியாவில் நடைபெற்ற ஆசியான்-இந்தியா மற்றும் கிழக்கு ஆசிய உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் அவர்கள் பங்கேற்றார்.
- அசோக் லேலண்ட் நிறுவனமானது தனது உற்பத்திச் செயல்பாடுகள் தொடங்கப்பட்ட 75வது ஆண்டு நிறைவு விழாவைச் சமீபத்தில் கொண்டாடியது.
- சென்னை இராணி மேரி கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள நோபல் பரிசு பெற்ற ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் சிலையைத் தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.
- அபுதாபியில் அமைந்துள்ள தப்ரீத் நிறுவனமானது, ஹைதராபாத் மருந்தியல் சார் நகரத்திற்கான குளிரூட்டல் உள்கட்டமைப்பினை கட்டமைப்பதற்காக 200 மில்லியன் டாலர் தொகையை முதலீடு செய்ய உள்ளது.
- நிதித் துறை அமைச்சகமானது, இயங்கலை விளையாட்டுப் போட்டிகள் மற்றும் சூதாட்ட விடுதிகளில் வைக்கப்படும் பந்தயங்களின் பட்டியலிடப்பட்ட மதிப்பில் 28% சரக்கு மற்றும் சேவை வரியினை விதிப்பதற்கான விதிகளை அறிவித்துள்ளது.
- தமிழக அரசானது, மறைந்த சுதந்திரப் போராட்ட தியாகி இம்மானுவேல் சேகரன் நினைவாக ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் ஒரு மணிமண்டபத்தினை அமைக்க உள்ளது.

- இந்தியக் கடற்படைப் பயிற்சிக் கழகத்தின் (INA) வீரர்களுக்கான நான்கு நாட்கள் அளவிலான “வருணா” மற்றும் “சமுத்திரமாந்தன்” எனப்படும் பயிற்சி முகாம்கள் சமீபத்தில் கேரளாவில் நடைபெற்றன.
- 37வது தேசிய விளையாட்டுப் போட்டிகளின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் மஷால் எனும் ஒரு ஜோதியினை கோவா ஆளுநர் அதிகாரப்பூர்வமாக அறிமுகப் படுத்தி உள்ளார்.
- இந்தியா மற்றும் பிரான்சு நாட்டுக் கடற்படைகளுக்கு இடையேயான இருதரப்புப் பயிற்சியான 21வது வருணா (வருணா-23) பயிற்சியின் இரண்டாம் கட்டம் அரபிக் கடலில் வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டது.
- தமிழ்நாடு மாநில அரசானது, தமிழ்நாடு தெருவோர வியாபாரம் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனத் தொழிலாளர்கள் நல வாரியத்தினை மறுசீரமைத்துத் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரை அதன் அதிகாரப்பூர்வத் தலைவராக நிர்ணயித்துள்ளது.
- ஜெர்மனி அணியானது, செர்பியா அணியினை இறுதிப் போட்டியில் வீழ்த்தி தனது முதல் FIBA கூடைப்பந்து உலகக் கோப்பையை வென்றுள்ளது.
- இந்தியாவின் 16 வயதிற்குட்பட்ட வீரர்கள் அணியானது வங்காளதேச அணியினை வீழ்த்தி 2023 ஆம் ஆண்டு SAFF U-16 சாம்பியன்ஷிப் போட்டியின் சாம்பியன் பட்டத்தினை வென்றது.
- HSBC இந்தியா வங்கியானது, 'ONDC in a Box' என்ற வங்கி சார் தீர்வினை அறிமுகப் படுத்தியுள்ளது.
  - இது இந்தியாவில் எண்ணிம வர்த்தகத்திற்கான தடையற்ற வலையமைப்பில் (ONDC) இணைக்கப்பட்ட ஒரு அமைப்பினை வழங்கும் முதல் வெளிநாட்டு வங்கியாக மாறியுள்ளது.
- பவர்பாயிண்ட் விளக்கக் காட்சி என்ற நிகழ்ச்சி நிரலின் இணை நிறுவனரான டென்னிஸ் ஆஸ்டின் சமீபத்தில் காலமானார்.
- இந்தியக் கிரிக்கெட் வீரர் விராட் கோலி 277 இன்னிங்ஸ்களின் ஒருநாள் போட்டியில் 13,000 ரன்களை அதி விரைவாக எட்டிய வீரர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
  - சக இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கரின் (321 இன்னிங்ஸ்) சாதனையை இவர் முறியடித்துள்ளார்.
- 1996 ஆம் ஆண்டில் குளோனிங் முறையில் டோலி என்ற ஆட்டினை உருவாக்குவதற்கு காரணமாக அமைந்த உயிரி நகலாக்க நுட்பத்தின் முன்னோடியான ஐக்கியப் பேரரசின் இயன் வில்முட் காலமானார்.
- தமிழ்நாடு காவல்துறையானது, குற்றவியல் விவரக்குறிப்பு மற்றும் அதன் மீதான கண்காணிப்பிற்கான TrackKD எனப்படும் ஒருங்கிணைந்தத் தரவு மேலாண்மை அமைப்பினைச் செயல்படுத்தியுள்ளது.
  - மாநிலப் பட்டியலில் குற்றவியல் வழக்குகள் பதிவான 30,000 குற்றவாளிகளின் சுய விவரங்கள் மற்றும் நகரக் காவல்துறையில் 3500 பேரின் சுயவிவரங்கள் இதில் உள்ளன.
- இந்தியப் பேட்மிண்டன் வீரர் கிரண் ஜார்ஜ், வடக்கு சுமத்ராவின் மேடான் நகரில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டு இந்தோனேசியா பாட்மிண்டன் மாஸ்டர்ஸ் போட்டியில் பட்டம் வென்றுள்ளார்.

- அமெரிக்காவின் கென்டக்கி நகரமான லூயிஸ்வில்லி செப்டம்பர் 3 ஆம் தேதியை சனாதன தர்ம தினமாக அறிவித்துள்ளது.
- இந்திய நாடானது ஜப்பான் மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளையும் விஞ்சி வங்காள தேசத்தின் முன்னணி ஏற்றுமதி பங்குதார நாடாக மாறியுள்ளது.
- இந்தியப் பிரதமர் அவர்கள் டெல்லி துவாரகாவில் அமைக்கப்பட்டுள்ள யஷோபூமி என்ற இந்திய சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சி மையத்தின் முதல் பிரிவினைத் திறந்து வைத்தார்.
- இந்தியாவின் ஆடை வடிவமைப்பாளர் ராகுல் மிஸ்ராவுக்கு பிரான்ஸ் நாட்டின் செவாலியர் டி எல் ஆர்ட்ரே டெஸ் ஆர்ட்ஸ் எட் டெஸ் லெட்டர்ஸ் என்ற சிறப்பு விருது வழங்கப் பட்டுள்ளது.
- இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் விவசாயிகளின் உரிமைகள் பற்றிய முதல் உலகளாவியக் கருத்தரங்கினைப் புது டெல்லியில் தொடங்கி வைத்தார்.
- ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச வர்த்தகச் சட்டத்திற்கான ஆணையத்தின் (UNCITRAL) தெற்காசிய மாநாட்டினை இந்தியா நடத்தியது.
- சர்வதேச இருதயம் மற்றும் இரத்தக்குழாய் சிகிச்சை முறை தினமானது ஆண்டு தோறும் செப்டம்பர் 16 ஆம் தேதியன்று கொண்டாடப்படுகிறது.
- சர்வதேச சம ஊதிய தினமானது ஆண்டுதோறும் செப்டம்பர் 18 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
- ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா அமெரிக்காவின் யூஜின் நகரில் நடைபெற்ற டைமண்ட் லீக் இறுதிப் போட்டியில் 83.80 மீட்டர் தொலைவு வரை ஈட்டி எறிந்து அந்தப் போட்டியில் இரண்டாவது இடத்தினைப் பெற்றுள்ளார்.
- நாகர்கர்னூல் மாவட்டத்தில் உள்ள நர்லாபூரில் பாலமுரு-ரங்காரெட்டி நீரேற்றுப் பாசனத் திட்டத்தினைத் தெலுங்கானா முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழ் G20 நாடுகளின் நிலையான நிதிச் செயற்குழுவின் (SFWG) நான்காவது மற்றும் இறுதிக் கூட்டம் ஆனது உத்தரப் பிரதேசத்தின் வாரணாசி நகரில் நடைபெற்றது.
- சர்வதேசக் கடலோரத் தூய்மைப்படுத்துதல் தினமானது, ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் மூன்றாவது சனிக்கிழமையன்று (செப்டம்பர் 16, 2023) உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
- 1995 ஆம் ஆண்டு முதல் செப்டம்பர் 19 ஆம் தேதி சர்வதேச கடற்கொள்ளையர் போன்ற உரையாடல் தினம் கடைபிடிக்கப் படுகிறது.
- திருப்பூர் மாவட்டத்தில் உள்ள மாணிக்கபுரம் குளத்தில் வெளிறிய இறகுகளுடன் கூடிய இந்தியப் புள்ளி வாத்து - புள்ளி மூக்கன் (அனாஸ் போயேசிலோர்ஹைஹன்சா) சமீபத்தில் தென்பட்டது.
- பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டு ISSF உலகக் கோப்பைப் போட்டியில் பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் போட்டியில் இந்திய துப்பாக்கி சுடும் வீராங்கனை இளவேனில் வாலறிவன் தங்கப் பதக்கத்தினை வென்று உள்ளார்.
- உலக நீர்வளக் கண்காணிப்புத் தினம் ஆனது உலகெங்கிலும் உள்ள நீர் வளக் கண்காணிப்பு மற்றும் நீர் வள ஆதாரங்களைப் பாதுகாப்பதில் பொதுமக்களிடையே விழிப்புணர்வையும் ஈடுபாட்டையும் அதிகரிக்கும் நோக்கில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 18 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.


- 2023 ஆம் ஆண்டு ICC கிரிக்கெட் உலகக் கோப்பைப் போட்டிக்கான இந்திய அணியின் உடையினை அடிடாஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- நர்மதா நதிக்கரையில் ஓம்காரேஷ்வர் எனுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆதி சங்கராச்சாரியாரின் 108 அடி உயர 'ஒற்றுமை சிலையை' மத்தியப் பிரதேச மாநில முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த எழுத்தாளர் சேத்னா மாரூவின் 'வெஸ்டர்ன் லேன்' என்ற புதினம் 2023 ஆம் ஆண்டு புக்கர் பரிசிற்கான குறும்பட்டியலில் இடம் பிடித்து உள்ளது.
- அணைப் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச மாநாடு ஆனது (ICDS) ராஜஸ்தானின் ஜெய்ப்பூர் நகரில் ஜல் சக்தி அமைச்சகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- செர்பியாவின் பெல்கிரேடு நகரில் நடைபெற்று வரும் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்களுக்கான 53 கிலோ எடைப் பிரிவில் இந்திய வீராங்கனை ஆன்டிம் பங்கால் வெண்கலப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- மூளைச் சாவு அடைந்து உடல் உறுப்புகளைத் தானம் செய்தவர்களின் இறுதிச் சடங்குகள் அரசு மரியாதையுடன் நடத்தப்படும் என தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.
- மாற்றுப் போக்குவரத்தினை மேம்படுத்துவதற்காகவும், மகிழுந்துகளின் பயன்பாட்டினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 22 ஆம் தேதியன்று உலக மகிழுந்து பயன்பாடு இல்லா தினம் அனுசரிக்கப்படுகிறது.
- உலக நதிகள் தினம் ஆனது ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் நான்காவது ஞாயிற்றுக்கிழமையன்று (செப்டம்பர் 24) அனுசரிக்கப்படுகிறது.
- இந்தியாவில் ஒவ்வொர் ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் நான்காவது ஞாயிற்றுக் கிழமையன்று (செப்டம்பர் 24) தேசிய மகள்கள் தினமானது பெற்றோர்கள் தங்கள் மகள்களுக்கென கூடுதல் கவனம் செலுத்துவதை ஊக்குவிக்க கொண்டாடப்படுகிறது.
- பிரதமர் தனது நாடாளுமன்றத் தொகுதியான வாரணாசியில் அமைக்கப்பட உள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- இந்தியாவில் உள்ள கலங்கரை விளக்கங்களைச் சுற்றுலா தலங்களாக மேம்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்தியாவின் முதல் கலங்கரை விளக்க விழாவை கோவாவில் மத்திய அரசு தொடங்கியது.
- பிரான்சு நாட்டின் கதிர் வீச்சுக் கண்காணிப்பு நிறுவனமானது ஆப்பிள் ஐபோன் 12 வகையின் சோதனை முடிவுகளில், அது ஐரோப்பியக் கதிர்வீச்சு வெளிப்பாடு வரம்புகளை மீறியதாகக் கண்டறியப் பட்டதையடுத்து அதன் விற்பனையைத் தடை செய்துள்ளது.
- நோபல் அறக்கட்டளையானது இந்த ஆண்டிற்கான நோபல் பரிசுகளுக்கான விருதுத் தொகையை 1 மில்லியன் குரோனர் (90,000 டாலர்) என்ற அளவில் இருந்து 11 மில்லியன் குரோனர்களாக (986,270 டாலர் அதாவது சுமார் 8,19,49,519 ரூபாய்) உயர்த்த உள்ளது.
- பாகிஸ்தானின் கராச்சியைச் சேர்ந்த எரிகா ராபின், என்பவர் 'பிரபஞ்ச அழகி பாகிஸ்தான் 2023' பட்டத்தை வென்று, இந்தப் பட்டத்தினை பெற்ற அந்நாட்டின் முதல் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- சமூக சீர்திருத்தவாதியான பெரியார்' ஈ.வெ. ராமசாமி அவர்களின் பிறந்தநாள் ஆன செப்டம்பர் 17 ஆம் தேதியானது, தமிழகத்தில் ஒவ்வோர் ஆண்டும் 'சமூக நீதி தினமாக' அனுசரிக்கப்படுகிறது.

- ❖ பண்டித தீன்தயாள் உபாத்யாயா அவர்களின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் இந்தியாவில் ஆண்டுதோறும் செப்டம்பர் 25 ஆம் தேதியன்று அந்த்யோதயா திவாஸ் கொண்டாடப் படுகிறது.
- ❖ மத்தியப் பிரதேச அரசானது அம்மாநிலத்தின் ஏழாவது புலிகள் வளங்காப்பகமாகவும், நாட்டின் 54வது புலிகள் வளங்காப்பகமாகவும் "வீராங்கனை துர்காவதி புலிகள் வளங் காப்பகத்தினை" நிறுவியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## சுயமரியாதை திருமணச் சட்டம் மீதான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு


- ❖ 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் 7(A)வது பிரிவின் கீழ் "சுயமரியாதை" திருமணங்களை நடத்துவதற்கு வழக்கறிஞர்களுக்கு எந்தவிதமான தடையும் இல்லை என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- ❖ 1968 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் தேதியன்று, 1967 ஆம் ஆண்டு இந்து திருமண (தமிழ்நாடு சட்டத் திருத்தம்) சட்டத்திற்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தார்.
- ❖ இந்த சட்டத் திருத்தம் ஆனது 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தில் 7-A என்ற பிரிவைச் சேர்த்து அதனைத் திருத்தியமைத்தது.
- ❖ இருப்பினும், இந்தப் பிரிவு தமிழ்நாடு மாநிலத்திற்கு மட்டுமே நீட்டிக்கப் பட்டது.
- ❖ 7-A என்ற பிரிவானது, "சுயமரியாதை மற்றும் மதச்சார்பற்ற திருமணங்கள்" குறித்த சிறப்பு விதிமுறைகளைக் கொண்டுள்ளது.
- ❖ இது "இரண்டு இந்துக்களுக்கு இடையேயான எந்தவொரு திருமணத்தையும்" சட்டப் பூர்வமாக அங்கீகரிக்கிறது.
- ❖ இதனை "சுயமரியாதை" அல்லது "சீர்திருத்தத் திருமணம்" அல்லது வேறு எந்தப் பெயராலும் குறிப்பிடப்படலாம்.



## அரவிந்த் சுப்ரமணியன் குழு

- அரவிந்த் சுப்பிரமணியன் தலைமையில் 5 பேர் கொண்ட குழு ஒன்றினைத் தமிழக மாநில அரசு அமைத்துள்ளது.
- இவர் இந்திய அரசின் முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் ஆவார்.
- இந்தக் குழு தமிழ்நாட்டிற்கான ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரியின் (IGST) பங்கீட்டிற்கானத் தீர்வு முறையை ஆய்வு செய்ய உள்ளது.
- மாநிலங்களுக்கு இடையேயான சரக்குகள் மற்றும் சேவை வழங்கீடு மீது மத்திய அரசினால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும் இந்த வரியானது பின்பு மாநில அரசுடன் பகிர்ந்துக் கொள்ளப் படுகிறது.

## நெல் கொள்முதல் இலக்கு




- 2022-23 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தில் சுமார் 44.22 லட்சம் டன் நெல் கொள்முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- நம மாநில அரசானது, 2023-24 ஆம் ஆண்டில் 50 லட்சம் டன் நெல் கொள்முதல் மேற் கொள்வதற்கு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- இந்த இலக்கானது தமிழ்நாடு பொது விநியோகக் கழகத்தினால் (TNCSC) வரைவிக்கப் பட்டது.

## அரிசி கொள்முதல்


- தமிழ்நாடு அரசு பொது விநியோகக் கழகமானது தேசியக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பிடமிருந்து 7 லட்சம் டன் அரிசியைக் கொள்முதல் செய்ய உள்ளது.
- இது பொது விநியோக வழங்கீட்டிற்காகப் பயன்படுத்தப்பட உள்ளது.
- மத்திய அரசானது, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் (NFSA) கீழான பொது விநியோகத் திட்டத்திற்காக மாதந்தோறும் தமிழகத்திற்கு சுமார் 2.97 லட்சம் டன் அரிசி ஒதுக்கீடு செய்கிறது.

- இந்த அளவை விட, தமிழக மாநிலத்திற்குச் சராசரியாக, மாதத்திற்கு 50,000 டன் முதல் 60,000 டன் வரை அரிசி கூடுதலாக தேவைப் படுகிறது.

## கூடுதல் கனிம வருவாய்

- தமிழக அரசானது சிறு கனிமத் துறையில் ஆண்டிற்கு சுமார் 400 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் ஈட்ட உள்ளது.
- இது சமீபத்தில் சிறு கனிமங்களுக்கான சுரங்க உரிமத் தொகை, பகுதி மதிப்பீடு, குறைந்த பட்சக் குத்தகைத் தொகை மற்றும் சந்தாதாரர் கட்டணம் ஆகியவற்றைத் திருத்தியமைத்துள்ளது.
- திருத்தியமைக்கப்பட்ட கட்டணம் ஆனது செப்டம்பர் 05 ஆம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளது.
- 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிமச் சலுகை விதிகளில் சமீபத்தில் இதற்கான திருத்தம் ஆனது மேற்கொள்ளப்பட்டது.

## கடற்பாசிப் பூங்கா





- சமீபத்தில், ராமேஸ்வரம் அருகே வாழமாவூர் எனுமிடத்தில் அமைக்கப்பட உள்ள நாட்டின் முதல் பல்நோக்கு கடற்பாசிப் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
- கடற்பாசி பூங்கா 6 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க உதவும்.
- கடற்பாசியானது மருந்துகள் மற்றும் உணவுப் பொருட்கள் தயாரிப்பில் பயன்படுத்தப் படும்.

## கலைஞர் செம்மொழி விருது

- தமிழக முதல்வர் அவர்கள், கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி தமிழ் விருதினைத் தமிழறிஞர் K. ராமசாமி அவர்களுக்கு வழங்கினார்.
- இவர் மத்திய இந்திய மொழிகள் நிறுவனத்தின் முன்னாள் துணை இயக்குநர் ஆவார்.
- பண்டையத் தமிழ் கலாச்சாரம் மற்றும் நாகரிகம் பற்றிய பல்வேறு புதிய தகவல்களை உருவாக்க வழி வகுத்த குறிப்பிட்ட துறைகளின் ஆராய்ச்சியாளர் அல்லது ஆராய்ச்சி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட செம்மொழி சார்ந்த தமிழ் ஆய்வுகளில் வழங்கப் பட்ட சிறந்தப் பங்களிப்பிற்காக இந்த விருதானது வழங்கப்படுகிறது.

## இலாகா இல்லாத அமைச்சர்




- ❖ இலாகா இல்லாத அமைச்சர் என்பது அரசியலமைப்பு சார்ந்த சர்ச்சைக்குரிய ஒன்று என்று சென்னை உயர் நீதிமன்றம் சமீபத்தில் கூறியுள்ளது.
- ❖ முதலமைச்சர் ஒரு மாநிலத்தின் நிர்வாகத் தலைவர் ஆவார்.
- ❖ தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிக்கு அமைச்சகம் சார்ந்த பொறுப்புகளை வழங்குவது ஒரு நிர்வாகத் தலைவரின் பொறுப்பாகும்.
- ❖ இருப்பினும், ஒரு குறிப்பிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிக்கு அமைச்சர் பொறுப்பை வழங்க முடியாது என்று அவர் கருதினால், அத்தகைய சட்டமன்ற உறுப்பினரை இலாகா இல்லாமல் அமைச்சராகத் தக்க வைப்பதற்கு தார்மீக அல்லது அரசியலமைப்பு அடிப்படையில் எந்த ஆதரவும் இல்லை.
- ❖ இது நீதி நெறிமுறைகள், நல்லாட்சி மற்றும் அரசியலமைப்பு ஒழுக்கம் அல்லது நாட்டு ஒருமைப்பாட்டுக்கு எதிரானதாகும் எனவும் கூறியுள்ளது.

## சேலம் ஜவ்வரிசிக்குப் புவிசார் குறியீடு

- ❖ சேலம் சேகோவிற்கு (ஜவ்வரிசி) சமீபத்தில் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ மண்ணிலிருந்துத் தோண்டியெடுக்கப்பட்ட பச்சை மரவள்ளிக்கிழங்கிலிருந்து பெறப் பட்ட சேகோ, சிறிய கடினமான உருண்டைகள் அல்லது முத்து போன்ற வடிவிலான வெண்முத்து நிறத்தில் உள்ளது.
- ❖ மரவள்ளிக் கிழங்கு ஆனது தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 3 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படும் ஒரு முக்கிய தோட்டப் பயிராகும்.
- ❖ சேலம் மாவட்டத்தில், 1943 ஆம் ஆண்டில், மாணிக்கம் செட்டியார் என்பவர் தான், முதன்முதலில் சேகோவினை உற்பத்தி செய்தார்.

## நாடோடிப் பழங்குடியினர் பற்றிய ஆய்வு


- தமிழ்நாட்டின் எட்டு மாவட்டங்களில் காணப்படும் நான்கு நாடோடிப் பழங்குடியினச் சமூகங்களைச் சேர்ந்த 1,458 குடும்பங்களில் இந்தக் கணக்கெடுப்பானது நடத்தப் பட்டது.
- இந்த அறிக்கையானது மதராஸ் சமூகப் பணிக்கானப் பள்ளியில் 71வது விமுக்தா தினமான செப்டம்பர் 6 ஆம் தேதி அன்று வெளியிடப் பட்டது.
- இந்த தினத்தில் தான் குற்றப் பழங்குடியினர் அந்தப் பட்டியலில் இருந்து விடுவிக்கப் பட்டு அந்த தினம் ஆகஸ்ட் 31 அன்று ஒவ்வொரு வருடமும் அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த ஆய்வானது தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் நரிக்குறவர், பூம் பூம் மாட்டுக் காரன் – அதியன், லம்பாடர்கள் மற்றும் காட்டுநாயகர்கள் ஆகியச் சமூகத்தினைச் சேர்ந்த 1485 குடும்பங்களில் மேற்கொள்ளப் பட்டது.
- இந்தச் சமூகத்தினர் கல்வி மற்றும் அரசாங்கத் திட்டங்கள் ஆகியவற்றின் அணுகலைப் பெறுவதில் பின்தங்கி உள்ளனர்.
- இந்தக் குடும்பங்களில் உள்ள 7% குழந்தைகள் இன்னும் பள்ளிகளில் சேர்க்கப் பட வில்லை.
- மீதமுள்ளவர்களில், 53% அளவிலான பேர் தங்கள் பள்ளிகளில் வகுப்புத் தோழர்கள் மற்றும் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படும் பல்வேறு பாகுபாடு நடவடிக்கைகளை எதிர் கொள்வதாக தெரிவித்துள்ளனர்.
- இந்தப் பிரச்சினையானது, 12 ஆம் வகுப்பை முடிப்பதற்குள் பல குழந்தைகள் பள்ளியிலிருந்து இடை நிற்பதற்கு வழி வகுத்தது.
- இந்த இனத்தைச் சேர்ந்த 1,118 குடும்பங்களில் 10 ஆம் வகுப்பு முடித்தவர்கள் ஒருவர் கூட இல்லை, 1,275 குடும்பங்களில் 12 ஆம் வகுப்பு முடித்தவர்கள் ஒருவர் கூட இல்லை, 1,378 குடும்பங்களில் ஒரு பட்டதாரிகள் கூட இல்லை.
- மொத்தம் 807 குடும்பங்கள் தாங்கள் பள்ளிகளில் பயில்வதற்கான அணுகலைப் பெறாமல் இருப்பதாக அல்லது பாகுபாடுகளை எதிர்கொண்டதாகக் கூறினர்.
- இதே போல் 713 குடும்பங்கள் உயர்கல்வி நிறுவனங்களில் பயில்வதற்கான அணுகலை பெறாமல் உள்ளதாக கூறினர்.
- 1,458 குடும்பங்களில் 267 குடும்பங்களுக்கு மட்டுமே இலவச மனைப் பட்டா வழங்கப் பட்டது.
- MGNREGS திட்டம் மூலம் 71 குடும்பங்கள், ஜன்தன் திட்டம் மூலம் 71 குடும்பங்கள், PMAY திட்டம் மூலம் 112 குடும்பங்கள், CMCHIS திட்டம் மூலம் 201 குடும்பங்கள் மட்டுமே பயனடைந்துள்ளனர்.

## மறுமுறை பயன்படுத்தக் கூடிய தண்ணீர் குடுவைகளுக்கு ISI தரக் குறியீடு

- மறுமுறை பயன்படுத்தக்கூடிய தண்ணீர் குடுவைகள் மற்றும் பல்வேறு மூலப் பொருட்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட பாத்திரங்கள் ஆகியவற்றினை ISI முத்திரை இல்லாமல் தமிழகத்தில் விற்பனை செய்ய முடியாது என்ற விதிமுறை விரைவில் அறிமுகப் படுத்தப்பட உள்ளது.
- இந்தியத் தர நிர்ணய வாரியமானது (BIS) தரமற்றப் பொருட்களின் விற்பனையை கட்டுப்படுத்துவதற்காக அந்தத் தயாரிப்புகளுக்கு தரச் சான்றிதழ் பெறுவதை கட்டாயமாக்கியதோடு, கட்டாயத் தரக் கட்டுப்பாட்டு ஆணையையும் உருவாக்கி உள்ளது.

- வீடுகளில் பரவலாகப் பயன்படுத்தப்படும் வெப்பக் காப்பிடப் பட்ட குடுவைகள் மற்றும் கொள்கலன்கள் கட்டாய BIS சான்றிதழ் பெற வேண்டும் என்ற வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.
- குழந்தைகளுக்கானப் பால்பொருள் சார்ந்த உணவு, உடனடி காபி, தேநீர் மற்றும் இனிப்பூட்டப் பட்ட சுண்டக் காய்ச்சிய (நீர்ச்சத்து நீக்கப்பட்ட) பால் போன்ற உணவு மற்றும் பானங்களுக்குப் பயன்படுத்தப்படும் வெள்ளீயக் கலன்களுக்கும் தற்போது கட்டாயமாக BIS சான்றிதழைப் பெற வேண்டும்.

## 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தமிழக மின் தேவை




- 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தமிழகத்தின் உச்சகட்ட மின் தேவை 18,007 மெகா வாட்டாக இருந்தது.
- 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 16,411 மெகாவாட்டாக இருந்த மின் தேவையானது சுமார் 9.72% அதிகரித்துள்ளது.
- தென் மாநிலங்களிலேயே தமிழகம் தான் அதிக மின்னாற்றல் நுகர்வைக் கொண்டு உள்ளது.
- தமிழகத்தில், ஏப்ரல் 20 ஆம் தேதியன்று 19,387 மெகாவாட் என்ற அளவில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கான உச்ச கட்ட மின் தேவையானது பதிவானது.
- அதே நாளில், தமிழகத்தின் தினசரி மின் நுகர்வு ஆனது, முன் எப்போதும் இல்லாத அளவில் 423.785 மில்லியன் அலகுகளாக பதிவு செய்யப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், தமிழகத்தில் மொத்தமாக 9,885 மெகாவாட் அளவில் அதிகமான மின்தேவையானது பதிவானது.

## பாறைக்குளம் கோவில்



- பாறைக்குளம் என்னுமிடத்தில் உள்ள முற்காலப் பாண்டியர் கால குடைவரைக் கோயிலை தமிழக அரசு பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக அறிவித்துள்ளது.
- இது விருதுநகர் மாவட்டத்தின் திருச்சுழி தாலுக்காவில் அமைந்துள்ளது.
- மாநில அரசாங்கமானது இந்தப் பகுதியைச் சுற்றி வேலி அமைத்து, இந்த நினைவுச் சின்னத்தின் 300 மீட்டர் சுற்றளவில் பாறைச் சுரங்கப் பணிகளை மேற்கொள்வதையும் தடுக்கும்.
- பாறைக் குளத்திலுள்ள இந்தக் கோயில் ஒரு ஏகதல குடைவரைக் கோயில் (ஒற்றைக் குடைவரைக் கோயில்) ஆகும்.
- இந்தப் பாண்டியர் காலக் குடைவரைக் கோயில்கள் 8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல வாரியம்


- தமிழ்நாடு அரசானது, தனது மாநில அளவிலானப் பழங்குடியினர் நல வாரியத்தை மறுசீரமைத்துள்ளது.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர், இந்த வாரியத்தின் அதிகாரப் பூர்வத் தலைவராக செயல்படுவார்.
- இந்தக் குழுவில் எட்டு அதிகாரப்பூர்வ மற்றும் 17 அதிகாரப்பூர்வமற்ற (அலுவல் சாராத) உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்.
- கல்வி, பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நலன் ஆகிய துறைகளில் பட்டியலிடப் பட்ட பழங்குடியினரின் ஒட்டு மொத்த மேம்பாட்டிற்காக 2007 ஆம் ஆண்டில் இக்குழு முதலில் அமைக்கப்பட்டது.

## பெண்களுக்கான அடிப்படை வருமானத் திட்டம்

- கலைஞர் மகளிர் உரிமைத் தொகை (பெண்களுக்கான அடிப்படை வருமானம்) என்ற திட்டத்தின் மூலம் பயன் பெறத் தகுதியுடைய 1.06 கோடி பெண்களைத் தமிழக அரசு அடையாளம் கண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் பயன் பெறத் தகுதியான பெண்களுக்கு அந்தத் தொகையானது அவரவரின் வங்கிக் கணக்கில் செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் வரவு வைக்கப்படும்.
- அது முதல் இந்தத் தொகையானது தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் இந்தத் தகுதியான பெண்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

## வயது வந்தோருக்கான தடுப்பு மருந்து வழங்கீட்டு எண்ணிக்கை குறைவு

- இந்திய மருத்துவர்கள் சங்கம் (API) மற்றும் இப்சோஸ் ஆகியவை இணைந்து 16 நகரங்களில் இந்தக் கணக்கெடுப்பினை நடத்தியது.
- 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது பிரிவினரில், கணக்கெடுக்கப்பட்ட 71% பேர் (50 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்) வயது வந்தோருக்கான தடுப்பு மருந்து பற்றி அறிந்திருந்தனர்.
- ஆனால், இளம் வயதினருக்கான தடுப்பு மருந்துகளை 16% பேர் மட்டுமே எடுத்துக் கொண்டுள்ளனர்.
- பெரும்பாலானோர் (50%) பல தவணை தடுப்பு மருந்துகளை எடுத்துக் கொள்வதால் அவர்கள் அவற்றை முழுமையாக சார்ந்து இருக்கக் கூடும் என்று எண்ணுகின்றனர்.
- 58% நோயாளிகளும் நோயாளிகளின் பராமரிப்பாளர்களில் 62% பேரும் தங்களை அல்லது தங்கள் பெற்றோர்/உறவினர்களை நோய்களிலிருந்துப் பாதுகாப்பதற்கு வேண்டி தடுப்பு மருந்தினை விட சிறந்த வழிகள் இருப்பதாக உணர்கிறார்கள்.




## கோவில்களில் மகளிர் உதவி அர்ச்சகர்கள்

- பஞ்சராத்ர ஆகமத்தின் படி பயிற்சி பெற்ற S. கிருஷ்ணவேணி, S. ரம்யா, ரஞ்சிதா ஆகியோர் தமிழகத்தில் உள்ள ஸ்ரீ வைஷ்ணவக் கோயில்களில் உதவி அர்ச்சகர்களாக பதவியேற்க உள்ளனர்.
- தமிழக மாநிலத்தில் பட்டர்களாகப் பயிற்சி பெற்ற முதல் மூன்று பெண்கள் இவர்களே ஆவர்.
- ஸ்ரீரங்கத்தில் உள்ள ஸ்ரீ ரங்கநாதர் கோயில் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் இவர்கள் பயிற்சி பெற்றனர்.

## வெம்பக்கோட்டையில் அரிதான கடுமட்பாண்டம் கண்டெடுப்பு



- விருதுநகர் மாவட்டத்தின் வெம்பக்கோட்டையில் மாநிலத் தொல்லியல் துறையின் அகழாய்வின் இரண்டாம் கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.
- ஒரு திரவம் நிரம்பி வழியும் வரை கொதிக்க வைக்கப்பட்ட நிலையிலான ஒரு சுடுமட்பாண்டம் மற்றும் ஒரு விளக்கு ஆகியவை இந்தத் தளத்தில் கண்டெடுக்கப் பட்டது.
- அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்ட இடத்திலிருந்து நான்கு கிலோமீட்டர் தொலைவில் உள்ள சிவசங்குப்பட்டி கிராமத்தில் சேதமடையாத இரண்டு முதுமக்கள் தாழிகள் உட்பட நான்கு முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- முதற்கட்டத்தில் 3,000க்கும் மேற்பட்டத் தொல்பொருட்கள் இங்கு கண்டெடுக்கப் பட்டு உள்ளன.
- மணிகள், பொம்மைகள், கடுமட்பாண்டங்கள் மற்றும் ஆயிரக்கணக்கான சங்கு வளையல்கள் ஆகியவை இதில் அடங்கும்.

## ஸ்வஸ்த் AI

- சோலினாஸ் இன்டெக்ரிட்டி எனப்படும் பருவநிலைத் தொழில்நுட்பம் சார்ந்த புத்தொழில் நிறுவனமானது, கழிவுநீர் மற்றும் குடிநீர் குழாய்களில் கசிவுகள் ஏற்படுவதை ஆராய உதவும் எந்திர மனிதனை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஸ்வஸ்த் AI மற்றும் கழிவுநீர் குழாயின் உள்ளக ஆய்வு எந்திர மனிதன் (எண்டோபோட்) நாட்டின் நகர்ப்புறக் கழிவுநீர் உள்கட்டமைப்பில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ஏற்கனவே இந்த நிறுவனம் உருவாக்கிய குழாய் ஆய்வு எந்திர மனித அமைப்புகளுடன் கூடுதலாக எண்டோபோட் உருவாக்கப்பட்டுள்ளது.
- ஸ்வாஸ்த் AI எந்திரத்தின் மேகக் கணிமம் அடிப்படையிலான கட்டமைப்பு ஆனது, ஒரே இடத்தில் அணுகக் கூடிய ஓர் இடைமுகத்தில் முழு வழங்கீட்டு வலையமைப்பினையும் பராமரிக்கவும் மேலாண்மை செய்யவும் உதவுகிறது.


## ஸ்டார்ட்அப் தமிழா' பொழுதுப்போக்குக் காட்சி

- தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கத் திட்டம் (StartupTN) ஆனது, 'ஸ்டார்ட்அப் தமிழா' எனும் புத்தொழில் நிறுவனம் சார்ந்த தமிழ் பொழுதுபோக்குக் காட்சியை அறிமுகப் படுத்த உள்ளது.

- இது மாநில இளைஞர்களிடையே தொழில் முனைவோர் கலாச்சாரத்தை உருவாக்கச் செய்வதையும், ஒரு மாபெரும் தளத்தில் அறிமுகப்படுத்தப்படும் புதுமைகளை ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக அளவிலும், தேசிய அளவிலும், ஷார்க் டேங்க் போன்ற நிகழ்ச்சிகள் புத்தொழில் நிறுவனங்களின் சூழலைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அந்தக் கருத்தாக்கத்தினை ஒரு பிரபலமான கலாச்சாரமாகக் கொண்டு வந்துள்ளன.
- ஒரு பொழுதுபோக்குத் தொலைக்காட்சி நிகழ்ச்சியாக ஒளிபரப்பப்படும் ஸ்டார்ட்அப் தமிழா, மாநிலத்தில் புத்தொழில் நிறுவனங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதோடு, தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தொழில் நிறுவனங்களை நடப்பில் உள்ள முதலீட்டாளர்களுடன் இணைக்கும்.

## விஸ்வகர்மா திட்டம் தொடர்பான குழு

- மத்திய அரசின் விஸ்வகர்மா திட்டம் குறித்து ஆய்வு செய்வதற்காக 4 பேர் கொண்ட குழுவைத் தமிழக அரசு அமைத்துள்ளது.
- இது அவர்களின் பாரம்பரிய சாதி அடிப்படையிலான தொழில்களில் அவர்களை சிக்க வைத்து கைவினைஞர்களின் கல்வி மற்றும் சமூக வளர்ச்சியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துமா என இக்குழு ஆராயும்.
- மாநிலத் திட்ட ஆணையத்தின் (SPC) துணைத் தலைவர் J. ஜெயரஞ்சன் இக்குழுவின் தலைவராக விளங்குவார்.





## கலைஞர் மகளிர் உரிமை திட்டம்

- தமிழக முதல்வர் அவர்கள் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதியன்று கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை காஞ்சிபுரத்தில் தொடங்கி வைத்தார்.
- இது முன்னாள் முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் (தி.மு.க.) நிறுவனருமான C.N. அண்ணாதுரை அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தொடங்கப் பட்டது.
- இத்திட்டத்தின் கீழ், மாநிலத்தில் உள்ள 1.06 கோடி பெண் குடும்பத் தலைவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 1,000 உரிமைத் தொகையாக வழங்கப்படும்.

- இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு தமிழக அரசிற்கு ஆண்டிற்கு 12,000 கோடி ரூபாய் செலவாகும்.


## IIT-M பசுமை ஹைட்ரஜன் முன்னெடுப்பு




- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, 'பசுமை ஹைட்ரஜன்' உற்பத்தியின் சோதனை/சரிபார்ப்புத் தரநிலைகளை உருவாக்குகின்ற மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் தொழில்துறைகளுடன் இணைந்து பணியாற்ற உள்ளது.
- இது 'தமிழகத்தில் அமைந்த ஹைட்ரஜன் பள்ளத்தாக்குப் புத்தாக்க தொகுதி' (HVIC-TN) என்ற முன்னெடுப்பின் ஒரு பகுதியாகும்.
- இது ஹைட்ரஜன் துறையில் பணியாற்றும் சுமார் 30 நிறுவனங்களை உள்ளடக்கியது ஆகும்.
- இதில் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சி பூங்கா மற்றும் தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டுக் கழகம் ஆகியவை அடங்கும்.
- பசுமை ஹைட்ரஜன் என்பது மின்னாற்பகுப்பு அல்லது உயிரிப் பொருட்களின் மாற்றம் மூலமாக புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களிலிருந்து பெறப்பட்ட ஹைட்ரஜன் ஆகும்.

## தமிழகத்தில் 36 யானை வழித்தடங்கள்

- தமிழ்நாட்டில் 36 யானை வழித்தடங்கள் இருப்பது தொடர்பான முதற்கட்டத் தகவல்களை சமீபத்திய ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.
- இந்தக் கள ஆய்வு ஆனது யானை வழித்தடக் கண்டறிதல் குழுவால் நடத்தப்பட்டது.
- அவற்றுள் 17 வழித்தடங்கள் பாலக்காட்டிற்குத் தெற்கிலும், 19 வழித்தடங்கள் பாலக்காட்டிற்கு வடக்கிலும் அமைந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.
- இந்திய வனவிலங்கு அறக்கட்டளை அமைப்பினால் வெளியிடப்பட்ட ஒரு பிரசுரம் ஆனது தமிழ்நாட்டில் 19 யானை வழித்தடங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.
- இருப்பினும், கிட்டத்தட்ட இரண்டு மடங்கு எண்ணிக்கையிலான வழித்தடங்கள் இருப்பதாக சமீபத்திய ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ள நிலையில், இது யானை வழித் தடங்கள் குறித்த தகவல் ஒருங்கிணைப்பில் பல சவால்களை ஏற்படுத்துகிறது.




### குறத்தியறை குடைவரைக் கோவில்



- கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குறத்தியறையில் உள்ள முற்காலப் பாண்டியர் கால குடைவரைக் கோவிலைப் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக தமிழக அரசு அறிவிக்க உள்ளது.
- பாண்டியர் காலத்தினைச் சேர்ந்த 10 கோவில்களில் குறத்தியறையில் உள்ள இந்தக் கோவிலும் ஒன்றாகும்.
- இந்தக் கோவிலின் தெய்வத்தினைச் சங்க காலக் கவிஞரான ஔவையார் அம்மன் என உள்ளூர்வாசிகள் தொடர்ந்து வழிபடுகின்றனர்.
- ஆனால், கவிஞரும் கல்வெட்டு ஆய்வு அறிஞருமான கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள், இது பாறையில் செதுக்கப்பட்ட மகாவிஷ்ணுவின் உருவம் என்று எழுதியுள்ளார்.

## பஞ்சாயத்துச் செயலாளர்களுக்கான ஆட்சேர்ப்பு முறை

- தமிழக அரசானது, ஊரக மேம்பாட்டுத் துறைக்கான கிராமப் பஞ்சாயத்துச் செயலாளர்களுக்கான ஆட்சேர்ப்பு முறையைத் திருத்தியமைத்துள்ளது.
- அந்த செயலர்கள் இனி அந்தந்த கிராம ஊராட்சிகளில் வசிக்க வேண்டும்.
- இனி ஆட்சியர் தலைமையிலான மாவட்ட அளவிலான குழுவினால் ஆட்சேர்ப்பு செயல் முறைகள் மேற்கொள்ளப்பட உள்ளது.
- இது 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராமப் பஞ்சாயத்துச் செயலாளர்கள் (பணி நிபந்தனைகள்) விதிகள் மூலம் நிர்வகிக்கப்படும்.

## அறிஞர் தமிழ் ஒளி

- தமிழக அரசானது தஞ்சையில் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் தமிழறிஞர் தமிழ் ஒளி அவர்களின் மார்பளவு சிலையை நிறுவ உள்ளது.
- இவர் 1924 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 ஆம் தேதியன்று குறிஞ்சிப்பாடியில் பிறந்தார்.
- இவர் தொடக்கத்தில் விசயரங்கம் என்று அழைக்கப்பட்டார்.
- இவர் சுப்பிரமணிய பாரதி மற்றும் பாரதிதாசனைத் தொடர்ந்து பல இலக்கியப் படைப்புகளைப் படைத்தார்.
- இவர் சாதிப் பாகுபாடுகளுக்கு எதிராகவும் பல்வேறு நூல்களை எழுதினார்.



## இணை உருவாக்க நிதி

- தமிழக அரசானது 100 கோடி ரூபாய் மதிப்பிலான ‘இணை உருவாக்க நிதியினை’ நிறுவ உள்ளது.
- இது தனியார் துறை துணிகர மூலதன முதலீட்டு (VC) நிதிகளில் பங்கேற்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு தனித்துவமான நிதி மாதிரியாகும்.
- இந்த நிதியானது, முதலீட்டாளர்களால் நிர்வகிக்கப்பட்டு தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கத் திட்டம் (StartupTN) மூலம் ஒருங்கிணைக்கப்படும்.
- இது 1990 ஆம் ஆண்டுகளில் இஸ்ரேலிய அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட யோஸ்மா (‘முயற்சி’ என்று பொருள்படும்) மாதிரியின் கருத்தாக்கத்தினால் ஈர்க்கப்பட்டு வடிவமைக்கப் பட்டது.
- இது புதிய துணிகர மூலதன நிதிகளில் முதலீடு செய்வதன் மூலம் புதுமையான தொழில்துறைகளைத் தொடங்குவதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- பிராந்திய, கிராமப்புறத் தாக்கம், பெண்கள் மற்றும் பருவநிலை நடவடிக்கை சார்ந்த நிதிகளில் மாநில அரசு 40% நிதியை (10 கோடி ரூபாய் உச்சவரம்புடன்) பங்களிக்கும்.
- தனியார் துறையால் முன்வைக்கப்படும் பிற கருப்பொருள் சார்ந்த நிதிகளில் (5 கோடி ரூபாய் உச்சவரம்புடன்) 20% நிதியினை மாநில அரசு வழங்கும்.

## தமிழகத்தின் உச்சகட்ட மின் தேவை

- தமிழகத்தின் மாலை நேர உச்சகட்ட மின் தேவையானது அக்டோபர் மாதத்தில் 16,200 மெகாவாட்டாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இது கடந்த ஆண்டு இதே மாதத்தில் 15,217 மெகாவாட்டாக இருந்தது.
- உச்சகட்ட தேவை நேரங்களில் கிடைக்கப் பெறும் மின்சாரத்தின் அளவு அக்டோபர் மாதத்தில் 14,463 மெகாவாட்டாக இருக்கும்.
- அக்டோபர் மாதத்திற்கான ஒட்டு மொத்த எரிசக்தித் தேவை 10,550 மில்லியன் அலகுகளாகவும், 10,788 மில்லியன் அலகுகளாகவும் இருக்கும்.
- மத்திய மின்சார ஆணையத்தின் படி, 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் மாநிலத்தின் எரிசக்தித் தேவை 8,820 மில்லியன் அலகாக இருந்தது.
- தென் மாநிலங்களிலேயே தமிழகம் தான் அதிக எரிசக்தி நுகர்வைக் கொண்டுள்ளது.
- தமிழகத்தில் ஏப்ரல் 20 ஆம் தேதியன்று 19,387 மெகாவாட் என்ற எப்போதும் இல்லாத உச்ச கட்டத் தேவைப் பதிவானது.
- அதே நாளில் எப்போதும் இல்லாத அளவுக்கு 423.785 மில்லியன் அலகு என்ற அளவில் தினசரி நுகர்வு பதிவானது.


## கீழடியில் சிவப்பு நிற சூதுபவள மணிகள்



- கீழடியில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் இரண்டு சிவப்பு நிற சூதுபவள மணிகள் (கார்னிலியன்) கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இது மகாராஷ்டிரா மற்றும் குஜராத் போன்ற இந்தியாவின் மேற்குப் பகுதியுடனான மேற்கொள்ளப்பட்ட தமிழக வர்த்தக தொடர்புகளை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.
- கடந்த ஆண்டு, 74 சிவப்பு நிற சூதுபவள மணிகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டு எடுத்தனர்.
- சிவப்பு நிற சூதுபவள கற்கள் பொதுவாக குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் காணப்படுகின்றன.

## தமிழகத்தின் மின்சார வாகன உற்பத்தி

- ❖ இந்த ஆண்டு இந்தியாவில் விற்பனை செய்யப்பட்ட பத்து லட்சம் மின்சார வாகனங்களில் (EV) நான்கு லட்சத்திற்கும் அதிகமானவை தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டவையாகும்.
- ❖ 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் தேதி வரை 10,44,600 மின்சார வாகனங்கள் சாலைப் போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- ❖ தமிழ்நாட்டின் மின்சார வாகன உற்பத்தி நிலையம் ஆனது 4,10,000 (0.41 மில்லியன்) வாகனங்களுக்கு மேல் அதாவது 40 சதவீதத்திற்கும் அதிகமாக உற்பத்தி செய்துள்ளது.
- ❖ வாகன உற்பத்தியின் தலைநகர் மற்றும் இந்தியாவின் டெட்ராய்ட் என்று அழைக்கப் படுகின்ற தமிழகமானது தற்போது மின்சார வாகன துறையிலும் முன்னணி இடத்தினைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ மின்சார வாகனங்கள் உற்பத்தி மையமாக கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, மதுரை, சேலம் மற்றும் சென்னை ஆகிய ஆறு நகரங்களை உருவாக்குவதை அது அடையாளம் கண்டுள்ளது.
- ❖ ஓலா எலக்ட்ரிக் நிறுவனமானது, கிருஷ்ணகிரியில் உள்ள அதன் மின்சார வாகன உற்பத்தி ஆலையில் 1,75,608 வாகனங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளது.
- ❖ கிருஷ்ணகிரியில் உள்ள டிவிஎஸ் மோட்டார் ஆலையானது, 1,12,949 வாகனங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளது.




## தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை 2023

- ❖ தமிழக முதல்வர் அவர்கள் '2023 ஆம் ஆண்டு சுற்றுலாக் கொள்கையினை' வெளியிட்டு உள்ளார்.
- ❖ அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்தத் துறையில் 20,000 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டு இந்தக் கொள்கை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

- இந்த விரிவான கொள்கையானது புதிய, பசுமைத் துறை சார்ந்த திட்டங்களை நிறுவச் செய்வதோடு, தற்போதுள்ள சுற்றுலா உள்கட்டமைப்பினை தரம் உயர்த்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய இரண்டையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கொள்கையானது, தற்போது அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அல்லது புதியக் கொள்கை அறிவிக்கப்படும் வரை செல்லுபடியாகும்.
- இது தகுதியான சுற்றுலாத் துறை சார் திட்டங்களுக்குத் தேவையான அனுமதிகள், மின்சாரக் கட்டணத்தில் சலுகைகள் மற்றும் பிற சலுகைகளைப் பெறுவதற்கான ஒரு ஒற்றைச் சாளர இணைய தளத்தினை உருவாக்க உள்ளது.
- இது ஒரு சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பையும் நிறுவ வழி வகை செய்கிறது.
- இந்தத் துறையானது, ஆண்டுதோறும் மாநில மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தது 12% பங்களிப்பினை அளிக்கும் ஒரு இலக்கினை உள்ளடக்கிய அடுத்த ஐந்தாண்டுகளுக்கான இலக்குகளை நிர்ணயித்துள்ளது.
- மேலும், சுற்றுலா மற்றும் அதனைச் சார்ந்த துணைத் தொழில்துறைகள் மூலம் தமிழகத்தில் 25 லட்சம் பேர் வேலைவாய்ப்புகளைப் பெறுவர்.
- சுற்றுலாத் துறையில் மேற்கொள்ளப்படும் முதலீட்டைக் கண்காணிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் வழிகாட்டுதல்-தமிழ்நாடு முகமைக்கு உதவுவதற்காக அந்தத் துறைக்குள்ளேயே சுற்றுலா வசதி மேம்பாட்டுப் பிரிவு உருவாக்கப்படும்.
- டிஸ்னி மற்றும் யுனிவர்சல் ஸ்டுடியோஸ் போன்ற உலகளாவிய கருப்பொருள் சார்ந்த விளையாட்டுப் பூங்காக்கள் (தீம் பார்க்) போன்று, சென்னையின் புறநகர்ப் பகுதியில் குறைந்தது 100 ஏக்கர் பரப்பளவில் பெரிய அளவிலான பொழுதுபோக்குப் பூங்கா ஒன்றை உருவாக்க சுற்றுலாத் துறை திட்டமிட்டுள்ளது.
- சென்னை – இராமேஸ்வரம் - கன்னியாகுமரி மற்றும் சென்னை - போர்ட் பிளேர் வழித் தடத்தின் பல்வேறு இடங்களில் பயணியர் கப்பல் வசதிகளைத் தொடங்குவதற்கான திட்டங்களும் இந்தக் கொள்கையில் இடம் பெற்றுள்ளன.
- நல்ல தரமான நகர்ப்புற உள்கட்டமைப்பு கொண்ட சிறு நகரங்கள் மற்றும் பெரு நகரங்கள் ஆனது தமிழகத்திற்கு வருபவர்கள் தங்கள் பயணத்தைத் தொடங்குகின்ற முக்கிய நுழைவாயில் மையங்களாக உருவாக்கப்படும் என்றும் இந்தக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் கன்னியாகுமரி ஆகியவை முக்கிய நுழைவாயில் மையங்களாக உருவாக்கப்படும்.
- முதன்மை நுழைவாயில் மையங்களில் சுற்றுலா உள்கட்டமைப்பை மேம்படுத்தச் செய்வதற்காக பொலிவுறு நகரங்கள் நிதியில் இருந்து 5% நிதி ஒதுக்கப்படும்.

## நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கை

- தமிழ்நாடு அரசானது, தென்னிந்தியாவின் ஒரேயொரு மலைவாழ் குளம்பு விலங்குகளின் குறைந்து வரும் எண்ணிக்கையினைக் கணக்கிடுவதற்காக தரப் படுத்தப் பட்ட நெறிமுறையில் தற்போது செயல்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு மாநில வனத்துறையானது கேரள மாநிலத்தின் அதன் சக துறையிடம் ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கெடுப்பினை மேற்கொள்ளுமாறு முன்மொழிய உள்ளது.
- இந்த விலங்கு ஆனது இந்த இரண்டு மாநிலங்களில் குறிப்பிட்ட வாழ்விடங்களில் மட்டுமே காணப்படுகிறது.

- முதல் முறையாக, இவற்றின் கணக்கெடுப்பில் ஆளில்லா விமானங்கள் பயன்படுத்தப் பட உள்ளது.
- நீலகிரி வரையாடு, கடல் மட்டத்திலிருந்து 300 முதல் 2,600 மீட்டர் உயரத்தில் அமைந்த செங்குத்தான மற்றும் பாறை நிலப்பரப்புடன் கூடிய மலைப் பகுதி புல்வெளிகளில் அதிகம் காணப்படுகிறது.
- தமிழ்நாடு மற்றும் கேரளாவில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகளில் 3,100க்கும் மேற்பட்ட விலங்குகள் ஆங்காங்கே பிரிந்து காணப்படும் வாழ்விடங்களில் வாழ்கின்றன என்று நம்பப் படுகிறது.
- வடக்கே நீலகிரிக்கும் தெற்கே கன்னியாகுமரி மலைக்கும் இடையே உள்ள பகுதிகள் இவற்றின் வாழ்விடங்கள் ஆகும்.

## விஸ்வகமல் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் INC





- சென்னை மயிலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரர் கோயில் குளத்துக்கு எதிரே 'விஸ்வகமல்' என்ற அடுக்குமாடிக் குடியிருப்பு உள்ளது.
- இது 1885 ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் உருவாவதற்கு வழி வகுத்த, ஒரு புதிய சகாப்தத்தினை உருவாக்க வழி வகுத்த கூட்டம் நடைபெற்ற இடம் ஆகும்.
- 1884 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அடையாறில் நடந்த பிரம்ம ஞான சபையின் வருடாந்திர மாநாட்டிற்குப் பிறகு, நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 17 பேர் இந்த இடத்தில் சந்தித்தனர்.
- எனினும் 'காங்கிரஸின் தந்தை' எனப்படும் ஆலன் ஆக்டேவியன் ஹியூம் இதில் பங்கேற்க வில்லை.
- ஆனால் "இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டம் ஆனது 1884 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டது" என சில கூற்றுக்கள் உள்ளன.
- ஆனால், 1885 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், 1884 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற கூட்டத்தைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லாமல், அடுத்து வர இருந்த கிறிஸ்துமஸில் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்தப் பிரதிநிதிகள் கூட்டத்தினை நடத்த முடிவு செய்யப்பட்டது.


# தேசியச் செய்திகள்

## மனித ஆரோக்கியத்தின் மீது மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்துகளின் தாக்கம்

- இந்திய மக்களின் ஆரோக்கியத்துடன் நன்கு தொடர்புடைய மண்ணின் நுண்ணூட்டச் சத்துக்கள் என்ற தலைப்பிலான கட்டுரை சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- நாட்டில் 35 சதவீதத்துக்கும் அதிகமான மண்ணில் துத்தநாகக் குறைபாடு இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- சுமார் 11 சதவீதம் பேருக்கு இரும்புச்சத்து குறைபாடு இருப்பதாக மதிப்பிடப் பட்டு உள்ளது.
- மண்ணில் துத்தநாகம் அதிக அளவு காணப்படும் பகுதிகளில் குழந்தைகளில் வளர்ச்சி குன்றிய நிலை மற்றும் எடை குறைந்த கொண்ட நிலை போன்ற பாதிப்புகள் குறைந்த விகிதங்களைக் கொண்டுள்ளன.
- மண்ணிலுள்ள துத்தநாகம் பெண்களின் உயரம் அதிகரிப்பில் ஒரு பெரும் பங்கினை வகிக்கிறது.
- மண்ணிலுள்ள இரும்பு என்பது, பெண்களிடையே இரத்த சோகை, குழந்தைகள் மற்றும் பெண்களின் உடலில் உள்ள ஹீமோகுளோபின் அளவுகளுடன் மிகப் பெரும் தொடர்புடையதாகும்.
- உலக மக்கள்தொகையில் சுமார் மூன்றில் ஒரு பங்கு அளவிலான மக்கள் இந்தியாவில் நுண்ணூட்டச் சத்து குறைபாட்டினால் பாதிக்கப் பட்டுள்ளனர்.



## வாக்காளர் எண்ணிக்கை அதிகரிப்பிற்கான விழிப்புணர்வு மாற்றத் திட்டம்




- இந்திய தேர்தல் ஆணையம் (ECI) ஆனது, 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் வாக்காளர்களின் எண்ணிக்கையினை அதிகரிக்கும் முயற்சியில், தனது வழக்கமான வாக்காளர் விழிப்புணர்வு திட்டத்தினை மாற்றியமைத்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் தேசியச் சராசரியை விட குறைவாகவோ அல்லது சற்று அதிகமாகவோ வாக்குப் பதிவு நடைபெற்ற 10 பெரிய மாநிலங்களில் அதிக கவனம் செலுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதன் கீழ், அந்தந்த மாநிலச் சராசரியை விட குறைவாக இருந்த சுமார் 250 தொகுதிகளிலும் அதிக கவனம் செலுத்தப் படுகிறது.
- இந்தத் திட்டமானது 2019 ஆம் ஆண்டில் சுமார் 67.4% ஆக இருந்த சராசரி வாக்காளர் பங்கேற்பினை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## காற்று மாசுபாடு மற்றும் ஆயுட் காலம்

**WORST-HIT NATIONS**

| Country | PM2.5* | Years lost** |
|---|---|---|
| B'desh | 74 | 6.8 |
| India | 58.7 | 5.3 |
| Nepal | 51.7 | 4.6 |
| Pakistan | 44.7 | 3.9 |
| Mongolia | 36 | 3 |

- நுண்ணிய துகள் பரவலால் ஏற்படும் காற்று மாசுபாடு (PM2.5) ஒரு சராசரி இந்தியரின் ஆயுட்காலத்தை 5.3 ஆண்டுகள் குறைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியாவின் 1.3 பில்லியன் மக்கள், வருடாந்திர சராசரி நுண்ணிய துகள் மாசு அளவு உலக சுகாதார அமைப்பின் வரம்பினை மீறிக் காணப்படும் பல்வேறு பகுதிகளில் வாழ்கின்றனர்.

- சுமார் 67.4 சதவீத மக்கள், நாட்டின் தேசியக் காற்றுத் தர அளவான 40 µg/m3 என்ற வரம்பினைத் தாண்டிய பகுதிகளில் வாழ்கின்றனர்.
- நாட்டின் தேசிய சுற்றுப்புறக் காற்றின் தரத் தரநிலைகள் (40 µg/m3) பூர்த்தி செய்யப் படா விட்டால், டெல்லியில் வாழும் மக்கள் தங்களது ஆயுட்காலத்தில் 8.5 ஆண்டுகள் வரை இழக்க நேரிடும்.
- 1998 முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில், சராசரி வருடாந்திர நுண்ணிய துகள் மாசுபாடு 67.7 சதவீதம் அதிகரித்துள்ளது.
- இது சராசரி ஆயுட்காலத்தை மேலும் 2.3 ஆண்டுகள் குறைக்கிறது.
- தெற்காசியாவில் 2013 முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான ஒரு காலக் கட்டத்தில் நுண்ணிய துகள் மாசுபாடு 9.7 சதவீதம் அதிகரித்துள்ளது.
- இந்தியாவில், PM2.5 மாசுபாடு அளவுகள் 9.5 சதவீதம் அதிகரித்துள்ள நிலையில், இது பாகிஸ்தானில் 8.8 சதவீதமாகவும் வங்காளதேசத்தில், 12.4 ஆகவும் உயர்ந்துள்ளது.

## நாடாளுமன்றத்தின் "சிறப்புக் கூட்டத்தொடர்"




- நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் சிறப்புக் கூட்டத்தொடர் ஆனது கேள்வி நேரம் அல்லது தனிநபர் உறுப்பினர்களின் கோரிக்கைகள் ஏதும் இல்லாமல் செப்டம்பர் 18 முதல் 22 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.
- பொதுவாக, ஒரு வருடத்தில் நிதிநிலை அறிக்கை தாக்கல், மழைக்கால கூட்டத் தொடர் மற்றும் குளிர்கால கூட்டத்தொடர் என மூன்று நாடாளுமன்றக் கூட்டத்தொடர்கள் நடைபெறும்.
- ஆனால் அரசியலமைப்புச் சட்டத்தில் "சிறப்புக் கூட்டத் தொடர்" என்ற சொல்லானது பயன்படுத்தப்படவில்லை.
- சில நேரங்களில் நாடாளுமன்ற அல்லது தேசியச் சாதனைகளை நினைவு கூருவது போன்ற குறிப்பிடத்தக்கச் சந்தர்ப்பங்களில் அரசினால் கூட்டப்பட்ட சிறப்பு கூட்டத் தொடர்களை இந்தச் சொல் குறிக்கிறது.


- இருப்பினும், அரசியலமைப்பின் 352வது சட்டப்பிரிவானது (அவசரநிலைப் பிரகடனம்) "அவையின் சிறப்புக் கூட்டத்தொடர்" எனும் சொல்லைக் கொண்டுள்ளது.
- இரு அவைகளிலும் இந்தக் கூட்டத் தொடரை மேற்கொள்வதற்கு, அந்தந்த அவையின் தலைவர்கள் அந்தந்த அவையின் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்க வேண்டும்.

## ஒரே நாடு, ஒரே தேர்தல்' குறித்த குழு




- சட்ட அமைச்சகம் ஆனது 'ஒரே நாடு ஒரே தேர்தல்' குழு குறித்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.
- இந்தக் குழுவின் தலைவராக முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் பொறுப்பு ஏற்றுள்ளார்.
- இக்குழுவில் உள்துறை அமைச்சர் அமித் ஷா, மூத்த காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சௌத்ரி மற்றும் பலர் உள்ளிட்ட ஏழு உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்.
- இந்தக் குழுவானது, உடனடியாகச் செயல்படத் தொடங்கி, விரைவில் தனது பரிந்துரைகளை வழங்கும்.
- தற்போது அமைக்கப்பட்டுள்ள குழுவானது, ஒரே நேரத்தில் அனைத்து தேர்தல்களையும் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட நான்காவது குழுவாக இருக்கும்.
- முன்னதாக, இது குறித்து சட்ட ஆணையம், நிதி ஆயோக் அமைப்பு மற்றும் நாடாளுமன்ற நிலைக்கு ழு ஆகியவற்றினால் விவாதிக்கப் பட்டது.

## உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் மிகப்பெரிய அணுமின் நிலையம்




- ❖ குஜராத் மாநிலத்தின் காக்ராபார் எனுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட 700 மெகாவாட் திறன் கொண்ட இந்தியாவின் முதல் அணுமின் நிலையம் ஆனது தனது முழு செயல்திறனில் செயல்படத் தொடங்கியுள்ளது.
- ❖ இந்திய அணுசக்திக் கழகம் (NPCIL) ஆனது காக்ராபரில் 700 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அழுத்தக் கன நீர் உலைகளை (PHWRs) கட்டமைத்து வருகிறது.
- ❖ இங்கு 220 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு மின் உற்பத்தி நிலையங்கள் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ளன.
- ❖ NPCIL நிறுவனமானது தற்போது இந்தியா முழுவதும் 23 வணிகரீதியிலான அணுசக்தி உலைகளை இயக்கி வருகிறது.
- ❖ இந்தியாவில் பல்வேறு இடங்களில் சுமார் 700 மெகாவாட் திறன் கொண்ட மொத்தம் 16 அழுத்தக் கன நீர் உலைகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

## பாரம்பரியத் தளங்களை ஏற்றுக் கொள்தல் 2.0 திட்டம்

- ❖ இந்திய தொல்லியல் துறையானது (ASI), பாரம்பரியத் தளங்களை தத்தெடுத்து ஏற்றுக் கொள்தல் 2.0 எனப்படும் புதுமைமிக்க திட்டத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ நாடு முழுவதும் காணப்படும் 3,600க்கும் மேற்பட்ட நினைவுச் சின்னங்களில் உள்ள வசதிகளை மேம்படுத்தச் செய்வதற்காக வேண்டி பெருநிறுவனப் பங்குதாரர்களுக்கு அழைப்பு விடுப்பதன் மூலம் இந்தியாவின் பல்வேறு கலாச்சாரப் பாரம்பரியத்தினைப் பாதுகாப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்த வரலாற்றுத் தளங்களில் உள்ள வசதிகளை மேம்படுத்துவதற்காக என்று, பெரு நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு (CSR) நிதியைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்தியத் தொல்லியல் துறை பெருநிறுவனப் பங்குதாரர்களை ஊக்குவிக்கும்.

- ❖ ஆர்வமுள்ள பங்குதாரர்கள் அதற்கான இணைய தளம் மூலமாக ஒரு நினைவுச் சின்னம் முழுவதினுடைய அல்லது குறிப்பிட்ட வசதிகளுக்கான பொறுப்பினை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.




## செல்லுபடியாகாத மற்றும் செல்லத்தகாத திருமணங்களுக்கான மரபுரிமை

| | VOID MARRIAGE. | VOIDABLE MARRIAGE. |
|---|---|---|
| 1 | In a void marriage, the parties do not acquire any status of husband and wife as such it does not confer any mutual rights and obligations upon the parties. | On the other hand, in a voidable marriage the parties acquire status of husband and wife and it confers mutual rights and obligations upon the parties for all purposes until a decree of court annuls it. |
| 2. | A void marriage is void *ab initio*. It is void from the very beginning. No decree of Court is required to annul the void marriage. However, if parties so wish, a void marriage is merely declared by the court as void by a decree of annulment. | But a voidable marriage remains perfectly valid unless it is avoided by a decree of court nullifying it. |
| 3. | In a void marriage, either of the parties to the marriage may marry again without getting a decree declaring the marriage void. The offence of bigamy is not attracted. | On the other hand, as the voidable marriage is valid unless avoided, neither of the parties can marry again without obtaining a decree of nullity of marriage or else the offence of bigamy is attracted. |
| 4. | In a void marriage, a wife is not entitled to claim maintenance under section 125 of Cr.P.C as she acquires no status of wife. | But in a voidable marriage, the wife can claim maintenance until the marriage is annulled by a decree of declaration. |
| 5. | In void marriage, neither of the parties acquire right of inheritance on the death of other party when succession opens. | In case of voidable marriage, either of the parties acquire right of inheritance on the death of other party when succession opens, if the marriage is not annulled. |

- ❖ செல்லுபடியாகாத மற்றும் செல்லத்தகாத திருமணத்தின் மூலம் பிறந்த குழந்தை மிதாக்சரா என்ற சட்டத்தின் மூலம் நிர்வகிக்கப்படும் ஒரு கூட்டு இந்துக் குடும்பத்தின் பெற்றோரின் சொத்தில் பங்கினை பெறலாம் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- ❖ மேலும், அத்தகையக் குழந்தைக்கு அந்த குடும்பத்தில் உள்ள வேறு எந்த நபரின் சொத்துக்களின் மீது எந்தவித உரிமைகளும் இருக்காது என்றும் தெளிவு படுத்தி உள்ளது.
- ❖ செல்லுபடியாகாத திருமணம் என்பது ஒரு கணவன் அல்லது மனைவியால் ஒரு தீர்மானத்தின் மூலம் செல்லாததாக அறிவிக்கப்படும் திருமணமாகும்.
- ❖ செல்லத்தகாத திருமணம் என்பது ஆரம்பத்திலேயே செல்லுபடியாகா தன்மையினை கொண்டது.

- இந்துக் கூட்டுக் குடும்பங்கள் தொடர்பான மிதாக்சரா வாரிசுரிமைச் சட்டம் மேற்கு வங்காளம் மற்றும் அசாம் தவிர இந்தியா முழுவதும் பொருந்தும்.
- இந்து திருமணச் சட்டத்தின் 16வது பிரிவானது, செல்லுபடியாகாத மற்றும் செல்லத் தகாத திருமணங்கள் மூலம் பிறந்த குழந்தைகளுக்கு சட்டரீதியிலான, சட்டப்பூர்வ அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது.

## NCERT அமைப்பின் அந்தஸ்து உயர்வு

- தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி சபைக்கு (NCERT) நிகர்நிலைப் பல்கலைக் கழக அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
- நிகர்நிலைப் பல்கலைக்கழகம் என்பது குறிப்பிட்ட கல்வித் துறையில் சிறந்து விளங்கும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான அங்கீகாரமாகும்.
- இனி NCERT தற்போது தன்னிச்சையாக இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டங்களை வழங்க முடியும்.
- தற்போதுள்ள எந்தவொரு நிறுவனமும் வழங்காத, வளர்ந்து வரும் அறிவுசார் துறைகளில் ஆய்வு மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக ஒரு புதிய நிறுவனத்தை அமைப்பதற்கு பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு NCERT விண்ணப்பிக்க இயலும்.
- ஆசிரியர்களுக்குப் பட்டங்களை வழங்குவதோடு சேர்த்து, தான் வழங்க விரும்பும் பட்டப் படிப்புகள் பற்றிய தீர்மானத்தினையும் அதுவே மேற்கொள்ளும் ஒரு அதிகாரத்தினையும் அது கொண்டிருக்கும்.

## தொலைபேசி வாயிலான சட்டச் சேவைத் திட்டம் 2.0

- தொலைபேசி வாயிலான சட்டச் சேவைத் திட்டம் 2.0 என்ற முன்னெடுப்பானது, சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தின் நீதித் துறையினால் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் 2வது பதிப்பில், நியாய பந்து பொது மக்களுக்கான சட்டச் சேவைகளுடன் தொலைபேசி வாயிலான சட்டச் சேவைத் திட்டம் 2.0 இணைக்கப் பட்டு உள்ளது.
- இது சட்ட உதவிகளை குடிமக்கள் அணுகுவதற்கான வாய்ப்புகளை மேலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒற்றைப் பதிவுச் செயல்முறை மூலம் சட்ட வழிகாட்டுதல், ஆதரவு மற்றும் பிரதிநிதித்துவம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பது எண்ணிமக் கல்வியறிவு மற்றும் அதிகாரம் பெற்ற மக்கள் தொகையை அதிகரிப்பதற்கான உறுதிப்பாட்டிற்கான ஒரு சான்றாக உள்ளது.
- 2017 ஆம் ஆண்டு நீதித்துறைத் துறையினால் இத்திட்டம் தொடங்கப்பட்டது.
- 1987 ஆம் ஆண்டு சட்டச் சேவை ஆணையங்கள் சட்டத்தின் 12வது பிரிவின் கீழ் இலவச சட்ட உதவிப் பெறத் தகுதியுடையவர்களுக்கு இந்த ஆலோசனை இலவசமாக வழங்கப் படும்.




## கடல்சார் உள்கட்டமைப்பு முன்னோக்குத் திட்டம்

- 2023-37 ஆம் ஆண்டு கடல்சார் உள்கட்டமைப்பு முன்னோக்குத் திட்டம் (MIPP) ஆனது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இந்தத் திட்டமானது, அடுத்த 15 ஆண்டுகளில் கடற்படையின் உள்கட்டமைப்புத் தேவைகளை முறைப்படுத்தி ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டமானது பிரதான் மந்திரி கதி சக்தி திட்டம், பேரிடர் தாங்கும் தன்மை மற்றும் நிகரச் சுழிய உமிழ்வு நிலைக்கு மாறுதல் போன்றவற்றின் ஒரு பரந்தக் கொள்கை வழிமுறைகளுக்கு இணங்கும் வகையில் அமைந்துள்ளது.

## குருத்தணு சிகிச்சை

- மதியிறுக்க கோளாறு (ASD) உள்ள இரண்டு குழந்தைகளின் சிகிச்சைக்காக குருத்தணு சிகிச்சையினை மேற்கொள்வதற்கு டெல்லி உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.
- தேசிய மருத்துவ ஆணையத்தின் (NMC) நெறிமுறைகள் மற்றும் மருத்துவப் பதிவு வாரியத்தின் (EMRB) பரிந்துரையை எதிர்த்து இந்த வழக்கு தொடுக்கப்பட்டது.
- முன்னதாக மதியிறுக்க கோளாறுக்கு குருத்தணு சிகிச்சையைப் பயன்படுத்தக் கூடாது என்று அந்த வாரியம் பரிந்துரைத்தது.
- குருத்தணு செல்கள் என்பது மற்ற அனைத்துச் சிறப்புச் செயல்பாடுகள் கொண்ட செல்களை உருவாக்கும் செல்களாகும்.
- குருத்தணு செல்களின் மீளுருவாக்கப் பண்புகள் ஆனது அவற்றை மருத்துவத் துறையில் மிகவும் மதிப்புமிக்கதாக மாற்றுகின்றன.

- அதனால் தான் குருத்தணு சிகிச்சைகள் மீளுருவாக்க மருந்து என்றும் அழைக்கப் படுகின்றன.
- மதியிறுக்க கோளாறு என்பது பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றவர்களுடன் கருத்துப் பரிமாற்றம், தகவல் தொடர்பு, கற்றல் மற்றும் நடத்தை ஆகியவற்றினைப் பாதிக்கும் ஒரு நரம்பியல் மற்றும் வளர்ச்சிக் கோளாறு ஆகும்.




## ஆரோக்யா மைத்ரி பெட்டகங்கள்




- 72 கன சதுரப் பெட்டகங்களில் நிரப்பப்பட்ட, விமானத்தில் சுமந்து செல்லக் கூடிய உலகின் முதல் பேரிடர் மருத்துவமனையை இந்தியா உருவாக்கியுள்ளது.
- இது 'ஆரோக்ய மைத்ரி பெட்டகங்கள்' என அழைக்கப்படுகிறது.
- பாரத் சஹ்யோக் ஹிதா மற்றும் மைத்ரி சுகாதார முன்னெடுப்பின் (BHISHM) கீழ் இந்தியா இந்தத் தயாரிப்பினை உருவாக்கியுள்ளது.
- இதில் மூன்று சட்டகங்கள் உள்ள நிலையில் ஒவ்வொன்றும் 12 சிறிய பெட்டகங்களை உள்ளடக்கியுள்ளன.

- 40 துப்பாக்கிக் குண்டு காயங்கள், 25 பெரிய அளவிலான இரத்தக் கசிவுகள், 25 பெரிய தீக்காயங்கள், சுமார் 10 தலை காயங்கள், நீண்ட அளவிலான மூட்டு முறிவுகள், முதுகெலும்பு காயங்கள், மார்பு காயங்கள் மற்றும் முதுகெலும்பு முறிவுகள் உட்பட பல கடுமையான காயங்களை கையாளும் வகையிலான பல்வேறு சாதனங்களை இந்தப் பெட்டகங்கள் கொண்டிருக்கும்.
- இதில் ஒவ்வொரு பெட்டகமும் சுமார் 20 கிலோவிற்கும் குறைவான எடை கொண்டதாக வடிவமைக்கப் பட்டுள்ளதனால், இவற்றை ஒரு கிலோமீட்டர் தூரம் வரை எளிமையாக எடுத்துச் செல்ல ஏதுவாக உள்ளது.

## கல்வி முதல் தொழில்முனைவு வரை - முன்னெடுப்பு

- மத்திய அரசானது, இந்தியாவின் இளையோர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக மெட்டா நிறுவனத்துடன் இணைந்து 'கல்வி முதல் தொழில் முனைவு வரை' என்ற ஒரு கூட்டாண்மையைத் தொடங்க உள்ளது.
- இது நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள பகுதிகளில் உள்ளவரும் எண்ணிம திறன்களை அணுகக் கூடிய வகையில், அதனை அனைவருக்குமானதாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மெட்டா நிறுவனமானது, அடுத்த மூன்று ஆண்டுகளில் 5 லட்சம் தொழில் முனைவோருக்கு எண்ணிம சந்தைப் படுத்துதல் திறன் பயிற்சியை வழங்க உள்ளது.
- இந்தப் பயிற்சியானது, வளர்ந்து வரும் மற்றும் தற்போதுள்ள தொழில்முனைவோர் ஆகிய இரு பிரிவினருக்கும் பயனளிக்கும் வகையில் ஏழு பிராந்திய மொழிகளில் வழங்கப் பட உள்ளது.

## மாளவியா திட்டம்

- மத்தியக் கல்வித் துறை, திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் மாளவியா திட்டம் எனப்படும் ஆசிரியர் பயிற்சித் திட்டத்தை தொடங்கியுள்ளார்.
- இத்திட்டத்தின் மூலம் ஆசிரியர்களுக்குத் தகுந்தப் பயிற்சிகளை வழங்கப்பட உள்ளது.
- உயர்கல்வி நிறுவனங்களில் (HEI) பணிபுரியும் ஆசிரிய உறுப்பினர்களின் திறனை மேம்படுத்துவதன் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- இது இந்தியா முழுவதும் நிறுவப்பட உள்ள 111 மாளவியா திட்ட மையங்கள் மூலம் உயர்கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் 15 லட்சம் ஆசிரியர்களின் தொழில்முறை மேம்பாட்டை உறுதிப்படுத்தச் செய்வதோடு, அவர்களின் திறன்களை மேம்படுத்தவும் உதவுகிறது.
- இது ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்துதல், ஆசிரியர்களிடம் தலைமைத்துவ திறன்களை உருவாக்குதல் மற்றும் தேசியக் கல்விக் கொள்கையின் இலக்குகளை எட்ட உதவுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## இந்திய விமானப் படைப் பயிற்சி - திரிசூல்

- இந்திய விமானப்படையானது (IAF) வடக்கு மற்றும் மேற்கு இந்தியாவில் உள்ள சீனா-பாகிஸ்தான் எல்லையில் 'திரிசூல்' என்று பெயரிடப்பட்ட ஒரு மாபெரும் படைப்பயிற்சி பயிற்சியைத் தொடங்கியுள்ளது.
- 'திரிசூல்' பயிற்சியின் முதன்மை நோக்கம் ஆனது மேற்கு விமானப்படைப் பிரிவின் ஒட்டு மொத்தப் போர் தயார்நிலையை மதிப்பீடு செய்வதாகும்.
- இருப்பினும், புது டெல்லியில் நடைபெற உள்ள G20 உச்சி மாநாட்டின் போது அதிக முக்கியத்துவம் கொண்ட இந்த விமானப் படைப் பயிற்சியானது தற்காலிகமாக நிறுத்தப் படும்.

## நீதிபதி அமித்தவா ராய் குழு அறிக்கை

**SOME RECOMMENDATIONS BY PANEL**

- Telemedicine and virtual consultation to address unavailability of women staff or medical wards.
- Vocational training in collaboration with NGOs.
- Community service for those accused of petty offences
- Allowing inmates to file complaints, sensitisation training of prison staff
- Women prisoners with psychological or psychosomatic disorders, or victims of sexual abuse, should get proper counselling

- 2018 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தினால் அமைக்கப்பட்ட நீதிபதி அமித்தவா ராய் (ஓய்வு) குழுவானது சிறைச்சாலைகளுக்கான சீர்திருத்தங்கள் குறித்த பரிந்துரைகள் அடங்கியப் பட்டியலை வழங்கியுள்ளது.
- இந்தியாவிலுள்ள சிறைச்சாலைகளில் காணப்படும் பல்வேறு பிரச்சனைகள், அதிகப் படியான கைதிகளின் எண்ணிக்கை (நெரிசல்) சார்ந்த பிரச்சினை முதல் குற்றவாளிகளுக்கான தண்டனைக் குறைப்பு மற்றும் சிறைவாச விடுமுறை வழங்கீடு ஆகியவை குறித்த முறையான சட்ட ஆலோசனையின்மைப் பிரச்சினைகள் வரை அனைத்து விவகாரங்கள் பற்றிய ஒரு ஆய்வினை மேற்கொள்ளச் செய்யுமாறு இந்தக் குழுவிற்குப் பணிக்கப் பட்டது.


### *குழுவின் கண்டுபிடிப்புகள்*

- கோவா, டெல்லி மற்றும் புதுச்சேரியில் உள்ள சிறைகளில் மட்டுமே பெண் கைதிகள் தங்கள் குழந்தைகளை எந்தவிதமான கம்பிகளோ அல்லது கண்ணாடித் தடுப்புகளோ இல்லாமல் சந்திக்க அனுமதிக்கின்றன.
- 18% பெண் கைதிகள் மட்டுமே தங்களுக்கெனப் பிரத்தியேகமான பெண்கள் சிறை வசதிகளைப் பெறுகின்றனர்.
- 2021 ஆம் ஆண்டின் இறுதியில், இந்தியா முழுவதும் 22,918 பெண் கைதிகள் உள்ள நிலையில் இது மொத்தக் கைதிகளின் எண்ணிக்கையில் 4.13% ஆகும்.

- 2014 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இந்திய சிறைகளில் உள்ள பெண் கைதிகளின் எண்ணிக்கை 11.7% அதிகரித்துள்ளதோடு, மேலும் 2019 ஆம் ஆண்டில் சிறையில் இருந்த மொத்தக் கைதிகளின் எண்ணிக்கையில் 4.2% பெண்கள் ஆவர்.
- 15 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் மட்டுமே முழு அளவில் இயங்கி வரும் பெண்கள் சிறைகள் உள்ளன.
- 2017 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் நாடு முழுவதும் உள்ள சிறைகளில் பதிவான 817 இயற்கைக்கு மாறான மரணங்களுக்கு தற்கொலை மிகவும் முக்கியக் காரணமாக பதிவாகியுள்ளது.
- இந்த 817 இயற்கைக்கு மாறான மரணங்களில், சுமார் 660 தற்கொலைகள் ஆக உள்ள நிலையில் இந்தக் காலகட்டத்தில் அதிகபட்சமாக உத்தரப் பிரதேச மாநிலத்தின் சிறைகளில் 101 தற்கொலைகள் பதிவாகியுள்ளன.
- உலகளவில், மூன்று கைதிகளில் ஒருவர் விசாரணைக் கைதிகள் ஆவர்.
- இந்தியாவில், நான்கில் மூன்று பேர், அதாவது 2021 ஆம் ஆண்டில் பதிவான மொத்த கைதிகளின் எண்ணிக்கையில் 77% பேர் விசாரணைக் கைதிகளாக இருந்தனர்.

## G20 சுற்றுலா மற்றும் நிலையான மேம்பாட்டு இலக்கின் முகப்பு விவரப்பக்கம்

- சுற்றுலா அமைச்சகம் ஆனது, ஐக்கிய நாடுகள் அமைப்பின் உலக சுற்றுலா அமைப்புடன் (UNWTO) இணைந்து G20 சுற்றுலா மற்றும் நிலையான மேம்பாட்டு இலக்கின் முகப்பு விவரப்பக்கத்தினை வெளியிட்டுள்ளது.
- இது நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDGs) அடைவதற்காக வடிவமைக்கப் பட்டு உள்ள G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகளால் உருவாக்கப்பட்ட பல்வேறு சிறந்த நடைமுறைகள், நடைமுறை ஆய்வுகள் மற்றும் தகவல்கள் ஆகியவற்றினை எடுத்து உரைக்கிறது.
- இந்த விவர ப்பக்கம் ஆனது, உலகச் சுற்றுலாத் துறையில் உலகளாவிய ஒத்துழைப்பு மற்றும் நிலையான மேம்பாட்டிற்கான அதன் உறுதிப்பாட்டினை வெளிக் கொணரச் செய்கிறது.
- உலகளாவியச் சுற்றுலாவில் G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகள் 70 சதவீதத்திற்கும் அதிகமானப் பங்கினைக் கொண்டுள்ளன.



## பாரத் ட்ரோன் சக்தி 2023

- இந்திய விமானப்படையானது, 'பாரத் ட்ரோன் சக்தி 2023' என்ற நிகழ்ச்சியினை நடத்துவதற்காக இந்திய ஆளில்லா விமானக் கூட்டமைப்புடன் கைகோர்த்துள்ளது.
- இந்த நிகழ்ச்சியில் பல வகை அளவிலான ஆளில்லா விமான மாதிரிகள் காட்சிப் படுத்தப் படும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய ஆளில்லா விமான உற்பத்தி மையமாக மாறுவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டிற்கு இது ஒரு சான்றாக இருக்கும்.

## உலகின் மிக உயரமான நடராஜர் சிலை




- G20 உச்சி மாநாடு நடைபெறும் இடமான, 'பாரத் மண்டபத்தில்,' பீடம் உட்பட 28 அடி உயரம் கொண்ட உலகின் மிக உயரமான 'நடராஜர்' சிலை' நிறுவப் பட்டுள்ளது.
- இந்த 'நடராஜர்' சிலையானது மெழுகு அச்சு வார்ப்புச் செயல்முறை எனப்படும் பண்டையச் சோழர் கால வார்ப்பு நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டது.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த நுட்பம் ஆனது, புகழ்பெற்ற சோழர்களின் வெண்கலச் சிலைகளை உருவாக்குவதற்குப் பாரம்பரியமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.
- இந்த அற்புதமான அஷ்டதாது (எட்டு உலோகங்களின் கலவை) சிற்பம் ஆனது, தமிழ்நாட்டின் சுவாமிமலைப் பகுதியைச் சேர்ந்த சிற்பிகளால் வடிவமைக்கப் பட்டது.

## G20 மாநாட்டில் கோனார்க் சக்கரம்

- டெல்லியில் நடைபெற்ற G20 உச்சி மாநாட்டில் வரலாற்றுச் சின்னமான கோனார்க் சூரியன் கோயிலின் சக்கரம் முக்கிய இடத்தைப் பிடித்தது.
- கோனார்க் சக்கரம் ஆனது, 13 ஆம் நூற்றாண்டில் கிழக்கத்தியக் கங்கை வம்சத்தின் மன்னர் முதலாம் நரசிம்ம தேவரின் ஆட்சியின் கீழ் கட்டமைக்கப்பட்டது.
- 24 ஆரக் கால்களைக் கொண்ட இந்த சக்கரம் ஆனது இந்தியாவின் தேசியக் கொடியில் சேர்க்கப்பட்டுள்ளது.
- இது இந்தியாவின் பண்டைய ஞானம், மேம்பட்ட நாகரிகம் மற்றும் வேளாண்மையின் சிறப்பு ஆகியவற்றினை பறைசாற்றுகிறது.
- கோனார்க் சக்கரத்தின் இந்த சுழற்சி முறை இயக்கமானது, பண்டையக் காலத்தையும் முன்னேற்றத்தையும், தொடர்ச்சியான மாற்றத்தையும் குறிக்கிறது.

- இது ஜனநாயகக் கொள்கைகளின் நல்ல நெகிழ்திறன் மற்றும் சமூகத்தில் பெரும் முன்னேற்றத்திற்கான உறுதிப்பாடு ஆகியவற்றினைப் பிரதிபலிக்கும் ஜனநாயகச் சக்கரத்தின் சின்னமாகச் செயல்படுகிறது.





## G20 இந்தியா கைபேசி செயலி




- இந்திய அரசாங்கமானது, அமைச்சர்கள் உட்பட அனைத்துப் பார்வையாளர்களுக்காக G20 இந்தியா என்ற கைபேசி செயலியை அறிமுகப்படுத்தியிருந்தது.

- இந்தச் செயலியானது இந்தி, ஜெர்மானியம், போர்த்துகீசியம் மற்றும் ஜப்பானியம் உள்ளிட்ட 10 மொழிகளில் இந்த உச்சி மாநாடு பற்றிய முழுமையானத் தகவலை வழங்குகிறது.
- பிரதிநிதிகள், அதிகாரிகள், ஊடகப் பணியாளர்கள் மற்றும் பலருக்கு உதவியாக இருக்கும் வகையில் உச்சி மாநாடு நடைபெறும் இடத்தின் மெய்நிகர் சுற்றுப்பயண வசதியினையும் இது வழங்குகிறது.

## சந்தேஸ் செயலி





- டெல்லி காவல்துறையானது, G20 அமைப்பின் உச்சி மாநாட்டின் போது பாதுகாப்பான முறையில் தகவல் தொடர்புகளை மேற்கொள்வதற்கு சந்தேஸ் என்ற ஒரு செயலியைப் பயன்படுத்தியது.
- இது தேசிய தகவல் மையத்தினால் (NIC) உருவாக்கப்பட்டது.
- ஆவணங்கள் மற்றும் பிற முக்கியத் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்காக ஆய்வாளர்கள் மற்றும் ஆணையர்களால் இந்தச் செயலி பயன்படுத்தப்பட்டது.
- இந்தச் செயலியானது ஆவணங்களுக்காகப் பாதுகாப்பான வகையில் இணைய நெறிமுறையைப் பின்பற்றுவதோடு இவற்றை இந்தச் செயலியில் மட்டுமே பார்க்க முடியும்.

## உயர் அதிகாரம் பெற்ற குழு

- உச்ச நீதிமன்றத்தின் உத்தரவிற்கு இணங்கும் வகையில், மத்திய அரசானது "நிரந்தர" உயர் அதிகாரம் பெற்ற குழுவை (CEC) அமைக்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- இதுவரையில் தற்காலிகமாக இயங்கி வந்த, சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கான குழு தற்போது நிரந்தரச் சட்டப்பூர்வ அமைப்பாக அங்கீகரிக்கப்படவுள்ளது.
- இந்தக் குழுவானது (CEC) முதன் முதலில் உச்ச நீதிமன்றத்தினால் 2002 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.

- காடுகள் மற்றும் வனவிலங்கு சார்ந்த வழக்குகள் தொடர்பான உச்ச நீதிமன்ற உத்தரவுகளின் அமலாக்கத்தினைக் கண்காணிப்பதற்காக என்று தேசிய அளவில் ஒரு குழுவினை அமைப்பதற்கு உத்தரவிடப்பட்டது.

## BESS அமைப்புகளுக்கான VGF திட்டம்




- மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளுக்காக (BESS) 3,760 கோடி ரூபாய் அளவிலான நிதிசார் நம்பகத்தன்மை இடைவெளி நிரப்பு நிதியை (VGF) வழங்குவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மானியம் ஆனது உள்கட்டமைப்புத் திட்டங்களின் நிதிசார் நம்பகத் தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், 2031 ஆம் நிதியாண்டு வரை மொத்தம் 4,000 மெகாவாட் / மணி நேரம் (MWh) திறன் வரையிலான மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளுக்கான திட்டங்களின் மூலதனச் செலவில் 40% வரை அரசாங்கம் நிதி உதவி வழங்கும்.

## ஸ்வச் வாயு சர்வேக்சன் 2023

- இந்தக் கணக்கெடுப்பினை மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியமானது மேற்கொண்டு உள்ளது.
- ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட நகரங்கள் பிரிவில், இந்தூர் முதல் இடத்தைப் பிடித்துள்ள நிலையில். அதைத் தொடர்ந்து ஆக்ரா மற்றும் தானே ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- மதுரை, ஹவ்ரா மற்றும் ஜாம்ஷெட்பூர் ஆகியவை முறையே 46, 45 மற்றும் 44வது இடங்களில் கடைசியாக உள்ளன.
- போபால் ஐந்தாவது இடத்தினையும், டெல்லி ஒன்பதாவது இடத்தையும் பெற்றது.
- 300,000 முதல் ஒரு மில்லியன் மக்கள்தொகை கொண்ட நகரங்கள் எனும் இரண்டாவது பிரிவில், அமராவதி முதல் இடத்தைப் பெற்றுள்ள நிலையில் அதைத் தொடர்ந்து மொராதாபாத் மற்றும் குண்டூர் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

- ஜம்மு, குவஹாத்தி மற்றும் ஜலந்தர் ஆகியவை முறையே 38, 37 மற்றும் 36 இடங்களைப் பெற்றுள்ளன.
- 300,000க்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட நகரங்கள் என்ற மூன்றாவது பிரிவில், இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள பர்வானூ முதல் இடத்தினையும், அதைத் தொடர்ந்து கலா அம்ப் மற்றும் அங்குல் ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.
- இதில் கோஹிமா கடைசி இடத்தினை (39) பெற்றுள்ளது.

**SWACHH VAYU SARVEKSHAN 2023**

| CATEGORY | | CITIES | CPCB SCORE (OUT OF 200) |
|---|---|---|---|
| Category 1 (<10 Lakh Population) | 1st | Indore | 187 |
| | 2nd | Agra | 186 |
| | 3rd | Thane | 185.2 |
| Category 2 (3-5 Lakh Population) | 1st | Amravati | 194 |
| | 2nd | Moradabad | 186.2 |
| | 3rd | Guntur | 185.5 |
| Category 3 (<3 Lakh Population) | 1st | Parwanoo | 193.6 |
| | 2nd | Kala Amb | 193 |
| | 3rd | Angul | 187.5 |

| City Name | Assesment by city | Assesment by CPCB | Rank |
|---|---|---|---|
| Category I: Population above 10L | | | |
| Indore | 191 | 187 | 1 |
| Bhopal | 187 | 181 | 5 |
| Jabalpur | 172 | 172 | 12 |
| Gwalior | 171 | 114 | 41 |
| Category II: Population ranging from 3 to 10L | | | |
| Ujjain | 189 | 182 | 5 |
| Sagar | 188.2 | 170.7 | 9 |
| Category III: Population less than 3L | | | |
| Dewas | 181 | 180 | 6 |

Source: CPCB

## அரிய நோய்ப் பாதிப்பு உள்ள நபர்கள்




- 300 மில்லியன் மக்களைப் பாதித்து வரும் சுமார் 7,000 அரிய வகை நோய்கள் தற்போது இருப்பதாக உலகளாவிய ஆய்வு அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.
- எக்ஸ்ட்ராபோலேஷன் (பொதுக் கணிப்பு) மூலம், இந்தியாவில் இந்த வகை நோய்கள் 70 மில்லியன் வரை இருக்கக் கூடும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- இருப்பினும், இதுவரை இந்தியாவில் உள்ள மருத்துவமனைகளில் இந்த நோய் பாதிப்பு எண்ணிக்கைகள் 500க்கும் குறைவாகவே பதிவாகியுள்ளன.
- இந்த அரிய வகை நோய்கள் எந்த எந்த சமூகங்களில் ஏற்படுகின்றன என்பது குறித்த போதுமான தொற்றுநோயியல் தரவுகள் கிடைக்கப் பெறவில்லை.
- இந்தக் கோளாறுகளின் பாதிப்புகளை உறுதிப்படுத்துவதற்கு அதிநவீன மருத்துவ துறை சார் கருவிகள் தேவைப்படுகின்றன.

- நமது நாட்டில் நிலவும் இந்த அரிய வகை நோய்களுள் சிஸ்டிக் ஃபைப்ரோஸிஸ் (அதிக பட்ச வியர்வை சுரப்பு), ஹீமோபிலியா (இரத்தம் உறையாமை), லைசோசோமால் சேமிப்பு உறுப்பு கோளாறுகள், அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை போன்றவை அடங்கும்.

## இந்தியாவின் எண்ணிமப் பொது உள்கட்டமைப்பு

- உலகளாவிய எண்ணிமப் பொது உள்கட்டமைப்பு களஞ்சியத்தினை (GDPIR) உருவாக்கி மேலாண்மை செய்வதற்கும் இந்தியா திட்டமிட்டுள்ளது.
- இதனை G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகள் தானாக முன்வந்து பகிர்ந்து கொள்ளப் படும் என்ற நிலையில் மற்ற நாடுகள் இதனை பயன்படுத்துவதற்கு வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளின் குழுவிடம் ஒப்புதலைப் பெற வேண்டும்.
- G20 அமைப்பிற்கான அதன் தலைமையின் கீழ், பொது சேவைகளை வழங்குவதற்காக இத்தகைய அமைப்புகளை உருவாக்க விரும்பும் இதர பிற நாடுகளுக்கு இந்தியா உதவுவதாக உறுதியளித்தது.




## G20 நாடுகளுக்கான செயற்கைக்கோள் திட்டம்

- சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலைக் கண்காணிப்பிற்கான G20 நாடுகளுக்கான செயற்கைக் கோள் திட்டத்தினைத் தொடங்க இந்தியா முன்மொழிந்துள்ளது.
- இது உலகின் தெற்கு நாடுகளுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த செயற்கைக்கோள் மூலம் பெறப்படும் பருவநிலை மற்றும் வானிலைத் தரவுகள் அனைத்து நாடுகளுடனும், குறிப்பாக உலகின் தெற்கு நாடுகளுடனும் பகிரப்படும்.
- முன்னதாக, சார்க் (SAARC) அமைப்பு நாடுகளின் நலனுக்காக இந்தியா 2017 ஆம் ஆண்டில் ஒரு செயற்கைக் கோளை விண்ணில் ஏவியது.
- இது SAARC நாடுகளுக்கான செயற்கைக்கோள் என்று பிரபலமாக அழைக்கப்படுகிறது.
- இது இந்தியாவின் 'அண்டை நாடுகளுக்கான ஒரு முன்னுரிமைக் கொள்கையின்' ஒரு பகுதி ஆகும்.

- இது தெற்காசிய அண்டை நாடுகளுக்குத் தொலைபேசி வழியான மருத்துவச் சேவை, கல்விச் சேவை, வங்கி மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவை வாய்ப்புகள் தொடர்பான முக்கியமான தகவல்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## G20 நாடுகளின் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட பரிசுகள்

- G20 மாநாட்டில் தங்கள் நாடுகளைப் பிரதிநிதித்துவப் படுத்தச் செய்யும் அரசத் தலைவர்களுக்கு பிரதமர் அவர்கள் சிறப்புப் பரிசினை வழங்கினார்.
- இதில் இந்தியாவின் செழுமையான பாரம்பரியம் மற்றும் கைவினைத்திறனின் உள்ளார்ந்தத் தன்மையினைப் பிரதிபலிக்கும் கைவினைப்பொருட்கள் மற்றும் அந்தத் தயாரிப்புகள் அடங்கும்.
- இதில்:
  - பித்தளைத் தகடு பதிக்கப்பட்ட இந்திய ரோஸ்வுட் பேழை: இந்தப் பேழையானது (பெட்டி) இந்திய ரோஸ்வுட் மரத்தினைப் பயன்படுத்தி கைவினை கலையால் வடிவமைக்கப்பட்டது.
  - காஷ்மீரி குங்குமப்பூ: இந்தக் குங்குமப்பூ வகையானது (பாரசீக மொழியில் 'சாஃப்ரான்', இந்தி மொழியில் 'கேசர்') உலகின் மிக விலையுயர்ந்த நறுமண உணவுப் பொருட்களில் ஒன்றாகும்.
  - பெக்கோ டார்ஜிலிங் மற்றும் நீலகிரி தேயிலை
  - அரக்குப் பள்ளத்தாக்கு காபி
  - சுந்தரவன காடுகளிலிருந்து பெறப்பட்ட தேன்
  - காஷ்மீரி பஷ்மினா சால்வைகள்: 'பாஷ்ம்' என்பது கடல் மட்டத்திலிருந்து 14,000 அடி உயரத்தில் காணப்படும் பகுதியில் வாழும் சாங்தாங்கி ஆட்டிலிருந்து பெறப்பட்ட (ஒரு காஷ்மீர் ஆடு) நூற்கப்படாத கம்பளியைக் குறிக்கிறது.
  - ஜிக்ரானா வாசனை திரவியம்: 'இட்டார்' ('வாசனை திரவியம்' என்று பொருள்) என்பது தாவரவியல் மூலங்களிலிருந்து பெறப்பட்ட வாசனை எண்ணெய் ஆகும்.
  - காதி தோள்பட்டை துணி
  - G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தினைக் குறிக்கும் வகையிலான நினைவு முத்திரைகள் மற்றும் நாணயங்களைக் கொண்ட நாணயப் பெட்டி ஆகியவை அடங்கும்.

## பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றிய அறிக்கை

- ஜனநாயக சீர்திருத்தச் சங்கம் (ADR) மற்றும் தேசியத் தேர்தல் கண்காணிப்பு (NEW) ஆகியவை இணைந்து இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளன.
- பாராளுமன்ற உறுப்பினர்களில் 26% பேர் முதுகலைப் பட்டதாரிகளாகவும், 45% பேர் பட்டதாரிகளாகவும் உள்ளனர்.
- மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகிய இரண்டிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட 54 உறுப்பினர்கள் முனைவர் பட்டம் பெற்றவர்கள், 22 பேர் பட்டயப் படிப்பு முடித்தவர்கள், 89 பேர் 12ம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள், 51 பேர் 10ம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் ஆவர்.

- மேலும் 184 பேர் பட்டதாரிகள், 141 பேர் தொழில்முறைக் கல்வி பட்டதாரிகள்.
- ஒரே ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கல்வியறிவு பெறாதவர் ஆவார்.
- 239 (31.32%) உறுப்பினர்கள் 51 முதல் 60 வயதிற்குட்பட்டவர்கள், 209 (27.39%) பேர் 61 முதல் 70 வயதிற்குட்பட்டவர்கள் மற்றும் 184 பேர் 41 முதல் 50 வயதிற்குட்பட்டவர்கள் ஆவர்.
- ஒன்பது உறுப்பினர்கள் மட்டுமே 25 முதல் 30 வயதிற்குட்பட்டவர்கள் மற்றும் ஆறு பேர் மட்டுமே 81 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஆவர்.
- 306 (40%) உறுப்பினர்கள் தங்கள் மீது உள்ள குற்றவியல் வழக்குகளை அறிவித்துள்ள நிலையில், சுமார் 194 (25%) உறுப்பினர்கள் தங்கள் மீது உள்ள பல்வேறு கடுமையான குற்றவியல் வழக்குகளை அறிவித்துள்ளனர்.
- மக்களவை மற்றும் மாநிலங்களவையினைச் சேர்ந்த ஒரு உறுப்பினரின் சராசரி சொத்து மதிப்பு 38.33 கோடி ரூபாய் மற்றும் 53 (7%) உறுப்பினர்கள் பில்லியனர்கள் ஆவர்.
- தங்கள் மீது உள்ள குற்றவியல் வழக்குகளை அறிவித்துள்ளவர்கள் மத்தியில் அகில இந்திய திரினாமுல் காங்கிரஸ் அதிக பட்ச விகிதத்தினைக் கொண்டுள்ளது.
- கட்சி ரீதியாக பார்க்கையில் 385 பாராளுமன்ற உறுப்பினர்களில் 139 (36 %) நபர்கள் பாரதீய ஜனதா கட்சியினைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- இப்பட்டியலில் கேரளா (73 சதவிகிதம்) முதல் இடத்தில் உள்ள நிலையில், அதனைத் தொடர்ந்து பீகார், மகாராஷ்டிரா மற்றும் தெலங்கானா ஆகியன உள்ளன.
- கடுமையான குற்றவியல் வழக்குகளை கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில் அதிக விகிதத்தினை பீகார் மாநிலம் (50 சதவிகிதம்) கொண்டுள்ள நிலையில், அதனைத் தொடர்ந்து தெலங்கானா (9%), கேரளா (10%), மகாராஷ்டிரா (34%) மற்றும் உத்தரப் பிரதேசம் (37%) ஆகிய மாநிலங்கள் உள்ளன.

## ஆஸ்வாசநிதி திட்டம்

- பாலியல் குற்றங்கள் மற்றும் மிகவும் கொடூரமான பாலின அடிப்படையிலான வன்முறையினால் பாதிக்கப்பட்ட 1,400 பேருக்கு இடைக்கால நிதி நிவாரணம் வழங்கப் பட்டுள்ளது.
- இது 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையின் ஆஸ்வாசநிதி திட்டத்தின் கீழ் வழங்கப் படுகிறது.
- 2021-22 ஆம் நிதியாண்டில் ஆஸ்வாசநிதி திட்டத்தின் கீழ் 472 பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியாக மிகப்பெரிய அளவிலான நிதி உதவியானது வழங்கப்பட்டது.
- பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழான பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட பத்து வெவ்வேறு வகை குற்றங்களால் பாதிக்கப் பட்டவர்கள் ஆஸ்வாசநிதி திட்டத்தின் கீழ் உதவி பெற தகுதி உடையவர்கள் ஆவர்.

## மிக உயரமான இடத்தில் அமைந்த உலகின் முதல் போர் விமான தளம்

- எல்லைச் சாலைகள் அமைப்பு ஆனது, லடாக்கில் உள்ள நியோமா என்ற கிராமத்தில் மிக உயரமான இடத்தில் அமைந்த இந்தியாவின் முதல் போர் விமான தளத்தினை அமைக்க உள்ளது.

- நியோமா கிராமம் ஆனது சுமார் 13,700 அடி உயரத்தில் பாங்கோங் சோ நதியின் தெற்குக் கரைக்கு அருகில் அமைந்துள்ளது.
- நியோமா சீனாவுடனான மெய் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியிலிருந்து 46 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.
- நியோமா விமான நிலையப் பணிகள் மட்டுமல்லாது, ஷிங்குன் லா சுரங்கப் பாதையின் கட்டுமானப் பணிகளையும் எல்லைச் சாலைகள் அமைப்பு விரைவில் தொடங்க உள்ளது.
- இது 15,855 அடி உயரத்தில் அமைந்த உலகின் மிக உயரமான இடத்தில் அமைந்த சுரங்கப் பாதையாக இருக்கும்.
- இந்தச் சுரங்கப் பாதையானது இமாச்சலில் உள்ள லாஹவுல்-ஸ்பிதி பகுதியை லடாக்கின் ஜாஸ்கர் பள்ளத்தாக்குப் பகுதியுடன் இணைக்கச் செய்வதோடு அனைத்து வானிலைகளிலும் போக்குவரத்து சேவையினை வழங்கும் வகையில் இது அமைக்கப் படும்.




## 20வது ஆசியான் இந்தியா உச்சி மாநாடு

- 20வது ஆசியான்-இந்தியா உச்சி மாநாடு ஆனது சமீபத்தில் இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரில் நடைபெற்றது.
- இது "ஆசியான் விவகாரங்கள்: வளர்ச்சியின் மையம்" என்ற கருத்துருவுடன் நடைபெற்றது.
- இந்த மாநாட்டில் இந்தியா - ஆசியான் ஒத்துழைப்பினை வலுப்படுத்துவதற்கான 12 அம்ச முன்மொழிதலை இந்தியப் பிரதமர் அவர்கள் முன்வைத்தார்.
- இது இணைப்பு, எண்ணிம மாற்றம், வர்த்தகம் மற்றும் பொருளாதார ஈடுபாடு, சமகாலத்திய சவால்களை எதிர்கொள்வது, மக்களிடையேயான தொடர்புகள் மற்றும் உத்திசார் ஈடுபாட்டினை மேம்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- இந்தியாவின் எண்ணிமப் பொது உள்கட்டமைப்பு கட்டமைப்பினை ஆசியான் அமைப்பின் பங்குதாரர் நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள இந்தியா முன்வந்துள்ளது.

- மேலும், எண்ணிம பரிமாற்றம் மற்றும் நிதி சார் இணைப்பு நுட்பங்களில் ஒத்துழைப்பு மேற்கொள்வதை மையமாகக் கொண்ட எண்ணிம உலகின் எதிர்காலத்திற்கான ஆசியான்-இந்தியா நிதியை உருவாக்க உள்ளதாகவும் அவர் அறிவித்தார்.
- உலக சுகாதார அமைப்பினால் இந்தியாவில் நிறுவப்படும் உலக பாரம்பரிய மருத்துவ மையத்தில் இணைவதற்கு ஆசியான் நாடுகளுக்குப் பிரதமர் அவர்கள் அழைப்பு விடுத்தார்.
- பேரிடர் தாங்கும் உள்கட்டமைப்பிற்கான கூட்டணியில் இணைவதற்கும் ஆசியான் நாடுகளுக்கு அவர் அழைப்பு விடுத்த நிலையில், பேரிடர் மேலாண்மையில் முக்கிய ஒத்துழைப்பினை நல்கவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
- ஜன்-ஔஷதி கேந்திராக்கள் மூலம் மக்களுக்கு விலை மலிவான மற்றும் தரமான மருந்துகளை வழங்குவதில் இந்தியாவின் அனுபவத்தினை அந்நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளவும் இந்தியா முன்வந்துள்ளது.

## சமுத்திரயான் திட்டம்



- சமுத்திரயான் என்ற திட்டமானது 2026 ஆம் ஆண்டிற்குள் நிறைவு செய்யப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இது சென்னையில் உள்ள தேசியக் கடல்சார் தொழில்நுட்ப நிறுவனத்தினால் (NIOT) வடிவமைத்து உருவாக்கப்படுகிறது.
- இந்த நீர்மூழ்கி வாகனத்திற்கு 'மத்ஸ்யா 6000' எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- இது சாதாரணச் செயல்பாட்டின் போது 12 மணிநேரமும், மனிதப் பாதுகாப்புக்காக அவசரகாலச் செயல்பாடுகளின் போது 96 மணிநேரமும் இயங்கும் திறன் கொண்டது.
- இந்த நீர்மூழ்கி வாகனம் ஆனது மூன்று பணியாளர்களை 6000 மீட்டர் ஆழத்திற்கு அனுப்பும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

- மனிதர்களை ஆழ்கடல் பகுதிக்கு அனுப்பும் இந்தியாவின் இந்த முதல் திட்டமானது, ஆழ்கடல் வளங்களைப் பற்றி ஆய்வு செய்வதற்காகவும், பல்லுயிர் சார்ந்த பல்வேறு மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டம் ஆனது, மத்திய அரசின் நீல (கடல்சார்) பொருளாதாரக் கொள்கையை ஆதரிக்கும் வகையிலான மாபெரும் ஆழ்கடல் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## மூட்பித்ரியில் தனித்துவமான சுடுமண் சிலைகள்


- கி.மு. 800-700 காலத்தினைச் சேர்ந்த பழங்காலச் சுடுமண் சிலைகள் கர்நாடகாவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- அவை எலும்பு மற்றும் இரும்புத் துண்டுகள் ஆகியவை உள்ளடங்கிய இவை பல்வேறு பாதுகாப்பு நிலையில் உள்ளன.
- புதையல் வேட்டைக்காரர்களால் சேதம் செய்யப்பட்ட கல் திட்டைகளின் மேற்பரப்பில் அவை கண்டறியப்பட்டன.
- இந்தப் பெருங்கற்கால கல் திட்டை தளம் ஆனது கர்நாடகாவின் தட்சிண கன்னடா மாவட்டத்தில் உள்ள மூட்பித்ரி எனுமிடத்திற்கு அருகில் உள்ள முடு கொனாஜே என்ற இடத்தில் அமைந்துள்ளது.
- பெருங்கற்காலக் கலாச்சாரமானது அதன் பல்வேறு வகையான முதுமக்கள் தாழிகள் பயன்பாடு மற்றும் இந்தியாவில் இரும்பின் பயன்பாடு ஆகியவற்றால் அறியப் படுகிறது.



## போலோ நடவடிக்கை - 75வது ஆண்டு நிறைவு விழா

- 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 13 ஆம் தேதியன்று போலோ நடவடிக்கையின் 75வது ஆண்டு நிறைவு விழாவை இந்தியா கொண்டாடியது.
- 1948 ஆம் ஆண்டில் இந்த நாளில் இந்திய இராணுவமானது ஹைதராபாத் சமஸ்தானத்தை இந்திய ஒன்றியத்துடன் ஒருங்கிணைப்பதற்காக வேண்டி இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது.
- ஹைதராபாத் சமஸ்தானத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ராணுவத் தாக்குதலை அப்போதைய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் 'காவல்துறை நடவடிக்கை' என்று அழைத்தார்.

- ஹைதராபாத் நிஜாமின் ராணுவப் படைகள் செப்டம்பர் 18 ஆம் தேதியன்று இந்திய இராணுவத்திடம் சரணடைந்தன.




## ஆயுஷ்மான் பாவ் பிரச்சாரம்

- இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் ஆயுஷ்மான் பாவ் பிரச்சாரத்தைக் காணொளி வாயிலாக தொடங்கி வைத்தார்.
- இது ஒரு விரிவான தேசிய அளவிலான சுகாதாரப் பாதுகாப்பு முன்னெடுப்பாகும்.
- நாட்டின் ஒவ்வொரு கிராமம் மற்றும் நகரத்தைச் சென்றடையும் வகையில், சுகாதாரத் திட்டங்களின் முழு அளவில் நிறைவான (மேம்பாட்டு) பரவலை இது உறுதி செய்கிறது.
- இது சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டது.
- இது ஆயுஷ்மான் அட்டைகளை வழங்குதல், ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்கு (ABHA) அடையாள எண்களை உருவாக்குதல் மற்றும் முக்கிய சுகாதாரத் திட்டங்கள் மற்றும் காசநோய் மற்றும் அரிவாள் வடிவ உயிரணு நோய் போன்ற பல்வேறு தொற்றாத நோய் நிலைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் பிரச்சாரமானது, 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 02 ஆம் தேதி வரை நடைபெறும் 'சேவா பக்வாடா' இயக்கத்தின் போது செயல்படுத்தப்பட உள்ளது.
- இது எந்தவொரு ஏற்றத்தாழ்வு அல்லது விலக்குமின்றி ஒவ்வொரு தனிநபரும் மிக அத்தியாவசிய சுகாதாரச் சேவைகளைப் பெறுவதை உறுதி செய்வதற்கான ஒரு முக்கிய இயக்கமாகும்.
- இந்த ஒத்திசைவு அணுகுமுறையானது அதன் மூன்று கூறுகளின் மூலம் சுகாதாரச் சேவைகளை முழு நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது:
    - ஆயுஷ்மான் – ஆப்கே துவார் 3.0
    - சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்கள் (HWC) மற்றும் சமூக சுகாதார மையங்கள் (CHC) ஆகியவற்றில் ஆயுஷ்மான் மேளாக்களை ஏற்பாடு செய்தல்,

- ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்திலும் ஆயுஷ்மான் சபைகளை ஏற்பாடு செய்தல்.




## அமலாக்கத் துறையின் புதிய இயக்குநர்

❖ அமலாக்கத் துறையின் தற்போதைய இயக்குநர் சஞ்சய் குமார் மிஸ்ராவின் பதவிக் காலம் நிறைவடைந்ததையடுத்து, அமலாக்க இயக்குனரகத்தின் (ED) தற்காலிக பொறுப்பு இயக்குநராக ராகுல் நவீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ நவீன் தற்போது அமலாக்கத் துறையின் சிறப்பு இயக்குநராகப் பணியாற்றி வருகிறார்.

❖ 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 08 ஆம் தேதிக்கு அப்பால் முந்தையப் பதவி நீட்டிப்பு அறிவிப்புகள் "சட்டப்படி செல்லாது" என்று உச்ச நீதிமன்றம் கருதியதையடுத்து, மிஸ்ராவின் பதவிக் காலம் ஆனது முதலில் செப்டம்பர் 15 ஆம் தேதி வரை நீட்டிக்கப் பட்டிருந்தது.

## பிறப்பு மற்றும் இறப்பு பதிவு (திருத்தம்) சட்டம், 2023

**MINISTRY OF HOME AFFAIRS**

(OFFICE OF THE REGISTRAR GENERAL, INDIA)

New Delhi, the 13th September, 2023

**S.O. 4058(E).**—In exercise of the powers conferred by sub-section (2) of section 1 of the Registration of Births and Deaths (Amendment) Act, 2023 (20 of 2023), the Central Government hereby appoints the 1st day of October, 2023, as the date on which the provisions of the said Act shall come into force.

[F.No. 1/7/2020-VS (CRS) Part-1]

MRITUNJAY KUMAR NARAYAN, Registrar General and Census Commissioner

❖ 1969 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து, முதல் முறையாக இந்த 54 ஆண்டுகாலச் சட்டத்தினை திருத்தியமைப்பதற்கான ஒரு மசோதா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

❖ பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகளின் மாநில மற்றும் தேசிய அளவிலான தரவுத்தளத்தை உருவாக்குவதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதி முதல் நாடு முழுவதும் இச்சட்டம் அமலுக்கு வர உள்ளது.

❖ கல்வி நிறுவனத்தில் சேர்க்கை, ஓட்டுநர் உரிமம் வழங்குதல், வாக்காளர் பட்டியல் தயாரித்தல், ஆதார் எண், திருமணப் பதிவு அல்லது அரசுப் பணி நியமனம் போன்றவற்றிற்கு ஒரே ஆவணமாகப் பிறப்புச் சான்றிதழை பயன்படுத்த இது வழி வகுக்கிறது.

- இது தத்தெடுக்கப்பட்ட, ஆதரவற்ற, கைவிடப்பட்ட, காப்பகங்களில் ஒப்படைக்கப்பட்ட, வாடகைத்தாய் முறை மூலம் பெறப்பட்ட குழந்தை மற்றும் தனி ஒரு பெற்றோரால் வளர்க்கப்படும் குழந்தை ஆகியோரின் தகவலைப் பதிவு செய்யும் செயல்முறையை எளிதாக்குகிறது.
- பேரிடர் அல்லது பெருந்தொற்றுகள் ஏற்பட்டால், அதனால் ஏற்படும் இறப்புகளை விரைவாகப் பதிவு செய்வதற்கும் சான்றிதழ்களை வழங்குவதற்கும் சிறப்பு "துணைப் பதிவாளர்களை" நியமிப்பதற்கு இது வழி வகுக்கிறது.

## OIML சான்றிதழ் வழங்கும் ஆணையம்

- இந்திய நுகர்வோர் விவகாரங்கள் துறையின் சட்டமுறை அளவியல் பிரிவானது, சர்வதேச சட்டமுறை அளவியல் அமைப்பின் (OIML) சான்றிதழ் வழங்கும் ஆணையமாக நியமிக்கப்பட்டுள்ளது.
- OIML என்பது சர்வதேச சட்டமுறை அளவியல் அமைப்பாகும்.
- 1955 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த அமைப்பு பாரீஸ் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.
- OIML என்பது ஒரு சர்வதேச தரநிலை நிர்ணய அமைப்பாகும்.
- இது சட்டமுறை அளவியல் அதிகாரிகள் மற்றும் தொழில்துறையினரின் பயன்பாட்டிற்காக மாதிரி விதிமுறைகள், தரநிலைகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை உருவாக்குகிறது.
- இந்தியா 1956 ஆம் ஆண்டில் இந்த அமைப்பில் உறுப்பினரானது.
- அதே ஆண்டில், இந்தியா அளவைகள் உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.
- இதுவரை 13 நாடுகள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டிருப்பதால், அண்டை நாடுகளும் உற்பத்தியாளர்களும் தங்கள் சான்றிதழைப் பெற இந்தியாவினை நாடலாம்.

## தேசிய நீதித்துறை தரவு கட்டமைப்பு தளம்



- உச்ச நீதிமன்றமானது தனது வழக்குத் தரவுகளை தேசிய நீதித்துறை தரவுக் கட்டமைப்பில் (NJDG) பதிவு செய்துள்ளது.
- NJDG இணைய தளம் என்பது நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் தொடங்கப் பட்ட, நிலுவையில் உள்ள மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் தொடர்பான தரவுகளின் தேசிய அளவிலான களஞ்சியமாகும்.
- இது இணைய வழி நீதிமன்றங்கள் திட்டத்தின் கீழான ஓர் இயங்கலை தளமாக உருவாக்கப் பட்ட 18,735 மாவட்ட மற்றும் துணை நீதிமன்றங்கள் மற்றும் உயர் நீதிமன்றங்களின் உத்தரவுகள், தீர்ப்புகள் மற்றும் வழக்கு விவரங்களின் தரவுத் தளமாகும்.
- இதன் முக்கிய அம்சம் என்னவென்றால், தரவுகள் ஆனது நிகழ்நேர அடிப்படையில் புதுப்பிக்கப்பட்டு தாலுக்கா மட்டம் வரையிலான சிறு சிறு தரவுகளும் பதிவு செய்யப் படுகிறது.
- NJDG ஆனது நிலுவையில் உள்ள வழக்குகளை அடையாளம் கண்டு, தீர்த்து அவற்றின் எண்ணிக்கையினைக் குறைப்பதற்கான ஒரு கண்காணிப்புச் செயற்கருவியாக செயல்படுகிறது.
- இணைய வழி நீதிமன்றங்கள் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் ஒரு பகுதியாக NJDG கட்டமைக்கப்பட்டுள்ளது.
- இது மத்திய அரசின் நிதியுதவி பெறும் ஒரு திட்டமாகும்.

## தேசிய அத்தியாவசிய மருத்துவ உதவி சாதனங்களின் பட்டியல்

- இந்திய மருத்துவ ஆராய்ச்சிச் சபையானது (ICMR) தேசிய அத்தியாவசிய உதவி சாதனங்களின் பட்டியலை (NLEAP) வெளியிட்டுள்ளது.
- உடலியல் செயல்பாட்டுக் குறைபாடுகள் உள்ளவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அத்தியாவசியமான உதவி சாதனங்களுக்கு முன்னுரிமை அளிக்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- NLEAP ஆனது 21 அத்தியாவசிய உதவி சாதனங்கள் மற்றும் தொழில்நுட்பங்களைக் கொண்டுள்ளது.
- உடலியல் செயல்பாட்டுக் குறைபாடுகள் உள்ளவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு அவை அடிப்படை கருவிகளாகக் கருதப்படுகின்றன.
- உதவி சாதனங்கள் (Aps) செயல்பாட்டுக் குறைபாடுகள் உள்ள தனிநபர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும், அவர்கள் பிறரைச் சார்ந்திருக்கும் ஒரு நிலையை மாற்றுவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

## 2014 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊழல் வழக்குகளில் காப்பு


- டெல்லி சிறப்புக் காவல் ஸ்தாபனச் சட்டத்தின் 6A வது பிரிவினை ரத்து செய்த 2014 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பானது அதற்குப் பின்னோக்கியத் தேதிகளிலும் பயன்படுத்தப் படும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.
- இந்தச் சட்டத்தின் 6A வது பிரிவானது 2003 ஆம் ஆண்டில் இந்தச் சட்டத்தில் அறிமுகப் படுத்தப் பட்டது.

- இணைச் செயலாளர் மற்றும் அதற்கு மேலான உயர் பதவியில் உள்ள அதிகாரிகளுக்கு எதிரான ஊழல் வழக்குகளில் மத்தியப் புலனாய்வுத் துறை விசாரணை நடத்துவதற்கு முன் மத்திய அரசின் ஒரு அனுமதியினை கட்டாயம் பெற வேண்டும் என்று இப்பிரிவு கூறுகிறது.
- 6Aவது பிரிவு அடிப்படை உரிமைகளை மீறுவதாகவும், ஒரு சட்டம் அரசியலமைப்புக்கு முரணானதாக அறிவிக்கப்பட்டால், அது அதன் தொடக்கத்தில் இருந்தே செல்லாது என்றும் நீதிமன்றம் கூறியது.




## பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா திட்டத்தின் விரிவாக்கம்

- பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா (PMUY) திட்டத்தினை 2025-26 ஆம் ஆண்டு வரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
- இந்த நடவடிக்கையானது PMUY திட்டப் பயனாளிகளின் மொத்த எண்ணிக்கையை 10.35 கோடியாக உயர்த்தும்.
- உஜ்வாலா 2.0 திட்டத்தின் தற்போதைய நடைமுறைகளின்படி, உஜ்வாலா பயனாளிகளுக்கு முதல் முறையாக எரிவாயு மறுநிரப்புதல் சேவை மற்றும் அடுப்பு இலவசமாக வழங்கப்படும்.
- பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா 2016 ஆம் ஆண்டு மே 01 ஆம் தேதியன்று பல்லியாவில் (உத்தரப் பிரதேசம்) தொடங்கப்பட்டது.
- நாடு முழுவதும் உள்ள சுமார் 80 மில்லியன் ஏழைக் குடும்பங்களுக்குத் தூய்மையான சமையல் எரிபொருளை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இந்த இலக்கு எட்டப்பட்டது.
- பின்னர், PMUY திட்டத்தின் 2வது கட்டமானது 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கப் பட்டது, ஆரம்ப கட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட 10 மில்லியன் இணைப்புகள் என்ற இலக்கானது, 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் அடையப் பட்டது.
- பின்னர், உஜ்வாலா 2.0 திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை மேலும் 6 மில்லியன் இணைப்புகளை அரசாங்கம் வழங்கியது.
- தற்போது இந்தத் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தைத் தொடங்க உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.




## விஸ்வகர்மா திட்டம்

- ❖ பாரம்பரிய கைவினைக் கலைஞர்களின் நலனுக்கான விஸ்வகர்மா திட்டத்தினைப் பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- ❖ இத்திட்டத்தின் கீழ், அரசு (வங்கி) எந்தவொரு உத்தரவாதமும் இல்லாமல் 3 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கும்.
- ❖ இத்திட்டத்தின் கீழ் வட்டி விகிதமும் மிகக் குறைவாக வழங்கப்படும் என்பதும் உறுதி அளிக்கப் பட்டுள்ளது.
- ❖ தொடக்கத்தில் 1 லட்சம் ரூபாய் கடன் வழங்கப்படும் என அரசு முடிவு செய்துள்ளது.
- ❖ அதைத் திருப்பிச் செலுத்தியவுடன், விஸ்வகர்மா திட்டத்தின் கீழ் கடன் பெறும் நபர்கள்ளுக்கு அரசாங்கம் கூடுதலாக 2 லட்சம் ரூபாய் கடனாக வழங்கும்.
- ❖ இந்தியாவின் கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள கைவினைக் கலைஞர்களுக்கு இத்திட்டம் உதவி வழங்கும்.
- ❖ தொடக்கத்தில், இத்திட்டத்தின் கீழ் 18 பாரம்பரிய வர்த்தகங்களுக்குக் கடன் பெறும் வகையில் இதனுள் உள்ளடக்கப்படும்.

- ❖ இந்தத் திட்டத்தின் பயனாளிகளுக்கு PM விஸ்வகர்மா சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை மூலம் அங்கீகாரம் வழங்கப் படும் என்பதோடு அவர்கள் அடிப்படை மற்றும் மேம்பட்ட திறன் மேம்பாட்டு பயிற்சியினையும் பெறுவர்.




## பழைய பாராளுமன்றக் கட்டிடம்



- ❖ பாராளுமன்ற நடவடிக்கைகள் சமீபத்தில் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டன.
- ❖ பழைய பாராளுமன்றக் கட்டிடமானது "சம்விதான் சதன்" (அரசியலமைப்பு மாளிகை) என்று அழைக்கப்படும் என்று பிரதமர் அறிவித்தார்.
- ❖ பிரிட்டிஷ் கட்டிடக் கலைஞர்களான சர் எட்வின் லுட்யென்ஸ் மற்றும் ஹெர்பர்ட் பேக்கர் ஆகியோரால் வடிவமைக்கப்பட்ட பழைய பாராளுமன்றக் கட்டிடமானது 1927 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது.
- ❖ மத்திய சட்டப் பேரவை மேற்கொள்ளப்பட்ட பின்னர் மக்களவையாக மாற்றப்பட்ட அவையானது, முதலில் 3688 சதுர அடி பரப்பளவில் 148 இருக்கை அமைப்புடன் வடிவமைக்கப் பட்டது.
- ❖ 1951-52 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலுக்குப் பிறகு, அந்த அவை மறுசீரமைக்கப்பட்டது.

- 450 இருக்கையினைக் கொண்டிருக்கும் வகையில் அவைத் தளம் 4804 சதுர அடியாக அதிகரிக்கப்பட்டது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களவை மற்றும் மாநிலங்களவையின் முதல் கூட்டம் ஆனது 1952 ஆம் ஆண்டு மே 13 ஆம் தேதியன்று நடைபெற்றது.
- சுதந்திரத்திற்குப் பிறகு, இளவரசர்கள் அவையானது 1958 ஆம் ஆண்டு வரை பத்து ஆண்டுகளுக்கும் மேலாக உச்ச நீதிமன்றத்தினால் பயன்படுத்தப்பட்டது.
- பின்னர் அந்த அறை நூலகக் கூடமாக மறுவடிவமைப்பு செய்யப்பட்டது.
- இந்த பகுதியானது இன்றும் முந்தைய இந்திய சமஸ்தானங்களின் 102 சின்னங்களைக் கொண்டுள்ளது.

## சஜாக் நடவடிக்கை

- இந்தியக் கடலோரக் காவல்படையானது சமீபத்தில் 'சஜாக் நடவடிக்கையினை' மேற் கொண்டது.
- இது இந்தியக் கடலோரக் காவல்படையினால் மேற்குக் கடற்கரையில் நடத்தப்படும் கடலோரப் பாதுகாப்புப் பயிற்சியாகும்.
- கடலோரப் பாதுகாப்பு நெறிமுறையை மறுசீரமைப்பதற்கும், கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் இந்தப் பயிற்சி உதவுகிறது.
- இந்தப் பயிற்சியின் போது, கடலில் உள்ள அனைத்து மீன்பிடி படகுகள், விசைப் படகுகள் மற்றும் கப்பல்களின் ஆவணங்கள் மற்றும் பணியாளர் அனுமதிச் சீட்டுகளின் விரிவான சோதனை மற்றும் சரிபார்ப்பு பணி மேற்கொள்ளப் பட்டது.

## UPAg இணைய தளம்

- மத்திய அரசானது வேளாண் புள்ளி விவரங்களுக்கான ஒருங்கிணைந்த இணைய தளத்தினை (UPAg Portal- www.upag.gov.in) அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது பயனர்களுக்கான தேடல் செலவினங்கள் மற்றும் திறன் குறைபாடு ஆகியவற்றினைக் குறைப்பதோடு நம்பகமான, நுண்ணிய மற்றும் மெய்நிலைத் தரவுகளுக்கான அணுகலைப் பெறுவதை ஒழுங்குமுறைப்படுத்தி, ஒரு பொது வள மையமாக செயல்படும் நோக்கம் கொண்டு உருவாக்கப்பட்டது.
- UPAg இணைய தளத்தின் முக்கியச் செயல்பாடானது பயிர் மதிப்பீடுகளை உருவாக்குவது மற்றும் வேளாண்மை தொடர்பான பிற புள்ளிவிவர அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பது ஆகியனவாகும்.
- இது தரப்படுத்தப்படாத மற்றும் சரிபார்க்கப் படாத தரவு போன்றச் சவால்களை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு, இந்தியாவின் வேளாண் துறையில் தரவு சார்ந்த முடிவெடுக்கும் செயல்முறையையும் ஆதரிக்கிறது.


## இந்திய நாடாளுமன்ற மாளிகை

- மக்களவையானது புதிய பாராளுமன்றக் கட்டிடத்தினை "இந்தியப் பாராளுமன்ற மாளிகை" என்று அதிகாரப் பூர்வமாக நியமித்தது.

- மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகிய இரண்டும் செப்டம்பர் 18 ஆம் தேதியன்று புதிய பாராளுமன்றக் கட்டிடத்தில் தங்கள் அமர்வுகளை நடத்தின.
- புதிய பாராளுமன்றக் கட்டிடம் ஆனது, தற்போதுள்ள பாராளுமன்றக் கட்டிடத்திற்கு கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது.



## நூற்றி இருபத்தி எட்டாவது திருத்த மசோதா 2023




- 2023 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நூற்று இருபத்தி எட்டாவது திருத்தம்) மசோதாவானது, மக்களவை மற்றும் சட்டசபைகளில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு வழங்க முயல்கிறது.
- இந்த மசோதா நிறைவேற்றப்பட்ட பிறகு நடத்தப்படும் முதல் மக்கள்தொகை கணக்கெடுப்பின் தரவுகளைப் பயன்படுத்தி, தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் முடிந்த பின்னரே இது செயல்படுத்தப் படும்.
- அடுத்த தொகுதி மறுசீரமைப்பு அல்லது தொகுதி எல்லைகளை மறுவடிவமைப்பு செய்யும் நடவடிக்கையானது 2026 ஆம் ஆண்டில் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்த மசோதாவானது ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கத்தினால் 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் தேதியன்று மக்களவையில் அதிகாரப்பூர்வமாக அறிமுகப் படுத்தப் பட்டது.
- கீதா முகர்ஜி தலைமையிலான நாடாளுமன்றக் கூட்டு குழுவின் மதிப்பீட்டிற்காக இது பரிந்துரைக்கப்பட்டது.
- இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட 950 மில்லியன் வாக்காளர்களில் கிட்டத்தட்ட பாதிப் பேர் பெண்கள் ஆவர், ஆனால் பாராளுமன்றத்தில் 15% மற்றும் மாநில சட்டமன்றங்களில் 10% மட்டுமே பிரதிநிதித்துவம் பெற்றுள்ளனர்.

## வேளாண் கடன் மற்றும் பயிர்க் காப்பீட்டு முன்னெடுப்புகள்

- அரசாங்கம் ஆனது மூன்று மாற்றமிக்க முன்னெடுப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில்,
    - கிசான் ரின் இணைய தளம் (KRP)
    - வீட்டுக்கு வீடு சென்றடையும் வகையிலான KCC பிரச்சாரம், மற்றும்
    - வானிலை தகவல் வலையமைப்பு தரவு அமைப்புகள் (WINDS) கையேடு ஆகியவை அடங்கும்.
- KRP என்பது கிசான் கடன் அட்டைகளின் (KCC) கீழான கடன் சேவைகளுக்கான அணுகலைப் புரட்சிகரமான முறையில் மாற்றியமைப்பதற்கான கூட்டு முன்னெடுப்பு ஆகும்.
- மாற்றியமைக்கப்பட்ட வட்டி மானியத் திட்டம் (MISS) மூலம் மானியத்துடன் கூடிய வேளாண் கடன்களைப் பெறுவதற்கு இது உதவுகிறது.
- WINDS முன்னெடுப்பின் மூலம் வேளாண் சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கு உதவும் வகையில், ஒரு குறிப்பிட்டப் பகுதியின் வானிலைத் தரவுகளை வழங்குவதற்கான தானியங்கு வானிலை நிலையங்கள் மற்றும் மழை அளவீடுகளின் வலையமைப்பு ஆனது நிறுவப்பட உள்ளது.

## வாகனங்களில் திறன் பயிற்சி முன்னெடுப்பு

- மத்திய அரசானது 'வாகனங்களில் திறன் பயிற்சி' என்ற முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இது சுமார் 60,000 இளையோர்களுக்கு அதிகாரம் அளிப்பதையும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இண்டஸ்இந்த் வங்கி மற்றும் NSDC ஆகியவற்றுடன் இணைந்து இந்தத் திறன் பயிற்சித் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.
- தற்போதையப் பணிச் சந்தைக்கு ஏற்றவாறு இளையோர்களைப் பயிற்றுவிக்கச் செய்வதற்காகவும், தயார்படுத்துவதற்காகவும் நாட்டின் தொலைதூரப் பகுதிகளுக்குப் பயணிக்கும் 'நவீனமயமாக்கப்பட்ட கருவிகளைக் கொண்ட தனிப் பயனாக்கப் பட்ட பேருந்தின்' மூலமாக இந்த முன்னெடுப்பானது செயல்படுத்தப்படும்.
- இளையோர்கள், குறிப்பாக பெண்களுக்கு, தற்போதைய பணித் துறையில் தங்களைத் தக்க வைத்துக் கொள்வதில் அவசியமான ஒன்றான முக்கிய எண்ணிமத் திறன்களில் பயிற்சி வழங்கப்படும்.
- இந்தத் திட்டமானது ஐந்தாண்டு காலத்திற்குச் செயல்பாட்டில் இருக்கும்.

## மக்களுக்கான G20 இணையப் புத்தகம்

- தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகமானது G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தினை சிறப்பித்துக் காட்டும் வகையிலான " மக்களுக்கான G20 இணையப் புத்தகம்" என்ற மின்னணுப் புத்தகத்தினை வெளியிட்டு உள்ளது.
- மூன்று முக்கியப் பகுதிகளைக் கொண்ட இந்தப் புத்தகமானது G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தினைப் பற்றிய விரிவான ஒரு கண்ணோட்டத்தை வழங்குகிறது.

- முதல் பகுதியானது 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற G20 அமைப்பின் உச்சி மாநாட்டினை உள்ளடக்கியதோடு மேலும் G20 அமைப்பின் கட்டமைப்பு மற்றும் இந்தியாவின் தலைமைத்துவத்தின் போது மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகளையும் விளக்குகிறது.
- இரண்டாம் பகுதியானது, ஈடுப்பாட்டுக் குழுக் கூட்டங்களோடுச் சேர்த்து, அரசுப் பிரதிநிதி மற்றும் நிதி சார் செயல்முறைகளுக்கான பல்வேறு பணிக் குழுக்கள் நடத்திய கூட்டங்கள் பற்றிய விவரச் சுருக்கத்தினை வழங்குகிறது.
- மூன்றாவது பகுதியில் G20 அமைப்பிற்கான இந்தியாவின் தலைமைத்துவத்தினை மக்கள் இயக்கமாக மாற்றிய ஜன்-பாகிதாரி (பொது பங்கேற்பு) நிகழ்வுகளைக் எடுத்துரைக்கும் வகையிலான புகைப்பட விளக்கக் கட்டுரை இடம் பெற்றுள்ளது.

## P.V. நரசிம்மராவ் வழக்கு – 1998

- உச்ச நீதிமன்றமானது வாக்களிப்பிற்குப் பணப் பட்டுவாடா செய்யப்படும் வழக்குகளில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு விலக்கு அளிக்கும் 1998 ஆம் ஆண்டு தீர்ப்பினை மறுபரிசீலனை செய்வதற்காக ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வுக்குச் சமீபத்தில் பரிந்துரைத்தது.
- அந்தத் தீர்ப்பானது சட்டமியற்றும் உறுப்பினர்களுக்கு அவர்களின் பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான லஞ்சக் குற்றச்சாட்டுகளுக்கான குற்றவியல் வழக்குகளிலிருந்து விலக்கு அளித்தது.
- 1993 JMM லஞ்ச வழக்கில் இருந்து உருவான P. V. நரசிம்ம ராவ் வழக்கில், சட்டமியற்றும் உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர் தேர்தலில் வாக்களிப்பினை ஊக்குவிக்கச் செய்வதற்காக லஞ்சம் பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டது.
- உச்ச நீதிமன்றம் ஆனது அந்த வழக்கில் 105(2)வது சட்டப் பிரிவின் கீழ் சட்டமியற்றும் உறுப்பினர்களுக்கு விலக்கு அளித்துள்ளது.
- 2012 ஆம் ஆண்டு, மாநிலங்களவைத் தேர்தலில் ஒரு சுயேச்சை வேட்பாளருக்கு வாக்கு அளிப்பதற்கு லஞ்சம் பெற்றதாக சீதா சோரன் மீது குற்றம் சாட்டப்பட்டது.
- அவர் இதிலிருந்து விலக்கு பெறுவதற்காக 194(2)வது சட்டப் பிரிவினைப் பயன்படுத்த முன்மொழிந்தார், ஆனால் உயர் நீதிமன்றம் அவரது கோரிக்கையை நிராகரித்து, பின் மேற்கொண்டு சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது.

## மகளிர் இட ஒதுக்கீடு மசோதா

- மாநிலங்களவையானது செப்டம்பர் 21 ஆம் தேதியன்று பாராளுமன்றத்தில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடங்களை ஒதுக்குவதற்கு வழிவகை செய்யும் மசோதாவினை ஒருமனதாக நிறைவேற்றியது.
- இது மக்களவை, மாநில சட்டமன்றங்கள் மற்றும் டெல்லியின் சட்டமன்றம் ஆகியவற்றிற்குப் பொருந்தும்.
- இந்த மசோதாவானது செப்டம்பர் 20 ஆம் தேதியன்று மக்களவையில் நிறைவேற்றப் பட்டது.
- புதியப் பாராளுமன்றக் கட்டிடத்தில் நிறைவேற்றப்பட்ட முதல் மசோதா இதுவாகும்.

## தீவிரப்படுத்தப்பட்ட இந்திரதனுஷ் 5.0 திட்டம்

- தீவிரப்படுத்தப்பட்ட இந்திரதனுஷ் (IMI) 5.0 திட்டத்தின் இரண்டாம் கட்டமானது சமீபத்தில் நிறைவடைந்தது.
- இது பகுதியளவு தடுப்பூசி போடப்பட்ட மற்றும் தடுப்பூசி போடப்படாத ஐந்து வயது வரையிலான குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களை இலக்காகக் கொண்ட நோய்த் தடுப்பு மருந்து வழங்கீட்டுப் பிரச்சாரமாகும்.
- பொது நோய்த் தடுப்பு மருந்து வழங்கீட்டுத் திட்டத்தின் (UIP) கீழ் அனைத்துத் தடுப்பு மருந்துகளும் வழங்கப்பட்டன.
- இத்திட்டமானது நாடு முழுவதும் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்படுகிறது.
- மூன்றாவது கட்டம் ஆனது வரும் அக்டோபர் மாதத்தில் மேற்கொள்ளப்படும்.




## ஸ்வச்சதா பக்வாடா – 2023

- இரயில்வே அமைச்சகம் ஆனது ஸ்வச்சதா பக்வாடா 2023 என்ற முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- ஸ்வச்சதா பக்வாடா என்ற விழிப்புணர்வுப் பிரச்சாரமானது செப்டம்பர் 16 முதல் 30 ஆம் தேதி வரை அனுசரிக்கப்படுகிறது.
- இந்த முன்னெடுப்பானது, தூய்மை மற்றும் சுற்றுச்சூழலைப் பேணுவது குறித்த உணர்வை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டது.
- 2022 ஆம் ஆண்டு ஸ்வச்சதா பக்வாடா விருதுகள் சிறப்பாகச் செயலாற்றும் மூன்று இரயில்வே மண்டலங்களுக்கு வழங்கப்பட்டது.
  - முதல் இடம்: தென் மேற்கு இரயில்வே;
  - 2வது இடம்: மேற்கு இரயில்வே;
  - 3வது இடம்: வடகிழக்கு இரயில்வே.

## பன்னாட்டுக் கட்டமைப்பு இணை தொடரமைப்புகள்

- "ஒரு சூரியன், ஒரு உலகம், ஒரு கட்டமைப்பு (OSOWOG) திட்டத்திற்கான பன்னாட்டுக் கட்டமைப்பு இணை தொடரமைப்புகள்" என்ற மாநாடு ஆனது சமீபத்தில் புது டெல்லியில் நடைபெற்றது.
- இந்த முன்னெடுப்பானது பல்வேறு நாடுகளுக்கான ஆற்றல் விநியோகத்தை இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பரிமாற்றப் பயன்படும் ஒரு பொதுவான கட்டமைப்பு மூலம் வெவ்வேறு பிராந்தியக் கட்டமைப்புகளை இணைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது சர்வதேச சூரியசக்திக் கூட்டணி மற்றும் உலக வங்கி குழுவுடன் இணைந்து இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய நாடுகளின் அரசாங்கங்களால் முன்னெடுத்து மேற்கொள்ளப் படுகிறது.
- இந்தத் திட்டம் செயல்பாட்டுக்கு வந்த பிறகு, சூரிய சக்தியைப் பல்வேறு நாடுகளுக்கு கொண்டு செல்ல உதவும்.

## திறன் இந்தியா டிஜிட்டல் செயலி

- மத்திய அரசானது திறன் இந்தியா டிஜிட்டல் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது திறன் மேம்பாட்டுப் படிப்புகள் மற்றும் வேலைவாய்ப்பு குறித்த தகவல் அளிப்பு ஆகியவற்றின் பட்டியல்களை ஒன்றிணைக்கிறது.
- ஒரு கல்விப் படிப்பினை முடித்ததற்கான சரிபார்க்கக் கூடிய சான்றிதழ்களை வழங்கும் வகையில், இந்த செயலி டிஜிலாக்கர் மற்றும் ஆதாருடன் இணைக்கப்படும்.
- இது வேலைவாய்ப்பிற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மற்றும் கல்விப் படிப்புகளை மேற்கொள்பவர்களுக்கு எண்ணிம முறையில் கையொப்பமிடப்பட்ட அனுபவ விவரக் குறிப்புகளை உருவாக்கும்.
- இது Udyam இணைய தளம், eShram இணைய தளம், தேசிய தொழில் கல்வி சேவை மற்றும் ASEEM வேலைவாய்ப்பு விவரக் கோப்பு ஆகியவற்றுடன் இணைக்கப் பட்டு உள்ளது.



## இணைய வழி நீதிமன்றங்கள் மூன்றாம் கட்டம்




- 7,210 கோடி நிதி செலவில் இணைய வழி நீதிமன்றங்கள் அமைக்கும் திட்டத்தின் மூன்றாம் கட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது கீழ்நிலை நீதித்துறையின் எண்ணிம உள்கட்டமைப்பினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மத்திய அரசு திட்டம் ஆனது நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.
- இத்திட்டத்தின் மூன்றாம் கட்டம் ஆனது பழைய மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகள் இரண்டையும் உள்ளிட்ட முழு நீதிமன்றப் பதிவுகளையும் எண்ணிம மயமாக்க உள்ளது.
- மொத்தம் 3,108 கோடி ஆவணங்கள் எண்ணிம மயமாக்கப்படும்.

## இந்தியாவின் வேலைவாய்ப்பு நிலை 2023

- அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகத்தின் நிலையான வேலைவாய்ப்புக்கான மையமானது ‘இந்தியாவின் வேலைவாய்ப்பு நிலை 2023’ என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2017-18 ஆம் ஆண்டில் 8.7 சதவீதமாக இருந்த ஒட்டு மொத்த வேலைவாய்ப்பின்மை விகிதம் ஆனது 2021-22 ஆம் ஆண்டில் 6.6 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- ஆனால், 2021-22 ஆம் ஆண்டில் இந்தியாவின் 25 வயதுக்குட்பட்ட பட்டதாரிகளில் 42 சதவீதத்திற்கும் அதிகமானோர் வேலையில்லாமல் இருந்தனர்.
- 2021 ஆம் ஆண்டில், 22% பட்டியலிடப்பட்ட சாதியினைச் சேர்ந்த தொழிலாளர்களும், 32% பொதுப் பிரிவு தொழிலாளர்களும் வழக்கமான கூலி வேலையில் இருந்தனர்.
- 2004 ஆம் ஆண்டில் இருந்த 86.5% என்ற அளவை விடக் குறைவாக 2018 ஆம் ஆண்டில், பட்டியலிடப்பட்ட சாதியினர்/ பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் வகுப்பினைச் சேர்ந்த சாதாரணக் கூலி வேலை செய்யும் தந்தைமார்களின் மகன்களில் 75.6% பேர் சாதாரணக் கூலி வேலை செய்யும் தொழிலாளர்களாக இருந்தனர்.
- 2004 ஆம் ஆண்டில் 83.2% ஆக இருந்த பொதுச் சாதியினைச் சேர்ந்த சாதாரணக் கூலி வேலை செய்யும் தந்தையர்களின் மகன்களின் எண்ணிக்கையானது 2018 ஆம் ஆண்டில் 53% ஆகக் குறைந்துள்ளது.
- 1980 ஆம் ஆண்டுகளில் இருந்து, வேளாண் சாராத துறைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பங்கு ஆனது கணிசமாக அதிகரித்தது. இந்த எண்ணிக்கை 2021 ஆம் ஆண்டில் 19.8% ஆக இருந்தது.
- 2021-2022 ஆம் ஆண்டின் நிலவரப்படி, பட்டியலிடப்பட்ட சாதியினர் பிரிவைச் சேர்ந்த 40%

பெண்கள் மட்டுமே வேலைவாய்ப்பினைப் பெற்றிருந்த நிலையில் பொது சாதிப் பிரிவினைச் சேர்ந்த பெண்களில் 21% அளவில் வேலைவாய்ப்பினைப் பெற்றிருந்தனர்.

- 2004 ஆம் ஆண்டில் 70% ஆக இருந்த இந்தியாவில் ஊதியம் பெறும் பெண் தொழிலாளர்கள் எண்ணிக்கையானது (ஆண் தொழிலாளர்களுடன் ஒப்பிடுகையில்) 76% ஆக உயர்ந்துள்ளது.

Unemployment is concentrated among educated youth

| | Less than 25 years | 25–29 years | 30–34 years | 35–39years | 40 years and above |
|---|---|---|---|---|---|
| Graduate & above | 42.3 | 22.8 | 9.8 | 4.5 | 1.6 |
| Higher secondary | 21.4 | 10.6 | 5.0 | 3.1 | 2.1 |
| Secondary | 18.1 | 7.5 | 4.6 | 2.4 | 1.7 |
| Primary or middle | 15.0 | 5.4 | 3.0 | 2.4 | 2.2 |
| Literate but below primary | 10.6 | 3.3 | 1.5 | 2.4 | 2.2 |
| Illiterate | 13.5 | 4.3 | 4.0 | 3.4 | 2.4 |

*Sources and notes: PLFS 2022-22. This is Figure 2.3 in the report.*

## தேசிய மருத்துவ ஆணையம் - உலகளாவிய அங்கீகாரம்




- இந்தியாவின் தேசிய மருத்துவ ஆணையத்திற்கு (NMC), உலக மருத்துவக் கல்விக் கூட்டமைப்பின் (WFME) அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது.
- இந்த அந்தஸ்து 10 வருட காலத்திற்குச் செல்லுபடியாகும்.
- இந்த அங்கீகாரமானது இந்திய மருத்துவப் பட்டதாரிகளுக்கு WFME அங்கீகாரம் தேவைப் படும் பிற நாடுகளில் முதுகலைப் பயிற்சி மற்றும் மருத்துவப் பயிற்சியைத் தொடர உதவும்.
- தற்போதுள்ள அனைத்து 706 மருத்துவக் கல்லூரிகளும் WFME அங்கீகாரம் பெற்றதாகவும், அடுத்து வரும் 10 ஆண்டுகளில் அமைக்கப்படும் புதிய மருத்துவக் கல்லூரிகள் தானாகவே WFME அங்கீகாரம் பெற்றதாகவும் கொள்ளப்படும்.

- உலக மருத்துவக் கல்விக் கூட்டமைப்பு (WFME) என்பது உலகளாவிய மருத்துவக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு உலகளாவிய அமைப்பாகும்.

## அனைத்து மகளிர் துணைத் தலைவர்கள் குழு

- மாநிலங்களவைத் தலைவர் ஜக்தீப் தன்கர், மகளிர் இடஒதுக்கீடு மசோதாவைக் கருத்தில் கொண்டு மாநிலங்களவையில் அனைத்து மகளிர் துணைத் தலைவர்கள் குழுவினை அமைத்துள்ளார்.
- நாரி சக்தி வந்தான் ஆதினியம் 2023 என அழைக்கப்படும் மகளிர் இடஒதுக்கீடு மசோதா குறித்து விவாதிப்பதற்காக மட்டுமே இந்த 13 பெண் மாநிலங்களவை உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.
- இக்குழுவில் P. T. உஷா, ஜெயா பச்சன், சரோஜ் பாண்டே, டோலா சென், சுலதா தியோ மற்றும் டாக்டர் ஃபௌசியா கான் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.




## 14வது உலக திறன் உச்சிமாநாடு

- 14வது உலக திறன் உச்சிமாநாடு ஆனது டெல்லியில் நடைபெற்றது.
- இந்த நிகழ்விற்கான கருத்துரு என்பது "திறன்களை உருவாக்குதல், இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் எதிர்காலத்தை உருவாக்குதல்" ஆகும்.
- இந்த உச்சி மாநாடு ஆனது இந்தியாவில் உயர்தரத் தொழில்துறை சார்ந்த திறன் சூழலுக்கான செயல் திட்டத்தினை உருவாக்கச் செய்வதில் கவனம் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## முத்தரப்பு கடல்சார் பயிற்சி

- ஐஎன்எஸ் சஹ்யாத்ரி கப்பல் ஆனது முதலாவது முத்தரப்பு கடல்சார் கூட்டாண்மை பயிற்சியில் பங்கேற்றது.
- இந்தியா-இந்தோனேசியா-ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இடையிலான முதலாவது முத்தரப்பு கடல்சார் பயிற்சி இதுவாகும்.
- இந்த முத்தரப்புப் பயிற்சியானது, இந்நாடுகளின் கூட்டாண்மையை வலுப்படுத்தவும், நிலையான, அமைதியான மற்றும் பாதுகாப்பான இந்தோ-பசிபிக் பிராந்தியத்தைக் கட்டமைப்பதனை ஆதரிப்பதற்கான அவற்றின் கூட்டுத் திறனை மேம்படுத்தச் செய்வதற்குமான வாய்ப்பினை அளித்தது.

❖ ஐஎன்எஸ் சஹ்யாத்ரி கப்பலானது உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டு கட்டமைக்கப் பட்ட திட்டம்-17 வகுப்பு பல்பயன்பாட்டு ரேடாரில் புலப்படாதப் போர்க் கப்பல்களின் வரிசையில் மூன்றாவது கப்பல் ஆகும்.






**SIMBEX 2023**



- தென் சீனக் கடலில் ஆண்டுதோறும் நடத்தப்படும் இருதரப்பு கடற்படைப் பயிற்சியின் 30வது பயிற்சியில் இந்தியக் கடற்படை மற்றும் சிங்கப்பூர் கடற்படை ஆகியவை பங்கேற்றுள்ளன.
- SIMBEX என்பது சிங்கப்பூர்-இந்தியா கடல்சார் இருதரப்புப் பயிற்சி என்பதைக் குறிக்கிறது.
- இரு நாடுகளுக்கிடையிலான இந்த வருடாந்திர இருதரப்பு கடற்படைப் பயிற்சியானது 1994 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது.

## புதிய வந்தே பாரத் இரயில்கள்

- பிரதமர் அவர்கள், 11 மாநிலங்களை இணைக்கும் ஒன்பது வந்தே பாரத் இரயில்களை செப்டம்பர் 24 ஆம் தேதியன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.
- இதில் திருநெல்வேலி-சென்னை எழும்பூர் ஆகியவற்றுக்கு இடையேயான வந்தே பாரத் இரயில் சேவையும் அவர் தொடங்கி வைத்தார்.
- கோயம்புத்தூரில் வந்தே பாரத் இரயில் சேவை தொடங்கப்பட்டதற்குப் பிறகு தமிழ்நாடு மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்படும் இரண்டாவது வந்தே பாரத் சேவை இதுவாகும்.
- இந்த ஒன்பது இரயில்களுடன் நாட்டில் இயக்கப்படும் மொத்த வந்தே பாரத் இரயில்களின் எண்ணிக்கை 34 ஆக உயர்ந்துள்ளது.
- இவை ராஜஸ்தான், தமிழ்நாடு, தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, பீகார், மேற்கு வங்காளம், கேரளா, ஒடிசா, ஜார்க்கண்ட் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் போக்குவரத்து இணைப்பினை மேம்படுத்தும்.

## ஆரோக்கிய மாந்தன் 2023

- தேசிய சுகாதார ஆணையம் (NHA) ஆனது, ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (AB PM-JAY) அறிமுகப் படுத்தப்பட்டதன் மீதான ஐந்தாண்டு நிறைவினைக் கொண்டாடுவதற்காக 'ஆரோக்ய மாந்தன்' நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருந்தது.
- இது ஆயுஷ்மான் பாரத் எண்ணிமத் திட்டத்தின் (ABDM) இரண்டு ஆண்டுகளைக் குறிக்கும் விதமாகவும் கொண்டாடப்படுகிறது.
- ஆயுஷ்மான் பாரத் PM-JAY திட்டமானது 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 ஆம் தேதி அன்று தொடங்கப்பட்டது.
- ஆயுஷ்மான் பாரத் எண்ணிமத் திட்டமானது 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 ஆம் தேதி அன்று தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டமானது பல்வேறு சுகாதாரப் பாதுகாப்பு சூழல் அமைப்புகளின் பங்கு தாரர்களை இணைக்கும் எண்ணிமத் தளங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இராஷ்ட்ரிய 'விக்யான் புரஸ்கார்'

- மத்திய அரசானது அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத் துறையில் புதிய தேசிய விருதுகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இதற்கு "இராஷ்ட்ரிய 'விக்யான் புரஸ்கார்" (RVP) என்று பெயரிடப் பட்டுள்ளது.

- இந்த விருதுகள் ஆனது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பல்வேறு துறைகளில் அறிவியலாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களின் குறிப்பிடத்தக்கப் பங்களிப்புகளை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டு வழங்கப் படுகின்றன.
- இந்தியாவில் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத் துறையில் மிக உயரிய அங்கீகாரமாக இது திகழ உள்ளது.
- இது நான்கு பிரிவுகளில் வழங்கப்பட உள்ளது.
    - 'விக்யான் ரத்னா' - அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் எந்தவொரு துறையிலும் மேற் கொள்ளப்படும் வாழ்நாள் சாதனைகள்.
    - 'விக்யான் ஶ்ரீ' - அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் எந்தவொரு துறையிலும் மேற் கொள்ளப்படும் சிறப்பான பங்களிப்புகளை அங்கீகரித்தல்.
    - 'விக்யான் யுவ-சாந்தி ஸ்வரூப் பட்நாகர்' - அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் சிறப்பானப் பங்களிப்பினை ஆற்றிய 45 வயதுக்குட்பட்ட இளம் அறிவியலாளர்களை அங்கீகரித்து ஊக்குவித்தல்.
    - 'விக்யான் குழு' விருது – அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் சிறப்பான பங்களிப்பினை ஆற்றிய மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறிவியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் அல்லது கண்டுபிடிப்பாளர்களைக் கொண்ட குழுவிற்கு வழங்கப் படும்.

## வரைவு காப்புரிமைகள் (திருத்தம்), விதிகள், 2023



Body blow to pre-grant opposition

The draft patent amendment rules give the controller the power to determine the maintainability of representation of those filing pre-grant oppositions

**Worrying**: The draft amendment rules create needless hurdles. SPECIAL ARRANGEMENT

- Currently, the Patents Act explicitly permits "any person" to file a pre-grant opposition without the discretion of the Controller. But as per the draft rules, the Controller will decide maintainability
- Big pharma had questioned the maintainability of petitioners opposing patents, leading to delays. The same can happen with pre-grant opposition
- The present amendments present the most significant challenge to the Indian Patent System since 2005
- Pharma companies are averse to pre-grant opposition. The draft patent amendment rules help them by making the process difficult
- There are innumerable instances when patient groups and civil society organisations have filed pre-grant opposition, leading to rejection of patent extension
- The latest pre-grant opposition ruling that was not in favour of a pharma company is the Bedaquiline drug for MDR-TB patients

- இந்திய அரசானது 1970 ஆம் ஆண்டு காப்புரிமைச் சட்டத்தின் கீழான வரைவு காப்பு உரிமை (திருத்தம்) விதிகளை வெளியிட்டுள்ளது.
- இதன் கீழ், புதிய மற்றும் பயனுள்ள கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமைகள் வழங்கப் படுவதோடு மேலும், கண்டுபிடிப்பாளர்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பு மற்றும் அவர்களின் கண்டுபிடிப்புகளுக்கான பிரத்தியேக உரிமைகளை வழங்குவதன் மூலம்

புதுமைகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் இந்த விதிகள் அறிமுகப் படுத்தப் பட்டு உள்ளது.

- முன்-அனுமதி எதிர்ப்பு (PGO – Pre Grant Opposition) தாக்கல் செய்வதற்கு (முன்பு இலவசம்) ஒரு மாறுநிலைக் கட்டணம் விதிக்கப்படும்.
- PGO என்பது காப்புரிமை வெளியீட்டிற்குப் பிறகு, ஆனால் அதற்கு அனுமதி வழங்கப் படுவதற்கு முன் தாக்கல் செய்யப்படும் ஒரு முன் அனுமதி எதிர்ப்பு ஆகும்.
- முன்பு அனைவராலும் தாக்கல் செய்யப்படக்கூடிய PGO தாக்கல் ஆனது தற்போது காப்புரிமைகள், வடிவமைப்புகள் மற்றும் வர்த்தக முத்திரைகளின் தலைமைக் கட்டுப்பாட்டகத்தின் மூலம் தீர்மானிக்கப்படும்.
- காப்புரிமை பெற்ற பொருளின் உற்பத்தி இடம் மற்றும் விலை குறித்த தகவல்களை வெளியிட வேண்டிய அவசியமில்லை.

## ODF பிளஸ் கிராமங்கள்

- இந்தியாவில் உள்ள சுமார் 4.4 லட்சம் அல்லது 75 சதவீதக் கிராமங்கள் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமங்கள் என்ற அந்தஸ்தினை அடைந்துள்ளன.
- திட அல்லது திரவக் கழிவு மேலாண்மை அமைப்புகளை நடைமுறைப் படுத்துவதோடு சேர்த்து, திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத (ODF) கிராமம் என்ற அந்தஸ்தையும் தக்க வைத்துக் கொண்ட கிராமம் 'ODF பிளஸ்' கிராமம் ஆகும்.
- 14 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் (UT) உள்ள அனைத்து கிராமங்களும் ODF பிளஸ் அந்தஸ்தினை அடைந்துள்ள நிலையில் அவற்றில் நான்கு 'ODF பிளஸ் மாதிரி' கிராமங்கள் என அறிவிக்கப் பட்டுள்ளன.
- அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள், தாத்ரா நகர் ஹவேலி, கோவா, குஜராத், இமாச்சலப் பிரதேசம், ஜம்மு & காஷ்மீர், கர்நாடகா, கேரளா, லடாக், புதுச்சேரி, சிக்கிம், தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் திரிபுரா ஆகியவை முழு அளவிலான ODF பிளஸ் கிராமங்களைக் கொண்ட சிறந்த மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஆகும்.
- இவற்றில் அந்தமான் மற்றும் நிக்கோபார், தாத்ரா நகர் ஹவேலி மற்றும் தாமன் டையூ, ஜம்மு காஷ்மீர் மற்றும் சிக்கிம் ஆகியவை 'ODF பிளஸ் மாதிரி' அந்தஸ்தைப் பெற்று உள்ளன.



# சர்வதேசச் செய்திகள்

## B20 உச்சி மாநாடு இந்தியா 2023

- ❖ மூன்று நாட்கள் அளவிலான B20 உச்சி மாநாடானது இந்திய அரசினால் டெல்லியில் நடத்தப் பட்டது.
- ❖ இந்த நிகழ்விற்கான கருத்துரு "R.A.I.S.E." - பொறுப்பு, துரிதப்படுத்தப்பட்ட, புதுமை மிக்க, நிலையான மற்றும் சமமான வணிகம் என்பதாகும்.
- ❖ இந்திய அரசானது, B20 (வணிகம் 20) மன்றத்தின் தலைமைப் பதவியை அதிகாரப் பூர்வமாகப் பிரேசிலிடம் ஒப்படைத்தது.
- ❖ இது உலக நாடுகளின் வணிகச் சமூகத்தின் அதிகாரப்பூர்வ G20 பேச்சுவார்த்தை குறித்த மன்றமாகும்.
- ❖ 2010 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த B20 மன்றமானது, G20 அமைப்பிலுள்ள மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஈடுபாட்டுக் குழுக்களாகும்.
- ❖ அடுத்த G20 உச்சி மாநாடு ஆனது 2024 ஆம் ஆண்டில் பிரேசில் நகரில் நடைபெற உள்ளது.

## அபாயா உடைக்குத் தடை


- ❖ பிரான்சு நாட்டின் அரசானது, அரசுப் பள்ளிகளில் மத அடையாளங்களை அணிவதற்கு கடுமையான தடையை அமல்படுத்தியுள்ளது.
- ❖ அரசு நடத்தும் பள்ளிகளில் குழந்தைகள் அபாயா உடை அணிவதை அந்நாட்டு அரசு தடை செய்துள்ளது.
- ❖ அபாயா என்பது முஸ்லீம் பெண்கள் அணியும் தளர்வான, ஒரு முழு நீள ஆடையாகும்.
- ❖ 2004 ஆம் ஆண்டில், பள்ளிகளில் முக்காடு அணிவதைத் தடை செய்த அந்நாட்டு அரசாங்கமானது 2010 ஆம் ஆண்டில் பொது இடங்களில் முகத்தை முழுவதும் மூடச் செய்வதற்குத் தடை விதித்தது.



### 2050 ஆம் ஆண்டில் மூட்டழற்சி பாதிப்பு

- 2050 ஆம் ஆண்டில், உலகளவில் கிட்டத்தட்ட ஒரு பில்லியன் மக்கள் மூட்டழற்சி பாதிப்பினைக் கொண்டிருப்பர் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- தற்போது, 30 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதிலான உலக மக்கள் தொகையில் 15 சதவீதம் பேர் மூட்டழற்சிப் பாதிப்பினால் அவதியுறுகின்றனர்.
- 2020 ஆம் ஆண்டில், 595 மில்லியன் மக்கள் மூட்டழற்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- இது 1990 ஆம் ஆண்டில் 256 மில்லியன் ஆக இருந்த பாதிப்பு எண்ணிக்கையை விட 132 சதவீதம் அதிகமாகும்.
- 1990 ஆம் ஆண்டில், மூட்டழற்சியினால் ஏற்படும் 16 சதவீத உடல் இயலாமைக்கு உடல் பருமன் காரணமாக இருப்பது கண்டறியப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டில் இது 20 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில், பெண்களில் 61 சதவீதமும், ஆண்களில் 39 சதவீதமும் மூட்டழற்சிப் பாதிப்புகள் பதிவாகின.

### விண்வெளியில் உள்ள பொருட்களுக்குப் பெயரிடல்




- இந்திய அரசானது, சந்திரயான்-3 தரையிறங்கு கலம் நிலவினைத் தொட்டப் பகுதிக்கு சிவசக்தி என்று பெயரிட்டுள்ளது.
- நிலவானது எந்த ஒரு நாட்டின் அதிகார வரம்பிற்குள்ளும் உட்படாது.
- ஆனால், சர்வதேச வானியல் ஒன்றியம் (IAU) ஆனது விண்வெளி நடவடிக்கைகளுக்காக வேறு சில விதிகளை நிர்ணயிக்கிறது.
- சர்வதேச வானியல் ஒன்றியமானது 1919 ஆம் ஆண்டில் அது தொடங்கப் பட்டதிலிருந்து கோள்கள் மற்றும் செயற்கைக் கோள்கள் பெயரிடலின் நடுவண் அமைப்பாக இருந்து வருவதோடு, மேலும் அதன் 92 உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.
- பல ஆய்வுத் தளங்களுக்கு முதன்முதலில் முறைசாரா வகையில் பெயர்கள் வழங்கப் படுகின்றன.
- இந்தப் பெயர்கள் பின்னர் அதன் ஒப்புதலுக்காக சர்வதேச வானியல் ஒன்றியத்திடம் சமர்ப்பிக்கப் படுகின்றன.

- சர்வதேச வானியல் ஒன்றியத்தின் பணிக் குழு இந்தப் பெயரிடல் செயல் முறையைக் கையாளுகிறது.
- இந்த அமைப்பின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் எந்தவொரு தேசிய அரசு அல்லது சர்வதேசச் சட்டத்தினாலும் செயல்படுத்தப்பட முடியாதவை ஆகும்.
- கோள்கள் அமைப்பின் பெயரிடல் அமைப்பினுடைய பணிக் குழுவினுடைய (WGPSN) உறுப்பினர்களின் வாக்களிப்பு மூலம் வெற்றிகரமாக மதிப்பிடப்பட்டப் பிறகு, இந்தப் பெயர்கள் அதிகாரப் பூர்வ ரீதியில் சர்வதேச வானியல் ஒன்றியத்தின் பெயரிடலாக அங்கீகரிக்கப் பட்டதாகக் கருதப்படுகிறது.
- அதன் பிறகே வரைபடங்கள் மற்றும் அறிக்கை வெளியீடுகளில் இந்தப் பெயர்களைப் பயன்படுத்த இயலும்.

## அதிகாரப் பூர்வ வழிகாட்டுதல்கள். 26

- ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் உரிமைகளுக்கான குழு (UNCRC) அதிகாரப் பூர்வ வழிக்காட்டுதல்கள். 26 என்ற பொது வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- குழந்தைகளின் உரிமைப் பிரயோகத்தின் மீது சுற்றுச்சூழல் சீர்கேடு மற்றும் பருவ நிலை மாற்றம் ஆகியவற்றினால் ஏற்படும் சில பாதகமான தாக்கங்களை நிவர்த்தி செய்வதற்கான சட்டப் பூர்வக் கட்டமைப்பினை இது வழங்குகிறது.
- இது தற்போதைய தலைமுறைக்குத் தூய்மையான, வளமான மற்றும் நிலையான உலகினை உறுதி செய்வதோடு, எதிர்காலச் சந்ததியினருக்காக என்று அதனை நன்கு பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதன் மூலம் வணிகங்களால் ஏற்படும் பருவநிலை மாற்றம் தொடர்பான தீங்குகளின் தாக்கத்திலிருந்து குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான பல நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உறுப்பினர் நாடுகளுக்கு வலியுறுத்தப் பட்டு உள்ளது.




## புலம்பெயர்வு மீதான கம்பாலா அமைச்சர்கள் பிரகடனம்

- மொத்தம் 48 ஆப்பிரிக்க நாடுகள் தற்போது புலம்பெயர்வு, சுற்றுச்சூழல் மற்றும் பருவ நிலை மாற்றம் (KDMECC) மீதான கம்பாலா அமைச்சர்கள் பிரகடனத்தை ஏற்பதற்கு ஒப்புக் கொண்டுள்ளன.
- இது ஆப்பிரிக்க கண்டத்தில் மக்களின் புலம்பெயர்வு மற்றும் பருவநிலை மாற்றத்தின் தொடர்பை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- பருவநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கு அதிகளவில் பாதிக்கப்படக் கூடிய சில உலக கண்டங்களில் ஆப்பிரிக்காவும் ஒன்றாகும்.
- KDMECC ஆனது முதலில் 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் உகாண்டாவின் கம்பாலா என்னுமிடத்தில் 15 ஆப்பிரிக்க நாடுகளால் கையெழுத்திடப்பட்டு ஒப்புக் கொள்ளப் பட்டது.
- இந்தப் பிரகடனமானது பருவநிலையால் தூண்டப்பட்டப் புலம்பெயர்வினை, அதன் நடைமுறை மற்றும் பயன்மிகு முறையில் நிவர்த்தி செய்வதற்காக என்று உறுப்பினர் நாடுகளின் தலைமையில் உருவாக்கப்பட்ட முதல் விரிவான, நடவடிக்கை சார்ந்த ஒரு கட்டமைப்பாகும்.
- கடந்த ஆண்டு மட்டும் 7.5 மில்லியனுக்கும் அதிகமான புதிய உள்நாட்டுப் பேரிடர் சார்ந்தப் புலம்பெயர்வுகள் பதிவாகியுள்ளன.

## HIV பாதிப்பிற்கான உலகளாவிய நிதியம்


- எய்ட்ஸ் நோயை எதிர்த்துப் போராடுவதற்கான உலகளாவிய நிதியம் ஆனது, இந்தியா உடனான அதன் உத்திசார் கூட்டாண்மையை மையமாகக் கொண்ட முதல் மாநாடு வெற்றிகரமாக முடிவடைந்ததாக அறிவித்துள்ளது.
- இது ஒரு அதிநவீன HIV மருந்தின் விலையைக் கணிசமாகக் குறைப்பதற்காக பொதுப் பெயர் வடிவிலான மருந்து உற்பத்தியாளர்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்கிறது.
- இந்த உலகளாவிய நிதியமானது, எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா ஆகியவற்றின் பாதிப்பினை எதிர்த்துப் போரிடுவதற்காக 2002 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஒரு கூட்டாண்மை நிதியமாகும்.
- இந்த ஒப்பந்தம் ஆனது TLD எனப்படும் மேம்பட்ட பண்புகள் கொண்ட மாத்திரையை ஒரு நபருக்கு வருடத்திற்கு 45 டாலருக்கும் குறைவான விலையில் கீழ் வழங்கி உதவச் செய்வதைச் சாத்தியமாக்கும்.

## காபோன் இராணுவ ஆட்சி

- மத்திய ஆப்பிரிக்க நாடான காபோனின் இராணுவ அதிகாரிகள் தாங்கள் "காபோன் மக்களின் சார்பாக" அந்நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றியதாக அறிவித்துள்ளனர்.
- அதிபர் அலி போங்கோ தற்போது வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.
- சமீபத்தில் நடைபெற்றத் தேர்தலில் அவர் மூன்றாவது முறையாக வெற்றி பெற்றார்.
- அந்நாட்டில் 2 மில்லியனுக்கும் குறைவான மக்களே உள்ளனர்.
- 1885 ஆம் ஆண்டில் பிரான்சு அரசு காபோன் பகுதியினை ஆக்கிரமித்தது.
- 1910 ஆம் ஆண்டில், பிரெஞ்சு நாட்டின் பூமத்திய ரேகை பகுதி சார்ந்த ஆப்பிரிக்காவின் நான்கு பிரதேசங்களில் ஒன்றாக காபோன் மாறியது.
- 1960 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் தேதியன்று, காபோன் பிரான்சு நாட்டிடம் இருந்து சுதந்திரம் பெற்றது.
- அட்லாண்டிக் பெருங்கடலின் கரையோரம் அமைந்துள்ள இந்த நாடானது கேமரூன், ஈக்குவடோரியல் கினியா மற்றும் காங்கோ குடியரசு ஆகிய நாடுகளுடன் எல்லையை பகிர்ந்து கொள்கிறது.




## கக்போட் தீநிரல் இயங்குதளம்




- ❖ சர்வதேச நாடுகளின் சட்ட அமலாக்க துறைகளின் நடவடிக்கையானது தீங்கு விளைவிக்கும் வகையிலான "கக்போட்" தீநிரல் இயங்கு தளத்தினை அகற்றியது.
- ❖ இது பல்வேறு நிதிக் குற்றங்களில் இணையவெளிக் குற்றவாளிகளால் அதிகமாகப் பயன்படுத்தப் படுகிறது.
- ❖ பாதிக்கப்படுபவர்களுக்கு அனுப்பப்படும் தீங்கிழைக்கும் வகையிலான, தகவல் மறைத்து அனுப்பப்பட்ட மின்னஞ்சல்கள் மூலம் கக்போட் பரவுகிறது.

- டக் ஹன்ட் என்று பெயரிடப்பட்ட இந்த நடவடிக்கையில் பன்னாட்டு அமலாக்க முகமைகள் ஈடுபட்டன.
- கியூபோட் மற்றும் பிங்க்ஸ்லிப்பாட் என்றும் அழைக்கப்படும் கக்போட், 2007 ஆம் ஆண்டில் வங்கி சார்ந்த தகவல்களைத் திருடும் ஒரு தீநிரலாகப் பரவத் தொடங்கியது.

## 9 கோடு எல்லை





- சீனா வெளியிட்ட புதிய வரைபடத்தை நிராகரிக்கும் விதமாக இந்தியா, மலேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுடன் வியட்நாம் நாடும் இணைந்துள்ளது.
- சீனா வெளியிட்ட வரைபடம் மற்றும் சீனாவின் 'ஒன்பது கோடு எல்லை' சார்ந்த உரிமை கோரல் ஆனது வியட்நாமின் இறையாண்மையை மீறுவதாக உள்ளது.
- அருணாச்சலப் பிரதேசம் மற்றும் அக்சாய் சின் மீதான சீனாவின் உரிமை கோரலுக்கு இந்தியா பெரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.
- புருனே, மலேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் தென் சீனக் கடல் மீது உரிமை கொண்டாடுகின்றன.
- தென் சீனக் கடலில் 90% பகுதியினை சீனா உரிமை கோருகிறது.
- 'ஒன்பது கோடு எல்லை' என்பது உலக வரைபடத்தில், தென் சீனக் கடல் பிராந்தியத்தில் தனது உரிமை கோரல்களை உறுதிப்படுத்துவதற்காக வேண்டி சீனா பயன்படுத்தும் வரலாற்று எல்லைக் கோடு ஆகும்.
- 2016 ஆம் ஆண்டின் நடுவர் மன்றத் தீர்ப்பானது ஒன்பது கோடு எல்லை உரிமைக் கோரலை செல்லாததாக்கியது.

## 10-அம்ச சமாதான சூத்திரம்

- உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியால் முன்மொழியப்பட்ட 10 அம்ச சமாதான சூத்திரத்தினை அமல்படுத்தச் செய்வதில் இந்தியாவும் ஓர் அங்கம் வகிக்க உள்ளது.
- 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்தோனேசியாவில் நடைபெற்ற G-20 உச்சி மாநாட்டில் அவர் முதன் முதலில் இந்த சமாதான சூத்திரத்தை முன்வைத்தார்.

- ரஷ்யப் படைப்பிரிவுகளை திரும்ப அழைத்தல் மற்றும் போரை நிறுத்துதல் மற்றும் ரஷ்யாவுடனான உக்ரைனின் மாகாண எல்லைகளைத் திரும்ப வழங்குதல் ஆகியவை அவரது முன்மொழிவின் முக்கிய அம்சங்களுள் சிலவாகும்.




## உலக சுகாதார அமைப்பின் குஜராத் பிரகடனம்




- இந்திய அரசானது, உலக சுகாதார அமைப்பின் உலகப் பாரம்பரிய மருத்துவ மன்றத்தினை குஜராத்தின் ஜாம்நகரில் நடத்தியது.
- உலக சுகாதார அமைப்பு ஆனது 2023 ஆம் ஆண்டு உலக சுகாதார அமைப்பின் பாரம்பரிய மருத்துவம் குறித்த முதலாவது உலக உச்சி மாநாட்டின் வரைவு பரிந்துரை ஆவணத்தினை "குஜராத் பிரகடனம்" என்ற பெயரில் வெளியிட்டுள்ளது.

- இது உள்நாட்டுத் தகவல் குறிப்பு, பன்மையம் மற்றும் பாரம்பரியம், இணைவு மற்றும் ஒருங்கிணைந்த மருத்துவத்திற்கான உலக நாடுகளின் உறுதிப்பாடுகளை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

## ஆசியான் அமைப்பின் 43வது மாநாடு


- ஆசியான் அமைப்பின் 2023 ஆம் ஆண்டிற்கான தலைமைப் பொறுப்பினை வகிக்கும், இந்தோனேசியா ஜகார்த்தா நகரில் அதன் 43வது உச்சிமாநாட்டினை நடத்தியது.
- இது ஒற்றுமை மற்றும் கலாச்சாரக் கொண்டாட்டத்தினைக் குறிக்கும் வகையில் தொடங்கப் பட்டது.
- இந்த ஆண்டு, "ஆசியான் விவகாரங்கள்: வளர்ச்சியின் மையம்" என்ற கருத்துருவுடன் இந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தோனேஷியா ஏற்றது.
- ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு ஆசியான் நாடுகளை ஊக்குவிப்பதன் மூலம், உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின் மையமாக இந்தப் பிராந்தியம் திகழ்ந்து வரும் நிலையைத் தக்க வைத்துக் கொள்வதை இந்தோனேஷியா நாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலகின் தெற்கு நாடுகளின் கடன் பிரச்சனை

- G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகளின் மற்றும் அரசத் தலைவர்களின் 18வது உச்சி மாநாடு ஆனது புது டெல்லியில் நடைபெறவுள்ளது.
- பருவநிலை, பசுமை மேம்பாடு, எண்ணிமப் பொருளாதாரம், பொது உள்கட்டமைப்பு மற்றும் பலவற்றை உள்ளடக்கிய பல்வேறு தலைப்புகள் குறித்து இந்தச் சந்திப்பில் விவாதிக்கப் பட உள்ளது.
- பல வளர்ந்து வரும் நாடுகளில் நிலவும் தொடர்ச்சியான மற்றும் பொருளாதார முடக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய கடன் பிரச்சனையானது இந்த பேச்சுவார்த்தையில் இடம் பெறும் முக்கியப் பிரச்சினைகளில் ஒன்றாகும்.
- வெளிநாட்டுக் கடன் என்பது செல்வ வளமிக்க நாடுகள், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற பலதரப்புக் கடன் வழங்கு நிறுவனங்கள் அல்லது வங்கிகள் போன்ற தனியார் கடன் வழங்கு நிறுவனங்களிடமிருந்துப் பெறப்பட்ட கடன் ஆகும்.
- இந்த நாடுகளில், பெரும்பாலும் உலகின் தெற்கு நாடுகளில், 2011 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் கடன் விகிதம் 150% உயர்ந்து, கடந்த 25 ஆண்டுகளில் மிக உயர்ந்த நிலையை எட்டியுள்ளது.
- ஜாம்பியா நாடானது ஜூன் மாதத்தில், "பாரீஸ் கிளப்" எனப்படும் பல்வேறு முக்கியக் கடன் வழங்கும் நாடுகளுடன் 6.3 பில்லியன் டாலர் மதிப்பிலான கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தை மேற்கொண்டது.
- அந்த நாட்டிற்கு கடன் வழங்கும் மற்றுமொரு பெரிய இருதரப்புக் கடன் வழங்கும் அமைப்பு சீனாவாகும்.
- கானா, அடுத்த மூன்று ஆண்டுகளில் அதன் சர்வதேசக் கடன் தொகையினை 10.5 பில்லியன் டாலர் வரை குறைக்க உள்ளதாக இலக்கு நிர்ணயித்துள்ளது.
- 2024 ஆம் நிதியாண்டில் வெளிநாட்டுக் கடனைச் செலுத்துவதற்கும் மற்ற கட்டணங்களைச் செலுத்துவதற்கும் பாகிஸ்தான் நாட்டிற்கு 22 பில்லியன் டாலர்கள்

தேவைப் படுகிறது.

- கென்யாவின் பொதுக் கடன் ஆனது அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத் தட்ட 70% ஆக உள்ளது.
- லெபனான் நாடானது, 2020 ஆம் ஆண்டு முதல் தெளிவான தீர்மானம் எதுவும் கிட்டாமல் திவால் நிலையில் உள்ளது.




## SCO அமைப்பின் சட்ட மற்றும் நீதி அமைச்சர்களின் 10வது சந்திப்பு

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) உறுப்பினர் நாடுகளின் சட்ட மற்றும் நீதி அமைச்சர்களின் 10வது சந்திப்பானது காணொளி காட்சி மூலம் நடைபெற்றது.
- உறுப்பினர் நாடுகளின் சட்ட மற்றும் நீதித்துறைத் திறன்களை மேம்படுத்துவதற்கு ஆதரவை வழங்கச் செய்வதன் மூலம் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பிற்கு இந்தியா வழங்கிய தனது உறுதிப்பாட்டினை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) உறுப்பினர் நாடுகளின் சட்ட மற்றும் நீதி அமைச்சர்களின் அடுத்தச் சந்திப்பினை 2024 ஆம் ஆண்டில் கஜகஸ்தான் குடியரசில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

## ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78வது அமர்வு


- பொதுச் சபையின் புதியத் தலைவர் டென்னிஸ் பிரான்சிஸ், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78வது அமர்வின் தொடக்கத்தினை அறிவித்தார்.
- பொதுச் சபையின் 78வது அமர்வு ஆனது, 'நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒற்றுமையை மீண்டும் தூண்டுதல்: 2030 ஆம் ஆண்டு செயல்பாட்டு நிரல் மற்றும் அனைவருக்குமான அமைதி, செழிப்பு, முன்னேற்றம் மற்றும் நிலைத் தன்மையை நோக்கிய அதன் நிலையான மேம்பாட்டு இலக்குகள் மீதான நடவடிக்கைகளை துரிதப் படுத்துதல்' என்ற கருத்துருவுடன் நடைபெற்றது.

## இந்தியா மற்றும் அமெரிக்கா பேச்சுவார்த்தை 2023

- இந்தியப் பிரதமர் அவர்கள், அமெரிக்க அதிபர் ஜோ பிடனுடன் புது டெல்லியில் நடைபெற்ற இருதரப்புப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.
- 2024 ஆம் ஆண்டில் இந்திய அரசினால் நடத்தப்பட உள்ள, குவாட் அமைப்பின் உறுப்பினர் நாடுகளின் தலைவர்களின் அடுத்த உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு அமெரிக்க அதிபருக்கு இந்தியா அழைப்பு விடுத்தது.

- 1 பில்லியன் டாலர் மதிப்பிலான முதலீடுகளுடன் (தலா 500 மில்லியன் டாலர்) புதுப்பிக்கத் தக்க ஆற்றலுக்கான உள்கட்டமைப்பு முதலீட்டு நிதியத்தை அமைக்கச் செய்வதற்கு இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன.
- இரு நாடுகளும் தங்களது உலக வர்த்தக அமைப்பின் (WTO) கீழ் நிலுவையில் உள்ள கோழி இறைச்சி குறித்த பிரச்சனையைத் தீர்த்து கொள்வதாக அறிவித்தன.
- இந்திய அரசானது, அமெரிக்க நாட்டு உற்பத்திப் பொருட்கள் மீதான வரிகளைக் குறைப்பதற்கும் ஒப்புக்கொண்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் பின்வருவபவை உள்ளடங்கும்: உறைந்த வான்கோழி இறைச்சி, உறைந்த வாத்து இறைச்சி மற்றும் புதிய, உறைந்த, உலர்ந்த மற்றும் பதப்படுத்தப் பட்ட அவுரி நெல்லிகள்(ப்ளூ ஃப்பெரி) மற்றும் குருதி நெல்லிகள் (கிரான் ஃப்பெரி).

## ஆப்பிரிக்க ஒன்றியம் - G20 அமைப்பின் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து





- ஆப்பிரிக்க ஒன்றியம் ஆனது, 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 09 ஆம் தேதியன்று G-20 அமைப்பில் முழு உறுப்பினராக ஆனது.
- இது G-20 அமைப்பினை வலுப்படுத்தச் செய்வதோடு, உலகளாவிய தெற்கு நாடுகளின் கோரிக்கைகளையும் வலுப்படுத்தும்.

- ஆப்பிரிக்க ஒன்றியம் என்பது ஆப்பிரிக்க கண்டத்தினைச் சேர்ந்த 55 உறுப்பினர் நாடுகளை உள்ளடக்கிய செல்வாக்கு மிக்க அமைப்பாகும்.
- இது தவிர, இந்தியா அரசானது G-20 மாநாட்டில் விருந்தினர் நாடுகளாக பங்கேற்று ஓர் அங்கம் வகிக்க வங்கதேசம், கொமரோஸ், எகிப்து, மொரீஷியஸ், நெதர்லாந்து, நைஜீரியா, ஓமன், சிங்கப்பூர், ஸ்பெயின் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய பல நாடுகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தது.
- பிற சர்வதேச அமைப்புகளான பேரிடர் மீள்கட்டமைப்பு நெகிழ்திறன் கூட்டணி, நிதி நிலைப்பு மன்றம், ஆசிய வளர்ச்சி வங்கி, சர்வதேச நாணய நிதியம், சர்வதேச தொழிலாளர் அமைப்பு, சர்வதேச சூரிய சக்திக் கூட்டணி, பொருளியல் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு, ஐக்கிய நாடுகள் அமைப்பு, உலக வங்கி, ஆப்பிரிக்க ஒன்றியம், உலக சுகாதார நிறுவனம், உலக வர்த்தக நிறுவனம் மற்றும் ஆசியான் அமைப்பு ஆகியவையும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டன.

## ஐரோப்பிய ஒன்றியத்தின் ஹொரைசன் அறிவியல் ஆராய்ச்சி திட்டம்

- ஐரோப்பிய ஒன்றியத்தின் 100 பில்லியன் டாலர் மதிப்பிலான அறிவியல் தகவல் பகிர்வு திட்டமான ஹொரைசன் ஐரோப்பா திட்டத்தில் பிரிட்டன் மீண்டும் இணைய உள்ளது.
- வடக்கு அயர்லாந்து நெறிமுறை தொடர்பான கருத்து வேறுபாடு காரணமாக இந்தத் திட்டத்தில் இருந்து ஐக்கியப் பேரரசு கடந்த மூன்று ஆண்டுகளாக விலக்கப் பட்டு இருந்தது.
- ஐரோப்பிய ஒன்றிய விண்வெளித் திட்டத்தின் ஒரு முக்கியமான புவிக் கண்காணிப்பு அங்கமான கோபர்நிகஸ் திட்டத்திலும் பிரிட்டன் மீண்டும் இணைய உள்ளது.
- ஹொரைசன் நிறுவனமானது ஐக்கிய இராஜ்ஜியத்தினைச் சேர்ந்த நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு, சுகாதாரம் முதல் செயற்கை நுண்ணறிவு வரையிலான துறைகளில், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களை உருவாக்குவதற்கான உலகளாவியத் திட்டங்களுக்கு பல்வேறு நிகரற்ற வாய்ப்புகளை வழங்க உள்ளது.



## மொராக்கோவில் நிலநடுக்கம்




- ❖ மொராக்கோவில் 6.8 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.
- ❖ இந்த நிலநடுக்கத்தின் மையப் புள்ளியானது, அட்லஸ் மலைப் பகுதியில், குறிப்பாக அல்-ஹவுஸ் எனுமிடத்தில் அமைந்தது.
- ❖ 12,000க்கும் அதிகமானோரைப் பலி வாங்கிய 1960 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 6.7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட அகாடிர் நகரை அடுத்து, மொராக்கோ நாட்டில் ஏற்பட்ட மிக மோசமான நிலநடுக்கம் இதுவாகும்.
- ❖ சமீபத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ஆனது, ஒரு நூற்றாண்டுக்கும் மேலான காலக் கட்டத்தில் மொராக்கோவைத் தாக்கிய சக்தி வாய்ந்த நிலநடுக்கமாகும்.

## பெண்கள் அதிகாரமளித்தல் தொடர்பான G20 அமைப்பின் பணிக்குழு



- G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகளின் தலைவர்கள், பெண்கள் அதிகாரமளித்தல் தொடர்பான பணிக் குழுவை நிறுவுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளனர்.
- இந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பினை பிரேசில் ஏற்ற பிறகு அதன் முதல் கூட்டத்தைக் கூட்ட உள்ள G20 மகளிர் அமைச்சர்கள் குழுவை ஆதரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பிரேசில் அரசானது, டிசம்பர் 01 ஆம் தேதியன்று G20 அமைப்பின் தலைமைப் பதவியை இந்தியாவிடமிருந்து அதிகாரப் பூர்வமாகப் பெற உள்ளது.
- இந்த அமைப்பின் அடுத்தத் தலைவர்களின் உச்சி மாநாடு ஆனது 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் புகழ்பெற்றக் கடலோர உல்லாச நகரமான ரியோ டி ஜெனிரோவில் நடைபெற உள்ளது.

## இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார வழித்தடம்

- இந்தியா, அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா, பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார வழித்தடத்தை (IMEE-EC) நிறுவுவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இது பொருளாதார ஒருங்கிணைப்பை மேம்படுத்தச் செய்வதன் மூலம் ஆசியாவையும் ஐரோப்பாவையும் இணைக்கும்.
- இது இரயில் மற்றும் கப்பல் போக்குவரத்து வலையமைப்புகள், எரிசக்தி விநியோக அமைப்புகள் மற்றும் தரவு இணைப்புகள் மூலம் அந்த இணைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது சீனாவின் மண்டலம் மற்றும் சாலை முன்னெடுப்பிற்கு மாற்றாக அமையும் அதே வேளையில் வர்த்தகம், தூய்மையான எரிசக்தி மற்றும் பொருளாதார மேம்பாட்டினை அதிகரிக்கவும் முயல்கிறது.
- மத்திய கிழக்கு வழித்தடமானது, இரண்டு தனித்தனி வழித்தடங்களைக் கொண்டு உள்ளது.




- கிழக்கு வழித்தடமானது இந்தியாவின் மேற்கு கடற்கரையில் உள்ள முந்த்ரா துறைமுகத்தினை ஃபுஜைரா துறைமுகத்துடன் இணைக்கும்.

- ❖ பின்னர் சவூதி அரேபியா மற்றும் ஜோர்டான் வழியாக செல்லும் இரயில் பாதையைப் பயன்படுத்துவதன் மூலம் தரப்படுத்தப்பட்ட கொள்கலன்கள் மூலம் இஸ்ரேலியத் துறைமுகமான ஹைஃபாவிற்கு சரக்குப் பொருட்கள் கொண்டு செல்லப்படும்.
- ❖ ஹைஃபாவில் இருந்து தொடங்கும் மேற்கு வழித்தடத்திலிருந்து இந்திய சரக்குப் பொருட்கள் பிரான்சு நாட்டில் உள்ள மார்சேய்லே போன்ற பல்வேறு துறைமுகங்களுக்கும், இத்தாலி மற்றும் கிரீஸ் நாடுகளின் மற்ற துறைமுகங்களுக்கும் சென்றடையும்.

## 18வது EAS உச்சி மாநாடு




- ❖ 18வது கிழக்கு ஆசிய உச்சி மாநாடு (EAS) ஆனது இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரில் நடைபெற்றது.
- ❖ இதற்கு இந்தோனேசிய அதிபர் H.E. ஜோகோ விடோடோ தலைமை தாங்கினார்.
- ❖ கிழக்கு ஆசிய உச்சி மாநாடு (EAS) ஆனது அதன் உறுப்பினர் நாடுகளுக்கிடையே அரச முறை ஈடுபாடு மற்றும் ஒத்துழைப்பிற்கான ஒரு தளமாகச் செயல்படுகிறது.
- ❖ இது தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கத்தின் (ஆசியான்) 10 உறுப்பு நாடுகளோடு, ஆஸ்திரேலியா, சீனா, இந்தியா, ஜப்பான், நியூசிலாந்து, தென் கொரியா, ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகிய எட்டு முக்கியப் பங்குதாரர்களையும் உள்ளடக்கிய 18 உறுப்பினர்களை கொண்டது.

## டேனியல் புயல்

- ❖ டேனியல் புயல் ஆனது மத்திய மற்றும் கிழக்கு மத்தியத் தரைக் கடலின் சில பகுதிகளைத் தாக்கியது.
- ❖ இது லிபியாவில் பேரழிவு தரும் வெள்ளத்தினை உண்டாக்கி மாபெரும் உயிர்ச் சேதங்களுக்கு வழி வகுத்துள்ளது.

- இந்தப் புயலால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடாக லிபியா உள்ள நிலையில் அதனைத் தொடர்ந்து கிரீஸ், துர்கியே மற்றும் பல்கேரியாவிலும் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளது.
- இது செப்டம்பர் 05 முதல் 06 ஆம் தேதி வரையில் கிரீஸ் நாட்டில் வரலாறு காணாத மழைப் பொழிவை ஏற்படுத்திய நிலையில் ஜகோரா கிராமத்தில் உள்ள ஒரு இடத்தில் 24 மணி நேரத்தில் 750 மி.மீ. மழை பதிவானது.
- இது சுமார் அப்பகுதியில் 18 மாதம் பெய்யும் மழைக்குச் சமமானதாகும்.




## லிப்டாக்கோ - கௌர்மா சாசனம்



- மாலி, புர்கினா பாசோ மற்றும் நைஜர் நாடுகளின் இராணுவத் தலைவர்கள் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.
- லிப்டாக்கோ- கௌர்மா சாசனம் ஆனது சஹேல் அரசுகளின் கூட்டணியை (AES) நிறுவுகிறது.
- இது அந்தப் பகுதியின் மக்களின் நலனுக்காக கூட்டுப் பாதுகாப்பு மற்றும் பரஸ்பர உதவியின் கட்டமைப்பை நிறுவுதல் ஆகும்.
- மாலி, புர்கினா பாசோ மற்றும் நைஜர் நாடுகளின் எல்லைகள் சந்திக்கும் லிப்டாக்கோ - கௌர்மா பகுதியானது சமீபத்திய ஆண்டுகளில் ஜிஹாதிசக் கொள்கைகளால் சூறையாடப் பட்டது.
- மூன்று நாடுகளுக்கும் இடையிலான இராணுவ மற்றும் பொருளாதார முன்னெடுப்புகளின் இணைப்பாக இந்தக் கூட்டணி அமையும்.
- 2012 ஆம் ஆண்டில் வடக்கு மாலியில் வெடித்த ஜிஹாதி கிளர்ச்சியானது 2015 ஆம் ஆண்டில் நைஜர் மற்றும் புர்கினா பாசோ வரை பரவியது.
- மூன்று நாடுகளும் 2020 ஆம் ஆண்டு முதல் ஆட்சிக் கவிழ்ப்புக்கு உட்பட்டுள்ளன.
- சஹேல் என்பது ஆப்பிரிக்காவில் வடக்கே சஹாராவிற்கும் தெற்கே சூடானிய சவானாவிற்கும் இடையில் உள்ள மாறுநிலை சூழலியல் மற்றும் உயிர் புவியியல் மண்டலமாகும்.

## G77+சீனா உச்சி மாநாடு

- G77+சீனா அமைப்பின் இரண்டு நாட்கள் அளவிலான உச்சி மாநாடு ஆனது சமீபத்தில் கியூபாவில் நிறைவடைந்தது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, “தற்போதைய மேம்பாட்டுச் சவால்கள்: அறிவியல், தொழில் நுட்பம் மற்றும் புத்தாக்கங்களின் பங்கு” என்பதாகும்.
- இந்த உச்சிமாநாட்டில் 47 விதிகள் கொண்ட ஹவானா இறுதிப் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இது பல்முனை உலகில், உலகின் தெற்கு நாடுகளை ஒரு சக்திவாய்ந்த பகுதியாக மாற்றுவதை வலியுறுத்துவதோடு, உலகின் தெற்கில் உள்ள அனைத்து நாடுகளும் புவிசார் அரசியல் சார்ந்தப் பிரிவினைகளுக்கு மத்தியில் வளர்ந்து வரும் நாடுகளின் கோரிக்கைகளை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டது.
- இந்தியா உட்பட 134 உறுப்பினர்களாகக் கொண்ட G77 அமைப்பானது வளர்ந்து வரும் நாடுகளின் மிகப்பெரிய அரசுகளுக்கிடையேயான குழுவாக உள்ளது.
- சீனா இந்தக் குழுவுடன் அதிகளவில் இணைந்து பணியாற்றுவதால், இது G77 பிளஸ் சீனா என்று அழைக்கப் படுகிறது.
- இக்குழுமம் உலக மக்கள்தொகையில் 80 சதவீதத்திற்கு அதிகமாகவும், ஐக்கிய நாடுகள் சபையின் மூன்றில் இரண்டு பங்கினையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
- G77 அமைப்பானது 1964 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட போது 77 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

## இடிந்து விழுந்த டெர்னா அணை

- கிழக்கு லிபிய நகரமான டெர்னாவில் இரண்டு அணைகள் பேரழிவு விளைவிக்கும் வகையில் இடிந்து விழுந்தன.
- டேனியல் என்ற அதிதீவிரப் புயல் வட ஆப்பிரிக்க நாட்டினைத் தாக்கியதை அடுத்து இந்த அணை இடிந்து விழுந்தது.
- டெர்னாவில் நீரோட்டத்திற்கு எதிராக கட்டமைக்கப்பட்ட இரண்டு பெரிய அணைகள் இருந்த நிலையில் அவற்றில் ஒன்று 2002 ஆம் ஆண்டு முதல், முறையாக பராமரிக்கப் படவில்லை.
- மேலும், இந்த அணைகள் மிகப் பெரிய அளவிலான அணைகளும் இல்லை என்ற நிலையில், அதில் முதல் அணை 70 மீட்டர் (230 அடி) உயரம் மட்டுமே கொண்டது.
- அணைகள் உடைந்த போது 30 மில்லியன் கன மீட்டர், அதாவது 12,000 ஒலிம்பிக் அளவிலான நீச்சல் குளங்களுக்குச் சமமான தண்ணீர் வெளியேற்றப் பட்டு விட்டதாக நீர் நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர்.




## பிடன் பதவி நீக்க விசாரணை

- குடியரசுக் கட்சியின் தலைமையிலான அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை தனது முதல் குழு விசாரணையை நடத்த உள்ளது.
- முதலாவதாக, இந்த விசாரணையானது சபையின் மேற்பார்வைக் குழுவின் ஆகஸ்ட் குறிப்பாணையைப் பரிசீலிக்க உள்ளது.
- ஹண்டர் பிடனின் வணிக ஒப்பந்தங்களில் பிடனின் செல்வாக்கைப் பயன்படுத்தியமை, சட்ட விரோத நடைமுறைகள் மற்றும் ஒழுங்கற்ற நடைமுறைகளை ஊக்குவிக்கும் வகையிலான அங்கீகரிக்கப்படாத வெளிநாட்டுக் கொடுப்பனவுகளை மேற்கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.


## பருவநிலை உயர்லட்சிய உச்சி மாநாடு (CAS) 2023

- பருவநிலை உயர்லட்சிய உச்சி மாநாடு (CAS) ஆனது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் ஒரு பகுதியாக நியூயார்க் நகரில் நடைபெற்றது.
- இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்கு 34 அரசுகள் மற்றும் 7 நிறுவனங்களின் பிரதிநிதிகள் மட்டுமே பங்கேற்றனர்.

- சீனா, அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.
- உலகளாவியப் பசுமை இல்ல வாயு உமிழ்வுகளில் இவை கூட்டாக 42% பங்கைக் கொண்டுள்ளதோடு, மேலும் அவை பசுமை இல்ல வாயு உமிழ்வில் முதல் மூன்று இடங்களில் உள்ள நாடுகளாகும்.
- இந்தியா, உமிழ்வுச் செறிவினை 2030 ஆம் ஆண்டில் 2005 ஆம் ஆண்டின் போது இருந்த அளவிலிருந்து 45% ஆக குறைப்பதாக (2015 ஆம் ஆண்டில் தான் ஒப்புக் கொண்டதை விட 10% அதிகமாக) 2022 ஆம் ஆண்டில் தனது பருவநிலை உறுதிப்பாடுகளைப் புதுப்பித்தது.
- நேபாளம் மற்றும் போர்ச்சுகல் ஆகியவை முன்னதாக அறிவிக்கப்பட்ட இலக்கான 2050 ஆம் ஆண்டிற்குப் பதிலாக 2045 ஆம் ஆண்டிற்குள் நிகரச் சுழிய உமிழ்வு நிலையை அடைவதற்கான தனது திருத்தப்பட்ட இலக்கினைத் தற்போது அறிவித்தன.

## இந்தியாவிற்கும் கனடா இடையிலான இருதரப்பு உறவுகள்


- ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவிற்குத் தொடர்பு இருப்பதாக கனடா குற்றம் சாட்டியது.
- அவர் காலிஸ்தான் சார்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக இந்திய அரசாங்கத்தினால் தீவிரவாதியாக அறிவிக்கப்பட்டார்.
- காலிஸ்தான் தீவிரவாத இயக்கம் ஆனது காலிஸ்தான் என்ற ஒரு சுதந்திர சீக்கிய அரசை நிறுவ முற்படும் ஒரு பிரிவினைவாத இயக்கமாகும்.
- இந்த இயக்கமானது முதன்மையாக சீக்கியப் புலம்பெயர்ந்த நபர்களினால், குறிப்பாக கனடா போன்ற நாடுகளில் வாழும் மக்களிடையே 1980 ஆம் ஆண்டுகளில் தோன்றியது.
- அப்பிரிவினர் 1982 ஆம் ஆண்டில் வான்குவார் எனுமிடத்தில் 'காலிஸ்தான் புகலிட அரசு அலுவலகத்தை நிறுவினர்.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கனடா நாட்டினர் அந்நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 4% ஆக உள்ளனர்.
- தற்போதைய கீழவையில் மூன்று அமைச்சரவைக்குழு அமைச்சர்கள் உட்பட இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 19 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.



## ருவாண்டா - பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள்




- உலகளவில், நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்ற பெண்களின் சராசரி எண்ணிக்கை 24 சதவீதமாக உள்ளது.
- ஆனால் நாடாளுமன்றத்தில் அதிக சதவீதப் பெண் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட நாடாக ருவாண்டா உள்ளது.
- அதன் 80 கீழவையின் உறுப்பினர்களில் 49 பேர் (சுமார் 61 சதவீதம்) பெண் உறுப்பினர்களாக உள்ளனர்.
- உலகப் பொருளாதார மன்றத்தின் 2023 ஆம் ஆண்டு பாலின இடைவெளிக் குறியீட்டில் இடம்பெற்ற 146 நாடுகளில் ருவாண்டா 12வது இடத்தைப் பெற்றுள்ளது.
- 1994 ஆம் ஆண்டில், 800,000க்கும் மேற்பட்ட டுட்ஸி இனத்தவர்கள் மற்றும் நடுநிலை ஹூட்டு இனத்தவர்கள், ஹூட்டு இனப் போராளிகளால் படுகொலை செய்யப் பட்டு விட்டனர்.
- இதன் விளைவாக, அப்போருக்குப் பிறகு அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 70 சதவீத மக்கள் பெண்களாக உள்ளனர்.



## I2U2 குழுவின் கூட்டு விண்வெளி முன்னெடுப்பு

- I2U2 குழுவின் கீழ் இந்தியா, இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) ஆகியவை இணைந்து புதிய கூட்டு விண்வெளி முன்னெடுப்பினை மேற்கொள்ள உள்ளதாக அறிவித்துள்ளன.
- இது கொள்கை வகுப்பாளர்கள், நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு "தனித்துவமான விண்வெளி அடிப்படையிலான ஒரு கருவியை" உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- I2U2 நாடுகளின் குழுவானது ஒருசேர மேற்கு ஆசிய குவாட் நாடுகள் என குறிப்பிடப் படுவதோடு அவை அனைத்தும் ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட நாடுகளாகும்.

## யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியப் பட்டியல் – ஜாகோரோச்சோரியா, கிரீஸ்


- ஜாகோரோச்சோரியா (அல்லது ஜகோரி கிராமங்கள்), யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளது.
- ஒரு நாட்டின் நவீன கலாச்சாரப் பாரம்பரியத்தின் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் வகையிலான, கிரீஸ் நாட்டின் ஒரு கலாச்சாரப் பகுதியானது இந்தப் பட்டியலில் பட்டியலிடப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- இதுவரையில் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்ட அனைத்து கிரேக்கப் பகுதிகளும் பண்டைய கிரீஸ் அல்லது பைசாண்டிய நாகரீகத்துடன் தொடர்புடையவையாகும்.




## பொருளாதார உற்பத்தியின் பங்கில் உலக நாடுகளின் கடன்

- சர்வதேச நாணய நிதியம் ஆனது, பொருளாதார உற்பத்தியின் பங்கில் உலக நாடுகளின் கடன் ஆனது 2022 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக கணிசமாகக் குறைந்துள்ளது என்று கூறியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் 248% ஆகவும், 2020 ஆம் ஆண்டில் 258% ஆகவும் இருந்த உலகின் மொத்தக் கடன் மற்றும் GDP விகிதம் ஆனது கடந்த ஆண்டு 238% ஆகக் குறைந்துள்ளது.
- கடந்த இரண்டு ஆண்டுகளில் இது குறைந்துள்ள போதிலும், உலகளாவிய கடன் ஆனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2019 ஆம் ஆண்டின் 238% என்ற அளவை விட அதிகமாக உள்ளது.

- 2022 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சீனாவின் கடன் சுமை 272% ஆக அதிகரித்ததுள்ளதையடுத்து, சமீபத்திய ஆண்டுகளில் உலகளாவியக் கடன் அதிகரிப்பிற்கு சீனா ஒரு முக்கியப் பங்களிப்பாளராக உள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் 284% ஆக இருந்த மொத்தக் கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் ஆனது 2022 ஆம் ஆண்டில் 274% ஆகக் குறைந்துள்ளது.




## ஜப்பான் நாட்டில் மக்கள் தொகை நெருக்கடி





- அந்நாட்டில் முதன்முறையாக, 10 சதவீதத்திற்கும் அதிகமானோர் அல்லது 10 பேரில் ஒருவர் 80 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதைக் கடந்துள்ளனர்.
- 65 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களின் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் ஜப்பான் தற்போது உலகின் மிக வயதான மக்கள்தொகையைக் கொண்டுள்ளது.
- ஒரு வருடத்திற்கு முன்பு, ஜப்பானின் மக்கள் தொகையில் 65 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் 29 சதவீதமாக இருந்தனர்.

- 2040 ஆம் ஆண்டில், ஜப்பானிய மக்கள் தொகையில் 34.8 சதவீதம் பேர் 65 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களாக இருப்பார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 70 முதல் 74 வயதுக்குட்பட்டவர்களில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானோர் ஜப்பானில் வேலைவாய்ப்பினைக் கொண்டுள்ளனர்.
- முதியோர் எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தில் இத்தாலி உள்ள நிலையில் அந்த நாட்டின் மக்கள்தொகையில் 24.5 சதவீதம் பேர் 65 அல்லது அதற்கு மேற்பட்ட வயது உடையவர்கள் ஆவார்.
- மூன்றாம் இடத்தில் உள்ள பின்லாந்து நாட்டின் 23.6 சதவீத மக்கள் இந்த வயது வரம்பில் உள்ளனர்.

## ஐங்கண் கூட்டணி

- கனடாவின் பிரிவினைவாத தலைவர் ஹர்மீத் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்ட நிகழ்வில் இந்திய அரசாங்கத்திற்கு "சாத்தியமான தொடர்புகள்" இருக்கலாம் என்று கனடா கூறுகிறது.
- இந்தப் பிரச்சினை "ஐங்கண் கூட்டணியின் பங்குதாரர்களிடையே பகிரப்பட்ட தகவல்" ஆகும்.
- "ஐங்கண்" என்பது அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு, ஆஸ்திரேலியா, கனடா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளின் உளவுத்துறைப் பகிர்வுக் கூட்டணியைக் குறிக்கிறது.
- 1943 ஆம் ஆண்டில், ஐக்கியப் பேரரசு-அமெரிக்க (UKUSA) உடன்படிக்கையாக மாற்றப் பட்ட பிரிட்டன்-அமெரிக்கா (BRUSA) ஒப்பந்தத்தின் அடித்தளத்தை அமைத்தது.
- ஐக்கியப் பேரரசு-அமெரிக்க (UKUSA) உடன்படிக்கையானது 1946 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.
- கனடா 1949 ஆம் ஆண்டிலும், நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா 1956 ஆம் ஆண்டிலும் இந்த அமைப்பில் இணைந்து ஐங்கண் கூட்டணியை உருவாக்கின.
- 2016 ஆம் ஆண்டில், ஐங்கண் புலனாய்வு மேற்பார்வை மற்றும் மறு ஆய்வுச் சபை உருவாக்கப்பட்டது.
- இது ஐங்கண் கூட்டணியின் உறுப்பினர் நாடுகளின் அரசியல் சாராத உளவுத் துறை மேற்பார்வை, மறு ஆய்வு மற்றும் பாதுகாப்பு அமைப்புகளை உள்ளடக்கியது.
- அந்த நாடுகள் பரஸ்பர நலன்களைப் பரிமாறிக் கொண்டு, சிறந்த நடைமுறைகளை ஒப்பிட்டு, ஒவ்வோர் ஆண்டும் மாநாடுகளை நடத்துகின்றன.



## அடுத்தப் பெருந்தொற்று: நோய் X





- உலக சுகாதார அமைப்பினால் (WHO) X எனப் பெயரிடப்பட்ட நோய், கோவிட்-19 பெருந்தொற்றினை விட ஆபத்தான மற்றொரு பெருந்தொற்றினை ஏற்படுத்த வல்லது.
- இந்தப் புதிய கிருமி ஆனது 1919-1920 ஆம் ஆண்டில் பேரழிவை ஏற்படுத்திய ஸ்பானிஷ் காய்ச்சலுக்கு ஒத்த தாக்கத்தை ஏற்படுத்தலாம் என கூறப்படுகிறது.
- உலக சுகாதார அமைப்பின் படி, நோய் X ஆனது எந்தவொரு சிகிச்சையும் இல்லாத வகையிலான ஒரு வைரஸ், ஒரு பாக்டீரியா அல்லது பூஞ்சை போன்ற ஒரு புதிய காரணியாலும் உண்டாகலாம்.
- இது RNA வைரஸ் போன்ற விலங்குவழித் தொற்று நோயுடன் தொடர்புடையதாக இருக்கலாம்.
- கோவிட்-19 பெருந்தொற்று ஆனது உலகம் முழுவதும் 20 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட உயிரிழப்புகளை ஏற்படுத்தியது.

# பொருளாதாரச் செய்திகள்

## 10 பில்லியன் UPI பரிவர்த்தனைகள்

- இந்தியாவின் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகப் (UPI) பரிவர்த்தனைகள் ஆனது வரலாற்றில் முதல் முறையாக ஆகஸ்ட் மாதத்தில் 10 பில்லியன் மாதாந்திர பரிவர்த்தனைகள் வரம்பினைத் தாண்டியுள்ளது.
- ஆகஸ்ட் 30 ஆம் தேதியன்று ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுகத்தில் மேற் கொள்ளப் பட்ட மாதாந்திரப் பரிவர்த்தனைகளின் எண்ணிக்கையானது 15.18 டிரில்லியன் ரூபாய் என்ற நிகரப் பரிவர்த்தனை மதிப்புடன் 10.24 பில்லியனைத் தாண்டியது.
- கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6.58 பில்லியன் எண்ணிக்கையில் மாதாந்திர பரிவர்த்தனைகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள் ஆண்டுக்கு ஆண்டு 50% அதிகமாகியுள்ளன.
- ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுகத்தில் 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் முதல் முறையாக 1 பில்லியன் மாதாந்திரப் பரிவர்த்தனைகள் பதிவானது.





## ராஷ்ட்ரிய வேதிப் பொருட்கள் மற்றும் உரங்கள்

- பொது நிறுவனத் துறையானது, ராஷ்ட்ரிய வேதிப் பொருட்கள் மற்றும் உரங்கள் (RCF) நிறுவனத்திற்கு 'நவரத்னா அந்தஸ்தினை' வழங்கியுள்ளது.
- நவரத்னா நிறுவனங்கள் மத்திய அரசின் எந்த ஒப்புதலும் இல்லாமல் 1000 கோடி ரூபாய் வரை முதலீடு செய்வதற்கான நிதி சார் சுயாட்சி அதிகாரத்தினைப் பெற்று உள்ளன.
- RCF என்பது இந்திய அரசுக்குச் சொந்தமான 4வது முன்னணி உரம் மற்றும் வேதிப் பொருட்கள் உற்பத்தி நிறுவனமாகும்.
- இந்நிறுவனத்தில் சுமார் 80% பங்கினை இந்திய அரசு கொண்டுள்ளது.
- இந்த நிறுவனம் ஆனது சமீபத்தில் அதன் நுண் யூரியா உர ஆலைக்கு சுற்றுச்சூழல் சார்ந்த அனுமதியினைப் பெற்றுள்ளது.

## NPS மற்றும் APY திட்ட நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்து

- தேசிய ஓய்வூதிய அமைப்பு (NPS) மற்றும் அடல் ஓய்வூதிய திட்டம் (APY) ஆகியவற்றின் நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்துக்கள் 10 லட்சம் கோடி ரூபாய் என்ற மைல்கல்லைத் தாண்டியுள்ளன.
- இத்திட்டத்தின் மொத்த சந்தாதாரர்களின் எண்ணிக்கையானது 66.2 மில்லியனை (6.62 கோடி) எட்டியுள்ளது.
- தேசிய ஓய்வூதிய அமைப்பு (NPS) தனியார், அடல் ஓய்வூதிய திட்டம் (APY), மற்றும் தேசிய ஓய்வூதிய அமைப்பு (NPS) லைட் ஆகியவற்றின் கீழான மொத்த நிதிகள் முறையே ரூ.47,663 கோடி, ரூ.30,051 கோடி மற்றும் ரூ.5,157 கோடி ஆகும்.
- 2004 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பிறகு இத்திட்டத்தில் இணைக்கப் பட்ட ஆயுதப்படை வீரர்களைத் தவிர, அனைத்து மத்திய அரசு ஊழியர்களுக்கும் தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் பலன்களைப் பெறும் வகையில் இந்தத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது.
- தேசிய ஓய்வூதியத் திட்டத்தினைப் பல மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.

- 2009 ஆம் ஆண்டு மே 01 ஆம் தேதி முதல், அனைத்து இந்தியக் குடிமக்களும் தானாக முன் வந்து பயன் பெறும் வகையில் இத்திட்டம் மாற்றப்பட்டது.
- 2015 ஆம் ஆண்டு ஜூன் 01 ஆம் தேதியன்று, அடல் ஓய்வூதியத் திட்டம் தொடங்கப் பட்டது.
- இது சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் வரம்பையும் செயல்திறனையும் கணிசமான அளவில் உயர்த்தியுள்ளது.
- தற்போது, இதில் இணைவதற்கு வரி செலுத்தாத நபர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப் பட்டுள்ளது.




## இந்தியாவின் முதல் UPI தானியங்குப் பண வழங்கீட்டு இயந்திரம்

- ஹிட்டாச்சி பண வழங்கீட்டு சேவை நிறுவனமானது இந்திய தேசியப் கொடுப்பனவுக் கழகத்துடன் இணைந்து இந்தியாவில் முதல் முறையாக ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுக வழியான தானியங்குப் பண வழங்கீட்டு இயந்திரத்தினை (UPI-ATM) அறிமுகப் படுத்தியுள்ளது.
- UPI-ATM சேவையானது, இயங்குதன்மை மாற்ற அட்டை பயன்பாடு அற்ற பணம் எடுப்பு (ICCW) சேவை என்றும் அழைக்கப் படுகிறது.
- இது ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தினைப் பயன்படுத்தும் வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கு UPI-ATM செயல்பாட்டினைக் கொண்டிருக்கும் எந்தவொரு தானியங்கு பண வழங்கீட்டு இயந்திரத்திலிருந்தும் பணத்தை எடுக்கச் செய்வதற்கு ஏதுவான வழியை வழங்குகிறது.
- வழக்கமான ஒரு அட்டையின் தேவை இல்லாமல் இந்த தானியங்குப் பண வழங்கீட்டு இயந்திரங்களைப் பயன்படுத்தலாம்.



## உலக நிதிசார் தொழில்நுட்ப திருவிழா 2023

- மூன்று நாட்கள் அளவிலான 2023 ஆம் ஆண்டு உலக நிதிசார் தொழில்நுட்ப திருவிழாவானது (GFF 2023) சமீபத்தில் நிறைவடைந்தது.
- பாரத் ஸ்டேட் வங்கியானது, RuPay நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆதரவு பெற்ற தேசிய பொதுப் போக்குவரத்து அட்டையினை இந்த நிகழ்வில் அறிமுகப்படுத்தியது.
- நாடு முழுவதும் சாலைப் போக்குவரத்து முதல் இரயில், நீர்வழிகள் மற்றும் வாகன நிறுத்துமிடம் வரை அனைத்து வகையான போக்குவரத்திற்கும் பணம் செலுத்துவதற்கு இந்த அட்டை உதவும்.
- சில்லறை விற்பனை நிலையங்களில் பொருள் வாங்குவதற்கும் இந்த அட்டையைப் பயன்படுத்தலாம்.




- இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் பின்வரும் 5 புதியக் கட்டண அமைப்புகள் குறித்து அறிவித்தார்.
    - ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் சார்ந்த கடன் வசதி
    - ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் சார்ந்த லைட் எக்ஸ்
    - ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் சார்ந்த வருடல் & பணம் செலுத்தும் நுட்பம்

- Hello! UPI — ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் சார்ந்த உரையாடல் அடிப்படையிலான கொடுப்பனவுகள்
- பில்பே கனெக்ட் – உரையாடல் அடிப்படையிலான கொடுப்பனவுகள்.

## கூடுதல் பண இருப்பு விகிதம்




- கூடுதல் பண இருப்பு விகித முறையினை (I-CRR) படிப்படியாக நிறுத்த உள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.
- செப்டம்பர் 09 ஆம் தேதியன்று வைப்பு வைக்கப்பட்ட கூடுதல் பண இருப்பு விகிதத்தில் 25 சதவீதத்தினை வெளியிட்ட நிலையில், செப்டம்பர் 23 தேதியன்று வைப்பு வைக்கப் பட்ட மற்றொரு கூடுதல் பண இருப்பு விகிதத்தில் 25 சதவீதத்தினை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிடும்.
- வைப்பு வைக்கப்பட்ட மீதமுள்ள 50% கூடுதல் பண இருப்பு விகிதமானது அக்டோபர் 07 ஆம் தேதியன்று வெளியிடப்படும்.
- இது பணப்புழக்கத்தில் ஏற்படும் திடீர் நெருக்கடிகளைத் தவிர்த்தல் மற்றும் பணச் சந்தையின் முறையான செயல்பாட்டினை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றினை நோக்கமாகக் கொண்டு கூடுதல் பண இருப்பு விகித நிதிகள் படிப்படியாக வெளியிடப் படுகிறது.
- பண கையிருப்பு விகிதம் (CRR) 4.5% ஆக மாறாமல் கடைபிடிக்கப் படும்.
- பண கையிருப்பு விகிதம் என்பது இந்திய ரிசர்வ் வங்கியிடம் பல்வேறு வங்கிகள் வைத்திருக்க வேண்டிய கட்டாய இருப்புத் தொகையாகும்.
- கூடுதல் பண இருப்பு விகிதம் ஆனது வங்கி அமைப்பில், முதன்மையாக 2,000 ரூபாய் நோட்டுகள் திரும்பப் பெறுதல் போன்ற சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற அதிகப் படியான பணப் புழக்கத்தைத் திரும்பப் பெறுவதற்காக அறிமுகப் படுத்தப் பட்டது.

## உள்வரவு மற்றும் வெளிப்போக்கு அந்நிய நேரடி முதலீட்டுப் போக்குகள் 2023

- இந்திய நிறுவனங்களின் மொத்த வெளிப்போக்கு நேரடி முதலீடுகள் 2023 ஆம் நிதி ஆண்டில் சுமார் 19.46% ஆக அதிகரித்துள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கை கூறுகிறது.
- வெளிப்போக்கு நேரடி முதலீடு (ODI) என்பது ஒரு உள்நாட்டு நிறுவனம் அதன் செயல்பாடுகளை வெளிநாட்டிலும் மேற்கொள்ளும் வகையில் விரிவுபடுத்துகின்ற ஒரு வணிக உத்தி ஆகும்.

- இது அந்நியத் தொகுப்பு முதலீட்டில் இருந்து முற்றிலும் வேறுபட்டது.
- இந்திய நிறுவனங்களின் வெளிப்போக்கு நேரடி முதலீட்டின் (ODI) மிகப்பெரியப் பயனாளியாக சிங்கப்பூர் திகழ்ந்தது.
- வரிச் சலுகைகளுக்குப் புகழ் பெற்ற பெர்முடா, ஜெர்சி, சைப்ரஸ் ஆகிய நாடுகள் இந்திய வெளிப்போக்கு நேரடி முதலீட்டினைப் பெற்ற முதல் 10 நாடுகளில் இடம் பெற்றுள்ளன.

**OUTWARD DIRECT INVESTMENT FROM INDIA**

| COUNTRY | 2022 | 2023 | SHARE |
|---|---|---|---|
| Singapore | ₹182,200 cr | ₹203,233 cr | 22.3% |
| USA | ₹102,078 cr | ₹124,123 cr | 13.6% |
| UK | ₹84,075 cr | ₹116,398 cr | 12.8% |
| Netherlands | ₹97,723 cr | ₹106,395 cr | 11.7% |
| UAE | ₹55,608 cr | ₹87,459 cr | 9.6% |
| Mauritius | ₹70,392 cr | ₹76,881 cr | 8.4% |
| Switzerland | ₹26,130 cr | ₹28,228 cr | 3.1% |
| Bermuda | ₹11,515 cr | ₹12,582 cr | 1.4% |
| Jersey | ₹13,198 cr | ₹11,661 cr | 1.3% |
| Cyprus | ₹10,142 cr | ₹9,985 cr | 1.1% |
| Other Countries | ₹1,09,591 cr | ₹1,34,124 cr | 14.7% |
| All Countries | ₹7,62,652 cr | ₹9,11,069 cr | 100.0% |

## OTG மோதிர வடிவ சாதனம்

- இந்திய தேசியக் கொடுப்பனவு கழகம் (NPCI) ஆனது ‘OTG மோதிரம்’ எனப்படும் தொடர்பற்ற கொடுப்பனவிற்கான அணியக் கூடிய வகையிலான வளையத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த சாதனமானது லிவ்குயிக் எனப்படும் இந்திய நிதிசார் தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனத்துடன் உடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.
- இது தேசியப் பொது போக்குவரத்துப் பயன்பாட்டு அட்டை வாடிக்கையாளர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.


## GSTN வலையமைப்பில் புவியிடக் குறியிடல் அறிமுகம்

- சரக்கு மற்றும் சேவை வரி வலையமைப்பு ஆனது அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள வணிகங்களைத் துல்லியமாக கண்டறிந்து இடமறிவதற்காக புவியிடக் குறியீட்டு செயல்முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- புவியிடக் குறியிடல் துல்லியமான இருப்பிடத் தரவைப் பெற வழி வகுக்கிறது மற்றும் தணிக்கை மற்றும் அமலாக்க முயற்சிகளை மேம்படுத்துகிறது.
- இந்த நடவடிக்கையானது போலியானப் பதிவை அகற்றுவது அல்லது வரி ஏய்ப்பவரைக் கண்டுபிடிப்பதை எளிதாக்கும்.

- புவியிடக் குறியிடல் என்பது முகவரிகள் அல்லது இருப்பிடங்களுக்குப் புவியியல் கூறுகளை ஒதுக்கும் ஒரு செயல்முறையாகும்.




## பேசல் - III மூலதனக் கட்டமைப்பு





- அகில இந்திய நிதி நிறுவனங்களுக்கு (AIFIs) பேசல் III மூலதனக் கட்டமைப்பின் விதிமுறைகளை இந்திய ரிசர்வ் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது நிதி திரட்டுதல், கடன் வழங்கீட்டு வழிகாட்டுதல்கள் மற்றும் முதலீட்டு இலாகாக்களின் வகைப்பாடு மற்றும் மதிப்பீடு குறித்த பல்வேறு விதிமுறைகளை உள்ளடக்கியது.
- இது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அமலுக்கு வரும்.
- பேசல்-III தரநிலைகள் நிதி நிறுவனங்கள் இழப்பைத் தாங்கும் திறனை உறுதி செய்வதற்காக மூலதனத்தின் தரம் மற்றும் அளவை உயர்த்த முயல்கின்றன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## சிறிய வாயுக் கீற்றுகள்

- ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனம் / அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் சூரியனைச் சுற்றி வரும் ஒரு விண்கலமானது சூரியனின் வெளிப்புற மண்டலத்தில் இருந்து வெளியேறும் பல சிறிய வாயுக் கீற்றுக்களை கண்டறிந்துள்ளது.
- ஒவ்வொரு வாயுக் கீற்றுக்களும் 20 முதல் 100 வினாடிகள் வரை நீடிக்கக் கூடியவை என்பதோடு அவை வினாடிக்கு சுமார் 100 கி.மீ. என்ற வேகத்தில் பிளாஸ்மா (மின்மம்) கூறுகளை வெளியேற்றும்.
- இந்த வாயுக் கீற்றுக்கள் சூரியக் காற்றின் ஒரு நீண்ட கால மூல ஆதாரமாக இருக்கக் கூடும்.
- சூரியக் காற்றானது தொடர்ந்து சூரியனை விட்டு வெளியேறுகின்ற பிளாஸ்மா எனப் படும் மின்னூட்டப்பட்ட துகள்களைக் கொண்டுள்ளது.
- கோள்களுக்கிடையே அமைந்த ஒரு இடைவெளி வழியாக விண்வெளியில் பரவுகின்ற இந்தக் காற்றானது, அதன் பாதையில் உள்ள கோள்களுடன் மோதுகிறது.
- சூரியக் காற்று பூமியின் காந்தப் புலத்துடன் மோதும் போது துருவ மின்னொளிகளை உருவாக்குகிறது.



## LIBS நுட்பம்

- சந்திரயான்-3 விண்கலத்தின் உலாவி கலத்தில் உள்ள LIBS என்ற கருவியானது, தென் துருவத்திற்கு அருகிலுள்ளப் பகுதியில் நிலவின் மேற்பரப்பின் தனிம கலவை குறித்து ஆய்வு செய்வதற்காக அதன் முதலாவது இடம் சார்ந்த மதிப்பீடுகளை மேற் கொண்டு உள்ளது.
- LIBS என்பது ‘லேசர் கற்றைகளால் தூண்டப்பட்ட ஒளிப் பிரிகை நிறமாலைமானி’ என்பதைக் குறிக்கிறது.
- இந்த இடம் சார்ந்த மதிப்பீடுகள் அந்தப் பகுதியில் கந்தகம் (S) இருப்பதை உறுதிப் படுத்துகின்றன.
- அங்கு ஹைட்ரஜன் (H) உள்ளதா என தேடும் பணி நடந்து வருகிறது.
- LIBS கருவியில் பொருத்தப்பட்டச் சாதனங்களானது, பெங்களூரில் உள்ள இஸ்ரோவின் மின்-ஒளியிழை அமைப்புகளுக்கான ஆய்வகத்தில் உருவாக்கப்பட்டது.





## நப்மித்ரா சாதனம்

- இஸ்ரோவின் விண்வெளி சார்ந்தப் பயன்பாட்டுச் சாதன ஆய்வு மையம் (அகமதாபாத்) ஆனது மீனவர்களின் பாதுகாப்பிற்காக ‘நப்மித்ரா’ என்ற கருவியினை உருவாக்கி உள்ளது.
- செயற்கைக்கோள் சார்ந்த இந்தத் தகவல் தொடர்பு அமைப்பானது கடல் பகுதியில் இருந்தும் கடல் பகுதிக்குள்ளும் ஆகிய இருவழித் தகவல் பகிர்வுச் சேவைகளை மேற் கொள்ள உதவுகிறது.
- வானிலை சார்ந்த மற்றும் புயல் எச்சரிக்கைகள் உள்ளூர் மொழியில் தெரிவிக்கப் படுவதோடு, கடற்பரப்பில் படகுகளில் உள்ள போது அந்த அதிகாரிகளுக்குப் பேரிடர் தொடர்பான செய்திகளையும் அனுப்பலாம்.
- படகு கவிழ்தல் மற்றும் தீப்பற்றுதல் போன்ற அவசரகால சூழ்நிலைகளில், மீனவர்கள் இந்த சாதனத்தில் உள்ள ஒரு பொத்தானை அழுத்திக் கட்டுப்பாட்டு மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.
- படகு இருக்கும் இடம் உள்ளிட்ட தகவல்களைக் கட்டுப்பாட்டு மையம் பெறும் போது, படகில் இருக்கும் நபர்களுக்கு கட்டுப்பாட்டு மையத்திலிருந்து பதில் செய்தி வழங்கப் படும்.

## ஆதித்யா L1 ஆய்வுத் திட்டம்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ஆனது, சூரியனை ஆய்வு செய்வதற்காக என்று அதன் முதல் விண்வெளிப் பயணத்திற்கான ஆதித்யா எல்-1 என்ற விண்கலத்தினை விண்ணில் செலுத்தியுள்ளது.
- இந்த சூரிய ஆய்வுக்கலம் ஆனது ‘XL’ வகை கட்டமைப்பில் துருவச் செயற்கைக்கோள் ஏவுகலன் (பிஎஸ்எல்வி) மூலம் விண்வெளிக்குக் கொண்டு செல்லப்பட்டது.
- இந்த ஏவுகலனில், ஆறு நீட்டிக்கப்பட்ட உந்துவிசை வழங்கீட்டு மோட்டார்கள் பொருத்தப் பட்டிருப்பதால், இது 'XL' வகை கட்டமைப்பில் உள்ள மிகவும் சக்தி வாய்ந்த ஏவுகலன் இதுவாகும்.
- பிஎஸ்எல்வி-XL ஏவுகலனானது 1,750 கிலோ எடை வரை உள்ள சாதனங்களைச் சூரிய ஒத்திசைவு துருவச் சுற்றுப்பாதைக்கு கொண்டு செல்லக் கூடியது.

- இந்த விண்கலம் ஆனது இறுதியாக சூரியன்-பூமி அமைப்பின் முதலாம் லெக்ரேஞ்ச் புள்ளியைச் (L1) சுற்றி ஒரு ஒளி வட்டப் பாதையில் நிலை நிறுத்தப் படும்.
- இது பூமியில் இருந்து சுமார் 1.5 மில்லியன் கி.மீ. தொலைவில் உள்ளது.
- ஆதித்யா L1 விண்கலமானது L1 புள்ளியினைச் சுற்றிய அதன் பயணத்தைச் சுமார் நான்கு மாதங்களில் முழுமையாக நிறைவு செய்யும்.
- ஆதித்யா L1 விண்கலத்தில் முக்கியமாக ஏழு சாதனங்கள் உள்ளன.
- சூரியனைப் பற்றிய நாம் அறிந்தத் தகவல்களை விரிவுபடுத்துவதும், அதன் கதிர்வீச்சு, வெப்பம், துகள்களின் பாய்வு மற்றும் காந்தப்புலங்கள் நம்மை எவ்வாறு பாதிக்கிறது என்பது குறித்து அறிவதும் இந்த ஆய்வுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- லெக்ரேஞ்ச் புள்ளிகள் என்பது வானியல் அமைப்புகளின் ஈர்ப்பு விசையானது விண்வெளியில் உள்ள மூன்றாவது சிறிய அமைப்பினை அதன் சுற்றுப்பாதையில் நிலைத்திருக்க வைக்கத் தேவையான மையவிலக்கு விசைக்குச் சமமான விசையைக் கொண்டு உள்ள புள்ளிகள் ஆகும்.




## மகேந்திரகிரி - இந்தியாவின் புதிய போர்க் கப்பல்

- இந்தியக் கடற்படையின் புதிய போர்க்கப்பலான 'மகேந்திரகிரி' சமீபத்தில் அறிமுகப் படுத்தப் பட்டது.
- இது திட்டம் 17A என்ற திட்டத்தின் மூலம் கட்டமைக்கப்பட்டுள்ள ஏழாவது போர்க் கப்பலாகும்.
- திட்டம் 17A என்ற போர்க் கப்பல்கள், திட்டம் 17 திட்டத்தின் (ஷிவாலிக் ரகம்) போர்க் கப்பல்களின் தொழில்நுட்பத்தினைப் பின்பற்றித் தயாரிக்கப்பட்டவையாகும்.
- மகேந்திரகிரி கப்பலானது, திட்டம் 17A திட்டத்தின் கீழ் கட்டமைக்கப்பட்ட கடைசி ரேடாருக்குப் புலப்படாதப் போர்க் கப்பல் ஆகும்.

## RAMBHA-LP

- சந்திரயான்-3 தரையிறங்குக் கலத்தில் உள்ள RAMBHA-LP என்ற சாதனமானது, தென் துருவப் பகுதியில் நிலவின் பிளாஸ்மா (மின்மம்) சூழலின் மேற்பரப்பினை முதன் முதலில் மதிப்பீடு செய்துள்ளது.

- RAMBHA-LP என்பது நிலவின் அதிஉணர்திறன் மிக்க அயனி மண்டலம் மற்றும் வளி மண்டலத்தின் ரேடியோ கட்டமைப்பு ஆய்வுக் கருவி-லாங்முயர் ஆய்வுக் கலம் என்பதைக் குறிக்கிறது.
- இதன் ஆரம்பக் கட்ட மதிப்பீடானது நிலவின் மேற்பரப்பிற்கு அருகில் பிளாஸ்மா ஒரு ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதைக் குறிக்கிறது.
- இந்த அளவியல் மதிப்பீடுகள் ஆனது, நிலவின் பிளாஸ்மா கூறுகள், வானொலி அலைத் தொடர்பில் ஏற்படுத்தும் இடையூறுகளைத் தணிக்க உதவும்.
- மேலும், அடுத்து வரவிருக்கும் நிலவு ஆய்வுக் கலங்களில் மேம்படுத்தப்பட்டக் கருவி வடிவமைப்புகளை உருவாக்க இவை பங்காற்றும்.





## மூளை-கணினி இடைமுகம்

- உடல் உறுப்புகள் செயலிழந்தவர்களின் மூளை உண்டாக்கும் சமிக்ஞைகளை, முன்பை விட அதிக வேகத்தில் சொற்களாக மாற்றும் கருவியை அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- இது மோசமான ஒரு முடக்குவாதத்தினைக் கொண்டுள்ளவர்களில் தகவல் தொடர்பை மீட்டெடுப்பதற்கான ஒரு முக்கியப் படிநிலையாகும்.
- இந்தச் சாதனங்கள் மூளையின் செயல்பாட்டை வேகமாகவும் துல்லியமாகவும் சொற்களாக மாற்றும் திறன் கொண்டவை மற்றும் ஏற்கனவே உள்ள தொழில் நுட்பங்களை விட பெரிய அளவிலான சொற்களஞ்சியத்தை உள்ளடக்கியவை.

- மூளைத் தண்டு முடக்குவாதம் அல்லது அமியோட்ரோபிக் லேட்டரல் ஸ்களீரோசிஸ் உள்ளிட்ட பல்வேறு நரம்பியல் கோளாறுகள் உள்ளவர்களுக்கு, தசைகள் செயல் இழப்பதால் அவர்களுக்கு அடிக்கடி பேச்சு இழப்பு ஏற்படுவதால் அந்த நிலையை எதிர் கொள்ள இது உதவும்.




## Y குரோமோசோம் பற்றிய புரிதல்




- அறிவியலாளர்கள் முதன்முறையாக Y குரோமோசோமை வெற்றிகரமாக வரிசைப் படுத்தியுள்ளனர்.
- இந்த குறிப்பு விவர வரிசையாக்கமானது, இந்த குரோமோசோமுடன் தொடர்புடைய சூழல்கள் மற்றும் குறைபாடுகளை ஆராய்வதற்கு உதவும்.
- Y குரோமோசோம் ஆனது மரபணுவின் "கரும்பொருள்" என்று அழைக்கப்படுகிறது.
- நமது மரபணுக் குறியீட்டின் அடிப்படைக் கூறுகளை சரியாக புரிந்து கொள்வதற்கான ஆரம்பக் கட்ட முயற்சிகள் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டன.
- இருப்பினும் 23 இணை மனித குரோமோசோம்களில் குறிப்பிடத்தக்க பகுதிகள் புரிந்து கொள்ள முடியாத ஒன்றாக இருந்து வந்தன.
- முனைக்கூறு (டெலோமியர்) - முனைக்கூறு (T2T) கட்டமைப்பு எனப்படும் 100 ஆராய்ச்சியாளர்களின் சர்வதேச ஆராய்ச்சித் தொகுப்பின் மூலம் கடந்த ஆண்டில் இவை பற்றிய புரிதல்கள் வழங்கப் பட்டன.

## ஜெய்ஸ் - மொழி மாதிரி முறை

- அபுதாபியைச் சேர்ந்த செயற்கை நுண்ணறிவு நிறுவனமான G42 நிறுவனத்தின் துணைப் பிரிவான இன்செப்ஷன் நிறுவனம் 'ஜெய்ஸ்' எனப்படும் உலகின் அதிநவீன அரபு மொழி மாதிரியினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஒரு இருமொழி அரபு-ஆங்கில மொழி மாதிரியான ஜெய்ஸ் என்பது உரை மற்றும் குறியீடு ஆகியவை தொடர்பான மிகப்பெரிய தரவுத் தொகுப்பு மீதான பயிற்சி அளிக்கப் பட்ட ஒரு மொழி மாதிரியாகும்.
- கணினி வழி மொழிபெயர்ப்பு, உரைச் சுருக்கம் மற்றும் வினாவிற்கு விடையளித்தல் போன்ற பல்வேறு பணிகளுக்கு இது பயன்படுத்தப்படலாம்.
- காண்டார் கேலக்சி எனப்படும் உலகின் மிகப்பெரிய செயற்கை நுண்ணறிவு மீத்திறன் கணினியின் மூலம் இதற்கு பயிற்சியளிக்கப் பட்டது.




## 7 நிமிடப் புற்றுநோய் சிகிச்சை எதிர்ப்பு மருந்து




- இங்கிலாந்து தேசிய சுகாதார சேவை (NHS) அமைப்பானது ஒரு புதுமை மிக்க புற்று நோய் எதிர்ப்பு மருந்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- இது புற்றுநோய் சிகிச்சை காலத்தை வெகுவாகக் குறைக்கும் திறன் கொண்டது.
- இந்த மருந்தினை உட்செலுத்துவதற்கு 7 நிமிடங்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளும் என்ற நிலையில் இது உலகிலேயே இத்தகைய முதல் வகை மருந்தாகும்.
- இந்தப் புரட்சிகர மருந்தானது, ஒரு சில குறிப்பிட்ட நோயாளிகளில் அவர்களுக்கான சிகிச்சை நேரத்தை 75% வரை குறைக்கும் திறனைக் கொண்டுள்ளது.

## பைரோலா மாற்றுருக்கள்





- ஓமைக்ரான் வைரசின் BA.2.86 மாற்றுருவானது "பைரோலா" என்று பெயரிடப் பட்டு உள்ளது.
- இது புதிதாக அறிவிக்கப்பட்ட, ஓமைக்ரான் வைரசின் மிகவும் பிறழ்ந்த ஒரு மாற்றுரு ஆகும் என்பதோடு இது பாதிப்புகளின் எண்ணிக்கையினை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.
- அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகளில் பாதிப்புகள் அதிகரித்து வரும் நிலையில், புதிய கொரோனா வைரஸ் மாற்றுருகள் உலகம் முழுவதும் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளன.
- பைரோலாவில் மாற்றுருவில் 30க்கும் மேற்பட்ட பிறழ்வுகள் உள்ளன.
- இது முதன்முதலில் ஜூலை 24 ஆம் தேதியன்று டென்மார்க்கில் கண்டறியப் பட்டது.

## செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் ஆளில்லா விமான எதிர்ப்பு அமைப்பு

- ஹைதராபாத் நகரில் அமைந்துள்ள ஒரு ரோபோட்டிக்ஸ் நிறுவனம் ஆனது செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் அதிநவீன தன்னிச்சை இயக்கம் கொண்ட ஆளில்லா விமான எதிர்ப்பு அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்திரஜால் என்று பெயரிடப்பட்டுள்ள இது பரந்த அளவிலான பகுதியையும் பாதுகாக்கும் திறன் கொண்ட உலகின் ஒரே ஆளில்லா விமான எதிர்ப்பு அமைப்பு (C-UAS) என்று கூறப்படுகிறது.
- இந்த அமைப்பானது அணுசக்திக் கட்டமைப்புகள் மற்றும் எண்ணெய்க் கிணறுகள் போன்ற முக்கியக் கட்டமைப்புகளைப் பாதுகாக்கக் கூடியது.
- மேலும், இது பல்வேறு வகையான பல ஆளில்லா விமானங்கள் மூலமாக ஒரு முழு நகரத்தையும் உள்ளடக்கிய பரந்த அளவிலான பகுதியையும் பாதுகாக்கும் திறன் கொண்டது.

- இந்தியாவில் இத்தகைய அமைப்பு உருவாக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.




## உறக்க நிலைக்குச் சென்ற பிரக்யான் விண்கலம்


- செப்டம்பர் 02 ஆம் தேதியன்று, பிரக்யான் தனது பணிகளை முடித்து, பாதுகாப்பாக நிலை நிறுத்தப் பட்டு உறக்க நிலைக்கு (இடை நிறுத்தம்) உள்ளாக்கப்பட்டது.
- பிரக்யான் கலத்தின் சமிஞ்கை இயக்க நிலையில் வைக்கப்பட்டிருந்தது.
- சூரிய சக்தி தீர்ந்து மின்கலத்தின் ஆற்றல் தீர்ந்தவுடன் விக்ரம் தரையிறங்கு விண்கலமானது, பிரக்யானுக்கு அடுத்தபடியாக உறக்க நிலைக்குச் செல்லும் என்று இஸ்ரோ கூறியது.
- நிலவில் சூரிய ஒளி படுதல் மறைந்ததும், வெப்பநிலை -200 டிகிரி செல்சியஸுக்குக் கீழே செல்லும்.



- சூரியசக்தி தகடுகள் ஆனது, செப்டம்பர் 22 ஆம் தேதியன்று நிகழும் என எதிர்பார்க்கப் படும் அடுத்த சூரிய உதயத்தில் சூரிய ஒளியைப் பெறும் வகையில் அமைக்கப் பட்டு உள்ளது.
- இஸ்ரோ அமைப்பானது, மற்றொரு ஆய்வுப் பணிகளுக்காக அந்த விண்கலம் மீண்டும் வெற்றிகரமான செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்த்துள்ளது.
- அவ்வாறு செயல்படத் தொடங்கவில்லையெனில், அது இந்தியா சார்பான நிலவின் தூதராக எப்போதும் அங்கேயே இருக்கும்.


- ஒரு சந்திர நாள் (14 பூமி நாட்கள்) ஆய்வுப் பணி நாட்கள் கொண்டத் தரையிறங்கு விண்கலம் மற்றும் உலாவிக் கலம் ஆனது, நிலவின் மேற்பரப்பில் சோதனைகளை மேற்கொள்வதற்கான அறிவியல் சாதனங்களைக் கொண்டுள்ளன.

## போரிஃபெரிஸ்பேரா ஹீடெர்ட்டோபிசிஸ்




- சீன ஆராய்ச்சியாளர்கள் போரிஃபெரிஸ்பேரா ஹீடெர்ட்டோபிசிஸ் எனப்படும் கடல் சார் பாக்டீரியாவின் தனித்துவமான மற்றும் மர்மமான புதிய இனத்தை அடையாளம் கண்டுள்ளனர்.
- இது ஆழ்கடல் தரைத் தளத்திலிருந்து சேகரிக்கப்பட்ட வண்டல் மாதிரிகளில் கண்டறியப் பட்டுள்ளது.
- இந்தப் பாக்டீரியாக்கள் பிளாங்க்டோமைசீட்ஸ் இனப்பிரிவைச் சேர்ந்தவை.
- இந்தக் கண்டுபிடிப்பானது ஆழ்கடல் நுண்ணுயிரியல் மற்றும் வேதியியல் செயல் முறைகள் பற்றிய நமது புரிதலை மேம்படுத்துகிறது.


## குவாண்டம் சமவாய்ப்பு எண் உருவாக்க அமைப்பு



- குறியாக்கம், பந்தயம் மற்றும் கணினியின் கணித மாதிரி செயல்முறை ஆகியவற்றிற்கான புதிய குவாண்டம் சமவாய்ப்பு எண் உருவாக்க அமைப்பினை அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

- இது பெரோவ்ஸ்கைட் எனப்படும் படிகம் போன்ற பொருள் கொண்டு தயாரிக்கப்பட்ட LED திரைகளைப் பயன்படுத்துகிறது.
- ஒரு கணினி நிரலாகவோ அல்லது வன்பொருளாகவோ செயல்படும் ஒரு சமவாய்ப்பு எண் உருவாக்க அமைப்பானது, தரவுகளைக் குறிமுறையாக்கம் செய்வதற்காகப் பயன்படுகிறது.
- தகவல் பெறும் நிலையில் உள்ள தரவானது பல்வேறு சமவாய்ப்பு எண் உருவாக்க அமைப்புகளால் உருவாக்கப்பட்ட விசைகளைப் பயன்படுத்திக் குறியாக்கம் செய்யப் பட்டு மறைகுறியாக்கப் படுகிறது.

## புதிய சுற்றுப்பாதையில் நுழைந்த ஆதித்யா - L1




- இந்தியாவின் முதல் சூரிய ஆய்வுக் கலமான ஆதித்யா - L1, செப்டம்பர் 05 ஆம் தேதி அன்று இரண்டாவது பூமியின் ஈர்ப்பு விசையை சார்ந்த சுற்றுப்பாதை உட்செலுத்துதல் முயற்சியினை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- இந்த உட்செலுத்துதல் முயற்சியானது பெங்களூரில் உள்ள ISTRAC (இஸ்ரோ தொலைவு அளவி, கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு வலையமைப்பு) அமைப்பிலிருந்து நிகழ்த்தப் பட்டது.
- தற்போது விண்கலம் எட்டிய புதிய சுற்றுப்பாதை 282 கிமீ x 40,225 கி.மீ. ஆகும்.
- மேலும் மூன்று சுற்றுப்பாதை உட்செலுத்துதல் முயற்சிகள் தொடர்ந்து மேற் கொள்ளப் பட உள்ளதில், அடுத்தபடியாக EBN#3 எனப்படும் முயற்சியானது செப்டம்பர் 10 ஆம் தேதியன்று மேற்கொள்ளப் படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.


## மூன் ஸ்னைப்பர் – ஜப்பான்

- ஜப்பான் நாட்டின் முதலாவது வெற்றிகரமான நிலவு தரையிறங்கு விண்கலமாக மாற பெற உள்ள விண்கலத்தினைச் சுமந்து செல்லும் ஏவுகலம் விண்ணில் ஏவப்பட்டது.
- நிலவில் ஒரு விண்கலத்தினைத் தரையிறக்கிய உலகின் ஐந்தாவது நாடு என்ற ஒரு பெருமையினைப் பெறும் முயற்சியாக இது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இந்த நிலவு தரையிறங்கு விண்கலமானது நிலவினை ஆய்வு செய்வதற்கான திறன் மிகு தரையிறங்கு விண்கலம் (SLIM) என அதிகாரப் பூர்வமாக அறியப்படுகிறது.

- இது "மூன் ஸ்னைப்பர்" என்றும் குறிப்பிடப் படுகிறது.
- SLIM விண்கலம் ஆனது அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நிலவின் மேற்பரப்பில் தரையிறங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இது நீண்ட கால, ஆனால் அதிக எரிபொருள் திறன் கொண்ட ஒரு சுற்றுப்பாதையை தேர்ந்தெடுத்துப் பயணிக்கும்.
- நாசா, ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் மற்றும் ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம் ஆகியவை இணைந்து உருவாக்கிய ஆராய்ச்சி செயற்கைக் கோளையும் இந்த ஏவுகலம் சுமந்து செல்கிறது.




## குருத்தணுக்களைப் பயன்படுத்தி உருவக்கப்பட்ட மனித உட்கரு மாதிரி




- இஸ்ரேலிய ஆராய்ச்சியாளர்கள் குழுவானது, குருத்தணுக்களைப் பயன்படுத்தி செயற்கை மனித உட்கரு மாதிரியை உருவாக்கியுள்ளது
- இது வழக்கமான விந்து, முட்டை அல்லது கருப்பையின் தேவையைத் தவிர்க்கும் வகையிலான ஒரு வழக்கத்திற்கு மாறான அணுகுமுறையாகும்.
- அந்த செயல்முறைக்கு மாற்றாக இந்த தனித்துவமான மாதிரியை உருவாக்குவதற்கு மாற்றியமைக்கப்பட்டு கட்டமைக்கப்பட்ட குருத்தணுக்களின் ஆற்றலை வெகுவாகப் பயன்படுத்தினர்.

## சூரியனின் புலப்படும் பகுதியின் வெப்ப உமிழ்வு கரொனா அடுக்கு ஆய்வுக் கருவி (VELC)

- இது ஆதித்யா-L1 விண்கலத்துடன் இணைக்கப்பட்ட மிகப்பெரிய சாதனமாகும்.
- VELC கருவியானது சூரியனின் கரோனா மற்றும் அதன் செயல்பாடு பற்றிய புரிதலுக்கு பங்களிக்கும் சூரிய ஆய்வுப் படங்களைத் தினசரி அடிப்படையில் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.
- VELC கருவியின் ஆய்வுப் படக்கருவியானது, நிமிடத்திற்கு ஒரு படத்தை வழங்குவதால் மொத்தம் 24 மணிநேரத்தில் சுமார் 1,440 படங்கள் நமக்கு கிடைக்கப் பெறும்.





## XRISM ஆய்வுக்கலம்

- ஜப்பான் நாடானது, XRISM (X-Ray Imaging and Spectroscopy Mission) கலத்தினைச் சுமந்து செல்லும் H-IIA ஏவுகலத்தினை விண்ணில் ஏவியது.
- இது NASA மற்றும் JAXA (ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம்) ஆகியவற்றிற்கு இடையேயான ஒத்துழைப்பின் மூலம் உருவாக்கப்பட்டது.
- XRISM விண்கலமானது, ரிசால்வ் மற்றும் Xtend எனப்படும் இரண்டு கருவிகளைக் கொண்டுள்ளது.
- ரிசால்வ் கருவியானது விண்வெளிப் பொருளின் கட்டமைப்பு, இயக்கம் மற்றும் நிலை உள்ளிட்டவற்றைப் பற்றிய தகவல்களை வழங்குவதற்காக ஒவ்வொரு தனிப்பட்ட ஊடு கதிரின் ஆற்றலையும் அளவிட முடியும்.
- பௌர்ணமி நிலவின் புலப்படும் பகுதியின் சராசரி அளவை விட சுமார் 60 சதவீதம் பெரியதாக உள்ள ஒரு பகுதியை Xtend கலம் ஆய்வு செய்கிறது.

## குமிழ் வடிவ விண்வெளிக் கட்டமைப்பு

- வானியலாளர்கள் முதல் Bubble of Galaxies (குமிழ் வடிவ விண்வெளிக் கட்டமைப்பு) என்ற ஒன்றினைக் கண்டுபிடித்துள்ளனர்.
- ஒரு பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவு வரையில் பரவியுள்ள இது, பால்வெளி அண்டத்தினை விட 10,000 மடங்கு அகலமானதாக உள்ளது.
- இந்த மாபெரும் அமைப்பினை வெற்றுக் கண்களால் பார்க்க முடியாது.

- இது நமது பால்வெளி அண்டத்திலிருந்து ஒப்பீட்டளவில் 820 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.
- பெருவெடிப்பிற்குப் பிறகு சுமார் 380,000 ஆண்டுகளுக்குப் பிறகு இதன் பிரபஞ்ச விரிவு செயல்முறை நின்று, குளிர்ந்து ஒரு மாபெரும் குமிழ் வடிவத்தைப் பெற்றது.




## செவ்வாய்க் கிரகத்தில் ஆக்ஸிஜன்

- பெர்சீவரன்ஸ் உலாவி விண்கலத்தின் உதவியுடன் நாசா விண்வெளி நிறுவனத்தினால் மேற்கொள்ளப் பட்ட ஆக்சிஜன்-உருவாக்கப் பரிசோதனையானது மிக வெற்றிகரமாக தனது பணியை முடித்து செவ்வாய்க் கிரகத்தில் ஆக்ஸிஜனை உருவாக்கியுள்ளது.
- இது MOXIE (செவ்வாய்க் கிரகத்தில் இடம் சாரந்த ஆக்சிஜன் வளப் பயன்பாட்டு சோதனை) எனப்படும் நுண்ணலை கதிர்வீச்சு-அடுப்பின் அளவிலான சாதனம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
- MOXIE என்பது 2021 ஆம் ஆண்டில் அந்தக் கிரகத்தில் தரை இறங்கியதில் இருந்து பெர்சீவரன்ஸ் உலாவிக் கலத்தில் ஆக்ஸிஜனை உருவாக்கி வருகிறது.
- மொத்தம் 122 கிராம் ஆக்சிஜனை உற்பத்தி செய்து, நிறுவனத்தின் உற்பத்தி இலக்கு சார்ந்த எதிர்பார்ப்புகளை விஞ்சியுள்ளது.
- இதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் ஆக்ஸிஜன் 98% அளவு தூய்மையானது அல்லது சிறந்தது என்ற நிலையில் இது எரிபொருள் மற்றும் சுவாச பயன்பாடுகளுக்காகப் பயன்படுத்தப் பட ஏற்றது.



## பன்றியின் கருக்களுக்குள் மனித சிறுநீரகங்கள்



- அறிவியலாளர்கள் 50 சதவீதத்திற்கும் அதிகமான மனித உயிரணுக்களால் ஆன சிறுநீரகங்களை 28 நாட்கள் வரை ஆய்வகத்தில் வளர்த்து அதனைப் பன்றிகளுக்குள் பொருத்தியுள்ளனர்.
- விலங்கு மற்றும் மனித உயிரணுக்கள் இரண்டையும் கொண்ட ஒரு "மனித மயமாக்கப் பட்ட" உறுப்பு மற்றொரு உயிரினத்திற்குள் வளர்க்கப்படுவது இதுவே முதல் முறை ஆகும்.
- இனி மாற்று அறுவை சிகிச்சைக்குத் தேவையான மனித உறுப்புகளைப் பன்றிகளுக்குள் உருவாக்க இயலும் என்ற நம்பிக்கையை இந்த ஆராய்ச்சி வழங்கச் செய்கிறது.


## முதலாவது உத்திசார் அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல்




- வட கொரியாவானது செயல்பாட்டு நிலையில் உள்ள தனது முதல் "உத்திசார் அணு சக்தி தாக்குதல் நிகழ்த்தவல்ல நீர்மூழ்கிக் கப்பலை" அறிமுகப்படுத்தியுள்ளது.
- நீர்மூழ்கிக் கப்பல் எண். 841 எனப்படும் இந்தக் கப்பலுக்கு வட கொரியாவின் வரலாற்றுப் புகழ்மிக்க ஒரு நபரின் பெயரால் ஹீரோ கிம் குன் ஒக் என்று பெயரிடப் பட்டுள்ளது.

- பழைய தொழில்நுட்ப மாதிரியிலான இந்த கப்பல் ஆனது அணு ஆயுத முனை கொண்ட உந்துவிசை ஏவுகணைகள் மற்றும் ரேடாருக்குப் புலப்படா கப்பல் ஏவுகணைகளையும் சுமந்து செல்லும் வகையில் மறுவடிவமைப்பு செய்யப் பட்டு உள்ளது.
- வடகொரியா தனது முதல் அணுகுண்டு சோதனையை 2006 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் மேற்கொண்டது.
- வட கொரியாவில் டீசல்-மின்னணு இயந்திரங்களால் இயக்கப்படுகின்ற, ஆனால் நவீன தரத்தின்படி வழக்கற்றுப் போய்விட்ட சுமார் 20 ரோமியோ ரக நீர்மூழ்கிக் கப்பல்கள் உள்ளன.

## புற்றுநோய் செல்களைக் கண்டறிந்து அழிக்கும் புதிய அணுகுமுறை





- இந்திய அறிவியல் கழகத்தின் (IISc) அறிவியலாளர்கள் புற்றுநோய் செல்களை, குறிப்பாக திடமான கட்டியை உருவாக்குகின்றச் செல்களைக் கண்டறிந்து அழிக்கும் புதிய அணுகுமுறையை உருவாக்கியுள்ளனர்.
- தங்கம் மற்றும் தாமிர சல்பைடு ஆகியவற்றால் செய்யப்பட்ட கலப்பின நுண் துகள்களை அவர்கள் உருவாக்கியுள்ளனர்.
- இது வெப்பத்தைப் பயன்படுத்தி புற்றுநோய் செல்களை அழிக்க வல்லது என்பதோடு அது ஒலி அலைகளைப் பயன்படுத்தி அவற்றைக் கண்டறியும் திறன் கொண்டது.
- இந்தக் கலப்பின நுண் துகள்கள் ஒளி வெப்பம், ஆக்ஸிஜன் எதிர்வினைக் கூறுகளின் உற்பத்தி மற்றும் சேர்ப்பில் உள்ள சமநிலையின்மை மற்றும் ஒளிச்சேர்க்கை பண்புகளைக் கொண்டுள்ளன.
- இந்தக் கலப்பின நுண் துகள்கள் ஒளியை உறிஞ்சி வெப்பத்தை உருவாக்கி புற்று நோய் செல்களை அழிக்கின்றன.
- இந்த நுண் துகள்கள் உயிரணுக்களுக்கு நச்சுத் தன்மையை ஏற்றும் வகையிலான ஒற்றை ஆக்ஸிஜன் அணுக்களையும் உருவாக்குகின்றன.
- மேலும், இந்த நுண் துகள்கள் புற்றுநோயைக் கண்டறிவதில் உதவும் ஆற்றலைக் கொண்டுள்ளன.

- தற்போதுள்ள CT மற்றும் MRI ஊடறிதல் போன்ற முறைகளுக்கு அவற்றின் ஆய்வுப் படங்களைப் புரிந்து கொள்வதற்கு பயிற்சி பெற்ற கதிரியக்க வல்லுநர்கள் தேவை.
- ஆனால், இந்த துகள்களின் ஒளிச்சேர்க்கை பண்புகள் உயர் தெளிவுத் திறனுடன் கூடிய சிறந்த ஆய்வுப் படங்களை வழங்க உதவும்.

## முதலாவது லக்ராஞ்சியன் மாறுநிலை புள்ளி உள்நுழைவு (TL1I) முயற்சி

- ஆதித்யா-எல்1 விண்கலத்தின் லாக்ராஞ்சியன் மாறுநிலை புள்ளி உள்நுழைவு முயற்சியினை இஸ்ரோ வெற்றிகரமாக மேற்கொண்டது.
- இது L1 லாக்ரேஞ்ச் புள்ளியைச் சுற்றிய சுமார் 110 நாட்கள் அளவிலான சுற்றுப் பாதையை அடைவதற்கான விண்கலத்தினுடைய பயணத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- இஸ்ரோ மற்றொரு வானியல் அமைப்பினை நோக்கிய ஒரு சுற்றுப்பாதையில் ஒரு விண்கலத்தினை ஐந்தாவது முறையாக வெற்றிகரமாக உட்செலுத்துகிறது.
- L1 புள்ளி பூமியிலிருந்து தோராயமாக 1.5 மில்லியன் கி.மீ. தொலைவில் அமைந்து உள்ளது.
- இது பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலான தூரத்தில் வெறும் 1 சதவீதத்தை மட்டுமே குறிக்கிறது.




## 'விபவ்' பீரங்கி எதிர்ப்பு கண்ணி வெடிகள்

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தானாகச் செயலிழக்கும் "விபவ்" என அழைக்கப் படும் 600 பீரங்கி எதிர்ப்பு கண்ணி வெடிகள் இராணுவத்தில் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளன.
- அவை எதிரி நாட்டின் அனைத்து வகையான கவச வாகனங்களின் இயக்கத்தினையும் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப் பட்டுள்ளன.
- அவை இயந்திர நேரங்குறிக் கருவியைக் (டைமர்களை) கொண்டிருப்பதால், 120 நாட்களுக்குப் பிறகு, தானாகவே செயலிழக்கும்.

❖ முந்தைய ரக கண்ணி வெடிகளில் இந்தச் செயலிழக்கும் அம்சங்கள் இல்லை.




## நிலவின் நீர் உருவாக்கம்

❖ சந்திரயான்-1 கலத்தின் தரவு, பூமியில் இருந்து வெளிவரும் அதிக ஆற்றல் கொண்ட எலக்ட்ரான்கள் அதன் துணைக் கோளான நிலவில் தண்ணீரை உருவாக்கக்கூடும் என்று வெளிப்படுத்தியுள்ளது.


❖ நிலவில் உள்ள நீர் மூலக்கூறுகளைக் கண்டுபிடிப்பதில் சந்திரயான்-1 முக்கியப் பங்கு வகித்தது.

❖ புரோட்டான்கள் போன்ற உயர் ஆற்றல் துகள்களால் ஆன சூரியக் காற்று ஆனது, நிலவின் மேற்பரப்பில் மோதுகிறது.

❖ நிலவில் நீர் உருவாகுவதற்கான முதன்மையான வழிகளில் ஒன்றாக இது கருதப் படுகிறது.

❖ பூமியின் காந்தப்புலத்தில் (மேக்னட்டோடெயில்) நிகழும் நீர் உருவாக்கம் ஆனது நிலவு அந்தப் புலத்திற்கு வெளியே இருக்கும் போது உருவாகும் செயல்முறையினை ஒத்து உள்ளது.

❖ இது அதிக ஆற்றல் கொண்ட எலக்ட்ரான்களை உள்ளடக்கிய, சூரியக் காற்றின் புரோட்டான்களுக்கு அப்பால் கூடுதலான நீர் உருவாக்கச் செயல்முறைகள் நிகழ்வதைக் குறிப்பிடுகிறது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## திட்ட வரைவு அறிக்கைக்கான அறிவிப்பு

- ஒருங்கிணைந்த புலிகள் வாழ்விடப் பாதுகாப்புத் திட்டம் (ITHCP) ஆனது புலிகள் வளங் காப்புத் திட்டத்தின் மீதான நான்காம் கட்டத்திற்கான திட்ட வரைவு அறிக்கைக்கான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது.
- இது பெரும் பூனை இனங்கள் மற்றும் அவற்றின் சுற்றுச்சூழலை மேற்கொண்டுப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தின் இந்தக் கட்டத்தில் புலிகளோடுச் சேர்த்து இதர பிற உயிரினங்களையும் பாதுகாக்கச் செய்வதற்காக அவற்றையும் இதில் சேர்க்கும் வகையில் இது மேலும் விரிவுபடுத்தப் படுகிறது.
- சிறுத்தைகள் மற்றும் சுந்தா படைச் சிறுத்தைகள் ஆகிய இரண்டு இனங்களும் தமது பாதுகாப்பிற்காக தற்போது இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறத் தகுதியுடையவை.

## முழுவதுமாக எத்தனால் எரிபொருளில் இயங்கும் உலகின் முதல் டொயோட்டா இன்னோவா கார்

- மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி, முழுவதுமாக எத்தனால் எரிபொருளில் இயங்கும் டொயோட்டாவின் இன்னோவா ஹைக்ராஸ் மகிழுந்து ரகத்தினை அறிமுகப் படுத்தினார்.
- இந்த ரக மகிழுந்தானது உலகின் முதல் BS-VI தர என்ஜின்களைக் கொண்ட (நிலை-II), மின்சாரக் கலவை-எரிபொருள் வாகனம் என்று கூறப்படுகிறது.
- கலவை-எரிபொருள் வாகனங்கள் (FFV) உள்ளக எரிப்பு இயந்திரத்தினைக் கொண்டு உள்ளதோடு, அவை பெட்ரோல், பெட்ரோல் மற்றும் எத்தனால் கலவை போன்ற எந்தக் கலவையிலும் செயல்படும் திறன் கொண்டவை ஆகும்.
- மாற்று மற்றும் பசுமை எரிபொருள் ஆற்றல் பயன்பாட்டினை மேம்படுத்துவதற்காக, டொயோட்டா மீராய் EV எனப்படும் ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் மின்சார மகிழ்ந்து கடந்த ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டது.




## மிகப்பெரிய காட்டுத் தீ




- கிரீஸ் நாட்டில் ஏற்பட்ட காட்டுத் தீயானது, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் வரலாற்றில் இதுவரை பதிவு செய்யப் பட்டவற்றுள் "மிகப் பெரியதாக" அறிவிக்கப் பட்டுள்ளது.
- இந்த காட்டுத் தீயானது 2000 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஐரோப்பிய ஒன்றியத்தில் ஏற்பட்ட மிகப் பெரியக் காட்டுத் தீயாகும்.
- ஆகஸ்ட் 19 ஆம் தேதியன்று தொடங்கிய இந்தக் காட்டுத் தீயானது, சுமார் 310 சதுர மைல்களுக்கும் அதிகமான (810 சதுர கிமீ) பகுதிகளைத் தீக்கிரையாக்கியுள்ளது.
- பாதிக்கப்பட்ட இந்தப் பகுதியானது நியூயார்க் நகரின் அளவை விடப் பெரியது.


## பூஞ்சை வகை உள்ளீட்டிற்கான பிரச்சாரம்




- ஐக்கிய நாடுகள் சபையின் பல்லுயிர்ப் பெருக்க அமைப்பு ஆனது, "தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள்" வகுப்புடன் "பூஞ்சை" என்ற சொல்லினை இணைக்கச் செய்யமாறு உலகளாவிய அமைப்புகளை வலியுறுத்தும் வகையிலான பிரச்சாரத்தைத் தொடங்கி உள்ளது.
- இது பூஞ்சைகளின் ஒரு முக்கியத்துவத்தை வலியுறுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

- வளங்காப்பு முன்னெடுப்புகளில் தாவரங்கள் மற்றும் விலங்குகள் கொண்டுள்ள ஒரு முக்கியத்துவ நிலையில் ஒன்றாக பூஞ்சைகளின் முக்கியத்துவத்தினை மேம்படுத்தச் செய்வதையும் அதனை உள்ளீடு செய்வதனையும் ஐக்கிய நாடுகள் சபை ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, பல்வேறு கருத்துக்கள் மற்றும் கொள்கை முடிவுகளை வடிவு அமைப்பதில் இவற்றின் சொற்கூறுகளின் தாக்கத்தை எடுத்துக் காட்டுகிறது.
- முன்னதாக, IUCN அமைப்பின் இனங்களின் ஏற்பமைவு ஆணையமானது (SSC) "பூஞ்சையியல் சார்ந்த உள்ளீடுகளை" பயன்படுத்த உள்ளதாக அறிவித்தது.
- பூஞ்சை என்பது பல்வேறு யூகாரியோடிக் நுண்ணுயிரிகளின் குழுவாகும்.

## 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மழைப்பொழிவு





- இந்த நூற்றாண்டில் ஆகஸ்ட் மாதத்தில் பதிவாகும் மழைப் பொழிவை விட இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பெய்த மழைப் பொழிவு மிகக் குறைவாகும்.
- இந்தியாவில் வழக்கமாக இந்த மாதத்தில் பெய்யும் மழைப் பொழிவினை விட இந்த ஆண்டில் 36% குறைவான மழைப் பொழிவு பதிவாகியுள்ளது.
- நான்கு பருவமழை மாதங்களில், ஜூலை மாதத்தில் பதிவாகும் 28 செ.மீ. மழைப் பொழிவிற்கு அடுத்தப் படியாக பெரும்பாலும் ஆகஸ்ட் மாதத்தில் அதிகளவு (25.4 செ.மீ) மழைப் பொழிவுப் பதிவாகும்.
- இந்தியாவில் கடைசியாக ஆகஸ்ட் மாதத்தில் இத்தகையக் கடுமையான மழைப் பற்றாக்குறை 2005 ஆம் ஆண்டில் பதிவான நிலையில், அந்த ஆண்டில் பதிவான மழைப் பற்றாக்குறையானது இயல்பான மழைப்பொழிவில் சுமார் 25 சதவீதமாகவே இருந்தது.
- 2009 ஆம் ஆண்டில், இந்தியாவானது கடந்த அரை நூற்றாண்டில் காணாத மிகப்பெரிய வறட்சியை எதிர்கொண்ட நிலையில், அப்போதைய மழைப் பொழிவானது ஆகஸ்ட் மாதத்தில் பெய்ய வேண்டிய மழைப் பொழிவினை விட 24% குறைவாக இருந்தது.
- ஆகஸ்ட் மாதத்தில் பெய்த மழைப் பொழிவானது, ஒட்டு மொத்த தேசிய மழைப் பற்றாக்குறை அளவினை 10% ஆக மாற்றியது.
- பிராந்திய அளவிலான மழைப் பற்றாக்குறையானது கிழக்கு மற்றும் வடகிழக்கு இந்தியாவில் 17% ஆகவும், மத்திய இந்தியாவில் 10% ஆகவும் மற்றும் தென் இந்தியாவில் 17% ஆகவும் உள்ளன.

- எல் நினோ நிலை வலுவாதல் மற்றும் அரபிக் கடல் மற்றும் வங்காள விரிகுடா ஆகிய இரண்டு பகுதிகளிலும் உள்ள சாதகமற்ற சூழ்நிலைகள் இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் ஆகஸ்ட் மாத மழைப் பொழிவினை ஒரு குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கின்றன.

## துருவ கரடிகள் மீது பருவநிலை மாற்றத்தின் தாக்கம்

- பசுமை இல்ல வாயு உமிழ்வானது, கரடிகளின் வாழ்விடங்களில் பனிப்பொழிவு இல்லாத நாட்களின் எண்ணிக்கையை அதிகரிக்கக் கூடும்.
- இது பருவ வயதினை எட்டும் குட்டிகளின் எண்ணிக்கை சதவீதத்தைப் பாதிக்கும்.
- இந்த உயர்நிலை மாமிச உண்ணிகள் ஆனது 2008 ஆம் ஆண்டு முதல் அருகி வரும் உயிரினங்கள் என்ற நிலையில் பாதுகாக்கப் படுகின்றன.
- ஆர்க்டிக் பகுதி முழுவதும் காணப்படும் 19 துருவக் கரடி துணை இனங்களுள் மூன்று இனங்களின் எண்ணிக்கையில் நீண்ட காலமாக சரிவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- 2016 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 842 ஆக மதிப்பிடப்பட்ட அவற்றின் எண்ணிக்கையானது 618 ஆகக் குறைந்துள்ளது.
- இந்த கடல் வாழ் பாலூட்டிகள் வேட்டையாடுவதற்கு கடல் பனியைப் பெரிதும் சார்ந்து உள்ளன.

## நிலத்தடி நீர் மட்டம் குறைதல்




- புவி வெப்பமடைதலால் 2041-2080 ஆகிய காலக் கட்டத்தில் இந்தியாவில் நிலத்தடி நீர் மட்டம் குறையும் விகிதம் ஆனது தற்போதைய விகிதத்தை விட மூன்று மடங்கு அதிகமாக இருக்கும்.

- 2041 முதல் 2080 ஆம் ஆண்டு வரையில் பதிவாக உள்ள நிலத்தடி நீர் மட்ட (GWL) குறைவு விகிதமானது தற்போதைய குறைப்பு விகிதங்களை விட (தற்போதைய 1.62-4.45 மடங்கிலிருந்து) சராசரியாக 3.26 மடங்கு அதிகமாகும்.
- உயர்ந்து வரும் வெப்பநிலையானது நீர்ப்பாசனத் தேவைகளின் அதிகரிப்பிற்கு இட்டுச் செல்வதால் நிலத்தடி நீர் மட்டம் குறைதல் மேலும் மோசமடையும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தியாவில் நீர்ப்பாசனத்தினைச் சார்ந்திருக்கும் 60%க்கும் அதிகமான வேளாண்மை நிலத்தடி நீரைச் சார்ந்துள்ளது.

## LED விளக்குகள் மற்றும் ஒளி மாசுபாடு





- அமெரிக்காவில் LED விளக்குகளின் பயன்பாடு விரைவாக அதிகரிப்பதால், அது ஒளி மாசுபாடு அதிகரிக்கும் நெருக்கடி நிலைக்கு இட்டுச் செல்கிறது.
- LED விளக்குகள் ஆற்றலைச் சேமிப்பதையும், செலவுகளைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டவையாகும்.
- பிராதானமாக விலை மலிவான மற்றும் பிரகாசமான LED விளக்குகளின் பயன்பாட்டு அதிகரிப்பின் காரணமாக இரவு நேர வானமானது ஒவ்வொரு ஆண்டும் 10% அளவு பிரகாசமாகி வருகிறது.
- இந்த அதிகப்படியான செயற்கை ஒளியானது நட்சத்திரங்களை நமது கண்களுக்குச் சரியான முறையில் புலப்படாமல் செய்கிறது.
- இது மனிதர்களில் தூக்க சுழற்சி முறையைச் சீர்குலைக்கச் செய்து, பல உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழிவகுப்பத்தோடு, பூச்சிகளின் எண்ணிக்கையைப் பாதிப்பதால் மில்லியன் கணக்கான பறவைகளின் மரணத்திற்கு இது வழி வகுக்கிறது.

## ஊடுருவும் அயல் உயிரினங்கள் மற்றும் அவற்றின் கட்டுப்பாடு பற்றிய மதிப்பீட்டு அறிக்கை

- அரசுகளுக்கிடையேயான பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழல் சேவைகள் (IPBES) தளம் ஆனது இந்தப் புதிய அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- பல்வேறு மனித நடவடிக்கைகளால் உலகெங்கிலும் உள்ள பகுதிகள் மற்றும் உயிரினங்களுள் அறிமுகப்படுத்தப் பட்ட, தாவரங்கள் மற்றும் விலங்குகள் உட்பட 37,000

அயல் இனங்கள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

- இதில் 3,500க்கும் மேற்பட்ட ஊடுருவும் அயல் இனங்கள் அடங்கும் என்ற நிலையில் இந்த ஊடுருவும் அயல் இனங்களானது உலகளவில் பதிவான தாவர மற்றும் விலங்கின அழிவுகளில் 60% பங்கினை வகித்துள்ளன.
- ஊடுருவும் அயல் இனங்கள் ஆனது உலகளவில் பதிவான பல்லுயிர் இழப்பிற்கான ஐந்து முக்கிய நேரடிக் காரணிகளில் ஒன்றாகும்.
- அனைத்து வகையான ஊடுருவும் அயல் இனங்களும் பல்லுயிர்ப் பெருக்கம், உள் நாட்டுச் சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் இனங்கள் மீது எதிர்மறையானத் தாக்கங்களை ஏற்படுத்துவதும் பரப்புவதும் இல்லை.
- சுமார் 6% அயல் இன தாவரங்கள்; 22% அயல் இன முதுகெலும்பில்லாத உயிரினங்கள்; 14% அயல் இன முதுகெலும்பிகள்; மற்றும் 11% அயல் இன நுண்ணுயிர்கள் ஒரு சூழலமைவில் ஆக்கிரமிப்பு செய்த இனங்களாக அறியப்படுகிற நிலையில், இது இயற்கைக்கும் மக்களுக்கும் பெரும் ஆபத்துகளை ஏற்படுத்துகிறது.
- 1,200க்கும் மேற்பட்ட உள்ளூர் இனங்களின் அழிவிற்கு குறைந்தது 218 ஊடுருவும் அயல் இனங்கள் காரணமாக உள்ளன.
- உயிரியல் சூழலமைவில் ஊடுருவும் அயல் இனங்களின் தாக்கங்கள் ஆனது அமெரிக்காவில் 34 சதவீதமும், ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவில் 31 சதவீதமும், ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளில் 25 சதவீதமும், ஆப்பிரிக்காவில் சுமார் 7 சதவீதமும் பதிவாகியுள்ளன.
- நிலத்தின் மீது (சுமார் 75%) அதிகளவில் எதிர்மறையான தாக்கங்கள் பதிவாகியுள்ள நிலையில் நன்னீர் (14%) மற்றும் கடல்சார் (10%) வாழ்விடங்களில் கணிசமான அளவில் குறைவான தாக்கமே பதிவாகியுள்ளன.
- பெரும்பாலான நாடுகள் (80%) தங்களது தேசியப் பல்லுயிர்த் திட்டங்களில், ஊடுருவும் அயல் உயிரினங்களை மேலாண்மை செய்வது தொடர்பான இலக்குகளை உள்ளடக்கி உள்ளன.





## மூங்கிலில் இருந்து தயாரிக்கப்பட்ட மறுபயன்பாட்டு உறிஞ்சுக் குழாய்

- இந்தியத் தாவரவியல் ஆய்வு நிறுவனம் ஆனது, மூங்கிலில் இருந்து தயாரிக்கப்பட்ட மறுபயன்பாட்டு உறிஞ்சுக் குழாய்களுக்கான காப்புரிமையை பெற்றுள்ளது.

- மறுமுறை பயன்படுத்தக்கூடிய உறிஞ்சுக் குழாய் ஆனது, ஸ்கிசோஸ்டாச்சியம் அந்த மானிக்கம் எனப்படும் உள்நாட்டினைச் சேர்ந்த மூங்கில் தாவர வகைகளில் இருந்து உருவாக்கப் பட்டது.
- இது அந்தமான் நிக்கோபார் தீவுகளில் காணப்படுகிறது.
- நெகிழியினால் ஆன பல உறிஞ்சுக் குழாய்களுக்கு ஓர் இயற்கை வழி மாற்றாக இது அமைகிறது.



## அபிஸ் மெல்லிஃபெரா




- ஐரோப்பிய தேனீக்கள் (அபிஸ் மெல்லிஃபெரா) பயனுள்ள உயிரியல் கண்காணிப்பு முகவர்களாக செயல்படக்கூடியது.
- நகர்ப்புறங்களில் நுண்ணுயிர் எதிர்ப்பின் (AMR) பரவலைக் கண்டறிய அவை உதவுகின்றன.
- தேனீக்கள் முக்கிய நுண்ணுயிர் எதிர்ப்பு இயக்கிகளுடன் தொடர்புடைய மரபணுக் கூறுகளை தங்கள் செரிமானப் பாதையில் கொண்டு செல்லக்கூடியவை.
- AMR என்பது பாக்டீரியா மற்றும் பிற நுண்ணுயிரிகளைத் தடுக்க அல்லது கொல்ல பயன்படுத்தப்படும் மருந்துகளை எதிர்க்கும் திறன் என்பதாகும்.
- AMR நிலையின் அதீத அதிகரிப்பு ஆனது, 2050 ஆம் ஆண்டளவில் ஆண்டுதோறும் 10 மில்லியன் உயிரிழப்புகளுக்கு வழிவகுக்கும்.

## மின்மினிப் பூச்சி இனங்களின் மாபெரும் அணித்திரள்

- தமிழ்நாட்டின் ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தில் ஒவ்வோர் ஆண்டும் கோடை காலத்தில் நிகழும் பூச்சிகளின் மாபெரும் அணித் திரள் நடவடிக்கையும் அவற்றின் ஒரு ஒத்திசைவு மிக்க உயிரொளிர்வு நிகழ்வும் சமீபத்தில் தென்பட்டது.
- தனித்தனியான மரங்களில் மின்மினிப் பூச்சிகளின் ஒளிரும் வடிவங்களையும் (மேல் எழும்பும் அல்லது தரை இறங்கும்) மற்றும் அதன் ஒளிரும் நிகழ்வுகளின் நேரத்தையும் ஆராய்ச்சியாளர்கள் பதிவு செய்தனர்.
- அவர்கள் அந்தப் பூச்சிகளின் ஒத்திசைவுமிக்க நிகழ்வையும் ஆய்வு செய்தனர்.
- விரைவான அலைபாய்வு மற்றும் ஒளிரும் காட்சிகளின் காலக் கட்டம் போன்ற இனச் சேர்க்கை நடத்தைகளையும் ஆராய்ச்சியாளர்கள் இதில் பதிவு செய்தனர்.
- ஆனைமலை புலிகள் காப்பகத்தில் அசிமெட்ரிகா ஹூமரலிஸ், அப்ஸ்கோண்டிட்டா பேரினம் (இனப்பெயர் தெரியவில்லை) மற்றும் கர்டோஸ் எஸ்பி ஆகிய மூன்று வகையான மின்மினிப் பூச்சிகள் கண்டறியப் பட்டுள்ளன.



## குறைந்து வரும் கழுதைகளின் எண்ணிக்கை

- 2012 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் 9,183 கழுதைகள் இருந்தன.
- ஆனால் 2019 ஆம் ஆண்டில் அவற்றின் எண்ணிக்கை 1,428 ஆகக் குறைந்துள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள கழுதைகள் அடர் சாம்பல் நிறத்தில், முதுகில் சிலுவை அடையாளத்தினைக் கொண்டவை.
- தற்போது, இதன் உரிமையாளர்கள் அவற்றைப் பிற மாநிலங்களில் உள்ள கழுதை இனங்களுடன் இனக் கலப்பு செய்வதால் உள்ளூர் இனங்கள் அழிந்து போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
- கழுதைகளின் சாணத்தில் நுண்ணுயிரிகள் அதிகம் இருப்பதால், தொட்டிகள் நிரம்பி வழிவதைத் தடுப்பதற்காக கழிவுநீர் தொட்டிகளில் போடப் படுகின்றது.
- உலகம் முழுவதும், கழுதைப் பாலை ஒரு மூலப்பொருளாகக் கொண்ட அழகு சாதனப் பொருட்கள் பிரபலமாகவும், மிக விலை உயர்ந்தவையாகவும் உள்ளன.

## ஐக்கியப் பேரரசு – ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை நிதியம்

- வளர்ந்து வரும் நாடுகளுக்கு பருவநிலை மாற்றத்தை சமாளித்து எதிர்கொள்ள உதவும் வகையிலான பசுமை பருவநிலை நிதியத்திற்கு (GCF) 2 பில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்க உள்ளதாக பிரிட்டன் உறுதியளித்துள்ளது.
- பருவநிலை மாற்றத்தைச் சமாளிக்க உலக நாடுகளுக்கு உதவுவதற்காக ஐக்கியப் பேரரசு இன்று வரை செய்துள்ள மிகப்பெரிய ஒற்றை நிதி வழங்கீட்டு உறுதிப்பாடாக இது திகழும்.
- உலகின் மிகப்பெரிய நிதியமான பசுமை பருவநிலை நிதியம் (GFC) ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை மாற்றப் பேச்சுவார்த்தைகளின் கீழ் நிறுவப்பட்டது.
- கார்பன் உமிழ்வைக் குறைப்பதற்கும், தூய்மையான எரிசக்தி மூல ஆதாரங்களை உருவாக்குவதற்கும், வெப்பமயமாகி வரும் உலகிற்கு ஏற்றச் சூழலை அமைப்பதற்கும் ஏழ்மை நிலையில் உள்ள நாடுகளுக்குத் தேவையான நிதியை வழங்குவதற்கு இது பயன்படும்.
- ஏற்கனவே, 2021 மற்றும் 2026 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் சர்வதேசப் பருவநிலை நிதிக்காக 11.6 பில்லியன் பவுண்டுகள் (14.46 பில்லியன் அமெரிக்க டாலர்) நிதியை வழங்க பிரிட்டன் உறுதியளித்தது.

## காவேரி வனவிலங்குச் சரணாலயத்தில் வெள்ளை சம்பார் மான்


- காவேரி வனவிலங்கு சரணாலயத்தில் 'வெள்ளை' சம்பார் மான் (கடமான்) இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- காவேரி வனவிலங்குச் சரணாலயத்தின் சங்கமா பகுதியில் லூசிஸ்டிக் (தோல் வெளிர்ந்த) சாம்பார் மான் இருப்பதாக பதிவாகியுள்ளது.
- இந்த நிலப்பரப்பில் வெள்ளை நிற சம்பார் மான் இருப்பதற்கான முதல் ஆதாரப் புகைப்படப் பதிவு இதுவாகும்.
- லூசிசம் (தோல் வெளிர்தல்) என்பது விலங்குகளின் தோலில் உள்ள நிறமி இழப்பினால் வெள்ளை நிற அல்லது வெளிர் தோல் கொண்டு காணப்படும் நிலையாகும்.
- இந்த நிலையானது விலங்கின் வளர்ச்சியில் உள்ள குறைபாட்டால் உருவான புறத் தோற்றம் (ஒரு உயிரினத்தின் பண்பு) காரணமாக இயற்கையாகவே பிறப்பிலிருந்தே ஏற்படலாம்.
- இது விலங்குகளின் தோலில் மெலடோனின் என்ற இல்லாததால் ஏற்படும் ஒரு நிலையான வெண் தோல் குறைபாட்டிலிருந்து (அல்பினிசம்) வேறுபட்டது.

- இந்த விலங்குகள் இளஞ்சிவப்பு அல்லது சிவப்பு நிற கண்களைக் கொண்டுள்ளது.
- ஆனால் தோல் வெளிர்தல் கொண்ட விலங்குகள் இளஞ்சிவப்பு கண்களைக் கொண்டு இருக்காது.
- இதற்கு முன்பு 2014 ஆம் ஆண்டில் வெள்ளை சம்பார் மான் பந்திப்பூர் புலிகள் காப்பகத்தில் பதிவு செய்யப்பட்டது.




## WMO அமைப்பின் காற்றுத் தரம் மற்றும் பருவநிலை அறிக்கை

- உலக வானிலை அமைப்பின் சமீபத்திய அறிக்கையானது பருவநிலை மாற்றம், வெப்ப அலைகள், காட்டுத்தீ மற்றும் ஓசோன் பாதிப்பு உள்ளிட்ட அதிகரித்து வரும் காற்று மாசுபாடு ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பை எடுத்துரைக்கிறது.
- பருவநிலை மாற்றம் ஆனது வெப்ப அலைகள் உருவாகும் கால இடைவெளி மற்றும் தீவிரத்தை அதிகரிக்கிற நிலையில் இது காட்டுத்தீயின் அபாயத்தையும் அதன் தீவிரத்தையும் அதிகரிக்கிறது.
- காட்டுத் தீயில் இருந்து வரும் புகையில் காற்றின் தரம், ஆரோக்கியம், சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் பயிர்களின் மீது எதிர்மறையான பாதிப்பினை உண்டாக்கும் மாசுகள் உள்ளன.
- வெப்ப அலைகள் காற்றின் தரப் பிரச்சினைகளை அதிகப்படுத்தி, ஓசோன் மற்றும் நுண்துகள்கள் உற்பத்திக்கு வழிவகுக்கும்.
- அதிக வெப்பநிலை மற்றும் தூசுப்படல அளவுகளின் கலவையானது உலகளவில் மனித ஆரோக்கியத்தையும் வேளாண்மையினையும் பாதித்துள்ளது.
- இந்தியா மற்றும் சீனாவில் குறிப்பிடத்தக்க அளவில் அதிக பயிர் இழப்புகள் பதிவாகி உள்ளன.
- உலக வானிலை அமைப்பானது பருவநிலை மாற்றம் மற்றும் காற்றின் தரம் ஆகியவை ஒன்றோடொன்று தொடர்பு கொண்டிருப்பதை வலியுறுத்தி, இந்த இரண்டு சவால்களையும் எதிர்கொள்வதற்கான ஒருங்கிணைந்த தீர்வுகளை மேற்கொள்ளச் செய்யுமாறு உலக நாடுகளுக்கு அழைப்பு விடுக்கிறது.




**சீகூர் யானை வழித்தடம்**




- உச்ச நீதிமன்றம் நியமித்த குழுவானது, சமீபத்தில் இந்த வழித்தடத்தினைப் பாதுகாப்பதற்கு ஆதரவாக அறிக்கையளித்துள்ளது.
- இந்த குழுவானது, சமீபத்தில் சீகூர் யானை வழித்தடத்தில் உள்ள 12 தனியார் உல்லாச விடுதிகளைச் சட்டவிரோதமானது என்று அறிவித்தது.

- 2010 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட யானை வழித்தட அறிவிப்பின் செல்லுபடித் தன்மையை எதிர்த்து 12 உல்லாச விடுதிகளின் உரிமையாளர்கள் எழுப்பிய ஆட்சேபனைகளை இந்தக் குழு பரிசீலித்தது.
- இந்த வழித்தடத்தில், தென்னிந்தியாவின் மிக அருகி வரும் நிலையில் உள்ள மூன்று வகை கழுகு இனங்கள் மிகப்பெரிய எண்ணிக்கையில் காணப்படுகின்றன.

## இந்தியாவின் யானை வழித்தடங்கள் பற்றிய அறிக்கை





- இந்தியா நான்கு யானைகள் வாழும் பிராந்தியங்களைச் சேர்ந்த 15 மாநிலங்களில் குறைந்தது 150 யானை வழித் தடங்களைக் கொண்டுள்ளது.
- மேற்கு வங்காளம் இது போன்ற 26 வழித்தடங்களுடன் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- மத்திய அரசின் 2010 ஆம் ஆண்டு யானைகள் அதிரடிப் படை அறிக்கையானது (கஜா அறிக்கை) நாட்டில் 88 வழித்தடங்கள் இருப்பதாக பட்டியலிட்டுள்ளது.
- மொத்த வழித்தடங்களில், 15 பழுதடைந்துள்ளதோடு மேலும் அவற்றின் செயல் பாட்டை மீண்டும் தொடங்க மறுசீரமைப்பு முயற்சிகள் தேவைப்படுகின்றன.
- தற்போதுள்ள 18 வழித் தடங்களை யானைகள் பயன்படுத்தச் செய்வது தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை.
- பதிவு செய்யப்பட்ட 150 யானை வழித்தடங்களில் 126 வழித்தடங்கள் மாநிலங்களின் அரசியல் நிர்வாகம் சார்ந்த எல்லைக்குள் அமைந்துள்ள நிலையில் 19 வழித்தடங்கள் இரண்டு மாநிலங்களில் சேர்ந்தவாறு அமைந்துள்ளன.
- இந்தியாவிற்கும் நேபாளத்திற்கும் இடையே முதன்மையாக உத்தரப் பிரதேசத்தில் ஆறு எல்லை கடந்த வழித் தடங்கள் உள்ளன.

## ஆர்க்டிக்கிலிருந்து வருகை தரும் கடற்கரைப் பறவை




- கோயம்புத்தூரில் உள்ள குறிச்சி குளத்தில் ஒரு செங்கழுத்து உள்ளான் பறவை (ஃபாலரோப்பஸ் லோபாடஸ்) தென்பட்டுள்ளது.
- இது ஆர்க்டிக் பகுதியில் இனப்பெருக்கம் செய்யும் கரையோரப் பறவையாகும்.
- ஒரு தசாப்த கால இடைவெளிக்குப் பிறகு இந்தப் பறவை இங்கு தென்பட்டுள்ளதாக நம்பப் படுகிறது.
- கோயம்புத்தூரில் 2012 ஆம் ஆண்டுதான் இந்தப் பறவை இங்கு தென்பட்டதாகக் கூறப் படுகிறது.

## இதுவரை பதிவானதில் அதிக வெப்பமான கோடைக்காலம் – 2023




- 2023 ஆம் ஆண்டு கோடைக்காலமானது வட அரைக்கோளத்தின் வரலாற்றில் இதுவரை பதிவு செய்யப்பட்ட மிகவும் வெப்பமான கோடையாகும்.
- கடந்த மாதமானது, அறிவியலாளர்கள் இதுவரை நவீன கருவிகள் மூலம் பதிவு செய்த வெப்பமான ஆகஸ்ட் மாதமாகும்.
- இது இரண்டாவது வெப்பமான மாதமாகவும் அளவிடப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், கோடை மாத சராசரி வெப்பநிலையை விட வெப்ப நிலை 2.2 டிகிரி ஃபாரன்ஹீட் (1.2 டிகிரி செல்சியஸ்) உயர்ந்தது.
- இது தொழில்துறை காலத்திற்கு முந்தைய காலத்தின் சராசரியை விட சுமார் 1.5 டிகிரி செல்சியஸ் (2.7 டிகிரி பாரன்ஹீட்) அதிகமாக இருந்தது.
- 2023 ஆம் ஆண்டின் ஜூன் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலான காலகட்டமானது வரலாற்றில் இன்று வரையில் பதிவு செய்யப்பட்ட உலகின் வெப்பமான மூன்று மாத காலப்பகுதியைக் குறிக்கிறது.
- ஜூலை மாதத்தில் பதிவான சராசரி உலக வெப்பநிலையானது கடந்த நூற்றாண்டின் சராசரியை விட 2°F (1.1°C) அதிகமாக இருந்தது.

## இந்தியா முழுவதும் உள்ள யானை வழித்தடங்கள்





- 2010 ஆம் ஆண்டில் 88 ஆக இருந்த இந்தியாவின் யானை வழித்தடங்களின் எண்ணிக்கையானது 40% அதிகரித்து 150 ஆக உயர்ந்துள்ளது.
- 19% வழித்தடங்களை யானைகள் பயன்படுத்துவது குறைந்துள்ளதோடு மேலும் 10 வழித் தடங்களானது சேதங்கள் காரணமாக அவற்றிற்கு மறுசீரமைப்பு தேவைப் படுவதாக அறிக்கை குறிப்பிடுகிறது.
- மஹாராஷ்டிராவில் உள்ள விதர்பா, மத்தியப் பிரதேசம், வடக்கு ஆந்திரப் பிரதேசம் மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் போன்ற பகுதிகளில் யானை வாழ்பகுதிகளின் பரந்த விரிவாக்கமானது அனுசரிக்கப் பட்டது.
- மேற்கு வங்காளத்தில் மொத்தம் 26 யானைகள் வழித்தடங்கள் உள்ள நிலையில் இது இந்தியாவின் மொத்த வழித் தடங்களில் 17% ஆகும்.

## கடல்வாழ் டார்டிகிரேட்

- ஆராய்ச்சியாளர்கள் கடல்வாழ் டார்டிகிரேட்டின் (மெது நடையன்) புதிய இனத்தை அடையாளம் கண்டுள்ளனர்.
- இதற்கு மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவரும் அறிவியலாளருமான A.P.J. அப்துல் கலாம் அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- டார்டிகிரேட்கள் மைக்ரோமீட்டர் அளவில் காணப்படுகின்ற மிகச் சிறிய விலங்குகள் ஆகும்.

- இந்த இனங்கள் அவற்றின் அசாதாரண நெகிழ் திறன் மற்றும் உயிர் காப்புப் பண்புகளுக்காக பிரபலமாக அறியப்படுகின்றன.
- இந்தப் புதிய இனமானது தென்கிழக்கு தமிழகத்தின் மண்டபம் எனுமிடத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது.
- பாடிலிப்ஸ் இனத்தைச் சேர்ந்த இந்த இனத்திற்கு பாட்டிலிப்ஸ் கலாமி என்று பெயரிடப் பட்டுள்ளது.



## அழிவின் விளிம்பில் உள்ள உலகின் மிகப்பெரிய மலர் வகை




- உலகின் மிகப் பெரிய பூக்களில் சிலவற்றை உள்ளடக்கிய ராஃப்லேசியா என்ற மலர் இனம் அழிவின் விளிம்பில் உள்ளது.
- இதுவரையில் அறியப்பட்ட 42 ராஃப்லேசியா இனங்களில் 60% இனங்கள் மோசமான அழிவு நிலையை எதிர்கொள்கின்றன.
- ராஃப்லேசியா என்பது தென்கிழக்கு ஆசியாவைப் பூர்வீகமாகக் கொண்ட ஒட்டுண்ணி வகை பூக்கும் தாவரங்களின் இனமாகும்.
- ராஃப்லேசியா மலர் இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், மலேசியா, புருனே மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் பரவலாகக் காணப்படுகிறது.

- இந்தத் தாவரங்கள் அளவு மற்றும் எடையின் அடிப்படையில், உலகின் மிகப்பெரிய ஒற்றை மலர்களை உற்பத்தி செய்வதில் புகழ்பெற்றவையாகும்.
- அவற்றின் துர்நாற்றம் காரணமாக அவை பெரும்பாலும் "பிணப் பூக்கள்" என்று குறிப்பிடப் படுகின்றன.
- அளவில் மிகப் பெரிய இந்த மலர்கள், 3 அடி (கிட்டத்தட்ட 1 மீட்டர்) விட்டம் கொண்டவை மற்றும் 7 கிலோ வரை எடை கொண்டவை.

## ஆறாவது வெகுஜன அழிவின் அச்சுறுத்தல்

- ஆறாவது வெகுஜன அழிவின் அச்சுறுத்தலைப் பற்றி எச்சரிக்கும் "வாழ்க்கைக் கட்டமைப்பின்" அனைத்துக் கிளைகளையும் மனித இனம் இழந்து வருகிறது.
- இந்த ஆய்வு ஆனது பெரும்பாலும் சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தினால் (IUCN) அழிந்து விட்டதாக பட்டியலிடப்பட்ட உயிரினங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப் பட்டது என்பதோடு மேலும் இது முதுகெலும்பு கொண்ட உயிரினங்கள் (மீன்கள் தவிர்த்து) குறித்தும் கவனம் செலுத்துகிறது.
- சுமார் 34,600 இனங்களை உள்ளடக்கிய சுமார் 5,400 இனங்களில் 73 இனங்கள் கடந்த 500 ஆண்டுகளில் அழிந்து விட்டன.
- முந்தைய மில்லியன் ஆண்டுகளில் பதிவான அழிவு விகிதத்தின் அடிப்படையில் நமது மனித இனமானது இரண்டு வகைகளை இழக்க நேரிடும் என்றாலும் ஏற்கனவே நமது மனித இனம் 73 வகைகளை இழந்துவிட்டன.
- வெகுஜன அழிவு என்பது குறுகிய காலத்தில் 75 சதவீத உயிரினங்களின் இழப்பு என வரையறுக்கப் படுகிறது.



# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## வருடாந்திரக் காற்று தர வாழ்நாள் இழப்புக் குறியீடு

**WORST-HIT NATIONS**


| Country | PM2.5* | Years lost** |
|---|---|---|
| B'desh | 74 | 6.8 |
| India | 58.7 | 5.3 |
| Nepal | 51.7 | 4.6 |
| Pakistan | 44.7 | 3.9 |
| Mongolia | 36 | 3 |

- சிகாகோ பல்கலைக்கழகத்தின் எரிசக்தி கொள்கை நிறுவனம் ஆனது வருடாந்திரக் காற்று தர வாழ்நாள் இழப்புக் குறியீட்டு (AQLI) அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- தற்போதைய காற்று மாசுபாட்டின் நிலையானது உலக மனித ஆரோக்கியத்திற்கு குறிப்பிடத் தக்க அச்சுறுத்தலாக உள்ளது என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- நுண்ணியத் துகள் மாசுபாடு (PM2.5) குறித்த உலக சுகாதார அமைப்பின் வழி காட்டுதல்களை ஏற்பது உலகளவில் மக்களின் ஆயுட்காலத்தினை 2.3 ஆண்டுகள் வரை நீட்டிப்பதற்கு உதவும் என்பதை அறிக்கை எடுத்துரைக்கிறது.
- இது மொத்தமாக 17.8 பில்லியன் ஆண்டுகள் ஆயுட்காலத்தினைப் பாதுகாக்க வழி வகுக்கும்.
- வங்காளதேசம், இந்தியா, பாகிஸ்தான், சீனா, நைஜீரியா மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் தான் மக்களின் ஆயுட்காலம் மீது காற்றுத் தரத்தினால் ஏற்படும் அதிகளவிலான தாக்கம் பதிவாகியுள்ளது.
- இந்த 6 நாடுகளும் ஆயுட்காலம் மீதான காற்று மாசுபாட்டின் தாக்கம் அதிகம் காணப் படும் மையப்பகுதிகளாகும்.
- இந்த நாடுகளில், குடிமக்கள் மாசுபட்ட காற்றினைச் சுவாசிப்பதன் காரணமாக ஒன்று முதல் ஆறு வருடங்கள் வரையிலான வாழ்நாள் இழப்பு பதிவாகியுள்ளது.

## G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகளின் நிலக்கரி சார் மின் உற்பத்தி உமிழ்வின் தலா விகித மாற்றங்கள்

- உலக எரிசக்தி ஆலோசனை வழங்கீட்டுக் குழுமமான 'எம்பர்' இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இது தூய மின்சார ஆற்றலை நோக்கிய உலக நாடுகளின் மாற்றத்தை எடுத்து உரைக்கிறது.
- G20 அமைப்பின் சில உறுப்பினர் நாடுகள் 2015 ஆம் ஆண்டிலிருந்து நிலக்கரி சார் மின் உற்பத்தி உமிழ்வின் தலா விகிதத்தினை குறைத்துள்ளன.

- இருப்பினும் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடச் செய்கையில் 2022 ஆம் ஆண்டில் இந்திய நாட்டின் நிலக்கரி சார் மின் உற்பத்தி உமிழ்வின் தலா விகிதம் 29% அதிகரித்துள்ளது.
- G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகள் ஒட்டுமொத்தமாக, நிலக்கரி சார் மின் உற்பத்தி உமிழ்வில் 9% உயர்வை எதிர்கொண்டுள்ளன.
- அவை 2022 ஆம் ஆண்டில் 1.6 டன் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வின் அளவில் தலா விகிதத்தினை எட்டியுள்ளன.
- G20 அமைப்பின் நாடுகளானது, உலக நாடுகளின் மின் துறையின் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வில் தோராயமாக 80% பங்கினைக் கொண்டுள்ளன.
- ஆஸ்திரேலியா மற்றும் தென் கொரியா ஆகியவை நிலக்கரி சார்ந்த மாசுபாட்டில் உலக சராசரியை விட மூன்று மடங்கு அதிக அளவு பாங்குடன் முன்னணியில் உள்ளதையடுத்து, மிக மோசமான அளவில் மாசுபாட்டினை ஏற்படுத்தும் நாடுகளாக குறிப்பிடப்பட்டன.
- 2015 ஆம் ஆண்டு முதல் இந்த இரு நாடுகளும் தங்களின் நிலக்கரி சார் மின் உற்பத்தி உமிழ்வினை தலா விகிதங்களை முறையே 26% மற்றும் 10% வரை குறைத்துள்ளன.
- அதே காலகட்டத்தில் சீனாவின் நிலக்கரி சார் மின் உற்பத்தி உமிழ்வு தலா விகிதம் 30% அதிகரித்துள்ளது.




## பாலினச் சமத்துவத் தகவல் விளக்கப் படம் 2023 அறிக்கை

- ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை ஆகியவற்றினால் 'நிலையான மேம்பாட்டு இலக்குகளின் முன்னேற்றம்: பாலினச் சமத்துவ தகவல் விளக்கப் படம் 2023' அறிக்கை என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் பாலினச் சமத்துவத்தை அடைதல் என்ற இலக்கினை எட்டச் செய்வதற்கான பல நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது.
- 2023 ஆம் ஆண்டில், உலகளவில் 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களில் 55.7% பேர் பெண்கள் ஆவர்.

- இன்று ஒவ்வொரு பத்து பெண்களில் ஒருவர், அதாவது 10.3% பேர், வறுமை மிகுந்த நிலையில் வாழ்கின்றனர்.
- தற்போதைய போக்குகள் தொடர்ந்தால், 2030 ஆம் ஆண்டில் உலகின் 8% பெண்கள் இன்னும் கடுமையான வறுமை நிலையில் வாழ்வார்கள் என்று இந்த அறிக்கையில் கணிக்கப்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் உலகளவில் 129 மில்லியன் பெண்கள் மற்றும் இளம் பெண்கள் பள்ளிகளில் கல்வி பயிலாமல் உள்ளதாக அறிக்கை கூறுகிறது.
- தற்போதைய போக்குகள் தொடர்ந்தால், 2030 ஆம் ஆண்டில் சுமார் 110 மில்லியன் பேர் பள்ளிகளில் கல்வி பயில இயலாமல் இருப்பர்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் உலகின் பல முக்கியப் பகுதிகளில் பாலினச் சமத்துவத்தை அடைவதற்காக 48 வளர்ந்து வரும் நாடுகளில் ஆண்டிற்கு 6.4 டிரில்லியன் அமெரிக்க டாலர் தேவைப்படுகிறது.
- 2050 ஆம் ஆண்டில், உலகில் 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய 1.6 பில்லியன் நபர்கள் இருப்பர் என்ற நிலையில் அவர்களில் 78.1% பேர் குறைவான வளர்ச்சியடைந்த நாடுகளில் வசிப்பர்.
- 27 நாடுகளில் மட்டுமே, பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றைக் கண்காணிக்கவும், நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதற்குமான விரிவான கட்டமைப்புகள் உள்ளன.
- தொழிலாளர் வளத்தில் பணிக்குச் செல்லும் வயதிலான ஆண்களின் பங்கு சுமார் 90 சதவீதமாக இருக்கையில், அதில் பணிக்குச் செல்லும் வயதிலான பெண்களின் பங்கு 61.4% மட்டுமே ஆகும்.



## உலக உணவு விலைக் குறியீடு


- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆனது இந்த விலைக் குறியீட்டினை வெளியிட்டுள்ளது.
- உலகளவில் அதிகம் வர்த்தகம் செய்யப்படும் உணவுப் பொருட்களின் விலையினை இது மதிப்பிடுகிறது.
- இது தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பால் பொருட்கள், இறைச்சி மற்றும் சர்க்கரை ஆகிய ஐந்து பொருட்களின் சராசரி விலைக் குறியீடுகளைக் கொண்டு உள்ளது.
- ஆகஸ்ட் மாத விலை மதிப்பு ஆனது 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பிறகு பதிவான மிகக் குறைவான மதிப்பாகும்.
- உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை அடுத்து 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் எட்டப்பட்ட இதுவரை பதிவான அனைத்து உச்சத்தினையும் விட இது 24% குறைவாக உள்ளது.
- இந்த ஆண்டு உலக தானிய உற்பத்தி 2.815 பில்லியன் டன்களாக இருக்கும் என உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு கணித்துள்ளது.
- இது முந்தைய மதிப்பீட்டான 2.819 பில்லியனில் இருந்து சற்று குறைவாகும்.




## உலகளாவிய காலமுறை மறுமதிப்பீட்டு அறிக்கை

- ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை செயலகமானது ஒரு தொகுப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்தத் தொகுப்பு அறிக்கை ஆனது ' உலகளாவிய காலமுறை மறுமதிப்பீடு' எனப்படும் ஒரு மாபெரும் நடவடிக்கையுடன் இணைந்து மேற்கொள்ளப்படுகிறது.
- இது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- 2015 ஆம் ஆண்டில், பாரிசு நகரில் நடைபெற்ற மாநாட்டில் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் புவியின் வெப்பநிலையானது 2 டிகிரி செல்சியஸுக்கு அப்பால் உயராமல் இருக்கவும், "முடிந்தவரையில்" சுமார் 1.5 டிகிரி செல்சியஸுக்குக் குறைவாகவும் வைத்திருப்பதற்கான உறுதிப்பாட்டினை உலக நாடுகள் மேற்கொண்டன.


- ❖ பசுமை இல்ல வாயுக்கள் மற்றும் அவற்றின் புதைபடிவ எரிபொருள் சார்ந்த ஆற்றல் அமைப்புகளைப் புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களுக்கு மாற்றுவதில் தனிப்பட்ட நாடுகளால் மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புகளை அவ்வப்போது மதிப்பாய்வு செய்யவும் அல்லது மறுமதிப்பீடு செய்யவும் அந்நாடுகள் ஒப்புக்கொண்டன.
- ❖ பாரீஸ் ஒப்பந்த இலக்குகளை அடைவதற்கான பாதையில் உலக நாடுகள் செயல்படவில்லை என்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது.
- ❖ 166 நாடுகளின் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்டப் பங்களிப்புகள் பரிசீலனை செய்யப்பட்டு, பாரீஸ் ஒப்பந்தத்தில் ஒப்புக் கொண்ட இலக்குகளை அடைய அவை போதுமானதாக இல்லை என்ற கூறப்பட்டது.
- ❖ 2030 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய பசுமை இல்ல வாயு உமிழ்வினை 43% குறைப்பதற்கு அதிக லட்சியப் போக்கு மிக்க நடவடிக்கை தேவைப்படுகிறது.
- ❖ மேலும் 2035 ஆம் ஆண்டிற்குள் 60% குறைப்பதற்கும் மற்றும் 2050 ஆம் ஆண்டில் உலகளவில் நிகர சுழி அளவிலான $CO_2$ உமிழ்வை எட்டவும் அதிக லட்சியப் போக்கு மிக்க நடவடிக்கை தேவைப்படுகிறது.
- ❖ 2030 ஆம் ஆண்டிற்கு முந்தைய காலகட்டத்தில் வளர்ந்து வரும் நாடுகள் இந்த இலக்கை அடைய 5.8-5.9 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் தேவைப்படுகிறது.
- ❖ மேலும், 2050 ஆம் ஆண்டில் நிகர சுழி உமிழ்வு நிலையை அடைவதற்காக 2030 ஆம் ஆண்டிற்குள் தூய்மையான எரிசக்தி தொழில்நுட்பங்களை நிறுவ ஆண்டிற்கு 4 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் தேவை என இந்த அறிக்கை கூறுகிறது.




## உலக இணைய சங்கேதப் பண ஏற்புக் குறியீடு 2023

- ❖ அடிப்படை இணைய சங்கேதப் பண ஏற்பிற்கான மதிப்பீட்டுப் பட்டியலில் இடம் பெற்ற 154 நாடுகளில் இந்தியா முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
- ❖ இது சவாலான ஒழுங்குமுறை நிலைமைகளை எதிர்கொள்வதில் உள்ள குறிப்பிடத் தக்க நெகிழ்திறனைக் குறிக்கிறது.
- ❖ இது கடந்த ஆண்டைக் காட்டிலும் குறிப்பிடத் தக்க மீட்சியைக் குறிக்கிறது.
- ❖ செயின் அநாலிசிஸ் நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டு ஏற்புக் குறியீட்டில் இந்தியா நான்காவது இடத்தினைப் பெற்றிருந்தது.

- இந்தியாவினையடுத்து நைஜீரியா, வியட்நாம், அமெரிக்கா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகள் இந்தத் தரவரிசையில் முதல் 5 இடங்களைப் பிடித்தன.
- 2022 ஆம் ஆண்டு FTX திவாலானதை தொடர்ந்து, முதன்மையாக குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில், அடிப்படை இணையச் சங்கேதப் பண ஏற்பு நிலை மீண்டு வருவதை இந்த அறிக்கை எடுத்துரைக்கிறது.
- அடிப்படை இணையச் சங்கேதப் பண ஏற்பு என்பது அன்றாட வாழ்வில் இணையச் சங்கேதப் பண முறைகளை பரவலான அளவில் ஏற்றுக் கொள்ளல் மற்றும் அதன் பயன்பாடு ஆகும்.




## HungerMap LIVE : உலகளாவியத் தகவல்கள் மற்றும் முக்கியப் போக்குகள்

- உலக உணவுத் திட்ட அமைப்பானது “HungerMap LIVE: உலகளாவியத் தகவல்கள் மற்றும் முக்கியப் போக்குகள்” என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இது கடுமையான பட்டினி நிலையின் முக்கியக் குறிகாட்டிகளைக் கண்காணிக்கும் நிகழ்நேரக் கண்காணிப்பு அமைப்பு ஆகும்.
- இதில் வீடுகளில் உணவு நுகர்வு, வாழ்வாதாரம், குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை, குழந்தை இறப்பு மற்றும் தூய்மையான குடிநீருக்கான அணுகல் ஆகியவை அடங்கும்.
- உலகளாவியப் பிரச்சினையான பட்டினி நிலை மற்றும் உணவுப் பாதுகாப்பின்மை 2015 ஆம் ஆண்டு முதல் ஆபத்தான முறையில் அதிகரித்து வருகிறது.
- இந்தப் போக்குகள் பெருந்தொற்று, மோதல்கள், பருவநிலை மாற்றம் மற்றும் உள்ளார்ந்த ஏற்றத்தாழ்வுகள் உள்ளிட்ட காரணிகளின் கலப்பினால் தீவிரம் அடைகின்ற நிலையில் இது உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதற்கான காரணியாக அமைகின்றது.
- இந்த அறிக்கையின் கண்டுபிடிப்புகளின்படி, உலகளவில் 828 மில்லியன் பேர் நாள் பட்ட பட்டினி நிலையில் உள்ளனர்.
- 53 நாடுகளில் 193 மில்லியன் பேர் கடுமையான பட்டினி நிலையை எதிர் கொள்ளச் செய்கின்றனர்.
- 12 நாடுகளில் வாழும் மக்களின் மொத்த எண்ணிக்கையில் 33% பேர் போதிய உணவு உட்கொள்ளாத நிலையில் உள்ளனர் .
- சோமாலியா, ஆப்கானிஸ்தான், சிரிய அரபுக் குடியரசு, நைஜர், மாலி, ஹைத்தி மற்றும் சில நாடுகளில் உணவுப் பற்றாக்குறை அதிகமாக உள்ளது.

- மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, சிரிய அரபுக் குடியரசு, நமீபியா மற்றும் பிற நாடுகளில் சந்தைகளை அணுகுவதில் அதிக சவால்கள் உள்ளன.




## உலகின் சிறந்த நாடுகள் அறிக்கை 2023




- அமெரிக்கச் செய்தி மற்றும் உலக அறிக்கை என்ற அமைப்பானது, உலகின் சிறந்த நாடுகளின் தரவரிசையை வெளியிட்டுள்ளது.
- சுவிட்சர்லாந்து, தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக உலகின் சிறந்த நாடாக இடம் பெற்றுள்ளது.
- 2017 முதல் 2020 ஆம் ஆண்டு வரையில், அதாவது 2021 ஆம் ஆண்டில் கனடா முதலிடம் பெறும் வரை முதல் இடத்தில் சுவிட்சர்லாந்து இடம் பெற்றிருந்தது.
- உலகின் இரண்டாவது சிறந்த நாடாக கனடா பட்டியலிடப் பட்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து சுவீடன் 3வது இடத்திலும், ஆஸ்திரேலியா 4வது இடத்திலும், அமெரிக்கா 5வது இடத்திலும் உள்ளன.
- இந்தியா இந்தத் தரவரிசையில் ஒரு இடம் முன்னேறி 30வது இடத்தைப் பிடித்துள்ளது.

## டிஜிட்டல் தரக் குறியீடு 2023

- இணையப் பாதுகாப்பு நிறுவனமான சர்ப்ஷார்க், டிஜிட்டல் வாழ்க்கைத் தரக் குறியீட்டினை (DQL) வெளியிட்டுள்ளது.

- இந்த வருடாந்திர ஆய்வானது உலகம் முழுவதும் 121 நாடுகளை தர வரிசைப் படுத்துகிறது.
- இந்தப் பட்டியலில் பிரான்சு முதலிடத்திலும், பின்லாந்து, டென்மார்க், ஜெர்மனி, லக்சம்பர்க் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.
- இந்தக் குறியீட்டில் இந்தியா 52வது இடத்தில் உள்ளது.
- ஆசியாவில், இந்தியா 13வது இடத்தைப் பிடித்துள்ளது. பிராந்திய அளவில் சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது.
- இந்தியாவின் இணையத் தரம் ஆனது உலகளவில் 16வது இடத்திலும் உலக சராசரியை விட 36 சதவீதம் அதிகமாகவும் உள்ளது.
- இந்தியா இணைய அணுகளில் 28வது இடத்திலும், இணைய வழி அரசாங்கத்தில் 35வது இடத்திலும், இணைய வெளிப் பாதுகாப்பில் 66வது இடத்திலும் உள்ளது.
- ஆனால் இந்தியா இணைய உள்கட்டமைப்பில் சவால்களை எதிர்கொண்டு 91வது இடத்தில் உள்ளது.

**Top 10**

| Rank 2023 (Out of 121) | Country | Rank Changes from 2022 | 2023 DQL Index score |
|---|---|---|---|
| 1 | France | ▲3 | 0.7902 |
| 2 | Finland | ▲5 | 0.7483 |
| 3 | Denmark | ▼1 | 0.7377 |
| 4 | Germany | ▼1 | 0.7357 |
| 5 | Luxembourg | ▲13 | 0.7357 |
| 6 | Spain | ▲10 | 0.7232 |
| 7 | Estonia | ▲7 | 0.7185 |
| 8 | Austria | ▲14 | 0.7166 |
| 9 | Switzerland | ▲4 | 0.7106 |
| 10 | Singapore | ▲5 | 0.7096 |

**Bottom 10**


| Rank 2023 (Out of 121) | Country | Rank Changes from 2022 | 2023 DQL Index score |
|---|---|---|---|
| 121 | Yemen | ▼5 | 0.1705 |
| 120 | Dem. Rep. of the Congo | ▼3 | 0.1824 |
| 119 | Mozambique | ▼5 | 0.2158 |
| 118 | Ethiopia | ▼3 | 0.2205 |
| 117 | Tajikistan | ▼5 | 0.2315 |
| 116 | Cameroon | ▼3 | 0.2347 |
| 115 | Zimbabwe | ▼6 | 0.2563 |
| 114 | Honduras | ▼6 | 0.2587 |
| 113 | Tanzania | ▼6 | 0.2695 |
| 112 | Mali | ▼10 | 0.2735 |

## உலகின் சுதந்திரமான பொருளாதாரம்

- சிங்கப்பூர் நாடானது, ஹாங்காங்கைப் பின்னுக்குத் தள்ளி உலகின் சுதந்திரமானப் பொருளாதாரமாக மாறியுள்ளது.
- கனடா நாட்டினைச் சேர்ந்த ஆலோசனை வழங்கீட்டுக் குழுவான ஃப்ரேசர் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி இத்தகவல் கூறப்பட்டுள்ளது.
- 1970 ஆம் ஆண்டில் பொருளாதாரச் சுதந்திரக் குறியீடு தொடங்கியதிலிருந்து முதல் முறையாக ஹாங்காங் முதலிடத்திலிருந்து இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டு உள்ளது.
- சுவிட்சர்லாந்து, நியூசிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் முறையே மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களைப் பெற்றுள்ளன.

| | Ranking | Economic Freedom Scores |
|---|---|---|
| 1 | Singapore | 8.56 |
| 2 | Hong Kong | 8.55 |
| 3 | Switzerland | 8.47 |
| 4 | New Zealand | 8.43 |
| 5 | United States | 8.14 |
| 6 | Ireland | 8.11 |
| 7 | Denmark | 8.1 |
| 8 | Australia | 8.0 |
| 9 | United Kingdom | 8.0 |
| 10 | Canada | 7.98 |

## உயர் இரத்த அழுத்தம் பற்றிய உலகளாவிய அறிக்கை




- உலக சுகாதார அமைப்பானது (WHO), உயர் இரத்த அழுத்தத்தின் பேரழிவு மிக்க தாக்கம் குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 'உயர் இரத்த அழுத்தம் குறித்த உலகளாவிய அறிக்கை: அமைதியான உயிர்க் கொல்லிக்கு எதிரான போராட்டம்' என்ற தலைப்பில் இந்த அறிக்கை வெளியிடப் பட்டு உள்ளது.
- ஒத்த வயதுடைய 188.3 மில்லியன் மக்கள் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப் பட்டு உள்ளனர்.
- இந்தியர்களில் 37 சதவீதம் பேர் மட்டுமே சரியான நேரத்தில் இந்த நோய் இருப்பதைக் கண்டறிந்துள்ள நிலையில் அவர்களில் 30 சதவீதம் பேர் அதற்கான சிகிச்சையினைப் பெறுகிறார்கள்.
- உலக நாடுகள் இதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகளை அதிகப்படுத்தினால் 2050 ஆம் ஆண்டிற்குள் 76 மில்லியன் இறப்புகளைத் தவிர்க்கலாம்.

- இந்தியாவில், உயர் இரத்த அழுத்தம் உள்ள 30 முதல் 79 வயதுக்குட்பட்டவர்களில் கிட்டத்தட்ட பாதி பேர் தங்கள் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த முடிந்தால், 2040 ஆம் ஆண்டிற்குள் குறைந்தது 40 மில்லியன் இறப்புகளைத் தடுக்க முடியும்.
- 50 சதவீதக் கட்டுப்பாட்டு விகிதத்தை அடைய, உயர் இரத்த அழுத்தம் உள்ள 67 மில்லியன் மக்கள் திறம்பட்ட முறையிலான சிகிச்சையினைப் பெற வேண்டும்.
- 140/90 mmHg அல்லது அதற்கும் அதிகமாக இரத்த அழுத்தம் கொண்ட நபர்களின் தரவுகளின் மீதான பகுப்பாய்வின் அடிப்படையில் உலக சுகாதார அமைப்பின் இந்த அறிக்கையானது வெளியிடப் பட்டுள்ளது.
- உயர் இரத்த அழுத்தம் ஆனது பக்கவாதம், மாரடைப்பு, இதயச் செயலிழப்பு, சிறுநீரகப் பாதிப்பு மற்றும் பல உடல்நலப் பிரச்சனைகளுக்கு வழி வகுக்கிறது.

## TIME இதழின் உலகின் சிறந்த நிறுவனங்கள் 2023

- TIME இதழின் 2023 ஆம் ஆண்டின் உலகின் சிறந்த நிறுவனங்களின் பட்டியலில் முதல் 100 இடங்களில் உள்ள ஒரே இந்திய நிறுவனம் இன்ஃபோசிஸ் ஆகும்.
- இந்தத் தகவல் தொழில்நுட்பச் சேவை நிறுவனமானது இப்பட்டியலில் இடம் பெற்ற மொத்தம் 750 உலக நிறுவனங்களில் 64வது இடத்தில் உள்ளது.
- மைக்ரோசாஃப்ட், ஆப்பிள், ஆல்ஃபபெட்(கூகிள்) மற்றும் மெட்டா இணையதளம் (முக நூல்) ஆகியவை இந்தப் பட்டியலில் முதல் 4 இடங்களில் உள்ள நிறுவனங்களாகும்.
- இந்தப் பட்டியலில் விப்ரோ நிறுவனம் 174வது இடத்திலும், ஆனந்த் மஹிந்திரா தலைமையிலான மஹிந்திரா குழுமம் 210 வது இடத்திலும் உள்ளன.
- ரிலையன்ஸ் நிறுவனம் 248வது இடத்திலும், HCL டெக்னாலஜிஸ் 262வது இடத்திலும், HDFC வங்கி 418வது இடத்திலும், WNS குளோபல் சர்வீசஸ் நிறுவனம் 596வது இடத்திலும், இறுதியாக ITC நிறுவனம் 672வது இடத்திலும் உள்ளன.


## குழந்தைகளின் பண வறுமையின் உலகளாவியப் போக்குகள்

Table 2: Extreme poverty (PPP $2.15) in 2022, by age groups

| | Age group | Extreme poor (millions) | Headcount poverty rate (%) | Share of extreme poor (%) | Share of population (%) | Poverty Gap ratio |
|---|---|---|---|---|---|---|
| 0_17 | Children 0-17 | 333.34 | 15.9 | 52.5 | 31.6 | 5.1 |
| 0_4 | Children 0-4 | 99.34 | 18.3 | 15.8 | 8.2 | 6.0 |
| 5_9 | Children 5-9 | 105.04 | 17.1 | 17 | 9.3 | 5.6 |
| 10_14 | Children 10-14 | 88.75 | 14.7 | 14.1 | 9.1 | 4.7 |
| 15_17 | Children 15-17 | 40.21 | 11.9 | 6.4 | 5.1 | 3.6 |
| 18plus | Adults (18 or more) | 301.43 | 6.6 | 47.5 | 68.4 | 1.9 |
| 18_59 | Adults 18-59 | 264.43 | 7.1 | 42 | 56.4 | 2.1 |
| 60plus | Adults 60 or more | 31.55 | 4.0 | 5.0 | 12.0 | 1.1 |
| **Total** | **Total** | **629.32** | **9.48** | **100.00** | **100.00** | 2.9 |

- உலக வங்கி குழு மற்றும் UNICEF யுனிசெஃப் ஆகியவற்றினால் தயாரிக்கப்பட்ட சர்வதேச வறுமைக் கோடு வரம்பின் படி குழந்தைகளின் பண வறுமையின் உலகளாவியப் போக்குகள் என்ற அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- உலகின் மிக ஏழ்மையான மக்கள் தொகையின் எண்ணிக்கையானது குழந்தைகளின் எண்ணிக்கையால் அதிகரித்து வருகிறது.
- குழந்தைகளின் வறுமை குறித்த சமீபத்திய மதிப்பீடு ஆனது 2.15 டாலர் என்ற புதிய வறுமைக் கோடு வரம்பின் அடிப்படையில் அமைந்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், உலகின் மொத்த ஏழை மக்கள் தொகையில் 52.5 சதவீதம் பேர் குழந்தைகளாக உள்ளனர்.
- 2022 ஆம் ஆண்டில், உலகில் உள்ள குழந்தைகள் எண்ணிக்கையில் 15.9 சதவீதம் பேர் மிகவும் ஏழ்மையான குடும்பங்களில் வாழ்ந்தனர் என்ற நிலையில் இது வளர் இளம் பருவத்தினர் மத்தியில் 6.6 சதவீதமாக இருந்தது.
- இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி, 11.5 சதவீதக் குழந்தைகள் மிகவும் ஏழ்மையான குடும்பங்களில் வாழ்கின்றனர்.
- எண்ணிக்கையில், 52 மில்லியன் இந்தியக் குழந்தைகள் ஏழைகளாக உள்ளனர்.
- மிகவும் ஏழ்மையான குடும்பங்களில் வாழும் குழந்தைகளில் 18.3 சதவீதம் (99 மில்லியன்) பேர் ஐந்து வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.
- 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 2.15 டாலர் என்ற புதிய வறுமைக் கோடு வரம்பில் உள்ள சராசரி வறுமை இடைவெளியானது வளர் இளம் பருவத்தினரை விட (1.9 சதவீதம்) அதிகமாக 5.1 சதவீதம் என்ற அளவில் உள்ளது.

## சர்வதேசச் சுற்றுலா சிறப்பம்சங்கள் – 2023




- ஐக்கிய நாடுகள் சபையின் உலகச் சுற்றுலா அமைப்பு (UNWTO) ஆனது சமீபத்தில் சர்வதேசச் சுற்றுலா குறித்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- கோவிட்-19 பெருந்தொற்றினால் பெரிதும் பாதிக்கப்பட்ட தொழில்துறைகளில் சுற்றுலாத் துறையும் ஒன்றாகும் என்ற நிலையில் இத்துறையானது அதன் ஏற்றுமதி வருவாயில் 2.6 டிரில்லியன் டாலர் மதிப்பினை இழந்தது.

- 2019 ஆம் ஆண்டில் 1.5 பில்லியனாக இருந்த, சர்வதேசச் சுற்றுலாப் பயணிகள் வருகை அல்லது ஒருநாள் பார்வையாளர்களின் வருகையானது 2020 ஆம் ஆண்டில் 400 மில்லியனாகக் குறைந்துள்ளது.
- இது ஒரு வருடத்தில் பதிவான 72 சதவீத வீழ்ச்சியாகும்.
- 2020 ஆம் ஆண்டில் பதிவான ஏற்றுமதி வருவாய் ஆனது பெருந்தொற்றிற்கு முந்தைய நிலைகளில் 62 சதவீதமாகக் குறைந்துள்ள நிலையில், 1.1 டிரில்லியன் டாலர் இழப்பு என்பது அதில் பதிவாகியுள்ளது.
- இது அந்த ஆண்டு சர்வதேச வர்த்தகத்தில் ஏற்பட்ட உலகளாவிய இழப்பில் 44 சதவீதமாகும்.
- சர்வதேசச் சுற்றுலா துறையின் வருவாய் ஆனது 2019 ஆம் ஆண்டில் பதிவான உலகளாவிய ஏற்றுமதியில் ஏழு சதவீத பங்கினை கொண்டுள்ளது.
- 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் இந்த விகிதம் மூன்று சதவீதமாகக் குறைந்து உள்ளது.
- சர்வதேசச் சுற்றுலா ஆனது 2021 ஆம் ஆண்டில் 12 சதவீதம் அதிகரித்து 456 மில்லியன் வருகையை எட்டியுள்ளது.
- இது 2020 ஆம் ஆண்டில் பதிவானதை விட 49 மில்லியன் அதிகமாக இருந்தாலும், 2019 ஆம் ஆண்டின் பெருந்தொற்றிற்கு முந்தைய நிலைகளை விட (1,465 மில்லியன்) 69 சதவீதம் குறைவாக உள்ளது.
- பெருந்தொற்றின் காரணமாக, 2019 ஆம் ஆண்டில் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீதமாக இருந்த சுற்றுலா நேரடி மொத்த உள்நாட்டு உற்பத்தி (TDGDP) அளவில் மதிப்பிடப்படும் சுற்றுலாத் துறையின் பொருளாதாரப் பங்களிப்பு ஆனது, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## சூரியசக்தியில் இயங்கும் மேற்கூரைகளுடன் கூடிய மிதிவண்டி ஓட்டுதல் வழித் தடம்


- ஹைதராபாத் நகரின் வெளிவட்டச் சாலைக்கு அருகில் முதல் முறையாக நிலையான சூரிய சக்தியில் இயங்கும் மேற்கூரைகளுடன் கூடிய மிதிவண்டி ஓட்டுதல் வழித் தடம் அமைக்கப்பட்டுள்ளது.
- இது சூரியசக்தியில் இயங்கும் மேற்கூரைகள் கொண்ட ஒரு தென் கொரிய இருசக்கர வாகன நெடுஞ்சாலை என்ற கருத்தாக்கத்தின் ஈரப்பினால் கட்டமைக்கப் பட்டுள்ளது.
- இது சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு சிறந்த அனுபவத்தினை வழங்கச் செய்வதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது.




## ஷினோன் மீராஸ்

- ஜம்மு காஷ்மீரில் 'ஷினோன் மீராஸ்' எனப்படும் ஷைனா கலாச்சார மையம் திறக்கப் பட்டுள்ளது.
- இது தார்ட்-ஷின் என்ற சமூகத்தினருக்காக இந்திய இராணுவம் மற்றும் அம்மாவட்ட நிர்வாகம் ஆகியவற்றினால் இணைந்து உருவாக்கப்பட்டது.
- இந்தக் கலாச்சார மையமானது, தார்ட்-ஷின் பழங்குடிச் சமூகத்தின் மிகப் புகழ்பெற்ற கலைப் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் வேண்டி அர்ப்பணிக்கப் பட்ட ஒரு அமைப்பாகும்.

## சோக்குவா அரிசிக்குப் புவிசார் குறியீடு



- அசாமின் புகழ்பெற்ற "மந்திர அரிசி" எனப்படும் சோக்குவா என்ற அரிசி வகைக்குச் சமீபத்தில் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- இந்த தனித்துவ அரிசி வகையானது, வலிமை மிக்க அஹோம் வம்சத்தின் மக்களிடையே பிரதான உணவாக இருந்து வருகிறது.
- இந்த தனித்துவமான மற்றும் ஆரோக்கியமிக்க அரிசி வகையானது பிரம்மபுத்திரா நதியைச் சுற்றியுள்ளப் பகுதிகளில் பயிரிடப் படுகிறது.
- இது டின்சுகியா, தேமாஜி, திப்ருகார் மற்றும் அதன் பிற பகுதிகள் போன்ற அசாம் மாநிலத்தின் பல பகுதிகளிலும் பயிரிடப் படுகிறது.
- இந்தத் தானியத்தைக் குளிர்ந்த அல்லது வெதுவெதுப்பான நீரில் ஊறவைத்த பிறகு அப்படியே உட்கொள்ள இயலும்.

## அந்நிய நேரடி முதலீட்டினை ஈர்ப்பதில் முன்னணி மாநிலம்

- 2023-24 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில், அந்நிய நேரடி முதலீட்டினை (FDI) ஈர்ப்பதில் மகாராஷ்டிரா மாநிலம் முன்னணியில் உள்ளது.
- 36,634 கோடி ரூபாய் மதிப்பிலான அந்நிய நேரடி முதலீட்டினை ஈர்த்து அம்மாநிலம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- இது முதல் காலாண்டில் டெல்லி, கர்நாடகா மற்றும் தெலுங்கானா மாநிலங்கள் பெற்ற முதலீட்டுத் தொகையின் கூடுதலை விட அதிகமாகும்.


## ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட பிறப்பு பதிவு

- எட்டு வடகிழக்கு மாநிலங்களில் முதலாவதாக ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட பிறப்புப் பதிவு முறையினை நாகாலாந்து தொடங்கியுள்ளது.
- இது ஐந்து வயது வரையிலான குழந்தைகளின் ஆதார் பதிவினை பிறந்த உடனே (பிறப்பு சார்ந்த ஆதார் பதிவு) பதிவு செய்வதற்கு வழி வகுக்கிறது.
- ஆதார் கட்டமைப்பில் புதிதாகப் பிறந்த குழந்தைகளையும், ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளையும் சேர்ப்பதில் இந்தச் செயல்முறை முக்கியப் பங்கு வகிக்கிறது.

## கோக்போரோக் மொழி

- கோக்போராக் மொழிப் பிரச்சினையானது, கோக்போரோக் மொழிக்குப் பயன்படுத்தப் பட்ட எழுத்து வடிவினை சார்ந்ததாக உள்ள நிலையில் இது திரிபுராவில் பல தசாப்தங்களாக விவாதத்திற்கு உரியதாக உள்ளது.
- கோக்போராக் மொழிக்காக வங்காளம் மற்றும் ரோமானிய எழுத்துகள் அதில் பெரும் அளவில் பயன்படுத்தப் பட்டுள்ளன.
- ரோமானிய எழுத்து வடிவப் பயன்பாட்டிற்கான கோரிக்கை சமீபத்திய ஆண்டுகளில் உத்வேகம் பெற்றுள்ளது.
- கோக்போராக் மொழியானது வங்காள மொழியுடன் சேர்த்து திரிபுராவின் அதிகாரப் பூர்வ மொழிகளில் ஒன்றாக உள்ளது.

- இது வடகிழக்கு இந்தியாவின் திரிபுரா மாநிலத்தில் சுமார் 1 மில்லியன் மக்களால் பேசப்படும் ஒரு சீன-திபெத்திய மொழியாகும்.
- இது திரிபுராவில் பேசப்படும் பல பேச்சுவழக்கு மொழிகளுடன் ஒப்பீட்டளவில் ஒன்றி இருக்கும் மொழியாகும்.
- இது திரிபுராவின் 19 பழங்குடியினச் சமூகங்களில் பெரும்பாலானவற்றின் இணைப்பு மொழியாகும்.





## க்ருஹ லக்ஷ்மி திட்டம் – கர்நாடகா

- கர்நாடக அரசானது க்ருஹ லட்சுமி திட்டம் எனப்படும் பெண்களுக்கான சமூக நலத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், அரசானது ஒரு குடும்பத் தலைவிக்கு மாதம் 2,000 ரூபாய் வழங்க உள்ளது.
- அந்தியோதயா என்ற திட்டத்தில் குடும்பத் தலைவர்களாகப் பட்டியலிடப்பட்டுள்ள பெண்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மற்றும் வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இத்திட்டத்திற்குத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- ஒரு குடும்பத்தில் ஒரு பெண் மட்டுமே இத்திட்டத்தின் பயனாளியாக இருக்க முடியும்.

## அதிக சுயாட்சியைக் கோரும் மணிப்பூர்

- மணிப்பூரில் நிலவி வரும் மோதலைத் தீர்க்கவும், குக்கி இனத்தவரை அமைதிப் படுத்தச் செய்வதற்காகவும், தற்போதுள்ள தன்னாட்சி மலைப் பகுதி மேம்பாட்டுச் சபைகளுக்கு கூடுதல் தன்னாட்சி வழங்கப் பட வேண்டும் என்று மத்திய அரசுக்கு மணிப்பூர் மாநில அரசு முன்மொழிந்துள்ளது.
- குக்கி இனத்தவர் முன்வைத்த "தனி நிர்வாகம்" என்ற கோரிக்கையை அம்மாநில அரசு எதிர்க்கிறது.
- ஆங்கிலேயர்கள் அசாம் மாநிலத்தின் மலைப்பகுதிகளை 1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தின் மூலம் "முழுவதும் விலக்கப்பட்ட" மற்றும் "பகுதியளவு விலக்கப்பட்ட" பகுதிகளாகப் பிரித்தனர்.

- தற்போது, ஆறாவது அட்டவணையின் கீழ் வடகிழக்கு இந்தியாவில் அசாம், மேகாலயா மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்களில் தலா மூன்று, திரிபுராவில் ஒன்று என 10 தன்னாட்சி மலைப்பகுதி மேம்பாட்டு சபைகள் உள்ளன.
- மணிப்பூரில் ஆறு தன்னாட்சி மலைப்பகுதி மேம்பாட்டு சபைகள் உள்ளன ஆனாலும் இவை 1971 ஆம் ஆண்டில் பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் நடைமுறைக்கு வந்தன.
- 1971 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நாடாளுமன்றமானது மணிப்பூர் (மலைப் பகுதிகள்) மாவட்டச் சபை என்ற சட்டத்தினை நிறைவேற்றியதன் மூலம் மணிப்பூரின் மலைப் பகுதிகளில் தன்னாட்சி மலைப்பகுதி மேம்பாட்டுச் சபைகளை நிறுவ வழி வகுத்தன.
- இந்தப் பகுதிகள் அதன் புவியியல் பகுதியில் 90% உள்ளடக்கிய நிலையில், இந்தப் பகுதிகளில் நாகாக்கள், குக்கிகள், ஜோமிகள், ஹூமார்கள் போன்றப் பழங்குடியினர் வசிக்கின்றனர்.
- அப்போது மணிப்பூர் ஒன்றியப் பிரதேசமாக இருந்தது.
- மணிப்பூர் தன்னாட்சி மலைப்பகுதி மேம்பாட்டு சபைகளானது இச்சட்டத்தின் விதிகள் காரணமாக அந்த மாநிலச் சட்டமன்றத்தை சார்ந்து உள்ளன.
- அம்மாநிலச் சட்டமன்றத்தில் 2000 ஆம் ஆண்டில் ஒரு திருத்த மசோதா மூலம் கொண்டு வரப்பட்ட அதிக தன்னாட்சிக்கான சில திருத்தங்கள், 2006 ஆம் ஆண்டில் மற்றொரு மசோதாவின் மூலம் ரத்து செய்யப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டு முதல், இந்தப் பகுதியில் உள்ள பிரிவினரின் எதிர்ப்பின் காரணமாக, தன்னாட்சி மலைப்பகுதி மேம்பாட்டுச் சபைகளுக்கு அதிக தன்னாட்சி வழங்கப்படச் செய்வதற்கான திருத்தங்களை முன்வைக்கும் ஒரு மசோதா சட்டசபையில் அறிமுகப் படுத்தப் படவில்லை.




## ராயகடா சால்வைகள் மற்றும் கோராபுட் காலா ஜீரா அரிசி

- ஒடிசாவைச் சேர்ந்த டோங்ரியா கோன்ட் இனத்தவரால் வடிவமைக்கப்பட்டு, கையால் நெய்யப்படும் ராயகடா சால்வைகள் புவிசார் குறியீட்டினைப் பெற உள்ளன.
- இது பாரம்பரிய கைவினைத் திறனின் தலைசிறந்தப் படைப்பாகக் கருதப்படுகிறது.
- இந்தப் பழங்குடியினர், சித்திரத் தையல் (பூத்தையல்) வேலைப்பாடுகள் கொண்ட இந்தச் சால்வைகளை நன்றியுணர்வின் அடையாளமாக விருந்தினர்களுக்குப் பரிசாக வழங்குகின்றனர்.

- டோங்ரியா கோண்ட் இனத்தவர் ராயகடா மாவட்டத்தின் எளிதில் பாதிக்கப் படக் கூடிய பழங்குடியினர் குழுவினர் (PVTG) ஆவர்.
- இந்த மாநிலத்தைச் சேர்ந்த கோராபுட் காலா ஜீரா அரிசிக்கும் மதிப்புமிக்க புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- இந்த அரிசி வகையானது பெரும்பாலும் 'அரிசி வகைகளின் இளவரசன்' என்று குறிப்பிடப் படுகிறது.

## விஜயவாடா 'பசுமை இரயில் நிலையம்'

- விஜயவாடா இரயில் நிலையமானது, மிக உயரிய பிளாட்டின தரத்தினைக் கொண்ட 'பசுமை இரயில் நிலையம்' சான்றிதழைப் பெற்றுள்ளது.
- இது இந்தியப் பசுமைக் கட்டிடச் சபையினால் (IGBC) வழங்கப் படுகிறது.
- சுற்றுச்சூழல் தரத்தை மேம்படுத்தச் செய்தல் மற்றும் பயணிகளுக்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த சேவைகளை வழங்குவதற்கான அந்த நிலையத்தின் முயற்சிகளுக்காக இந்தச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் பெற்ற தங்க தர மதிப்பினைப் பெற்ற இந்த இரயில் நிலையமானது 2023 ஆம் ஆண்டில் பிளாட்டின தர மதிப்பினைப் பெற்றுள்ளது.

## இந்தியாவின் முதல் சூரியசக்தி நகரம்

- மத்தியப் பிரதேசத்தில் உள்ள சாஞ்சி நகரமானது இந்தியாவின் முதல் சூரியசக்தி நகரம் என்ற பெருமையினைப் பெற்றுள்ளது.
- சாஞ்சியில் செயல்பட்டு வரும் ஒட்டு மொத்தச் சூரிய சக்தி மையங்களும் ஆண்டிற்கு 14,324 டன்கள் வரையிலான $CO_2$ உமிழ்வினைக் குறைக்கும்.
- நகரின் தேவைக்காக அமைக்கப்பட்ட 3 மெகாவாட் திறன் கொண்ட சூரிய சக்தி ஆலை முழுமையாக இயங்கி வருகிறது.
- வேளாண்மை சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக திட்டமிடப்பட்ட 5 மெகா வாட் திறன் கொண்ட மற்றொரு ஆலை கட்டமைக்கப்பட்டு வருகிறது.

## பொய்லா பைசாக்

- மேற்கு வங்காள மாநில சட்டமன்றம் ஆனது, 'பொய்லா பைசாக்' என்ற கொண்டாட்டத்தினை 'பங்களா திபாஸ்' அல்லது மேற்கு வங்காள நிறுவன தினமாக அறிவித்தது.
- இது வங்காள நாட்காட்டியின் முதல் நாள் ஆகும்.
- ரவீந்திரநாத் தாகூரின் 'பங்களார் மாட்டி பங்களா ஜோல்' (வங்காளத்தின் மண் மற்றும் வங்காளத்தின் நீர்) என்றப் பாடலை மேற்கு வங்காளத்தின் அதிகாரப்பூர்வ பாடலாக மாற்றுவதற்கான முன்மொழிவையும் அது நிறைவேற்றியது.
- வங்காளம் ஆனது, காலங்காலமாக ஒரு தனி இராச்சியம் அல்லது மாகாணமாக திகழ்ந்தது.
- 1947 ஆம் ஆண்டு ஜூன் 20 ஆம் தேதியன்று, மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் வங்காளப் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்த நிலையில் இது வங்காள தினமாகக் கொண்டாடப்பட்டது.

## 500 KVA நிலத்தடி மின்பரிமாற்ற நிலையம்




- ❖ இந்தியாவின் முதல் நிலத்தடி மின்மாற்றி மையமானது பெங்களூரு மல்லேஸ்வரத்தில் திறக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்த மின்மாற்றியானது, விபத்துகளால் ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும் என்றும், மின்பரிமாற்றத்தின் போது ஏற்படும் இழப்புகளைக் குறைக்கும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.
- ❖ மேலும், நடைபாதைகளில் உள்ள தடைகளை அகற்றவும், பல்வேறு பாதசாரிகளின் நடமாட்டத்திற்கு பாதுகாப்பான வழித்தடத்தினை அமைக்கவும் இது உதவும்.

## உமிழ்வு வர்த்தகத் திட்டம்

- ❖ நுண்துகள் மாசுபாட்டிற்கான உமிழ்வு வர்த்தகத் திட்டத்தினை (ETS) செயல்படுத்திய நாட்டின் இரண்டாவது நகரமாக அகமதாபாத் மாறியுள்ளது.
- ❖ இது தொழில்துறை உமிழ்வைக் கட்டுப்படுத்தவும், மாநிலத்தின் மாசுபாட்டு அளவைக் குறைக்கவும் உதவும்.
- ❖ 118 தொழில்துறைகளை உள்ளடக்கிய இந்தத் திட்டத்தில் செப்டம்பர் 01 ஆம் தேதி அன்று நேரடி வர்த்தகம் தொடங்கியது.
- ❖ ஒரு உமிழ்வு வர்த்தக திட்டம் அல்லது “வரம்பு மற்றும் வர்த்தக” அமைப்பானது, ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட தொழிற்சாலைகளின் மீது அனுமதிக்கப்பட்ட மாசுபாட்டின் அளவிற்கான பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்கச் செய்து, அந்த ஆலைகளுக்கான தர மதிப்பீடுகளை வழங்குகிறது.
- ❖ உமிழ்வு வர்த்தகத் திட்டத்தின் கீழ், குறைந்த பட்ச சுற்றுச்சூழல் இழப்பு குறைப்பு செலவுகளைக் கொண்ட தொழில்துறைகள் உமிழ்வை அதிக அளவில் குறைத்து, அதிகப் படியான தர மதிப்பீடுகளை விற்பதன் மூலம் லாபம் ஈட்டலாம்.
- ❖ அதிகளவில் குறைந்த பட்ச சுற்றுச்சூழல் இழப்பு குறைப்புச் செலவுகளைக் கொண்ட தொழில்துறைகள் விலையுயர்ந்த உபகரணங்களை நிறுவுவதற்குப் பதிலாக தர மதிப்பீடுகளை வாங்குவதன் மூலம் பணத்தைச் சேமிக்கலாம்.
- ❖ இந்த திட்டம் ஆனது, முதன்முதலில் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சூரத்தில் அமைந்த அதிக மாசுபடுத்தும் திட எரிபொருள் சார்ந்த 350 தொழிற்சாலைகளில் அறிமுகப் படுத்தப்பட்டது.

- ETS போன்ற “வரம்பு மற்றும் வர்த்தக” அமைப்பு 1980 ஆம் ஆண்டுகளில் அமெரிக்க நாட்டினால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- அது சல்பர் டை ஆக்சைடு மற்றும் நைட்ரஜன் ஆக்சைடுகள் (NOx) போன்ற பல்வேறு மாசுபடுத்திகளின் உமிழ்வைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டது.




## கேரளாவில் நிபா வைரஸ் பாதிப்பு





- கேரளாவில் பரவி வரும் நிபா வைரஸ் மாற்றுருவானது வங்காளதேச வைரசின் ஒரு மாற்றுருவாகும்.

- இது மனிதர்களிடமிருந்து மனிதருக்குப் பரவுகிறது என்பதோடு, இது குறைந்த அளவில் நோய்த் தொற்று வாய்ப்புகளைக் கொண்டிருந்த போதிலும், இது தற்போது அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்தும் வைரசாக வகைப்படுத்தப்படுகிறது.
- இன்று வரை இந்த வைரஸுக்கு தடுப்பு மருந்து எதுவும் கண்டறியப்படவில்லை.
- இது பாதிக்கப்பட்ட வௌவால்கள், பன்றிகள் அல்லது மனிதர்களின் ஆகியோரின் உடல் திரவங்களுடனான தொடர்பு மூலம் பரவுகிறது.
- இந்த வைரசினால் பாதிக்கப்பட்டவர்களில் இறப்பு விகிதம் 75% வரை உள்ளது.

## கும்பல் கொலைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கும் திட்டம் 2023

- மத்தியப் பிரதேச மாநில அரசானது, கும்பல் கொலை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 10 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க உள்ளது.
- இந்த சம்பவங்களில் காயமடைந்தவர்களுக்கு 4 முதல் 6 லட்சம் ரூபாய் வரை இழப்பீடு வழங்கப்படும்.
- சாதி, மதம், மொழி அல்லது வேறு ஏதேனும் காரணங்களால் நிகழும் கும்பல் கொலைச் சம்பவங்கள் அனைத்தும் இதில் அடங்கும்.
- கும்பல் கொலைகள் மூலம் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்களுக்கும் இழப்பீடு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களால் மேற்கொள்ளப்படும் கொலைகள் கும்பல் கொலைகளாகப் பரிசீலிக்கப்படும்.




## ஆத்ரேயபுரம் பூதரெகுலுக்கு புவிசார் குறியீடு

- அரிசி மற்றும் வெல்லத்தால் செய்யப்பட்ட 'ஆத்ரேயபுரம் பூதரேகுலு' என்ற இனிப்பு வகைக்குப் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- இந்த இனிப்பு உற்பத்தியானது ஆத்ரேயபுரம் கிராமத்தில் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை இது உறுதி செய்கிறது.
- இந்தக் கிராமமானது ஆந்திரப் பிரதேசத்தின் கோனாசீமா மாவட்டத்தில் கோதாவரி நதிக் கரையில் அமைந்துள்ளது.
- MTU-3626 ரக அரிசியானது இந்த இனிப்பு வகையின் முக்கிய மூலப்பொருள் ஆகும்.
- இந்த ரக அரிசியானது அந்தப் பகுதியில் 'பொண்டாலு' என்று அழைக்கப்படுகிறது.
- இது கோனாசீமா பகுதியில் அதிகம் விளைவிக்கப்பட்டு, கேரளாவில் அதிகம் பயன்படுத்தப் படுகிறது.



## நியுக்மதுங் பால் பண்ணை



- தேசிய காட்டு எருது ஆராய்ச்சி மையம் (NRCY) ஆனது நியுக்மதுங் எனுமிடத்தில் உள்ள மையத்தின் காட்டு எருது பண்ணையில் நியுக்மதுங் பால் பண்ணை என்ற "பால் விற்பனையகத்தினை" தொடங்கியுள்ளது.
- இது அருணாச்சலப் பிரதேசத்தின் மேற்கு கமெங் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- காட்டு எருதின் பால் ஆனது பாலேடு நிறைந்த வெள்ளை நிற, கெட்டியான, இனிப்பு, மணம் மற்றும் புரதம், கொழுப்பு, லாக்டோஸ் மற்றும் தாதுக்கள் நிறைந்த மற்றும் பசும்பாலை விட மொத்த திடச் சத்துக்கள் நிறைந்தது.
- இதில் 5.29-8.73 சதவீதம் கொழுப்பு, 3.45-4.27 சதவீதம் புரதம் மற்றும் 0.64-0.82 சதவீதம் கரிமங்கள் மற்றும் 15.63-19.63 சதவீதம் மொத்த திடச் சத்துக்கள் உள்ளன.
- நியுக்மதுங் பால்பண்ணையானது, கடல் மட்டத்திலிருந்து சுமார் 2,800 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.
- 'இமயமலையின் கப்பல்' என்று குறிப்பிடப்படும் இந்த விலங்குகளின் பாலில் இருந்து பெறப்படும் பல வகையான பொருட்களைப் பிரபலப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மிதுன் - உணவு விலங்கு

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) ஆனது மிதுன் -கயால் தொடர்பான ஒரு முன்மொழிவை ஏற்றுக் கொண்டு அதனை உணவுப் பிராணியாக அறிவித்துள்ளது.
- வடகிழக்குப் பகுதியின் பல்வேறு பழங்குடிச் சமூகங்களால் மிதுன் இறைச்சியானது உணவாக உட்கொள்ளப்படுகிறது.
- ஆனால் FSSAI அமைப்பின் இந்த ஒப்புதல் மூலமாக, இந்த கால்நடை வளர்ப்பின் மூலம் விவசாயிகள் பொருளாதார ரீதியாக பயனடைய முடியும்.
- மிதுன் அல்லது கயால் (போஸ் ஃப்ரண்டாலிஸ்) இந்தியக் காட்டெருது அல்லது காட்டெருமை இனத்தின் வழித் தோன்றலாகக் கருதப்படுகிறது.
- இது வடகிழக்கு இந்தியா, வங்காளதேசம், வடக்கு மியான்மர் மற்றும் சீனாவின் யுனான் ஆகிய இடங்களில் காணப்படுகிறது.
- இது 'மலைப்பகுதியின் கால்நடை' என்று அறியப்படுகிறது.
- கயால், அருணாச்சலப் பிரதேசம் மற்றும் நாகாலாந்து ஆகியவற்றின் மாநில விலங்கு ஆகும்.
- மாட்டிறைச்சி மற்றும் எருமை இறைச்சி (10-12%) ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது மிதுன் இறைச்சியில் கணிசமாகக் குறைந்த அளவே (2-3%) கொழுப்பு உள்ளது.
- இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனமாக பட்டியலிடப் பட்டுள்ளது.

- The mithun, or Bos frontalis of the Bovidae family, is endemic to Arunachal Pradesh, Nagaland, Manipur and Mizoram.
- On an average, an adult mithun weighs between 400 and 650 kg.
- Semi-domesticated and reared in a free-range forest ecosystem, the only supplementary feeding it needs is salt
- The slaughter of the mithun is traditionally reserved for special occasions such as festivals or weddings – and, these days, elections

The Food Safety and Standards Authority of India (FSSAI), recognised the mithun as a 'food animal' with effect from September 1. With that, the mithun can be commercially farmed and its meat processed for pickles, soups, wafers and biryani.

## இணைய தளம் மூலம் திரட்டப்படும் தொழிலாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம்


- கர்நாடக தொழிலாளர் நலத் துறையானது, அம்மாநிலத்தின் இணைய தளம் மூலம் திரட்டப்படும் தொழிலாளர்களுக்கு 4 லட்சம் ரூபாய் மருத்துவக் காப்பீட்டுத் தொகை வழங்கும் திட்டத்தினை அறிவித்து அரசாணை வெளியிட்டுள்ளது.
- அந்த மாநிலத்தில் பணியாற்றும் இணைய தளம் மூலம் திரட்டப்படும் தொழிலாளர்களின் சரியான எண்ணிக்கை 2 லட்சத்திற்கும் அதிகமாக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டதும், இணைய வணிக நிறுவனங்களில் முழு நேர / பகுதி நேரச் சரக்குப் பொருள் விநியோகப் பணியாளர்களாக பணி புரியும் தொழிலாளர்கள் இந்த விபத்துக் காப்பீட்டுத் திட்டம் மூலம் பயனடைவார்கள்.
- 1 லட்சம் ரூபாய் வரையிலான மருத்துவமனைச் செலவுகள் அவர்களுக்குத் திரும்ப செலுத்தப்படும் மற்றும் பணியின் போது மற்றும் பணியில் இல்லாத போது ஏற்படும் விபத்துக்களில் ஆனால் நடப்பில் பணியில் உள்ள தொழிலாளர்களுக்கு மட்டுமே இந்தத் திட்டத்தின் பலன்கள் கிடைக்கப் பெறும்.
- ராஜஸ்தானுக்கு அடுத்தபடியாக, இணைய தளம் மூலம் திரட்டப்படும் தொழிலாளர்களுக்கு சுகாதாரக் காப்பீடு வழங்கிய இரண்டாவது மாநிலம் கர்நாடகா ஆகும்.
- 18 முதல் 60 வயதுக்குட்பட்ட இணைய தளம் மூலம் திரட்டப்படும் தொழிலாளர்கள், வரி செலுத்துவதற்கான வரம்பிற்குள் வராதவர்கள் மற்றும் தற்போது PF/ESI பலன்களைப் பெறாத தனிநபர்கள் இந்தக் காப்பீட்டினைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- குறைந்த பட்சம் ஆறு மாதங்களாக ஏதேனும் ஒரு இணைய வணிக நிறுவனத்தில் இணைய தளம் மூலம் திரட்டப்படும் தொழிலாளியாகப் பணிபுரியும் எந்தவொரு நபரும் இந்தத் திட்டத்தின் மூலம் பலன் பெற தகுதி உடையவர் ஆவர்.

## நுவாகாய் ஜுஹார் - ஒடிசா


- நுவாகாய் என்பது புதிய நெல் விளைச்சல் பருவத்தின் தொடக்கத்தினைக் குறிக்கும் வகையில் ஆண்டுதோறும் ஒடிசா மாநிலத்தில் கொண்டாடப்படும் ஒரு அறுவடைக் கொண்டாட்டம் ஆகும்.
- இந்தத் தினமானது சந்திர நாட்காட்டி கொண்டு தீர்மானிக்கப் படுவதோடு, இத்தினம் சந்திரப் பட்சத்தின் 'பஞ்சமி திதி' (ஐந்தாம் நாள்) அன்று வருகிறது.
- 'நுவா' என்றால் புதியது என்றும் 'காய்' என்றால் உணவு என்றும் பொருள்படும்.

## ஆக்ரா : பன்முகப்படுத்தப்பட்ட குப்பை செயல்முறையாக்க அமைப்பு

- ஆக்ரா நிர்வாகம், மொத்தக் கழிவு உற்பத்தி அமைப்புகளிடமிருந்துப் பெறப்படும் கரிமக் கழிவுகளை மேலாண்மை செய்வதற்காக பன்முகப்படுத்தப்பட்ட குப்பை செயல்முறையாக்க (மறுசுழற்சி) ஆலைகளைத் தொடங்கியுள்ளது.
- இந்த மாதிரியானது, மாநகராட்சி அரசாங்கத்திற்கு ஏற்படும் போக்குவரத்து செலவை வெகுவாகக் குறைக்கும்.
- ஆக்ராவில் 0.48 கிலோ தனி நபர் கழிவு உற்பத்தி விகிதத்துடன் ஒரு நாளைக்கு 916 டன் (TPD) நகராட்சி திடக் கழிவுகள் உருவாக்கப்படுகிறது.
- மலர் மற்றும் கழிவுகளில் இருந்து பெறப்படும் உரம் ஆனது ஜியோ-மார்ட் மற்றும் அமேசான் ஆகிய இணைய வணிகத் தளங்களில் கிடைக்கப் பெறுகிறது.



## அகும்பே மழைக்காடுகள் வளாகம்





- கர்நாடகாவின் சிவமோகா மாவட்டத்தில் உள்ள அகும்பே மழைக்காடுகள் வளாகம் (ARC) ஆனது 'தெற்கின் சிரபுஞ்சி' எனப் பெயர் பெற்றது.
- இது பருவமழை காலத்தின் போது 8,000 மி.மீ. அளவிலான மழைப்பொழிவைப் பெறும்.
- பொதுவாக ஜூன் மற்றும் ஆகஸ்ட் ஆகிய பருவமழை மாதங்களில் இப்பகுதி 6,000 மி.மீ. அளவிலான அதிகபட்ச மழையைப் பெறும்.
- ஆனால், தற்போது கடந்த இரண்டு ஆண்டுகளாக, இங்கு பதிவாகும் உச்சபட்ச பருவ மழைப் பொழிவானது சுமார் 5,250 மி.மீ. முதல் 5,500 மி.மீ. வரை என்ற அளவில் மாறிக் கொண்டிருக்கிறது.
- இந்தப் பகுதியிலிருந்து 45 முதல் 50 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள நாட்பால் மற்றும் முத்ராடி போன்ற சில நகரங்களில் 2022 ஆம் ஆண்டில் அதிக மழைப் பொழிவுப் பதிவாகியுள்ளன.
- 2022 ஆம் ஆண்டில் அகும்பேயில் 6,251.5 மி.மீ. மழைப் பொழிவுப் பதிவாகியுள்ளது, இருப்பினும், நாட்பால் பகுதியில் 6,391.8 மி.மீ. மழைப் பொழிவுப் பதிவாகியுள்ளது.
- ஹாசன் மாவட்டத்தில் உள்ள ஹூலிக்கல் எனுமிடத்தில் 6,422.9 மி.மீ. மழைப் பொழிவுப் பதிவாகியுள்ளது.
- இது மழைப் பொழிவின் அடிப்படையில், கர்நாடகாவில் அதிக மழைப் பொழிவுப் பெறும் பகுதிகளில் அகும்பே பகுதியினை மூன்றாவது இடத்திற்குத் தள்ளியுள்ளது.

## இந்தியாவின் சிறந்த சுற்றுலா கிராமம் - பிஸ்வநாத் காட்

- அசாமில் உள்ள பிஸ்வநாத் காட், 2023 ஆம் ஆண்டின் இந்தியாவின் சிறந்த சுற்றுலா கிராமமாக சுற்றுலா அமைச்சகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இது பிரம்மபுத்திரா ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.
- 'குப்த காசி' என்றும் பிரபலமாக அறியப்படுகின்ற பிஸ்வநாத் காட், பழங்கால பிஸ்வ நாத் கோவிலின் பெயரால் அழைக்கப்படுகிறது.




## வெனடியம் கண்டுபிடிப்பு




- குஜராத்தின் கம்பாட் வளைகுடாவில் இருந்து வெனடியம் என்ற அரிய தனிமம் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.
- இந்தியாவில் கடற்கரை வண்டல்களில் வெனடியம் இருப்பது பற்றிய முதல் அறிக்கை இதுவாகும்.
- டைட்டானோமேக்னடைட் என்பது இந்தத் தனிமத்தின் முதன்மை மூல ஆதாரம் ஆகும் என்பதோடு உலகின் 88% வெனடியம் இதிலிருந்து தான் பிரித்தெடுக்கப்படுகிறது.
- எஃகு மற்றும் டைட்டானியம் மற்றும் வெனடியம் ஆக்சிஜனேற்ற ஒடுக்க மின் கலன்கள் போன்றவற்றை வலுப்படுத்துவதற்கு வெனடியத்தினைப் பயன்படுத்த இயலும்.
- டைட்டானியம் மற்றும் அலுமினியத்துடன் இதனைக் கலக்கும்போது, அரிமானம் மற்றும் அதிக வெப்பநிலைக்கு எதிராக நீடித்து நிலைத்திருப்பதால் ஜெட் என்ஜின் பாகங்கள் மற்றும் மின் பயன்பாட்டுக் கூறுகளிலும் இது பயன்படுத்தப்படுகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## புவி அழகி - இந்தியா போட்டி 2023

- 2023 ஆம் ஆண்டு தெய்வீக அழகிப் போட்டியில் ப்ரியன் சைன் புவி அழகி - இந்தியா போட்டி 2023 என்ற பட்டத்தை வென்றார்.
- கடந்த ஆண்டு வெற்றியாளரான வன்ஷிகா பர்மாரை அடுத்து இவர் இப்பட்டத்தினைப் பெற்றுள்ளார்.
- இந்த ஆண்டு டிசம்பரில் வியட்நாமில் நடைபெற உள்ள புவி அழகி 2023 போட்டியில் இந்தியா சார்பாக இவர் பங்கேற்க உள்ளார்.
- அதே போட்டியில், பிரவீணா அஞ்சனா என்பவர் சர்வதேச அழகி - இந்தியா 2023 என்று தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- பேமா சோடன் பூட்டியா மற்றும் தேஜஸ்வினி ஶ்ரீவஸ்தவா ஆகிய இருவரும் அடுத்த இடங்களைப் பெற்றனர்.




## இரயில்வே வாரியத்திற்குத் தலைமையேற்கும் முதல் பெண்மணி



- மத்திய அரசானது, இரயில்வே வாரியத்தின் புதிய தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாக (CEO) ஜெய வர்மா சின்ஹா என்பவரை நியமித்துள்ளது.

- இரயில்வே வாரியத்தின் கடந்த 166 ஆண்டு கால வரலாற்றில் அதன் தலைவராக பொறுப்பேற்றுள்ள முதல் பெண்மணி இவரே ஆவார்.
- இரயில்வே வாரியமானது இந்திய இரயில்வே நிர்வாகத்திற்கான ஒரு முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட முக்கிய அமைப்பாகும்.
- சரக்கு மற்றும் பயணிகள் இரயில் சேவைகளின் ஒட்டு மொத்தப் போக்குவரத்தினை மேற்பார்வையிடும் பொறுப்பினை அவர் மேற்கொள்ள உள்ளார்.

## சிங்கப்பூர் நாட்டின் புதிய அதிபர்

- சிங்கப்பூர் நாட்டின் முன்னாள் துணைப் பிரதமர் தர்மன் சண்முகரத்தினம் அந்த நாட்டின் புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- 2011 ஆம் ஆண்டில், நிதி அமைச்சகத்தின் பொறுப்பினையும் தன் வசம் கொண்டு துணைப் பிரதமராக இவர் பதவி வகித்தார்.
- இவர் 1957 ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் தமிழ் மரபினைச் சேர்ந்தத் தந்தைக்கும் சீன நாட்டினைச் சேர்ந்த தாய்க்கும் மகனாகப் பிறந்தார்.
- இவரது தந்தை கனகரத்தினம் சண்முகரத்தினம் ஒரு புகழ்பெற்ற நோயியல் நிபுணரும் புற்றுநோய் ஆராய்ச்சியாளரும் ஆவார்.

## ரமோன் மக்சேசே விருது

- புகழ்பெற்ற புற்றுநோயியல் நிபுணர் டாக்டர் ரவி கண்ணன் (இயக்குனர்) 2023 ஆம் ஆண்டு ரமோன் மக்சேசே விருது பெற்றவர்களில் ஒருவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.
- இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள நோயாளிகளுக்குப் புற்றுநோய் சிகிச்சை அளிப்பதில் அவர் ஆற்றியப் பங்களிப்பிற்காக இந்த விருதானது வழங்கப் படுகிறது.
- மேலும் இவர் 'முழுமையான சுகாதார நலன் வழங்கீட்டிற்கான நாயகன்' விருதினையும் பெற்றவர் ஆவார்.
- தமிழ்நாட்டின் சென்னையைச் சேர்ந்த ரவி, முன்னதாக சென்னை அடையாறு புற்றுநோய் நிறுவனத்தில் பணிபுரிந்துள்ளார்.
- 65வது ரமோன் மக்சேசே விருதினைப் பெற்ற மற்ற வெற்றியாளர்கள்
    - கோர்வி ரக்ஷந்த் – வங்காளதேசம்
    - யூஜெனியோ லெமோஸ் – தைமோர்-லெஸ்தே
    - மிரியம் கரோனல்-ஃபெரர் - பிலிப்பைன்ஸ்
- இந்த விருதானது பெரும்பாலும் 'ஆசியாவின் நோபல் பரிசு' என்று அழைக்கப் படுகிறது.

## உலகப் புத்தாக்க விருது

- தெலுங்கானா தலைமை புத்தாக்க அதிகாரி சாந்தா தௌதம் முதலாவது பிரிக்ஸ் புத்தாக்க மன்றத்தில் உலகப் புத்தாக்க விருதைப் பெற்றுள்ளார்.
- 4 வது நிலையான மேம்பாட்டு இலக்கில் அவர் ஆற்றிய சிறந்தப் பங்களிப்பிற்காக இந்த விருதானது வழங்கப்படுகிறது.

- SDG-4 இலக்கானது, உள்ளார்ந்த மற்றும் சமமான தரமான கல்வியை உறுதி செய்து, அனைவருக்கும் வாழ்நாள் முழுவதுமான பல்வேறு வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவதை மேம்படுத்துகிறது.
- உலகப் புத்தாக்க விருதானது, சர்வதேசத் தன்னார்வ தொண்டு நிறுவனமான உலக மேம்பாட்டு அமைப்பால் நிறுவப்பட்டதாகும்.

## உலக நிதிசார் மத்திய வங்கியாளர் அறிக்கை 2023

- 2023 ஆம் ஆண்டு உலக நிதிசார் மத்திய வங்கியாளர் அறிக்கையில் சக்தி காந்த தாஸ் 'A+' என தரவரிசையினைப் பெற்றுள்ளார்.
- A+ தரமதிப்பீடு பெற்ற மூன்று மத்திய வங்கி ஆளுநர்களின் பட்டியலில் அவர் முதலிடத்தில் உள்ளார்.
- அசல் தன்மை, படைப்பாற்றல் மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றின் மூலம் தங்கள் சகாக்களை விட சிறப்பான உத்திகளைக் கொண்ட வங்கி ஆளுநர்களை இந்த அறிக்கை கௌரவிக்கிறது.




## இஸ்ரோ அறிவியலாளர் வளர்மதி

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (இஸ்ரோ) ஏவுகல ஏவுதலுக்கான நேரக் கணக்கீட்டு அறிவிப்பின் பின்னணி குரலாக இருந்த அறிவியலாளர் வளர்மதி காலம் ஆனார்.
- இந்தியாவின் முதல் வெற்றிகரமான நிலவு ஆய்வுப் பயணமான சந்திரயான்-3 திட்டத்தின் ஏவுகலத்தின் ஏவுதலுக்கான நேரக் கணக்கீட்டு அறிவிப்பிற்கும் இவரே குரல் கொடுத்தார் என்ற வகையில் இதுவே அவரது இறுதிப் பணியாக அமைந்தது.
- 2015 ஆம் ஆண்டில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் APJ அப்துல் கலாம் விருதினை N. வளர்மதிக்கு வழங்கினார்.
- 2012 ஆம் ஆண்டில் RISAT-1 எனப்படும் ரேடார் வரைபடமாக்க செயற்கைக் கோளினை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியக் குழுவிற்கு அவர் தலைமை தாங்கினார்.



### ஸ்வச்சதா பக்வாடா விருது

- நிலக்கரி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் பொதுத் துறை நிறுவனங்களுள் நெய்வேலி லிக்னைட் கழகம் - இந்தியா லிமிடெட் நிறுவனமானது 'ஸ்வச்சதா பக்வாடா' விருது விழாவில் முதல் பரிசைப் பெற்றுள்ளது.
- NLCIL நிறுவனமானது, பக்வாடா எனப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சியின் போதான அதன் செயல்பாடுகள், புதுமையான கருத்தாக்கங்கள், அதிகபட்சப் பொது மக்கள் பங்கேற்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொண்டதற்காக இந்த விருதிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டது.

### G20 தொழில்நுட்பப் போட்டி 2023 வெற்றியாளர்கள்




- இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் சர்வதேச நிதிசார் தீர்வு முறை புத்தாக்க மையம் ஆகியவை இணைந்து நான்காவது G20 தொழில்நுட்பப் போட்டியினைத் தொடங்கின.

- இந்த உலகளாவிய போட்டியானது, உலகெங்கிலும் உள்ள கண்டுபிடிப்பாளர்களை ஒரு முக்கியமான உலகளாவியப் பொருளாதாரத் தேவையாக உள்ள உலக நாடுகளுக்கு இடையேயான பண வழங்கீடுகளை மேம்படுத்தச் செய்வதற்கான முன்னோடியான தொழில்நுட்பத் தீர்வுகளை உருவாக்குவதற்கு அழைப்பு விடுத்தது.
- விருது பெறும் புத்தாக்க கண்டுபிடிப்புகள்:
    - பண மோசடி எதிர்ப்பு /தீவிரவாதத்திற்கு நிதியளிப்பதை எதிர்த்தல் / பொருளாதாரத் தடைகளுக்கான தொழில்நுட்பத் தீர்வுகள் - செக்ரேட்டரியம் லிமிடெட், ஐக்கியப் பேரரசு,
    - அந்நியச் செலாவணி மற்றும் பணப்புழக்கம் சார்ந்த தொழில்நுட்ப தீர்வுகள் - மில்லிசென்ட் லேப்ஸ், ஐக்கியப் பேரரசு.
    - பலதரப்பு நாடுகளுக்கிடையேயான மத்திய வங்கி எண்ணிம நாணய இயங்கு தளங்களுக்கான தொழில்நுட்ப தீர்வுகள் - நாக்ஸ் வலையமைப்புகள், அமெரிக்கா.

## அறிவியலாளர் மயில்சாமி அண்ணாதுரை

- அறிவியலாளர் மயில்சாமி அண்ணாதுரை SS இன்னோவேஷன்ஸ் என்ற நிறுவனத்தின் இயக்குநர் குழுவில் இணைந்துள்ளார்.
- இஸ்ரோவின் சந்திரயான்-1 ஆய்வுத் திட்டத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக அவர் ‘இந்தியாவின் நிலவு மனிதர்’ என்றும் அழைக்கப்பட்டார்.
- அவர் SS இன்னோவேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் உலகளாவிய நிறுவனமான SS இன்னோவேஷன்ஸ் இன்டர்நேஷனல் இன்க் ஆகியவற்றின் இயக்குநராக இருப்பார்.
- இவருக்கு 2016 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.
- 2008 ஆம் ஆண்டில், கர்நாடக அரசிடமிருந்து அறிவியலுக்கான ராஜ்யோத்சவ பிரசஸ்தி விருதையும் அவர் பெற்றுள்ளார்.
- 2019 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் சபைக்கு டாக்டர் அண்ணாதுரை துணைத் தலைவராகப் பொறுப்பேற்றார்.
- கூடுதலாக, அவர் தேசிய வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி மன்றத்திற்கான ஆளுநர்கள் குழுவின் தலைவராக நியமிக்கப்படுவதற்குப் பரிந்துரைக்கப் பட்டார்.

## சாந்தி ஸ்வரூப் பட்நாகர் பரிசு

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் பேராசிரியரான ரஜ்னிஷ் குமார், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான சாந்தி ஸ்வரூப் பட்நாகர் பரிசை வென்றுள்ளார்.
- மனித அறிவு மற்றும் முன்னேற்றத்தில் சிறந்து விளங்கும் நபர்களைக் கௌரவிக்கும் விதமாக இந்த பரிசு வழங்கப்படுகிறது.
- கிளாத்ரேட் ஹைட்ரேட்டுகளின் அணுக் கருவாக்கம் மற்றும் உருவாக்கம், திட ஹைட்ரேட்டுகளில் $CO_2$ நீக்கம் மற்றும் கடல் சார் வாயு நிலை ஹைட்ரேட்டுகளில் இருந்து மீத்தேன் மீட்டெடுத்தல் ஆகியவற்றின் அடிப்படை புரிதலுக்கான அவரதுப் பங்களிப்புகளுக்காக அவருக்கு இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- அவர் ஐக்கியப் பேரரசில் உள்ள அரசு வேதியியல் சங்கத்தின் [FRSC] உறுப்பினராகவும் உள்ளார்.

- இந்த வருடாந்திர விருது ஆனது, 1985 ஆம் ஆண்டில் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிச் சபையினால் நிறுவப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

## சாந்தி ஸ்வரூப் பட்நாகர் பரிசு (SSB) 2022

| பெயர் | தொடர்புடைய அமைப்பு | துறை |
|---|---|---|
| அஸ்வனி குமார் | CSIR-நுண்ணுயிரியல் கல்வி நிறுவனம் | உயிரியல் அறிவியல் |
| மட்டிகா சுப்பா ரெட்டி | DNA கைரேகை கண்டறிதல் மையம், ஹைதராபாத் | |
| அக்காட்டு பிஜு | இந்திய அறிவியல் கல்வி நிறுவனம், பெங்களூரு | வேதி அறிவியல் |
| தேபப்ரதா மைதி | இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனம், மும்பை | |
| விமல் மிஸ்ரா | இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனம், காந்திநகர் | புவி சார் மற்றும் வளிமண்டல அறிவியல் |
| திப்தி ரஞ்சன் சாஹூ | இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனம், டெல்லி | பொறியியல் அறிவியல் |
| ரஜ்னிஷ் குமார் | இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை | |
| அபூர்வா கரே | இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் | கணித அறிவியல் |
| நீரஜ் கயல் | மைக்ரோசாப்ட் ஆராய்ச்சி ஆய்வகம்- இந்தியா | |
| திப்யமன் கங்குலி | இந்திய வேதி உயிரியல் கல்வி நிறுவனம், கொல்கத்தா | மருத்துவ அறிவியல் |
| அனிந்த்யா தாஸ் | இந்திய அறிவியல் கல்வி நிறுவனம், பெங்களூரு | இயற்பியல் அறிவியல் |
| பாசுதேப் தாஸ்குப்தா | டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் | |

- 12 இளம் அறிவியலாளர்களுக்கு இந்தியாவின் தலைசிறந்த அறிவியல் பரிசை வழங்கி கௌரவிக்கும் விதமாக 2022 ஆம் ஆண்டிற்கான சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருதுகள் ஒரு வருட தாமதத்திற்குப் பிறகு அறிவிக்கப்பட்டுள்ளது.
- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் முதல் தலைமை இயக்குனர் சாந்தி ஸ்வரூப் பட்நாகர் அவர்களின் நினைவாக இதற்குப் பட்நாகர் பரிசுகள் என்று பெயரிடப்பட்டது.
- உயிரியல், வேதியியல், கணிதம், இயற்பியல், மருத்துவம், பொறியியல் மற்றும் புவி, வளிமண்டலம், கடல் மற்றும் கிரக அறிவியல் ஆகிய ஏழு அறிவியல் துறைகளில் இப்பரிசு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

## Ig நோபல் பரிசு 2023

- இந்தியா, சீனா, மலேசியா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த அறிவியலாளர்கள் குழுவானது இந்த ஆண்டிற்கான Ig நோபல் பரிசுகளை வென்றுள்ளனர்.
- இந்தப் பரிசானது நகைச்சுவையான அறிவியல் சாதனைகளுக்காக, இயந்திர பொறியியல் பிரிவில் இறந்த சிலந்திகளைப் பிடிப்புக் கருவிகளில் பயன்படுத்தச் செய்வதற்கான ஆய்வுக்காக வழங்கப் பட்டது.
- நோபல் பரிசின் ஒரு போலி வடிவமான Ig நோபல் பரிசு வழக்கத்திற்கு மாறான மற்றும் நகைச்சுவையான அறிவியல் சாதனைகளுக்காக வழங்கப் படுகிறது.
- இது மக்களைச் சிரிக்க வைத்து, அறிவியலின் விசித்திரமான அம்சங்களைப் பற்றிச் சிந்திக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- Ig நோபல் பரிசானது, குறிப்பிடத்தக்க சில அறிவுசார் சாதனைகளை கௌரவிக்கும் நோபல் பரிசு போலல்லாமல், ஆராய்ச்சியின் நகைச்சுவையான மற்றும் அசாதாரணமான அம்சத்தினைக் கொண்டாடுகிறது.

## பிரிண்ட் ஆசியா விருதுகள்

- தி இந்து குழுமத்தின் சென்னை ஆலையானது, கொச்சியில் நடைபெற்ற இந்திய அச்சகங்கள் உச்சி மாநாட்டின் பிரிண்ட் ஆசியா விருது வழங்கும் விழாவில் வெள்ளிப் பதக்கம் வென்றது.
- இந்த விருதுகள் இரண்டு பிரிவுகளாக வழங்கப்பட்டன.
  - 100,000 பிரதிகளுக்கும் குறைவாக புழக்கத்தில் உள்ள செய்தித்தாள்கள் மற்றும்
  - 100,000 பிரதிகளுக்கு மேல் புழக்கத்தில் உள்ள செய்தித்தாள்கள்.
- இந்து குழுமம் 2வது பிரிவின் கீழ் விருதை வென்றது.

## சங்கீத நாடக அகாடமி அம்ரித் விருதுகள்

- சங்கீத நாடக அகாடமி ஆனது செப்டம்பர் 15 ஆம் தேதியன்று 84 கலைஞர்களுக்கு சிறப்பு ஒற்றைமுறைச் சாதனை விருதுகளை வழங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- இது இந்தியா சுதந்திரம் அடைந்ததன் 75 ஆண்டு நிறைவினை நினைவுகூரும்.
- 75 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் இதுவரை தங்கள் வாழ்க்கையில் எந்த தேசிய அங்கீகாரத்தினையும் பெறாதவர்களுக்கு இது வழங்கப்படுகிறது.
- இந்த விருதுகள் ஆனது, நாடகக் கலைத் துறையில் சிறந்து விளங்கும் கலைஞர்கள், ஆசிரியர்கள் மற்றும் அறிஞர்களுக்கு இந்தியா வழங்கும் தேசிய கௌரவம் என்று அகாடமியின் தலைவர் சந்தியா புரேச்சா தெரிவித்தார்.
- இதில் விருது பெற்ற தமிழர்கள்:
  - அச்சலாபுரம் சின்னதம்பி – நாதஸ்வரம்
  - புருசை சுப்ரமணியம் – தெருக் கூத்து
  - சுந்தரேசன் ராமமூர்த்தி – நாடகம் (நடிப்பு)
  - V.A.K ரங்காராவ் - நடன இசை (அறிஞர் & ஆவணப் படுத்தல்)
  - R. ரமணி - கர்நாடக இசை பாணி வீணை வாசிப்பு.

## 14வது உலக நறுமணப் பொருட்கள் மாநாடு

- 14வது உலக நறுமணப் பொருட்கள் மாநாடு ஆனது (WSC) நவி மும்பையில் உள்ள வாஷி எனுமிடத்தில் நடைபெற்றது.
- இந்த நிகழ்ச்சியானது இந்திய நறுமணப் பொருட்கள் வாரியம், வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம், பல்வேறு வர்த்தக அமைப்புகள் மற்றும் ஏற்றுமதி மன்றங்கள் ஆகியவற்றினால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டு உலக நறுமணப் பொருட்கள் மாநாட்டின் கருத்துரு, நோக்கம் 2030 : S-P-I-C-E-S (நிலைத்தன்மை, உற்பத்தித் திறன், புத்தாக்கம், ஒத்துழைப்பு, சிறப்பு மற்றும் பாதுகாப்பு) என்பதாகும்.
- பிராந்திய நறுமணப் பொருள் வளங்கள்:
  - கருமிளகு: கேரளா, கர்நாடகா மற்றும் பிற தென் மாநிலங்களில் விளைகிறது.
  - ஏலக்காய்: கேரளா, கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டில் பெருமளவில் உற்பத்தி செய்யப் படுகிறது.

- மஞ்சள்: ஆந்திரா, தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் பயிரிடப் படுகிறது.
- மிளகாய்: ஆந்திரா, கர்நாடகா மற்றும் தெலுங்கானா ஆகியவை மிளகாய் உற்பத்திக்குப் புகழ் பெற்றவை.
- சீரகம்: ராஜஸ்தான் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் விளைகிறது.
- கொத்தமல்லி: ராஜஸ்தான், குஜராத் மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் பயிரிடப்படுகிறது.

## Moving Memory செயலி

- 'நினைவகம், சூழலியல் மற்றும் நிலைத்தன்மை' மாநாட்டில் பல்வேறு நாடுகளில் இருந்து 500க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் உள்ள இந்திய நினைவக தொழில்நுட்ப ஆய்வு வலையமைப்பு மற்றும் நினைவக தொழில்நுட்ப ஆய்வு மையம் ஆகியவற்றின் இரண்டாம் ஆண்டு சர்வதேச மாநாட்டில் மூவிங் மெமரி எனப்படும் மிகைப்படுத்தப்பட்ட மெய்நிகர் தோற்றம்/ மெய்நிகர் தோற்றம் (ARVR) தொழில்நுட்பச் செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்தச் செயலியானது எண்ணிம மறுசீரமைப்பு மூலம் நினைவகத்தின் இடம் மாறும் மாதிரிகளை தக்க வைத்து, பயனருக்குத் தேவையான வடிவத்தினைத் தேர்ந்தெடுத்து, இந்த முப்பரிமாண பகுதிகளில் ஊடுருவி தேடல் மேற்கொள்ளவும் உதவுகிறது.

## நார்மன் போர்லாக் ஃபீல்டு விருது 2023

- ஒடிசா மாநிலத்தினைச் சேர்ந்த அறிவியலாளர் ஸ்வாதி நாயக் போர்லாக் 2023 ஆம் ஆண்டு ஃபீல்டு விருதினைப் பெற உள்ளார்.
- இது, சோதனை மற்றும் அறிமுகப்படுத்துதல் முதல் பருவநிலை-நெகிழ்திறன் மிக்க மற்றும் ஊட்டம் மிக்க அரிசி வகைகளை அணுகுதல் மற்றும் ஏற்றல் வரை, தேவைக்கு ஏற்ப நெல் விதை முறைகளில் விவசாயிகளை ஈடுபடுத்துவதற்கான அவரது புதுமையான அணுகுமுறைக்காக வழங்கப்படுகிறது.
- உலக உணவுப் பரிசு அறக்கட்டளையானது அவரை "சிறந்த இளம் அறிவியலாளர்" என்று வர்ணித்துள்ளது.
- வேளாண்மை, உணவுப் பாதுகாப்பு, பட்டினி நிலை ஒழிப்பு ஆகியவற்றில் இளம் அறிவியலாளர்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதில் இந்த விருதானது பெரும் சிறப்பு முக்கியத்துவத்தினைப் பெற்றுள்ளது.

## திருப்புமுனை பரிசு 2024

- 2023 ஆம் ஆண்டிற்கான வாழ்வியல் அறிவியலுக்கான திருப்புமுனை பரிசு ஆனது கார்ல் ஜூன் மற்றும் டாக்டர் மைக்கேல் சடலைன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இந்த இரண்டு அறிவியலாளர்களும் இரத்தப் புற்றுநோயில் (லுகேமியா) CAR-T நோய்த் தடுப்பு சிகிச்சையினை முதல் முதலில் பயன்படுத்தும் முன்னெடுப்பினை மேற் கொண்டனர்.

- இந்த வகை சிகிச்சையானது நோயாளியின் உடலில் உள்ள சொந்த நோயெதிர்ப்பு உயிரணுக்களை எடுத்து, புற்றுநோய் செல்களைக் குறிவைத்து அழிக்கும் வகையில் மரபணு ரீதியாக கட்டமைக்கும் செயல்முறையினை உள்ளடக்கியது.
- இந்த தொழில்நுட்பம் ஆனது புற்றுநோய் சிகிச்சை முறைகளில் புரட்சியை ஏற்படுத்த உதவியது.
- மற்ற வாழ்வியல் அறிவியல் பரிசுகளானது தாமஸ் காசர், எலன் சிட்ரான்ஸ்கி மற்றும் ஆண்ட்ரூ சிங்கிள்டன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- கணித்தத்திற்கான திருப்புமுனை பரிசு ஆனது சைமன் பிரெண்டலுக்கு வழங்கப் பட்டுள்ளது.
- ஜான் கார்டி மற்றும் அலெக்சாண்டர் ஜமோலோட்சிகோவ் ஆகியோருக்கு அடிப்படை இயற்பியலுக்கான திருப்புமுனை பரிசு வழங்கப் பட்டுள்ளது.
- இயற்பியல் மற்றும் கணிதத்தில் மேற்கொள்ளப்படும் ஆரம்பகாலத் தொழில் முறை சாதனைகளுக்காக ஆறு புதிய ஹொரைசன்ஸ் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.
- ஆரம்பகால ஆரம்பகாலத் தொழில் முறை சாதனைகளுக்காக பெண் கணிதவியல் நிபுணர்களுக்கு மூன்று மரியம் மிர்சகானி நியூ ஃபிராண்டியர்ஸ் பரிசுகள் வழங்கப் பட்டன.



# விளையாட்டுச் செய்திகள்

## அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி 2023

- முன்னாள் அமெரிக்க ஓபன் போட்டி சாம்பியனான ஸ்டான் வாவ்ரிங்கா, 40 வயதான ஜிம்மி கானர்ஸ் 1992 ஆம் ஆண்டில் பெற்ற வெற்றிக்கு அடுத்தபடியாக இப்போட்டியில் வெற்றி பெற்ற மிக வயதான மனிதர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- பெண் மற்றும் ஆண் போட்டியாளர்களுக்கு சமமானப் பரிசுத் தொகையை வழங்கிய முதல் அமெரிக்க ஓபன் விளையாட்டுப் போட்டியின் 50வது ஆண்டு விழாவானது சமீபத்தில் கொண்டாடப்பட்டது.
- 1973 ஆம் ஆண்டில் நடப்பு அமெரிக்க ஓபன் போட்டி சாம்பியனாக இருந்த 79 வயது டென்னிஸ் வீராங்கனையான பில்லி ஜீன் கிங், தனது சக பெண் வீராங்கனைகளை ஒன்று திரட்டி, ஆண்களுக்கு நிகரான பரிசுத் தொகை பெண்களுக்கும் கிடைக்கா விட்டால், அந்த ஆண்டு போட்டியைப் புறக்கணிக்குமாறு வலியுறுத்தினார்.
- அதனைத் தொடர்ந்து அமெரிக்க ஓபன் போட்டியின் ஆடவ மற்றும் மகளிர் சாம்பியன்களுக்கு 25,000 டாலர்கள் என்ற சமமான பரிசுத் தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
- மற்ற அனைத்து கிராண்ட்ஸ்லாம் போட்டிகளும் இந்த அறிவிப்பினைப் பின்பற்றச் செய்வதற்கு 34 ஆண்டுகள் ஆனது.
- இந்த ஆண்டு, அமெரிக்க ஓபன் போட்டியின் வெற்றியாளர்களுக்கு தலா 3 மில்லியன் டாலர் என்ற சமமான பரிசுத் தொகை வழங்கப் படும்.

## இந்தியாவின் தலைசிறந்த சதுரங்க வீரர்



- கிராண்ட்மாஸ்டர் D. குகேஷ், முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவின் தலை சிறந்தச் சதுரங்க வீரராக திகழ்ந்த விஸ்வநாதன் ஆனந்த் அவர்களை விஞ்சி இந்தியாவின் தலைசிறந்தச் சதுரங்க வீரர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- ஆனந்த் அவர்கள் 1986 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் இந்தியாவின் முன்னணிச் சதுரங்க வீரராகத் திகழ்ந்து வந்தார்.
- சென்னையைச் சேர்ந்த 17 வயதான கிராண்ட்மாஸ்டர், ஆனந்தை விட முன்னேறி உலகத் தரவரிசையில் 8வது இடத்தைப் பெற்றுள்ளார்.

- FIDE தரவரிசைப் பட்டியலில் முதல் 10 இடங்களுக்குள் குகேஷ் இடம் பெற்று ஒரு பெரும் சாதனையினைப் படைத்துள்ளார்.
- இந்தத் தரவரிசைப் பட்டியலில் ஆகஸ்ட் 01 ஆம் தேதிக்குப் பின் மூன்று இடங்கள் முன்னேறி இவர் சாதனையினைப் படைத்துள்ளார்.

## தூரந்த் கோப்பை போட்டி 2023

- இந்தப் போட்டியில் மோகன் பாகன் சூப்பர் ஜெயண்ட் அணியானது 17வது முறையாக இந்தக் கோப்பையை கைப்பற்றியுள்ளது.
- கடந்த ஆண்டை விட நான்கு அணிகள் கூடுதலாக என்ற அளவில் மொத்தம் 24 அணிகள் பங்கேற்புடன் ஒரு மாத அளவிலான இந்தப் போட்டி நடைபெற்றது.
- 1888 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்ட தூரந்த் கோப்பை போட்டியானது இந்தியா மற்றும் ஆசியாவின் பழமையான கால்பந்து போட்டியாகும்.
- இது உலகின் மூன்றாவது பழமையான போட்டியும் ஆகும்.
- 2023 ஆம் ஆண்டு போட்டியானது 132வது போட்டியாகும்.

## அமெரிக்க ஓபன் கிராண்ட்ஸ்லாம் போட்டி

- நோவக் ஜோகோவிச் தனது 4வது அமெரிக்க ஓபன் போட்டி பட்டத்தை வென்று 24வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தினை வென்றவர் என்ற சாதனைக்குரியவர் ஆனார்.
- அவர் இப்போட்டியின் வரலாற்றில் அதிக கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பட்டங்களை வென்ற ஆஸ்திரேலியாவின் மார்கரெட் கோர்ட்டின் சாதனையைச் சமன் செய்து உள்ளார்.
- அமெரிக்க ஓபன் போட்டியில் பெண்கள் பிரிவில் வென்ற 19 வயதான கோகோ காஃப் கிராண்ட்ஸ்லாம் போட்டியில் வென்ற இளம் அமெரிக்கர் என்ற ஒரு பெருமையினைப் பெற்றுள்ளார்.
- முன்னதாக செரீனா வில்லியம்ஸ் 1999 ஆம் ஆண்டில் தனது 17வது வயதில் இந்தப் போட்டியில் வென்றார்.

## ஆசிய கோப்பைப் போட்டி 2023

- இந்திய அணியானது இலங்கை அணியினை வீழ்த்தி 8வது ஆசிய கோப்பையை வென்று சாதனை படைத்துள்ளது.
- 9 விக்கெட்டுகளை வீழ்த்திய குல்தீப் யாதவ், 2023 ஆம் ஆண்டு ஆசிய கோப்பை போட்டி தொடரின் நாயகன் பட்டத்தை வென்றார்.
- முகமது சிராஜ் இறுதிப் போட்டியில் 6/21 என்ற கணக்கிலான தனது சிறப்பான ஆட்டத்தினால் ஆட்ட நாயகன் பட்டத்தினைப் பெற்றார்.

## தரவரிசையில் முன்னணியில் உள்ள கிரிக்கெட் அணி

- டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 ஆகிய மூன்று போட்டி வடிவங்களிலும் இந்திய அணி முன்னணி அணியாகத் திகழ்கிறது.

- ஒரு நாள் போட்டித் தரவரிசையில் பாகிஸ்தானைப் பின்னுக்குத் தள்ளி இந்தியா முதலிடத்தினைப் பெற்றது.
- ஏற்கனவே டெஸ்ட் மற்றும் டி20 தரவரிசையில் இந்தியா முன்னணியில் இருந்த நிலையில் இந்தியா தற்போது அனைத்துப் போட்டி வடிவங்களிலும் தலைசிறந்து விளங்குகிறது.
- ஆடவர் கிரிக்கெட் வரலாற்றில் இரண்டாவது முறையாக ஒரு அணி இத்தரவரிசையில் அனைத்துப் போட்டி வடிவங்களிலும் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
- இதற்கு முன், 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தென்னாப்பிரிக்கா மட்டுமே இந்த சாதனையை நிகழ்த்தியது.

## பெர்லின் மாரத்தான் உலக சாதனை





- எத்தியோப்பியா நாட்டினைச் சேர்ந்த டிஜிஸ்ட் அசெபா, 2:11:53 என்ற நேரக் கணக்கில் தனது ஓட்டத்தினை நிறைவு செய்து, பெர்லின் மராத்தானை வென்றதன் மூலம், பெண்களுக்கான மராத்தான் போட்டியில் உலக சாதனையைப் படைத்துள்ளார்.
- இது அவரது இரண்டாவது தொடர் பெர்லின் மராத்தான் பட்டமாகும்.
- இந்தச் சாதனையானது, 2019 ஆம் ஆண்டு சிகாகோ மராத்தானில் பிரிஜிட் கோஸ்கே படைத்த முந்தைய உலக சாதனையை விட இரண்டு நிமிடங்கள் 11 வினாடிகள் முன்னதாக நிறைவு செய்யப்பட்டது.
- கென்யாவின் எலியுட் கிப்சோஜ் ஆடவருக்கான ஓட்டப் பந்தயத்தில் 2:02:42 என்ற நேரக் கணக்கில் ஓட்டத்தினை நிறைவு செய்து தனது ஐந்தாவது பட்டத்தை வென்றார்.
- இது அவரது தொழில் முறை வாழ்க்கையில், ஓட்டத்தினை நிறைவு செய்த ஐந்தாவது வேகமான நேரக் கணக்காகும்.

# முக்கிய தினங்கள்

## தேசிய ஊட்டச்சத்து வாரம் - செப்டம்பர் 01 முதல் 07 ஆம் தேதி வரை

- ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதற்கான நல்ல ஆரோக்கியமான உணவு முறைகள் மற்றும் சரியான ஊட்டச்சத்தின் மதிப்பு குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஒரு வார காலக் கொண்டாட்டமானது இந்திய உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியத்தினால் நடத்தப் படுகிறது.
- இந்த வாரியம் ஆனது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- இந்த ஒரு வாரக் கொண்டாட்டமானது முதன்முதலில் இந்தியாவில் 1982 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்த வாரக் கொண்டாட்டத்தின் கருத்துரு, " Healthy Diet Gawing Affordable for All" என்பதாகும்.

## உலக தேங்காய் தினம் - செப்டம்பர் 02




- ஆசிய மற்றும் பசிபிக் தென்னைச் சமூகம் (APCC) ஆனது, 2009 ஆம் ஆண்டில் உலக தேங்காய் தினத்தைக் கொண்டாடும் ஒரு முன்னெடுப்பினைத் தொடங்கியது.

- இந்தோனேசியா நாட்டின் ஜகார்த்தா எனுமிடத்தில் இந்த அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ளது.
- இந்த அமைப்பானது ஆசிய நாடுகளில் தேங்காய்களின் பயிரிடல், அதன் உற்பத்தி, விற்பனை மற்றும் ஏற்றுமதியை ஆதரிப்பதற்காக 1969 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்தியா, மலேசியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, கென்யா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் APCC அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளன.

## திபெத்திய ஜனநாயக தினம் - செப்டம்பர் 02

- திபெத்திய ஜனநாயக தினமானது செப்டம்பர் 02 ஆம் தேதியன்று தர்மசாலா என்னும் இடத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் பகுதியளவு இறையாண்மை பெற்ற திபெத்திய அரசாங்கத்தின் பதவியேற்றத்தினைக் குறிக்கும் வகையில் அனுசரிக்கப் பட்டது.
- 1960 ஆம் ஆண்டு செப்டம்பர் 02 ஆம் தேதியன்று, திபெத்திய நாடாளுமன்றத்தின் முதலாவது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், திபெத்திய ஜனநாயக அமைப்பைத் துவக்கும் வகையில், புத்தகயா எனுமிடத்தில் பதவியேற்றனர்.
- 1963 ஆம் ஆண்டில், தலாய் லாமா ஜனநாயகம் மற்றும் உலகளாவிய விழுமியங்கள் ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் திபெத்திய அரசியலமைப்பை இயற்றினார்.
- 1975 ஆம் ஆண்டில், மத்திய திபெத்திய நிர்வாக அமைப்பின் உயர்நிலை அமைப்பான கஷாக், செப்டம்பர் 02 ஆம் தேதியைத் திபெத்திய ஜனநாயகத்தின் ஸ்தாபன நாளாக அறிவித்தது.


## எழுத்தறிவு வாரம் - செப்டம்பர் 01 முதல் 08 வரை

- இந்திய அரசானது 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 முதல் செப்டம்பர் 08 ஆம் தேதி வரை எழுத்தறிவு வாரத்தை கொண்டாடுவதற்கு முடிவு செய்துள்ளது.
- ULLAS - நவ் பாரத் சக்சார்த்தா காரியக்கிரம் பற்றி அனைத்துப் பங்குதாரர்கள் / பயனாளிகள் / குடிமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சர்வதேச எழுத்தறிவு தினத்தைக் கொண்டாடுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேசத்தின் குடிமக்களுக்கு கர்தவ்யபோத் மற்றும் ஜன்பகிதாரி உணர்வைப் புகுத்தச் செய்வதில் இந்த ஒரு வார கால எழுத்தறிவு வாரக் கொண்டாட்டமானது வெகுஜனப் பங்கேற்பைச் செயல்படுத்தும்.

## சர்வதேச தொண்டு தினம் - செப்டம்பர் 05


- அன்னை தெரசா என்று அழைக்கப்படும் அன்னை மேரி தெரசா போஜாக்ஷியு அவர்கள் 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் 05 ஆம் தேதியன்று காலமானார்.
- தனது வாழ்நாள் முழுவதும் ஏழை எளிய மக்களுக்குச் சேவை செய்த இவருக்கு ஒரு கௌரவமளிக்கும் விதமாக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தியாவின் கொல்கத்தாவில் உள்ள ஏழை மக்களுக்கு தனது மகத்தான சேவையை வழங்கிய அவர் மிஷனரிஸ் ஆஃப் சேரிட்டி என்ற அறக்கட்டளையினையும் நிறுவச் செய்தார்.

- அவரதுப் பணிகளுக்காக, 1979 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப் பட்டது.




## தேசிய ஆசிரியர் தினம் - செப்டம்பர் 05

- டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்தநாள் ஆனது ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- இவர் இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவர் மற்றும் முதல் துணை குடியரசுத் தலைவர் ஆவார்.
- 1931 முதல் 1936 ஆம் ஆண்டு வரை, ஆந்திரப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவும், பின்னர் 1939 ஆம் ஆண்டில் பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவும் இவர் பணியாற்றினார்.




- 1954 ஆம் ஆண்டில் இவருக்குப் பாரத ரத்னா விருது வழங்கப் பட்டது.

- 1963 ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் ராயல் ஆர்டர் ஆஃப் மெரிட் என்ற அமைப்பின் கௌரவ உறுப்பினராகவும் அவர் சேர்க்கப்பட்டார்.
- இவர் ‘The Philosophy of Rabindranath Tagore’ (‘ரவீந்திரநாத் தாகூரின் தத்துவம்’) என்ற ஒரு நூலையும் எழுதியுள்ளார்.

## சர்வதேச நீல வானுக்கான தூய காற்று தினம் - செப்டம்பர் 07

- காற்றின் தரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேம்படுத்தச் செய்வதற்காகவும் எளிதாக்குவதற்காகவும் இந்தத் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- கூட்டுப் பொறுப்பு ஏற்றல் மற்றும் கூட்டு நடவடிக்கையின் அவசியத்தை உணர்த்தும் உலக நாடுகளின் எல்லைக்கு அப்பாற்பட்ட காற்று மாசுபாட்டின் தன்மையில் இது கவனம் செலுத்துகிறது.
- பூமியில் 99 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் அசுத்தமான காற்றை சுவாசிக்கச் செய்கின்றனர்.
- இது ஆண்டுக்கு 6.7 மில்லியன் அகால (ஆயுட்காலத்திற்கு முன்பான இறப்பு) மரணங்கள் மற்றும் கடுமையான உடல்நலப் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு என்பது, “தூய்மையான காற்றிற்காக ஒன்றுபடுங்கள்” ஆகும்.

## சர்வதேசக் காவல்துறை ஒத்துழைப்பு தினம் - செப்டம்பர் 07

- இத்தினம் முதன்முறையாக 2023 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் படுகிறது.
- உலகளாவியப் பாதுகாப்பில் உலக நாடுகளின் சட்ட அமலாக்கச் சமூகத்தின் மிகவும் அத்தியாவசியப் பணியை இந்த நாள் அங்கீகரிக்கிறது.
- 1923 ஆம் ஆண்டு இதே நாளில் தான், அப்போதையச் சர்வதேசக் குற்றவியல் காவல் ஆணையம் (ICPC) உருவாக்கப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, ‘காவல் துறையில் பெண்கள்’ என்பதாகும்.

## சர்வதேச எழுத்தறிவு தினம் - செப்டம்பர் 08

- முதலாவது உலக நாடுகளின் கல்வி அமைச்சர்களின் மாநாடானது 1965 ஆம் ஆண்டு செப்டம்பர் 08 ஆம் தேதியன்று ஈரானின் டெஹ்ரானில் நடைபெற்றது.
- கல்வித் திட்டங்கள் குறித்த சர்வதேச விவாதத்திற்காகப் பிரத்தியேகமாக நடத்தப்பட்ட முதல் கூட்டத்தைக் குறிக்கும் வகையில் இத்தினம் அனுசரிக்கப் படுகிறது.
- 1966 ஆம் ஆண்டில் நடைபெற்ற 14வது யுனெஸ்கோ பொது மாநாட்டின் போது இந்தத் தினத்தின் அனுசரிப்பு குறித்து அறிவிக்கப்பட்டது.
- தனிமனித மேம்பாடு, எழுத்தறிவு, சமுதாய முன்னேற்றம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இந்த நாள் நமக்கு நினைவூட்டுகிறது.
- உலகெங்கிலும் சுமார் 775 மில்லியன் மக்கள் அடிப்படைக் கல்வியறிவுத் திறன்கள் இல்லாமல் உள்ளனர்.

## உலக உடலியக்க சிகிச்சை தினம் - செப்டம்பர் 08

- உலக உடலியக்க சிகிச்சை (பிசியோதெரபி) அமைப்பானது 1951 ஆம் ஆண்டில் இந்த நாளில் தான் நிறுவப்பட்டது.
- உலக உடலியக்க சிகிச்சைச் சமூகத்தின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டினை இந்த நாள் அங்கீகரிக்கிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான உலக உடலியக்க சிகிச்சை தினத்திற்கான கருத்துரு, "முடக்கு வாதம்" என்பதாகும்.

## உலக முதலுதவி தினம் – செப்டம்பர் 09

- உலக முதலுதவி தினமானது, ஆண்டுதோறும் செப்டம்பர் மாதத்தின் இரண்டாவது சனிக் கிழமையன்று அனுசரிக்கப்படுகிறது.
- உயிர்களைக் காப்பதில் முதலுதவியின் பெரும் பங்கு பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினம் ஆனது, 2000 ஆம் ஆண்டில் சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கத்தினால் (IFRC) நிறுவப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "எண்ணிம உலகில் முதலுதவி" என்பதாகும்.

## தாக்குதல்களிலிருந்து கல்வி சார் கட்டமைப்புகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் – செப்டம்பர் 09

- கல்வி சார் கட்டமைப்பு மீதான தாக்குதல்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், அனைத்துக் குழந்தைகளின் கல்வி உரிமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதற்குமான அழைப்பினை விடுப்பதையும் இந்த நாள் நோக்கமாக கொண்டுள்ளது.
- இந்த நாள் ஆனது 2020 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- உலகளவில் 2017 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் கல்வி சார் கட்டமைப்புகள் மீதான தாக்குதல்கள் அல்லது கல்வி சார் கட்டமைப்பு வசதிகளை இராணுவங்கள் பயன்படுத்துதல் சார்ந்த 14,500க்கும் மேற்பட்டச் சம்பவங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- இத்தகைய தாக்குதல்களில் 28,000க்கும் மேற்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் காயமடைந்தனர், கொல்லப்பட்டனர் அல்லது பாதிக்கப்பட்டுள்ளனர்.

## உலக தற்கொலை தடுப்பு தினம் (WSPD) – செப்டம்பர் 10

- இந்த தினம் ஆனது, 2003 ஆம் ஆண்டில் சர்வதேச தற்கொலை தடுப்புச் சங்கத்தினால் உலக சுகாதார அமைப்புடன் இணைந்து நிறுவப்பட்டது.
- தற்கொலைகளைத் தடுப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள் குறித்து மக்களுக்குக் கற்பிப்பதற்கும் விழிப்புணர்வூட்டுவதற்கும் இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "செயல்கள் மூலம் நம்பிக்கையை உருவாக்குதல்" என்பதாகும்.

- ஒவ்வோர் ஆண்டும் உலகளவில் 700,000 தற்கொலைகள் பதிவு செய்யப் படுகின்றன.
- 2021 ஆம் ஆண்டில் இந்தியாவில் மொத்தம் 1.64 லட்சம் தற்கொலைகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- 2020 ஆம் ஆண்டு தற்கொலை வழக்குகளின் புள்ளி விவரங்களுடன் ஒப்பிடும் போது தற்போது ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு 6.1 என்ற அதிகளவிலான தற்கொலை விகிதம் பதிவாகியுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு 11.3 என்ற விகிதத்தில் இருந்த இந்தியாவின் தற்கொலை விகிதமானது, 2021 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 12 ஆக பதிவு செய்யப் பட்டுள்ளது.

## தேசிய வனத் தியாகிகள் தினம் – செப்டம்பர் 11

- இது முதன்மையாக காடுகளையும் வனவிலங்குகளையும் பாதுகாக்க வேண்டி தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த அனைத்து சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் தனி நபர்களுக்குக் கௌரவமளிக்கிறது.
- எனினும், இந்தத் தினத்தின் வரலாற்றுப் பின்புலம் 1730 ஆம் ஆண்டில் நடைபெற்ற கெஜர்லி படுகொலையுடன் தொடர்புடையது.
- 1730 ஆம் ஆண்டில், வரலாற்றுப் புகழ்மிக்க கெஜர்லி படுகொலை என்பது மார்வார் பேரரசிற்குள் நடைபெற்றது.
- ராஜஸ்தானின் மகாராஜா அபாய் சிங், தனது புத்தம்புதிய அரண்மனைக்கு வேண்டி மரக்கட்டைகளைக் கொண்டு செல்வதற்காக கெஜர்லியின் பிஷ்னோய் கிராமத்தில் உள்ள மரங்களை வெட்ட உத்தரவிட்டார்.
- பிஷ்னோய் சமூகத்தினர் இந்தச் செயலைக் கடுமையாக எதிர்த்ததோடு, காடுகளைப் பாதுகாக்க தங்கள் உயிரைத் தியாகம் செய்யவும் தயாராக இருந்தனர்.




## உலக மின்சார வாகன தினம் - செப்டம்பர் 09

- இந்த நாள் மின்சாரப் போக்குவரத்தின் கொண்டாட்டத்தைக் குறிக்கிறது.
- முதலாவது உலக மின்சார வாகன தினம் ஆனது 2020 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.

- இந்தத் தினமானது, அனைத்து வடிவங்கள் மற்றும் அளவுகள் கொண்ட மின்சார வாகனங்களைக் கொண்டாடுவதோடு, இந்த மாற்றமானது உண்மையில் எவ்வளவு பலனளிக்கிறது மற்றும் போக்குவரத்தினை எளிதாக்குகிறது என்பது பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்துகிறது.
- தற்போது, இந்தியாவில் சுமார் 2.9 மில்லியன் மின்சார வாகனங்கள் பயன்பாட்டில் உள்ள நிலையில் இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.
- 2022-23 ஆம் ஆண்டில், மின்சார வாகனங்களின் பயன்பாட்டு ஊடுருவல் விகிதம் ஆனது மொத்த வாகனப் பயன்பாட்டில் 5.3 சதவீதத்தைத் தொட்டது.
- இது 2020-21 ஆம் ஆண்டில் பதிவான நிலையிலிருந்து கிட்டத்தட்ட 6 மடங்கு அதிகம் ஆகும்.

## இமயமலை திவாஸ் - செப்டம்பர் 09

- இந்த நாள் இமயமலை சுற்றுச்சூழல் மற்றும் பிராந்தியத்தினைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினமானது 2015 ஆம் ஆண்டில் அப்போதைய உத்தரக்காண்ட் முதல்வரால் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது.
- இயற்கையைக் காப்பதிலும் பராமரிப்பதிலும், மோசமான வானிலையிலிருந்து நம் நாட்டைப் பாதுகாப்பதிலும் இமயமலை முக்கிய பங்கு வகிக்கிறது.
- இந்தியாவில் மழை பொழிவதற்கு இமயமலைத் தொடர்களும் ஒரு முக்கியக் காரணம் ஆகின்றன.

## தெற்கு-தெற்கு நாடுகளின் ஒத்துழைப்பிற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 12


- உலகின் தெற்கு நாடுகளில் உள்ள மக்கள் மற்றும் நாடுகளிடையேயான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை இந்த நாள் எடுத்துரைக்கிறது.
- உலகின் தெற்குப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார மற்றும் அரசியல் முன்னேற்றங்கள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு என்பது, "ஒற்றுமை, சமத்துவம் மற்றும் கூட்டாண்மை: நிலையான மேம்பாட்டு இலக்குகளை அடைய தெற்கு-தெற்கு நாடுகளின் ஒத்துழைப்பைத் தூண்டுதல்" ஆகும்.




## உலக துச்சேன் தசைச்சிதைவு நோய் தினம் - செப்டம்பர் 07

- துச்சேன் தசைச்சிதைவு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வேண்டி ஒவ்வோர் ஆண்டும் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.

- கல்வி, ஆலோசனை மற்றும் சமூக உள்ளடக்கம் ஆகியவை மூலம் தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பல்வேறு முயற்சிகளை ஆதரிப்பதே இந்த நாளின் நோக்கம் ஆகும்.
- இந்த அரிய வகை சிதைவு நோயானது முழு உடலையும் பாதிக்கும் வரை காலப் போக்கில் உடல் தசைகளைப் பலவீனப்படுத்துகிறது.
- ஐந்தாயிரம் ஆண் குழந்தைகளில் ஒரு குழந்தை இந்தப் பாதிப்புடன் பிறக்கிறது.
- இது X-குரோமோசோம் பிறழ்வின் விளைவினால் ஏற்படுகிறது.





## இந்தி திவாஸ் - செப்டம்பர் 14



- இந்திய அரசியல் நிர்ணய சபையானது 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் தேதி அன்று தேவநகரி எழுத்தில் எழுதப்பட்ட இந்தி மொழியை இந்தியாவின் அலுவல் மொழியாக ஏற்றுக் கொண்டது.
- 1916 ஆம் ஆண்டு இதே நாள் தான், இந்தி மொழியை தேவநகரி எழுத்து வடிவங்களில் அமைப்பதற்கு முக்கியப் பங்காற்றிய பியோஹர் ராஜேந்திர சிங் அவர்களின் பிறந்த நாளாகும்.
- நாட்டில் முதல் இந்தி தினமானது 1953 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்டது.


## தேசியப் பொறியாளர் தினம் - செப்டம்பர் 15




- இந்த தினமானது விஸ்வேஸ்வரய்யா அவர்களின் வாழ்வியல் மரபுகளுக்கு கௌரவம் செலுத்துவதுடன், இந்தியாவின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு பொறியாளர்கள் ஆற்றியப் பங்களிப்பினை அங்கீகரிக்கிறது.
- இந்தத் தினமானது மோக்சகுண்டம் விஸ்வேஸ்வரய்யா அவர்களின் பிறந்த நாளை நினைவு கூருகிறது.
- சர் விஸ்வேஸ்வரய்யா இந்தியாவின் உள்கட்டமைப்பு மேம்பாட்டில் குறிப்பிடத் தக்க தாக்கத்தை ஏற்படுத்திய முன்னோடி ஆவார்.
- அணைகள், நீர்ப்பாசனக் கட்டமைப்புகள் மற்றும் பிற திட்டங்களின் மேம்பாட்டில் அவர் முக்கிய பங்கு வகித்தார்.
- மேலும் அவர் இந்தியாவில் பொறியியலின் தந்தை எனவும் அழைக்கப் படுகிறார்.
- 1912 முதல் 1918 வரையில் அவர் மைசூரின் 19வது திவானாகவும் பதவி வகித்தார்.
- அவர் நவீன மைசூரின் அடித்தளமிட்டவர் என அழைக்கப் படுகிறார்.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'நிலையான எதிர்காலத்திற்கான பொறியியல்' என்பதாகும்.

## உலக நிண நீர்த் திசுப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம் - செப்டம்பர் 15

- இந்த நாள் நிண நீர்த்திசுப் புற்றுநோய் பற்றி பொதுமக்களுக்கு மிகவும் விழிப்புணர்வு ஊட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் நிணநீர்த் திசுப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு ஆதரவு மற்றும் தகவல்களை வழங்க முயல்கிறது.
- நிணநீர்த் திசுப் புற்றுநோய் என்பது உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தின் ஒரு பகுதியான நிணநீர் மண்டலத்தைப் பாதிக்கும் இரத்தப் புற்றுநோய்களின் ஒரு வகை ஆகும்.
- நிணநீர்த் திசுப் புற்றுநோய் பல்வேறு வடிவங்களில் ஏற்படலாம் என்ற நிலையில் அவற்றுள் இரண்டு முக்கிய வகைகள் ஹாட்ஜ்கின் நிண நீர்த் திசுப் புற்றுநோய் மற்றும் ஹாட்ஜ்கின் அல்லாத லிம்போமா என்பனவாகும்.




## சர்வதேச ஜனநாயக தினம் - செப்டம்பர் 15



- சர்வதேச ஜனநாயக தினமானது ஜனநாயகம் குறித்த உலகளாவியப் பிரகடனத்திற்கு மூலம் உருவாக்கப்பட்டது.
- இது 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதியன்றுப் பாராளுமன்றத்திற்கு இடையேயான ஒன்றியத்தினால் (IPU) ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- IPU என்பது பன்னாட்டு பாராளுமன்றங்களின் சர்வதேச அமைப்பாகும்.
- சர்வதேச ஜனநாயக தினத்தைக் கொண்டாடச் செய்வதற்கான ஒரு முன்மொழிதலை கத்தார் முன் வைத்தது.
- இத்தினமானது முதல் முறையாக 2008 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.

## உலக ஓசோன் தினம் - செப்டம்பர் 16


- ஓசோன் படலத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும், அதன் சிதைவு மனித ஆரோக்கியம், சூழலியல் அமைப்புகள் மற்றும் சுற்றுச்சூழலில் எவ்வாறு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் மக்களுக்குத் தெரிவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மற்ற 45 உலக நாடுகள் 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 ஆம் தேதியன்று, ஓசோன் படலத்தைச் சிதைக்கும் கூறுகள் குறித்த மாண்ட்ரீயல் நெறிமுறையில் கையெழுத்திட்டன.
- எனவே, ஒவ்வோர் ஆண்டும் இந்த நாள் ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- 2009 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 ஆம் தேதியன்று, வியன்னா உடன்படிக்கை மற்றும் மாண்ட்ரீயல் நெறிமுறை ஆகியவை ஐக்கிய நாடுகள் சபையின் வரலாற்றில் உலகளாவிய அங்கீகாரத்தை அடைந்த முதல் ஒப்பந்தங்களாகும்.
- மாண்ட்ரீயல் நெறிமுறைக்கான கிகாலி திருத்தமானது சட்டப்பூர்வமாக ஒரு பிணைப்பினைக் கொண்டுள்ள நிலையில் இது 2019 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.
- இந்தத் திருத்தம் ஆனது 2040 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் ஆற்றல்மிக்க பசுமை இல்ல வாயுக்களின் குழுவினைச் சேர்ந்த ஹைட்ரோஃப்ளூரோகார்பன்களை (HFCs) படிப்படியாக அகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "மாண்ட்ரீயல் நெறிமுறை: ஓசோன் அடுக்கைச் சரிசெய்தல் மற்றும் பருவநிலை மாற்றத்தைக் குறைத்தல்" என்பதாகும்.

## சர்வதேச சிவப்பு பாண்டா தினம் - செப்டம்பர் 16

- இது ஒவ்வொரு ஆண்டின் செப்டம்பர் மாதத்தின் மூன்றாவது சனிக்கிழமையன்று அனுசரிக்கப்படுகிற நிலையில் இத்தினம் இந்த ஆண்டு செப்டம்பர் 16 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.
- இந்த நாள் ஆனது முதலில் சிவப்பு பாண்டா வலையமைப்பினால் 2010 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- ஆசியாவின் அடர்ந்த காடுகளில் காணப்படும் இந்த அற்புத உயிரினத்தின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அளவில் குறைவு ஏற்பட்டுள்ளது பற்றிய

எச்சரிக்கையை எழுப்புவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- சீனாவின் தென்மேற்குப் பகுதியிலும் கிழக்கு இமயமலைப் பகுதியிலும் சிவப்பு பாண்டாக்கள் காணப்படுகின்றன.
- IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலின்படி, இந்தியாவில் மொத்தம் 5,000 முதல் 6,000 சிவப்பு பாண்டாக்கள் உள்ளன.
- இந்தியாவில், அருகி வரும் சிவப்பு பாண்டாக்கள் சிக்கிம் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள சரணாலயங்களில் அதிகம் காணப்படுகின்றன.




## உலக நோயாளிகள் பாதுகாப்பு தினம் – செப்டம்பர் 17




- இந்த நாள் உலக சுகாதார அமைப்பினால் (WHO) நிறுவப்பட்டது.
- இது நோயாளிகளின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், உலகளவில் சுகாதாரப் பாதுகாப்பை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- நோயாளியின் பாதுகாப்பு என்பது மருத்துவச் சேவைகளை வழங்கும் போது ஏற்படும் பிழைகள், பாதகமான நிகழ்வுகள் மற்றும் நோயாளிகளுக்கு ஏற்படும் தீங்குகளைத் தடுத்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "நோயாளிகளின் பாதுகாப்பிற்காக நோயாளிகளை ஈடுபடுத்துதல்" என்பதாகும்.

## உலக மூங்கில் தினம் – செப்டம்பர் 18

- இந்தத் தினமானது உலக மூங்கில் அமைப்பின் முயற்சியால் நிறுவப்பட்டது.
- உலக மூங்கில் அமைப்பானது முதலாவது உலக மூங்கில் மாநாட்டினை தாய்லாந்தின் பாங்காக் நகரில் ஏற்பாடு செய்தது.
- 2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற 8வது உலக மூங்கில் மாநாட்டின் போது அதில் பங்கேற்ற நாடுகள் இந்த நாளை அதிகாரப் பூர்வமாக அறிவித்தன.
- மூங்கில் என்பது வேகமாக வளரும் தன்மை மற்றும் அதன் வலிமை, நெகிழ்வுத்தன்மை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தன்மை ஆகியவற்றிற்கு பெயர் பெற்ற ஒரு வகை புல் ஆகும்.




## சர்வதேச காது கேளாதோர் வாரம் - செப்டம்பர் 24/30

- ஒவ்வோர் ஆண்டும், செப்டம்பர் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமையன்று முடிவடையும் முழு வாரமும் சர்வதேச காது கேளாதோர் வாரமாக (IWD) அனுசரிக்கப் படுகிறது.
- இது முதன்முதலில் 1958 ஆம் ஆண்டில் ரோம் நகரில் உலக காது கேளாதோர் கூட்டமைப்பினால் (WFD) தொடங்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'காது கேளாதவர்கள் எங்கு வேண்டுமானாலும் உச்சம் காணும் வகையிலான உலகம்' என்பதாகும்.

## சர்வதேச அமைதி தினம் (UN) - செப்டம்பர் 21

- முதலாவது சர்வதேச அமைதி தினம் ஆனது 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் தேதியன்று கொண்டாடப்பட்டது.
- இது அமைதி மற்றும் மோதல் தீர்வுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உறுதிப்பாட்டை நினைவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் மிகவும் அமைதியான மற்றும் நேர்மையான உலகத்தை உருவாக்குவதை நோக்கிப் பணியாற்றுவதற்கு தனி நபர்கள், சமூகங்கள் மற்றும் நாடுகளை ஊக்குவிக்கிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'அமைதிக்கான நடவடிக்கைகள்: # உலகளாவிய இலக்குகளுக்கான நமது லட்சியம்' என்பதாகும்.
- 2023 ஆம் ஆண்டானது மனித உரிமைகளுக்கான உலகளாவியப் பிரகடனம் மற்றும் இனப் படுகொலை தடுப்பு மற்றும் தண்டனை தொடர்பான உடன்படிக்கையின் 75வது ஆண்டு நிறைவு விழாவாகும்.

## உலக அல்சைமர் நோய் தினம் - செப்டம்பர் 21

- இந்தத் தினமானது அல்சைமர் நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான உலகளாவிய முன்னெடுப்பாகும்.
- அல்சைமர் நோய் மற்றும் பிற வகை மறதி நோய்களைச் சுற்றியுள்ள தவறான தகவல்களை அகற்றுவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அல்சைமர் நோய் ஆனது மிகவும் பொதுவான மறதி நோய் (டிமென்ஷியா) வகை என்ற நிலையில் இது மறதி நோய்களில் 60 முதல் 70% பங்கினைக் கொண்டுள்ளது.
- அல்சைமர் நோய் என்பது நினைவகம், சிந்தனை மற்றும் நடத்தை ஆகியவற்றைப் பாதிக்கின்ற ஒரு மூளைக் கோளாறு ஆகும்.
- இந்த அறிகுறிகள் காலப்போக்கில் மோசமாகி, ஒருவரின் அன்றாட வாழ்க்கை மற்றும் செயல்பாடுகளை பாதிக்கத் தொடங்கும்.
- இது பொதுவாக 65 வயதுக்கு மேற்பட்டவர்களைப் பாதிக்கிறது.
- சர்வதேச அல்சைமர் நோய் அமைப்பின் பத்தாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த நாள் 1994 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் தேதியன்று எடின்பர்க் நகரில் நிறுவப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Never Too Early, Never Too Late' என்பதாகும்.


## புற்று நோயாளிகளின் நலன்புரி தினம் - செப்டம்பர் 22

- புற்றுநோய் நோயாளிகளின் நலன்புரி தினமானது உலக ரோஸ் தினம், என்றும் அழைக்கப் படுகிறது.
- இந்த தினம் ஆனது நம்பிக்கையுடனும் தைரியத்துடனும் சிறந்த தரமான வாழ்வினை வாழ அவர்களை ஊக்குவிக்கும் வகையில் புற்றுநோயாளிகளின் நலனுக்காக அர்ப்பணிக்கப் பட்ட தினமாகும்.
- புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அனைவரின் வாழ்விலும் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் கொண்டு வருவதற்கான செயல்களை மேற்கொள்வதற்கு வேண்டி உலகெங்கிலும் உள்ள மக்களை இது ஊக்குவிக்கிறது.

- இந்த நாள் ஆனது கனடாவைச் சேர்ந்த 12 வயது மெலிண்டா ரோஸின் நினைவாக முதன் முதலில் அனுசரிக்கப்பட்டது.
- அஸ்கின் ட்யூமர் எனப்படும் அரிய வகை இரத்தப் புற்றுநோயால் அவர் பாதிக்கப் பட்டிருந்ததாக கண்டறியப்பட்டது.

## உலக காண்டாமிருக தினம் - செப்டம்பர் 22

- காண்டாமிருகத்தின் ஐந்து வகைகளையும் காப்பதற்கான விழிப்புணர்வு மற்றும் வளங்காப்பு முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக இந்த தினம் அனுசரிக்கப் படுகிறது.
- இந்தியாவில் ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்களின் எண்ணிக்கையானது 3,262 ஆக இருந்தது.
- அசாமின் காசிரங்கா தேசியப் பூங்காவில் அதிக எண்ணிக்கையிலான (2,613) காண்டா மிருகங்கள் உள்ளதாக பதிவாகியுள்ளது.
- தற்போது, கருப்பு, ஜாவா மற்றும் சுமத்ரா ஆகிய மூன்று வகையான காண்டா மிருகங்கள் மிகவும் அருகி வரும் இனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- வெள்ளை காண்டாமிருகம் அச்சுறுத்தலுக்கு அருகில் உள்ள இனமாகப் பட்டியலிடப் பட்டுள்ளது.
- பெரிய ஒற்றைக் கொம்பு காண்டாமிருகம் ஆனது எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.



## சர்வதேச சைகை மொழிகள் தினம் - செப்டம்பர் 23

- உலக காது கேளாதோர் கூட்டமைப்பு (WFD) ஆனது உலகெங்கிலும் உள்ள 70 மில்லியன் காது கேளாதோர் சார்பாக இந்த தினத்திற்கான கருத்தாக்கத்தினை முன்மொழிந்தது.
- 1951 ஆம் ஆண்டில் உலக காது கேளாதோர் கூட்டமைப்பு நிறுவப்பட்ட தினத்தைக் குறிக்கும் விதமாக இந்தத் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 2018 ஆம் ஆண்டில், சர்வதேச காதுகேளாதோர் வாரத்தின் ஒரு பகுதியாக, சர்வதேச சைகை மொழிகள் தினம் முதல் முறையாக அனுசரிக்கப்பட்டது.

- 1958 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முதன்முதலில் சர்வதேச காது கேளாதோர் வாரம் கடைபிடிக்கப் பட்டது.
- உலகில் 70 மில்லியனுக்கும் அதிகமான காது கேளாதோர் உள்ளனர்.
- அவர்களில் 80% க்கும் அதிகமானோர் வளர்ச்சியடையாத நாடுகளில் வாழ்கின்றனர்.

## உலக காது கேளாதோர் தினம் - செப்டம்பர் 24




- உலக காது கேளாதோர் தினம் ஆனது ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமையன்று அனுசரிக்கப் படுகிறது.
- உலக காது கேளாதோர் கூட்டமைப்பானது 1958 ஆம் ஆண்டில் உலக காது கேளாதோர் தினத்தினை அனுசரிக்கும் முன்னெடுப்பினைத் தொடங்கியது.
- உலக காது கேளாதோர் கூட்டமைப்பின் முதல் உலக மாநாடு ஆனது 1951 ஆம் ஆண்டில் இத்தாலியின் ரோம் நகரில் நடைபெற்றது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "அனைவருக்கும் காது மற்றும் கேட்கும் திறன் பராமரிப்பு" என்பதாகும்.

## உலக மருந்தாளுநர் தினம் - செப்டம்பர் 25

- இந்த நாள் துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடைபெற்ற 2009 ஆம் ஆண்டு சர்வதேச மருந்துக் கூட்டமைப்பு மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.
- இந்தச் சிறப்பு நாள் ஆனது மருத்துவப் பாதுகாப்புத் துறையில் மருந்தாளுநர்கள் மற்றும் மருந்தியல் வல்லுநர்களின் பெரும் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டுக் காட்டச் செய்வதற்காக நிறுவப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "சுகாதார அமைப்பினை வலுப்படுத்தும் மருந்தகங்கள்" என்பதாகும்.

## உலக கருத்தடை தினம் - செப்டம்பர் 26




- இத்தினமானது எண்ணற்ற கருத்தடை முறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பெண்கள் பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் குறித்து தகவலறிந்த முடிவுகளை மேற்கொள்வதற்கு அவர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையிலான ஒரு வாய்ப்பாக இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த நாள் முதன்முதலில் 2007 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டின் கருதுரு "The Power of Options" என்பதாகும்.
- கர்ப்பம் அடைவதைத் தடுப்பதற்காக கருத்தடை அல்லது பிறப்புக் கட்டுப்பாடு முறை பயன்படுத்தப்படுகிறது.
- ஆணுறை, கருத்தடை மாத்திரைகள், T வடிவ தாமிரக் கம்பி பொருத்துதல் போன்ற கருப்பையக கருத்தடை சாதனங்கள் மற்றும் ஊசி மூலம் உட்செலுத்தக் கூடிய கருத்தடை மருந்துகள் ஆகியவை பிரபலமான கருத்தடை முறைகளில் சிலவாகும்.

## உலக சுற்றுச்சூழல் வள தினம் - செப்டம்பர் 26

- மனித வாழ்வில் சுற்றுச்சூழல் வளத்தின் தாக்கம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் சர்வதேசச் சுற்றுச்சூழல் வளக் கூட்டமைப்பினால் (IFEH) 2011 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, ‘உலக சுற்றுச்சூழல் சார் பொது சுகாதாரம்: ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க முனைவது’ என்பதாகும்.

## அணு ஆயுதங்களை முற்றிலும் ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 26

- அணு ஆயுதங்களால் மனித குலத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தல் மற்றும் அவற்றை முற்றிலுமாக ஒழிப்பதற்கான அவசியம் குறித்த பொது விழிப்புணர்வை மேம்படுத்தச் செய்வதே இந்த நாளின் நோக்கமாகும்.
- 1983 ஆம் ஆண்டு மாஸ்கோவிற்கு எதிரான அமெரிக்க உந்துவிசை ஏவுகணைத் தாக்குதலைத் தவறாகக் கண்டறிந்த சோவியத் அணு ஆயுத முன்னெச்சரிக்கை அமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, சற்று ஏறக்குறைய ஒரு அணு ஆயுதப் போர் தொடங்கவிருந்த சம்பவத்தின் வருடாந்திர நினைவு தினமும் செப்டம்பர் 26 ஆம் தேதி ஆகும்.
- 1959 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது அணு ஆயுதங்களை முற்றிலும் குறைத்தல் என்ற நோக்கத்தை முன் வைத்தது.
- 1996 ஆம் ஆண்டில், விரிவான அணு சக்தி சோதனை தடை ஒப்பந்தம் உலக நாடுகளின் கையொப்பத்தினைப் பெறுவதற்காக அறிமுகப்படுத்தப் பட்டது.
- இன்றும் சுமார் 12,512 அணு ஆயுதங்கள் புழக்கத்தில் எஞ்சியுள்ளன.

## உலக நுரையீரல் தினம் - செப்டம்பர் 25

- இது உலகம் முழுவதும் நுரையீரல் ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதையும், சிறந்த நுரையீரல் பராமரிப்பு நலனை மேம்படுத்தச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு அனுசரிக்கப்படுகிறது.
- இந்தத் தினமானது ஆரோக்கியமான நுரையீரலின் முக்கியத்துவம் பற்றி எடுத்து உரைக்கவும், நுரையீரல் நோய்களுக்கான காரணங்கள் மற்றும் தடுப்பு முறைகள் பற்றி எடுத்துரைக்கவும் முயல்கிறது.
- முதலாவது உலக நுரையீரல் தினம் ஆனது 2018 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "அனைவருக்கும் தடுப்பு முறை மற்றும் சிகிச்சைக்கான அணுகல். ஒருவரும் விடுபட்டு விடக் கூடாது" என்பதாகும்.




## உலக சுற்றுலா தினம் - செப்டம்பர் 27

- இது உலகம் முழுவதும் சுற்றுலாவினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.

- இந்தத் தினமானது, உலக நாடுகளின் பல்வேறு கலாச்சாரங்களை இணைக்க உதவும் சுற்றுலாத் துறையின் ஆற்றலைக் கொண்டாடுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுற்றுலா அமைப்பினால் (UNWTO) நிறுவப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுற்றுலா அமைப்பு (UNWTO) ஆனது 1979 ஆம் ஆண்டில் உலக சுற்றுலா தினத்தினை அறிவித்தது.
- ஆனால் இந்தத் தினமானது அதிகாரப்பூர்வமாக 1980 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப் படத் தொடங்கியது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'சுற்றுலா மற்றும் பசுமை முதலீடு' என்பதாகும்.

## உலக வெறிநாய்க்கடி நோய் தினம் - செப்டம்பர் 28

- இந்த வருடாந்திர நிகழ்வானது வெறிநாய்க்கடி நோய் தடுப்பு பற்றியும் , இந்த கொடிய நோய்க்கு எதிரான போராட்டத்தில் மேற்கொள்ளப்படும் பல முன்னெடுப்புகளின் முன்னேற்றத்தைப் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினமானது லூயிஸ் பாஸ்டர் அவர்களின் நினைவு நாள் ஆகும்.
- இவர் வெறிநாய்க்கடி நோய்க்கு எதிரான முதல் தடுப்பு மருந்தினை உருவாக்கிய பிரெஞ்சு வேதியியலாளர் மற்றும் நுண்ணுயிரியலாளர் ஆவார்.
- இந்த நாள் ஆனது உலக வெறிநாய்க்கடி நோய்க் கட்டுப்பாட்டு கூட்டமைப்பினால் 2007 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- வெறிநாய்க்கடி நோய் ஆனது ஒவ்வோர் ஆண்டும் சுமார் 60,000 பேரின் உயிர்களை பலி வாங்குகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "All for 1, One Health for All" என்பதாகும்.

## உலக கடல்சார் தினம் - செப்டம்பர் 28

- உலக கடல்சார் தினம் ஆனது ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் கடைசி வியாழக் கிழமையன்று அனுசரிக்கப்படுகிறது.
- கடல்சார் தொழில் துறையில் பணியில் ஈடுபடும் மக்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- கப்பல் போக்குவரத்து, கடல் சார் வணிகம் மற்றும் சுற்றுச்சூழல் காரணிகள் போன்ற இந்தத் தொழில் துறை தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் மீது பொதுமக்களின் கவனத்தை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது சர்வதேச கடல்சார் அமைப்பால் (IMO) நிறுவப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, '50வது ஆண்டில் MARPOL – நமது உறுதிப்பாடுகள் தொடர்கின்றன' என்பதாகும்.

## சர்வதேசப் பொது தகவல் அணுகல் தினம் - செப்டம்பர் 28

- பொது தகவல் அணுகல் என்பது ஒவ்வொருவருக்கும் தகவல்களைக் கோர, பெற மற்றும் வழங்குவதற்கான உரிமை என்பதனைக் குறிக்கிறது.

- தகவலை அணுகுவதன் முக்கியத்துவத்தின் மீது இத்தினம் கவனம் செலுத்துகிறது.
- யுனெஸ்கோ அமைப்பானது இந்த நாளினை 2015 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் தேதி அன்று அறிவித்தது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "தகவலை அணுகுவதில் இயங்கலை தளத்தின் முக்கியத்துவம்" என்பதாகும்.




## உணவு இழப்பு மற்றும் வீணாதல் பற்றிய சர்வதேச விழிப்புணர்வு தினம் - செப்டம்பர் 29

- உணவு இழப்பு மற்றும் வீணாதல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், அதைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்குமான ஒரு வாய்ப்பாக இது கருதப்படுகிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உணவு இழப்பு மற்றும் வீணாதலை குறைத்தல்: உணவு முறைகளை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளச் செய்தல்" என்பதாகும்.
- ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் கூற்றுப்படி, ஆண்டு தோறும் 1.3 பில்லியன் டன் உணவு வீணடிக்கப் படுவதால் உலகிற்கு 750 பில்லியன் டாலர்கள் இழப்பாகிறது.
- மொத்த உணவுக் கழிவுகளில் 61 சதவீதம் வீடுகளில் இருந்தும், 26 சதவீதம் உணவு சேவை வழங்கீட்டு அமைப்புகளிலிருந்தும், 13 சதவீதம் சில்லறை விற்பனையில் இருந்தும் வெளியாகின்றன.
- உலகளவில், உணவுக் கழிவுகள் ஆனது உலகளாவியப் பசுமை இல்ல வாயு உமிழ்வில் சுமார் 20 சதவிகித பங்கினைக் கொண்டுள்ளன.
- இது மனிதனால் வெளியிடப்படும் மொத்த வாயு வெளியேற்றத்தில் மூன்றில் ஒரு பங்காகும்.
- உணவு வீணடிக்கப்படுவதில் இந்தியாவின் பங்களிப்பு, ஆண்டுதோறும் 68.8 மில்லியன் டன்கள் அதாவது உலகளாவிய உணவு வீணாதலில் 7 சதவீதம் ஆகும்.
- இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களில் சுமார் 40 சதவீதம் வரை வீணடிக்கப் படுகிற நிலையில், அதாவது 50000 கோடி ரூபாய் மதிப்பிலான உணவுகள் வீணடிக்கப் படுகின்றன.


## உலக இருதய தினம் - செப்டம்பர் 29




- இத்தினமானது இருதய நோய்களைத் தடுக்க மற்றும் மேலாண்மை செய்ய உதவும் தடுப்பு நடவடிக்கைகள் பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாரடைப்பு, பக்கவாதம் மற்றும் இருதயச் செயலிழப்பு ஆகியவற்றினால் ஒவ்வோர் ஆண்டும் 20.5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உயிரிழக்கின்றனர்.
- இந்தத் தினமானது, உலக சுகாதார அமைப்புடன் (WHO) இணைந்து உலக இருதயக் கூட்டமைப்பினால் (WHF) முதன்முதலில் 1999 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Use Heart, Know Heart" என்பதாகும்.

## சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் - செப்டம்பர் 30

- இந்தத் தினமானது மொழியியல் மற்றும் கலாச்சாரப் பிளவுகளை இணைப்பதில் மொழி பெயர்ப்பாளர்களின் விலைமதிப்பற்றப் பங்களிப்பினை அங்கீகரிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட உலகளாவியக் கொண்டாட்டமாக அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது ஐக்கிய நாடுகள் சபையினால் 2017 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- செப்டம்பர் 30 ஆம் தேதியன்று புனித ஜெரோம் அவர்களின் நினைவு நாள் ஆகும்.
- புனித ஜெரோம் அவர்கள், வேதாகமத்தின் (பைபிளின்) பெரும்பகுதியை அதன் அசல் கையெழுத்துப் பிரதிகளிலிருந்து இலத்தீன் மொழியில் மொழிப்பெயர்த்தப் பணியில் புகழ் பெற்றவர் ஆவார்.
- அவர் மொழிபெயர்ப்பாளர்களின் புரவலர் என்று அறியப்படுகிறார்.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'மொழிபெயர்ப்பு ஆனது மனித குலத்தின் பன்முகங்களை வெளிப்படுத்துகிறது' என்பதாகும்.




### சர்வதேச சமய நிந்தனை உரிமைகள் தினம் - செப்டம்பர் 30

- இந்த நாள் தனிமனிதர்கள் மற்றும் குழுக்களுக்கு சமய நிந்தனைச் சட்டங்கள் பற்றிய தகவல்களை கற்பிப்பது மற்றும் கருத்து சுதந்திரத்தினைப் பாதுகாப்பது என்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- எந்த ஒரு மதமும் அல்லது பிரிவும் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டது அல்ல என்ற நமது நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.
- சமய நிந்தனை என்பது, கடவுளுக்கு அல்லது புனிதமானதாக நம்பப்படும் ஒன்றின் மீது காட்டப்படும் பெரும் அவமரியாதையைக் குறிக்கிறது.
- ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், ஈரான் மற்றும் சவுதி அரேபியா போன்ற பல நாடுகளில் சமயத்தினை வெளிப்படையாக விமர்சிப்பது குற்றச் செயலாக்கப் பட்டு உள்ளது.
- சமய நிந்தனை உரிமைகள் தினமானது உலகமெங்கும் கொண்டாடும் விதமாக 2009 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## இதரச் செய்திகள்

### பகோபம்பா பாதிரியாரின் கல்லறை


- பெரு நாட்டின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பகோபம்பா என்ற தொல்பொருள் வளாகத்தில் 3000 ஆண்டுகள் பழமையான எச்சங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த உடல் எச்சங்கள் என்பவை பண்டைய வடக்கு ஆண்டியன் மலைப் பகுதியின் முதல் பாதிரியார்களில் ஒருவராக நம்பப்படுகிறது.
- இதற்கு 'பகோபம்பாவின் பாதிரியார்' எனப் பெயரிடப் பட்டுள்ளது.
- இந்த உடலைச் சுற்றி சிறிய, கோள வடிவ பீங்கான் கிண்ணங்கள் இருந்தன.
- இந்த உடலோடு சிலப் பொருட்களையும் சேர்த்து சாம்பல் கலந்த 6 அடுக்கு கரிசல் மண்ணால் ஆன ஒரு குழியில் வைத்து எரிக்கப் பட்டன.

- பகோபாம்பன் உயரடுக்குச் சமூகத்தினரின் ஒரு சடங்கான உடலில் ஓவியம் வரைய பயன்படுத்தப்பட்ட இரண்டு அலங்கரிக்கப்பட்ட கிண்ணங்கள் ஆக இருக்கலாம்.
- கிழக்கு நோக்கியப் பக்கத்தில் மனித முகமும் மேற்கு நோக்கியப் பக்கத்தில் ஜாகுவார் முகமும் பொறிக்கப்பட்ட இரண்டு முத்திரைகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.



## ஒபிடாஸ்காரிஸ் ராபர்ட்ஸி

- சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் ஒரு நோயாளியின் மூளையில் இருந்து 8 செ.மீ. நீளமுள்ள ஒட்டுண்ணி வகை உருளைப்புழு நீக்கப்பட்டுள்ளது.
- பொதுவாக மலைப் பாம்புகளில் காணப்படும் இந்த உருளைப்புழு, இதற்கு முன் மனித உடலில் இருந்ததாக பதிவாகியதில்லை.
- இந்த ஒட்டுண்ணியானது ஒபிடாஸ்காரிஸ் ராபர்ட்ஸி என அடையாளம் கண்டறியப் பட்டுள்ளது.
- இது ஆஸ்திரேலியா மற்றும் பப்புவா நியு கினியா ஆகியவற்றினைச் சேர்ந்த ஒரு மணற்புழு வகை மலைப் பாம்பு ஆகும்.
- இந்த பாதிப்பானது விலங்கு-மனித தொடர்புகள் மற்றும் விலங்குவழித் தொற்றுக்கள் ஆகியவற்றினை பற்றி புரிந்து கொள்வதில் ஒரு புதிய வாய்ப்பினை உருவாக்குகிறது.



## ஃப்புஜிவெனெட்டர்



- நீண்ட கால்களுடன் கூடிய சிறிய பறவை போன்ற டைனோசரின் படிமங்களை சீனாவில் உள்ள அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த "வினோதமான" புதைபடிவமானது, அது விசித்திரமான பெருஞ்செம்போத்து (ஃபெசன்ட்) பறவை அளவிலான டைனோசர் என்று குறிப்பு அளிக்கிறது.
- இது சுமார் 148 முதல் 150 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தென்கிழக்கு சீனாவில் வசித்து வந்த இனமாகும்.
- இது நீளமான கால்கள் மற்றும் இறக்கைகளைப் போலவே கட்டமைக்கப்பட்ட கைகள். ஆகியவற்றை கொண்டிருந்தது.
- அறிவியலாளர்கள் இதற்கு ஃப்புஜிவெனெட்டர் ப்ரோடிஜியோசஸ் என்று பெயரிட்டு உள்ளனர்.

## புதிய யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளம்




- யுனெஸ்கோ அமைப்பின் உலக பாரம்பரியக் குழுவின் 45வது அமர்வு ஆனது இந்தியாவின் பரிந்துரைகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் அவர்களால் நிறுவப்பட்ட விஸ்வபாரதி பல்கலைக்கழகம் அமைந்த மேற்கு வங்காளத்தில் உள்ள புகழ்பெற்ற இடமான சாந்திநிகேதன் யுனெஸ்கோ அமைப்பின் அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது.

- கர்நாடகாவில் உள்ள பேலூர், ஹளபேடு மற்றும் சோம்நாத்பூர் ஆகிய இடங்களில் உள்ள ஹொய்சாளர் கோவில்கள் யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியத் தளங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- ஹொய்சாளர் காலக் கோயில்கள் உயர்த்தப்பட்ட மேடையின் மீது நட்சத்திர வடிவக் கட்டமைப்பினால் கட்டமைக்கப்பட்ட ஒரு தனித்துவமான கட்டிடக்கலைப் பாணிக்கு புகழ் பெற்றவை.
- இந்தக் கோவில் கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும் பாறை வகையானது சவர்க்காரக்கல் எனப்படும் கோலோரிடிக் ஸ்கிஸ்ட் (பாசிக உப்புக் கலந்த மடிப்புப் பாறை வகை) ஆகும் என்பதோடு மேலும் இது செதுக்குவதற்கு இணக்கமான ஒரு மென்மையான பாறையாகும்.
- இது உலகப் பாரம்பரியச் சின்னத்தைப் பெற்ற இந்தியாவின் 42வது தளமும், கர்நாடகாவில் நான்காவது தளமும் ஆகும்.
- முன்னதாக, ஹம்பி (1986) மற்றும் பட்டாடகல் (1987) ஆகிய இடங்களில் உள்ள கர்நாடகாவின் இரண்டு நினைவுச் சின்னங்களின் குழுக்கள் மற்றும் முக்கியப் பல்லுயிரப் பெருக்கப் பகுதியான மேற்குத் தொடர்ச்சி மலைகள் (2012) ஆகியவை இந்த மதிப்புமிக்க அந்தஸ்தைப் பெற்றன.
- ஹொய்சாள ஆட்சியாளர்கள் 11 ஆம் நூற்றாண்டு முதல் 14 ஆம் நூற்றாண்டு வரை ஹளபேடுவை (துவாரசமுத்திரம்) தலைநகராகக் கொண்டு தென்னிந்தியாவின் சில பகுதிகளை ஆட்சி செய்தனர்.
- இந்த வெற்றிகரமான நியமனத்தின் மூலம், இந்தியா ஒட்டு மொத்தமாக 42 உலகப் பாரம்பரியத் தளங்களைக் கொண்டுள்ளது.
- இதில் பண்பாட்டுப் பிரிவில் 34, இயற்கைப் பிரிவில் ஏழு மற்றும் ஒரு கலப்பு தளம் ஆகியவை அடங்கும்.
- தற்போது, உலகில் அதிக எண்ணிக்கையிலான (யுனெஸ்கோ) தளங்களைக் கொண்ட ஆறாவது நாடாக இந்தியா உள்ளது.

## புவிக் கிரக எல்லைகள்

- மனிதனால் ஏற்படும் மாசு மற்றும் இயற்கை உலகின் அழிவு காரணமாக ஒன்பது புவிக் கிரக எல்லைகளில் ஆறு மீறப்பட்டுள்ளன.
- புவிக் கிரக எல்லைகள் என்பது அறிவியலாளர்களால் வடிவமைக்கப்பட்ட ஒரு கட்டமைப்பின் தொகுப்பாகும் என்ற நிலையில், இந்தக் கட்டமைப்பிற்குள் மனிதகுலம் தொடர்ந்து வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள இயலும் என்பதோடு அது தலைமுறை தலைமுறையாகச் செழித்து வளர முடியும்.
- இந்த ஒன்பது புவிக் கிரக எல்லைகள் முதன்முதலில் 2009 ஆம் ஆண்டில் சர்வதேச அளவில் புகழ்பெற்ற 29 அறிவியலாளர்கள் குழுவால் முன்மொழியப் பட்டது.
- நம்மால் இந்த ஒன்பது காரணிகளை சரியாக கையாள முடிந்தால், பூமி குறிப்பிட்ட அளவில் பாதுகாப்பானதாக இருக்கும்.




## லண்டனின் இந்திய சங்கம்




- லண்டனின் இந்திய சங்கம் பல தசாப்த காலச் செயல்பாடுகளுக்குப் பிறகு செப்டம்பர் 17 ஆம் தேதியன்று நிரந்தரமாக மூடப்பட்டது.
- ஐக்கியப் பேரரசில் சுதந்திரப் போராட்டத்தின் போது இந்தியர்களுக்கு இது ஒரு ஒய்வு இடமாக இருந்தது.
- இது பிரிட்டிஷ் அமைப்பான இந்தியா லீக் மூலம் 1951 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இந்த அமைப்பு ஆனது இந்திய சுதந்திரம் மற்றும் சுயராஜ்ஜியம் (சுவராஜ்) ஆகியவற்றிற்கான ஒரு ஆதரவு அமைப்பாகத் தொடங்கப்பட்டது என்பதோடு இது பிரிட்டிஷ் சமுதாயத்தில் உள்ள பல உயரடுக்குப் பிரிவு உறுப்பினர்களை உள்ளடக்கி இருந்தது.

## P-7 கனரகப் பொருட்களின் தரையிறக்க வான்குடை மிதவை அமைப்பு



- இந்த வான்குடை மிதவை அமைப்பு ஆனது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் (DRDO) உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.
- இது முதன்மையாக கனரக உபகரணங்கள், வாகனங்கள் மற்றும் விமானங்களிலிருந்து இறக்கப்படும் பொருட்களை வான்வழியாக தரையிறக்கச் செய்ய பயன்படுத்தப்படுகின்ற ஓர் இராணுவ வான்குடை மிதவை அமைப்பாகும்.
- இது போர்க்களத்தில் ஆயுதப்படைகளின் வான்குடை மிதவை வழி தரையிறக்கத் திறன்களை மேம்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இதன் அதிகபட்ச சுமை தாங்கும் திறன் 8,500 கிலோ கிராம் மற்றும் அனுமதிக்கப்பட்ட சுமை வரம்பு 7,000 கிலோ ஆகும்.


## அபிநந்தன் திட்டம்

- டாடா குழுமத்திற்குச் சொந்தமான ஏர் இந்தியா நிறுவனமானது, பயணிகளின் விமான நிலைய அனுபவத்தை மேம்படுத்தும் முயற்சியில் 'அபிநந்தன் திட்டத்தினைத்' தொடங்கியுள்ளது.
- 16 முக்கிய இந்திய விமான நிலையங்களில் உள்ள ஏர் இந்தியா நிறுவனத்தின் பயணச் சீட்டினை வைத்திருப்பவர்களுக்கு தனிப் பயனாக்கப்பட்ட மற்றும் தொந்தரவு இல்லாத விமான நிலைய அனுபவத்தை வழங்கச் செய்வதை இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஏர் இந்தியா நிறுவனமானது சிறப்புப் பயிற்சி பெற்ற சேவை உறுதியளிப்பு அதிகாரிகள் குழுவை நியமித்துள்ள நிலையில் அவர்கள் விமான நிலையங்களில் உள்ள முக்கியத் தொடர்புப் பகுதிகளில் பணியமர்த்தப்படுவார்கள்.

## ஸ்க்ரப் டைபஸ் தொற்று

- ஒடிசாவின் பர்கர் மாவட்டத்தில் ஸ்க்ரப் டைபஸ் தொற்று காரணமாக சமீபத்திய வாரங்களில் குறைந்தது ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.
- இந்தக் கடுமையான தொற்று நோய் ஆனது ஓரியன்டியா சுட்சுகாமுஷி என்ற ஒட்டு உண்ணியால் ஏற்படுகிறது.
- ஸ்க்ரப் டைபஸ் தொற்று ஆனது பாதிக்கப்பட்ட சிகர் எனப்படும் பூச்சி (லார்வா மைட்ஸ்) கடிப்பதால் பரவுகிறது.

- இது பொதுவாக நவம்பர் முதல் ஜூலை மாதம் வரையிலான மழைக்காலத்தில் ஏற்படுகின்ற ஒரு நோய்க் காரணியால் பரவும் நோயாகும்.
- காய்ச்சல், தலைவலி, உடல்வலி மற்றும் தோலில் கறுப்பு நிற, வீக்கமடைந்தப் பகுதிகள் ஆகியவை இந்த நோயின் பொதுவான அறிகுறிகளாகும்.
- ஸ்க்ரப் டைபஸ் தென்கிழக்கு ஆசியா, அதனுடன் தொடர்புடைய தீவுக் கூட்டங்கள், வடக்கு ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பானில் பெருமளவில் காணப் படுகிறது.
- இது குறித்து முதலில் 1899 ஆம் ஆண்டில் விவரிக்கப்பட்டு, 1906 முதல் 1932 ஆம் ஆண்டு வரை இந்தத் தொற்று குறித்து விரிவாக ஆய்வு செய்யப் பட்டது.




## முதல் ஏர்பஸ் C295 விமானம்

- 56 C295 ரக விமானங்களில் முதல் விமானத்தினை இந்தியா தற்போது பெற்றுள்ள நிலையில் இதில் 40 விமானங்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட உள்ளன.
- இது ஐரோப்பிய விமானத் தயாரிப்புப் பெரு நிறுவனமான ஏர்பஸ் மற்றும் டாடா இடையேயான கூட்டாண்மையின் ஒரு பகுதியாக தயாரிக்கப்படுகிறது.




- இந்திய தனியார் நிறுவனம் ஒன்று விமானத்தினை தயாரிப்பது இதுவே முதல் முறை ஆகும்.
- இது அதிகபட்சமாக 480 கிலோமீட்டர் வேகத்தில் ஒன்பது டன் எடையிலான பொருட்களை அல்லது 71 துருப்புகளைச் சுமந்து செல்லும் திறன் கொண்டது.
- C295 விமானத்தினை ஹெலிகாப்டர்கள் மற்றும் நிலையிறக்கை விமானங்களுக்கு வானில் இருந்த படியே எரிபொருள் நிரப்புவதற்கும் பயன்படுத்த இயலும்.

## முழுவதும் மின்சாரத்தில் இயங்கும் மகிழுந்து தயாரிப்பு நிறுவனம்

- வோல்வோ கார்ஸ் நிறுவனமானது, 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் எஞ்சியுள்ள டீசல் எஞ்சின் மகிழுந்துகளின் உற்பத்தியை முடித்துக் கொள்ள உள்ளது.
- இது முழுவதும் மின்சாரத்தில் இயங்கும் மகிழுந்து தயாரிப்பு நிறுவனமாக மாறுவதற்கான அதன் இலக்கை நோக்கிய ஒரு படிநிலையைக் குறிக்கிறது.
- 2030 ஆம் ஆண்டில் முழுவதுமாக மின்சார வாகனங்களை மட்டுமே உற்பத்தி செய்ய உள்ளதாக வோல்வோ உறுதியளித்துள்ளது.
- ஆகஸ்ட் மாதத்தில் வால்வோ நிறுவனத்தின் விற்பனையில் 33 சதவீதம் முழுவதும் மின்சாரத்தில் இயங்கும் அல்லது கலப்பின வாகனங்கள் ஆகும்.

## உலகின் பழமையான மர கட்டமைப்பு



- தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இதுவரை அறியப்பட்ட, சுமார் அரை மில்லியன் ஆண்டுகள் பழமையான மரக் கட்டமைப்பினைக் கண்டெடுத்துள்ளனர்.
- இந்த எளியக் கட்டமைப்பானது ஜாம்பியாவில் உள்ள ஒரு ஆற்றங்கரையில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.
- இந்த அமைப்பு ஒரு பெரிய பழம் காய்க்கும் வில்லோ மரத்தால் செய்யப்பட்ட, ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட இரண்டு மரக்கட்டைகளைக் கொண்டுள்ளது.
- இது உலகின் மிகப் பழமையான மர கட்டமைப்பு என நம்பப்படுகிறது.
- இந்த அமைப்பு 476,000 ஆண்டுகள் பழமையானது என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது கணிசமான வித்தியாசத்தில் நவீன மனிதர்களின் காலத்தினை முன் கூட்டியதாகக் குறிப்பிடுகிறது.
- இந்தக் கட்டமைப்பின் காலம் ஆனது, இது ஹோமோ ஹைடெல்பெர்கென்சிஸ் இனத்தினால் வடிவமைக்கப்பட்டிருக்கலாம் என்று குறிப்பிடுகிறது.

- இந்த ஹோமினின் இனம் ஆனது 700,000 முதல் 200,000 ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பகுதியில் வாழ்ந்ததாக நம்பப்படுகிறது.

## டச்சுக்காரர்களுக்கு எதிரான கொலச்சல் போர்




- 1741 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கொலச்சல் என்ற இடத்தில் நடைபெற்ற டச்சு (நெதர்லாந்து) கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிரான போரில் திருவிதாங்கூர் படைகள் வெற்றி பெற்றன.
- கன்னியாகுமரியில் டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியை விட்டு வெளியேறிய கார்ல் ஆகஸ்டு டுய்ஜிவென்ஷோட் என்ற ஜெர்மானிய இராணுவ அதிகாரி திருவிதாங்கூர் இராணுவத்தில் இருந்ததாக புதிய சான்றுகள் தெரிவிக்கின்றன.
- டச்சுக்காரர்களுக்கு எதிரான கொலச்சல் போரிலும் அவர்களின் தோல்வியிலும் குறிப்பிடத் தக்க பங்கு வகித்தார்.
- மார்த்தாண்ட வர்மா மன்னன், கொலச்சல் பகுதியின் முற்றுகை நடவடிக்கை மற்றும் ஐரோப்பியர்களை திருவிதாங்கூர் இராணுவத்தில் வெற்றிகரமாக இணைத்ததில் அவரது சேவைகளை அங்கீகரிக்கும் வகையில் டுய்ஜ்வென்ஷோட்டை ஒரு முக்கியத் தளபதியாக நியமித்தார்.
- 1671 முதல் 1758 ஆம் ஆண்டு வரை லைடன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மார்க் டி லானாய், ‘திருவிதாங்கூர் குலசேகரப் பெருமாள்கள்: திருவிதாங்கூரின் வரலாறு மற்றும் சமஸ்தான உருவாக்கம்’ என்ற நூலில் இத்தகவலை எழுதியுள்ளார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★